# THIRD BOOK

OF

# LESSONS

FOR THE USE OF SCHOOLS, &c.

TAMIL.



# மூன்றாம் பாடப் புஸ்தகம்.

இது

பாடசாலைகளிற் கற்கிற மாணாக்கரின்

உபயோகத்திற்காகச் செய்யப்பட்டது.

FIFTH EDITION.

PUBLISHED BY ORDER OF
THE DIRECTOR OF PUBLIC INSTRUCTION.

MADRAS:
PRINTED BY W. PUSHPARATHA CHETTY,
KALARATNAKARAM PRESS,
103, ARMENIAN STREET.
1872.

| Lessons | SUBJECTS | Page |
|---|---|---|
| | **NATURAL HISTORY &c** | |
| 14 | Objects of Study—The Mineral Vegetable and Animal Kingdoms | 31 |
| | On the Atmosphere, Rain, Dew, Lightning, Thunder, &c | 9 |
| | *The Mineral Kingdom* | |
| 5 | Gold | 34 |
| 6 | Silver | 35 |
| 7 | Lead and Tin | 36 |
| 8 | Iron | 37 |
| 9 | Copper and Brass | 38 |
| 20 | Precious Stones | 39 |
| | *The Vegetable Kingdom* | |
| 21 | Vegetables | 40 |
| 22 | The Cocoanut and Palmyra | 42 |
| 23 | Grains | 44 |
| 24 | Coffee, Tea | 45 |
| 25 | Tobacco, Arecanut | 47 |
| 26 | Cotton | 48 |
| 27 | Sugar | 49 |
| | *The Animal Kingdom* | |
| 8 | Beasts | 50 |
| [illegible] | Birds | 52 |
| [illegible] | The Swan (a story) | 54 |
| | The Crane (a story) | 55 |

CONTENTS.

னுக்கு வேறென்ன? அவன் பூர்வோத்தரம் தெரியாதா? ஒரு
சாமானிய குடும்பத்தில் கைசர் கற்பழித்த பெண்ணொருத்தி
பெற்ற மகன். அவன் தன் தாயின் சோதரருடனாகிய வைக
சருக்குச் சத்துருவாய் எழுந்து யுத்தம் செய்ய, கைசர் அவ
னை ரட்சித்து, அவன்மேல் தயைகூர்ந்து, அவனுக்கு ராச்சிய
த்தில் அதிகாரம் கொடுத்துச் சினேகித்துக் கௌரவப்படுத்
தினார். இது உள்ளது. பின்னை உலகத்தார் அவனை அதிக
மாய்ப் புகழ்ந்து போற்றும் காரணம் கைசர் செய்த நன்றி
யை மறந்து, அவருடைய விவேக சாமர்த்தியங்களை அறிந்
து மதிக்கத்தக்க புத்தியற்றவனாய் அவரைக் கொன்றதனா
லோ? மற்றொரு விசேஷத்தையும் அவனிடத்தில் காணேம்.

அவன் தத்துவ ஞானநூலைத் தழுவியாய்க் கற்றவனாக வே
ஷம் தரித்ததனால், தன் ஒழுக்கத்திற்கு ஏற்ற நிந்தைக்குத்
தப்பினான்; வேஷத்தினால் பிரயோசனமென்ன? புருஷஸ்
கொள்கையிலும் ஒழுக்கத்திலும் யோக்கியன என்பது ஒரு
வாறாயினும் தோன்றவில்லை. அவன் சில காலங்களில் பிர
ஜைகளுக்கு நீதிசெய்தது மெய். அவ்வாறே மற்றவர்களும்
செய்யவில்லையா? தேசத்தைச் சீர்திருத்துவதற்கேற்ற நன்னி
லைமை அவன் உள்ளத்தில் குடிகொண்டிருந்ததா? அதற்
குத் திருஷ்டாந்தமென்ன? அக்காலத்தில் உள்ள உரோமரிட
த்தில் இத்தனை பழுதற்ற நீதிநியாயம் இருக்கக் காண்பது அசா
த்தியமா யென்பீர்களானால், அவனை விசேஷமாய்ப் போற்றுவ
தென்னை? தன்உபகாரியை வதைசெய்து, தான் அபாயத்தினி
ன்று ரட்சிக்கும்படி உடன்பட்ட நகரத்தை விட்டு ஓடின தீய
னை வீரனென்று வியந்து பேசுவதேன்? தனக்கு உண்டென்
று வெளியிட்ட சற்குணங்களைச் சூனியமாய்க்கொண்ட அவ
னைச் சற்குணனென்று மெச்சுவதேன்? இதுநிற்க, அவன் அர
சாளும் திறமுடையவனென்று சொல்வார் ஒருவரும் இல்லை.

முற்றிற்று.

க்க, ஒருவன் இவ்வீட்டை யாரும் கட்டவில்லை, அது தானாக வே அமைந்தது என்பானானால் அது நம்பத்தக்கதோ? நீ அவ னை மதிகெட்டவ னென்றுதானே நினைப்பாய். இது போல வே, சகலத்தையும் படைத்த கடவுள் ஒருவர் இருக்கிறாரெ ன்று நாம் யாவரும் அறிந்துகொள்ளுகிறோம். இந்தப் பூமி நமக்குவேண்டிய சகல வஸ்துக்களும் வைத்திருக்கின்ற ஒரு வீடுபோலும். சூரியன நமக்கு வெளிச்சம் தரும் ஒரு பெரிய விளக்குப்போலும். நமக்கு வேண்டிய ஆகாரத்தின் பொரு ட்டு வயல் நிலம் தானியங்களைக் கொடுக்கிறது. விருட்சங்கள் மாதுரியமான கனிவர்க்கங்களைத் தருகின்றன. நமக்குத் தாக மெடுத்தால் குடிக்க ஆறு, குளம், குட்டை, கிணறுகளில் வே ண்டிய சலம் இருக்கின்றது. நாம் உடுத்துக்கொள்ளும் உடு ப்பிறகுப் பருத்திச்செடி பஞ்சையும், பட்டுப்பூச்சியானது நா ணயமான பட்டையும் தருகின்றன. விசாலமான வீடுபோ ன்ற இப்பூமியில் இல்லாத வஸ்து ஒன்றாவது உண்டோ? ஒரு அற்பமாகிய வீடு தானாக அமையாது. அகன்ற இந்தப் பூமி யானது தானே உண்டாயிருக்குமோ? ஒருபொழுதும் உண் டாகாதே அதை உண்டாக்கினவர் ஒருவர் வேண்டும்: அவர் தாம் கடவுள்.

அவர் சர்வவியாபகத்துவம், சர்வஞானம், சர்வவல்லபம், மாறுமை, சுயம்பு, சம்பூரணம், பரிசுத்தம், நீதி, சத்தியம், அன்பு, இரக்கமுதலிய இலட்சணங்களை யுடையவர்; படைத் து, காத்து, அழிப்பவர் அவரே. தமக்கு உவமையில்லாத இயற்கைப் பொருளாகிய சீவ சுவரூபி அவர்தாம்.

## உ-வது. மனிதசாதிகள்.

இவ்வுலகத்தில் மனிதர் உருவத்திலும், நிறத்திலும், அளவி

லும் ஒருவருக்கொருவர் வேறுபட்டிருந்தும், அவர்கள் எல்லா ரும் ஒரே தாய் தந்தையரின் பிள்ளைகளும், ஒரே குடும்பத்தில் தோன்றிய சகோதரருமாகவே இருக்கிறார்கள். முற்கூறிய பேதாபேதங்கள் குதிரை, நாய்முதலிய மிருகங்களுக்கு இருக் கிறதுபோலவே, மனிதர்களுக்கும் அந்தந்தத் தேசத்து வெப் பம், குளிர்ச்சி, உணவு முதலியவைகளினால் உண்டாகின்றன.

நான்கு கண்டங்களிலும், ஆப்பிரிக்கா அதிக உஷ்ணபூமியா தலால், அதில் உள்ள சனங்களில் அநேகர் கன்னங் கறேலெ ன்று இருக்கிறார்கள். ஆசியாவில் ஆப்பிரிக்காவைப்போல் அவ் வளவு உஷ்ணம் இல்லாமையால், இவ்விடத்துச் சனங்களில் பலர் சாதிக்காய் நிறமுள்ளவர்களாய் இருக்கிறார்கள். ஐரோப் பாகண்டம் ஆசியாவைப் பார்க்கிலும் விசேஷ குளிர்ச்சியுள்ள தாகையால், அதிலுள்ளவர்கள் வெண்மையாயிருக்கிறார்கள்.

மனிதர் சாதாரணமாய்க் காச்கெசியர், மங்கோலியர், மலே யர், அமெரிக்கர், நிகிரோவர் என ஐந்து சாதிகளாக வகுக்கப் பட்டிருக்கிறார்கள்.

அவர்களுள் காக்கேசியர், ஆசியாவின் மேற்புறத்தில் இருக் கும் காக்கேசுமலைக்குச் சுற்றுப்பக்கங்களிலிருந்து எங்கும் போய்ப் பரவினார்களென்று தோன்றுகிறபடியால் அவர்களு க்கு அப்பெயர் உண்டாயிற்று. பெரும்பாலும் அவர்களுடைய முகம் முட்டைபோல் நீண்ட வட்டமாயிருக்கும். ஐரோப் பாகண்டத்தாரும் இந்தச் சாதியைச் சேர்ந்தவர்கள்தாம். இந் துக்களும் இவ்வகுப்பைச் சேர்ந்தவர்களே. அவர்கள் உஷ் ணதேசத்தில் வசிப்பதனால் மங்கின வர்ணமுள்ளவர்களா யி ருக்கிறார்கள்.

மங்கோலியர் ஆசியாகண்டத்தின் மத்தியிலும், அதற்குக் கீழ்ப்புறங்களிலுமுள்ள தேசங்களில் பரவி யிருக்கிறார்கள்.

அவாகள மஞசளநிறமா யிருபபாாகள. அவாகளுககுச் சிறிய
சணகளும, தடடை நெறறியம, சுளிதத முகமுமாய இருக
கும. இநதச சாதியாரில அநேகா வீடு வாசலகளினறி, எப
பொழுதும கூடாரஙகளில குடியிருநதுகொணடு, குதிரை மா
மிசததையும, குதிரைபபாலையும தினறு குடிததுச சீவனஞ
செயதுகொணடு, அலைநது திரிகிறாாகள. இநத வகுபபைச
சோாநத சீனா முதலியவாகள படடணஙகளில வாசஞசெயது
கொண டிருககிறாாகள.

மலேபசாதியாா பாசிபிக்கு சமுததிரததின சகல தீவுகளி
லும, ஆசியாகணடததின தெனபாகஙகளுள சிலவறறிலும
சஞசரிககிறாாகள. அவாகள செஙகல் நிறமும, கறுததுச சுரு
ணட மயிரும, சிறுதத தலையுமுளளவாகள.

அமெரிககா செமபு நிறமானவாகள. அவாகள மயிா கறு
பபு. இநதச சாதியாா அமெரிககாவில மாததிரம இருபபாா
கள. இவாகள சீாதிருததமிலலாதவாகள, வேடடையாடிச
சீவனம செயகிறவாகள.

நிகிரோவாமுதலிய ஆபிரிககாகணடததாா கறுபபு நிறமுள
ளவாகள. அவாகளில நிகிரோவருடைய ரோமம சுருணடு
தடிபபாயிருககும. அவாகளுககு மூககுச சபபையாகவும உத
டுபருததும இருககும. இவாகள ஆபிரிககாவின மததியபபிா
தேசததிலும, மேறகுக் கரையிலும இருககிறாாகள.

---

## ௩ - வது· பூகோளம்·

---

அளவறறு அகனறு மனிதருடைய யுததிக்கு எடடாதிருககு

ம் ஆகாயத்தில் அனேக அண்டங்கள் ஆதாரமின்றிச் சுற்றிக் கொண்டிருக்கின்றன. நாம் வசிக்கும் இந்தப் பூகோளமும் அவைகளில் ஒன்று. அவைகள் இதைப்பார்க்கிலும் பெரியவை களும், சிறியவைகளுமாகிச் சூரியன், சந்திரன், நட்சத்திரங் கள், கிரகங்களென்று வெவ்வேறு பெயர்களை உடையவைக ளாயிருக்கின்றன.

அவைகளில் சில சுவயமாய்ப் பிரகாச முள்ளவைகளாக வும், சில அது இல்லாமல் மற்றவைகளால் ஒளிபெற்றுப் பிரகாசிக்கிறவைகளாகவும் வெவ்வேறு பருமனுள்ளவைகளா கவும் இருக்கின்றன. அவ்வண்டங்கள் அதிக பருமனுள்ள வைகளாயினும், நெடுந்தூரத்தில் இருப்பதால், இரவிலும் பக லிலும் நமது கண்களுக்குச் சிறிய உருவங்களாகத் தோன்று கின்றன.

பூமி அந்தரத்தில் நிற்கிறதற்குத் தேவ சக்தியேயல்லாமல் வேறொரு ஆதாரமும் இல்லை. அது சந்திரனைப்போல ஆகாயத் தில் செல்லுகின்றது. பூமி மகா பெரிதாயிருந்தும், வேகமாய் ஓடுகிற கப்பல் சற்றேறக்குறைய நாலு மாசத்திற்குள்ளே அதை ஒரு தரம் சுற்றிவரலாம். வண்டிச்சக்கரம் உருள்வது போல, இடைவிடாமல் என்றும் உருண்டுகொண்டேயிருக்கும். அது ஒருதரம் உருண்டுவருவதற்கு இருபத்துநாலு மணிநேரம் செல்லும். பூமி இப்படி உருளுகிறதினாலே தான் இரவும் பக லும் மாறிமாறி வருகின்றன. அது உருண்டுவரும்பொழுது சூரியனுக்கு எதிராகும் இடங்கள் எல்லாம் பிரகாசமுள்ளவை களாயிருக்கும். அங்கே இருப்பவர்களுக்கு அப்பொழுது பகற் காலமாகும். அந்நேரத்தில் சூரியனுக்கு மறைவாயிருக்கிற பக் கங்கள் பிரகாசமில்லாமல் இருண்டிருக்கும். அங்கே இருக்கிற ஜனங்களுக்கு அப்பொழுது இராக்காலமாயிருக்கும். இப்படி இருக்கிறபடியால், பூமியின் ஒரு பாதியில் உள்ளவர்கள் பொ

பொழுதுவிடிந்து தங்கள் தங்கள் வேலைகளைச் செய்துகொண்டிரு க்கும்பொழுது மற்றப் பாதியிலுள்ள ஜனங்கள் பொழுது பட்டு வேலையை விட்டுத் தூங்குவார்கள். இவர்களுக்குப் பொழுதுவிடிந்து பகல் ஆகிறபோது, அவர்களுக்குச் சூரியன் மறைந்து இராக்காலம் ஆய்விடும். இப்படியே பூமியில் உள்ள வர்களுக்கு இரவும் பகலும் மாறிமாறி வரும்.

பந்தைப்போல் உருண்டைவடிவாயிருக்கிற பூமி பார்வைக் குத் தட்டைவடிவாய்த் தோன்றும் காரணம் எளிதில் விளங் கும். நாம் பூமியின் ஒருபக்கத்தில் இருந்துகொண்டு, ஒரு சிறு பங்கைமாத்திரம் பார்க்கிறோம். பூமியின் முழுவடிவு நமக்குத் தோன்றாது. பூமியானது உருண்டைவடிவு என்பதற்குப் பல திருஷ்டாந்தங்கள் உண்டு. நாம் ஒரு மலைக்கு எதிராக நடந்து போகையில், அம்மலையின் சிகரமாத்திரம் நமக்குத்தெரிகிறது. பூமியின் முகம் வளைந்திருப்பதினால் அந்த மலையின் அடி கண் களுக்குத் தோன்றாது. அன்றியும், ஒரு கப்பலானது கடலில் நெடுந்தூரத்தில் வருகையில், அதன் அடி நமக்குத்தோன்றாம ல் பாய்மரத்தின் முனைமாத்திரம் தோன்றுகிறது: இதனாலும் பூமி உருண்டையாக இருக்கிறதென்பதை அறிந்துகொள்ள லாம். பூமியானது தட்டை வடிவா யிருக்குமாயின், மலையின் அடியும், கப்பலின் அடியுருவ:மும் விசாலமாய் அகன்றிருப்ப தால், அவைகளே முதலில் தெரியவேண்டும். மேலும், ஒரு ஈயானது கிச்சிலிப்பழத்தின்மேல் ஒரு பக்கமும் சாயாமல் நேரே ஓடுமாயின், தான் இருந்தபோன இடத்திற்கே மறுப டியும் திரும்பிவந்துசேரும். அதுபோலவே, ஒருவன் சென் னபட்டணத்திலிருந்து நேர் கிழக்காயாவது, நேர் மேற்காயா வது போவானாகில், அவன் மறுபடியும் தான் புறப்பட்ட இட த்திற்கே வந்து சேர்வான். வருஷந்தோறும் கப்பல்கள் இப்பூ மியைச் சுற்றிப்போய் வருகின்றன. இந்தப் பூமியை ஆதிசே ஷன் என்னும் ஒரு பாம்பு தாங்கிக்கொண்டிருக்கிறதென்றும்,

ஒரு ஆமையானது தன் முதுகின்மேல் இப்பூமியைச் சுமந்து நிற்கிறதென்றும் சிலர் சொல்லியிருக்கிறார்கள். கடவுளது வல்லமையால் பூமியானது ஆகாயத்தில் நின்றே தன்னையும் சூரியனையும் சுற்றியோடுகிறது.

இப்படிப் பூமி சுற்றிவருகிறதுதான் இராப்பகல் உண்டாவ தற்குக் காரணமாம். பூமியில் நாம் வாசஞ்செய்யும் பக்கத்தில் சூரியன் பிரகாசிக்கையில் நமக்குப் பகற்காலமும், மற்றப்பக் கத்தில் பிரகாசிக்கையில் இராக்காலமும் ஆகும். ஒரு கிச்சிலிப் பழத்தை விளக்கின்முன் பிடித்தால், பாதிப்பழம் வெளிச்ச மும், பாதிப்பழம் இருளுமாயிருக்கும். அந்தப்பழத்தை எடு த்து விரலால் உருட்டிக்கொண்டுவந்தால், உருட்ட உருட்ட அதின் எல்லா இடத்திலும் படிப்படியாக வெளிச்சம் தோன் றும். கிச்சிலிப்பழத்தின்மீது ஒரு ஈயானது உட்கார்ந்திருந் தால், பழம் சுழன்று வருகையில், ஈக்குப் பாதிநேரம் வெளி ச்சமும், பாதிநேரம் இருளுமாயிருக்கும். ஈயானது வெளிச்ச த்தில்வருகையில், தீபத்திற்கு எதிராயிருக்கும். அது வெளிச் சத்தைக் கடந்து திரும்புகையில், விளக்கு அதற்கு மறைவா யிருக்கும். அது வெளிச்சத்தின் மத்தியில் இருக்கையில், தீபம் அதன் உச்சியில் இருக்கும். அப்பொழுதுதான் அதற்கு அதிகவெளிச்சமும் காங்கையுமாக இருக்கும். நாம் வசிக்கும் பூமி உருளுகிறதும் இவ்வாறுதான். சூரியன் இப்பூமியின் ஒரு பாகத்தில் பிரகாசிக்கும்பொழுது மற்றொருபாகம் இரு ளடைந்திருக்கும். கிச்சிலிப்பழத்தின்மீது இருக்கும் ஈக்குவிள க்கானது பல இடத்தில் பலவாறாகத் தோன்றுவதுபோல், சூரி யன் உதயமாகையிலும், உச்சியில் இருக்கையிலும், அஸ்தமிக் கையிலும் அதற்குச் சலனமுண்டாகி, அது பல இடங்களில் இருப்பதுபோல நமக்குத் தோன்றுகிறது.

பூமியானது அசைவற்று நிற்குமாயின், அதன் ஒரு பாதியில்

எப்பொழுதும் வெளிச்சமும், மற்றொரு பாதியில் எப்பொழுதும், இருளுமாயிருக்கும். இப்பூமியின் ஒவ்வொரு இடமும் சூரிய ஒளியையும், உஷ்ணத்தையும் படிப்படியாய் அடையத் தக்கதாகச் சிருஷ்டிகர்த்தர்; பூமி நாள்தோறும் ஒவ்வொரு தரம் தன்னைத்தானே சுற்றிவரும்படி செய்திருக்கிறார்.

இத்தேசத்தில் பங்குனிமீ சூரியன் உச்சியில் இருக்கையில், ஆசியாவின் கீழ்ப்புறத்தில் அஸ்தமானமும், அமெரிக்காவில் நடுராத்திரியும், எங்கிலாந்தில்உதயகாலமுமாய் இருக்கும்.

உருட்சியாகிய இந்தப் பூமியானது ஏறக்குறைய (25,000) இருப்பத்தையாயிரம் மயில் சுற்றளவும், (8,000) எண்ணாயிரம் மயில் குறுக்களவுமுள்ளது. பூமியின் மேற்புறம் ஏறக்குறைய இரண்டு பங்கு சலமும், ஒரு பங்கு நிலமுமாயிருக்கின்றது.

நிலம் இரண்டு விசேஷ பங்குகளாகப் பகுக்கப்படும். அவற்றுள் ஒன்றில் ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்காவும்; மற்றொன்றில் அமெரிக்காவும் இருக்கின்றன. இவைகளன்றி, ஔஸ்திராலியா என்னும் மகா தீவும், இன்னும் பல சிறு தீவுகளும் உண்டு.

சிலதேசங்களில் இருக்கின்ற குடிகளின் தொகை இன்னும் அளவுபடாமையால், இவ்வுலகத்திலுள்ள ஜனத்தொகை மொத்தம் இவ்வளவென்று சொல்வது அரிதாயினும், கணிதசாஸ்திரிகள் ஒரு பிரகாரமாக 106,00,00,000 என்று மதித்திருக்கிறார்கள். இதில் ஆசியாகண்டத்தில் வாசமாயிருப்பவர்களின் தொகை 62,00,00,000 ; ஐரோப்பாவில் 27,00,00,000 ; ஆப்பிரிக்காவில் 9,00,00,000 ; அமெரிக்காவில் 5,00,00,000 ; ஔஸ்திராலியாவில் 3,00,00,000.

எத்தேசத்திலும் இருக்கும் கிறிஸ்தவர்கள் தொகை 30,00,00,000 ; யூதர் 40,00,000 ; மகமதியர் 10,60,00,000

ஹிந்துக்கள். 13.00,00,000; புத்தர் 30,00.00 000; மறுமதஸ்தர் 22,00,00,000.

## ௪-வது வாயு, மழை, மின்னல், இடி, திசைகள் முதலியன.

வாயுவானது நமது கண்ணுக்குத் தோன்றாத பொருளாயிருந்தும், அது பூமியில் எங்கும் வியாபித்திருக்கின்றது. அது இந்தப் பூமியை எல்லாப் பக்கத்திலும் கவிந்துகொண்டு பூமிக்கு ஐம்பது மயில் உயரமட்டும் இருக்கிறது. வாயுவை நாம் காணக்கூடாதாயினும், பரிச உணர்ச்சியால் அறிந்துகொள்ளுகிறோம். அசைவற்று இருக்கின்ற வாயு வீசி அடிக்கிறபொழுது, அதற்குக் காற்று என்று பெயர். நிலமார்க்கமாய் வீசுகிற காற்றுக்குக் கரைக்காற்றென்றும், கடல்மார்க்கமாய் வருங்காற்றுக்குக் கடற்காற்றென்றும், தெற்கிலிருந்து வருகிற காற்றுக்குத் தென்றல் என்றும், வடக்கிலிருந்து வருகிற காற்றுக்கு வாடைஎன்றும், பலமாய் அடிக்கிற காற்றுக்குப் பெருங்காற்று என்றும், மழைபெய்யும்பொழுது அடிக்கும் காற்றுக்கு மழைக்காற்றென்றும், சுற்றிச்சுற்றி அடிக்கிற காற்றுக்குச் சுழல் காற்று என்றும் பெயர். கப்பலில் பாய்விரித்தால் காற்று அப்பாய்களில் தாக்கி அதை ஓடச்செய்யும். வாயு இல்லாவிட்டால் ஒரு சீவனும் பிழைக்கமாட்டாது. நெருப்பும் சுவாலை எழும்பி எரியாது; புல், பூண்டு, செடி, கொடி, முதலானவைகளும் முளையா,

### மழை.

ஒரு பானைத் தண்ணீரை அடுப்பில் வைத்துக் காய்ச்சினால்,

காயக்காய, அந்தத் தண்ணீரெல்லாம் ஆவியாய் எழும்பிச் சுண்டிப்போகுமே, ஒரு கலயத்தில் கொஞ்சம் தண்ணீர் வார்த்து அதை வெய்யிலில் வைத்தால், அதன்மேல் வெய்யில் உறைக்கவுறைக்க, அந்தச் சலமெல்லாம் சுண்டிப்போம். அப்படியே சுண்டி ஆவியாய்ப் பரிணமிக்கப்பட்ட ஜலம் நுட்பமானபடியால் கண்ணுக்குத் தெரியாது.

சமுத்திரங்களிலும், கடலிலும், மற்றும் நீர்நிலைகளிலும் உள்ள சலம் இவ்விதமாகத்தான் நாள்தோறும் சூரிய வெப்பத்தினால் ஆவியாய் எழும்பும். அப்படி எழும்புகிற நீராவி அங்கங்கே சேர்ந்து திரண்டு ஆகாயத்தில் மேகங்களாகப் பரவியிருக்கும். உலைப்பானையின்மேல் ஒரு சட்டியைக் கவிழ்த்துவைத்தால், அந்தப் பானையிலிருந்து எழும்புகிற ஆவியெல்லாம் மூடியிருக்கிற சட்டியின் உட்புறத்தில் போய்ப் படியும். அந்தச் சட்டியை எடுத்துக் காற்று முகமாகச் சாய்த்தால், அதில் அடைந்திருந்த ஆவியெல்லாம் துளிதுளியாகக் கட்டிப்போய்ச் சொட்டுசொட்டென்று விழும். அதுபோலவே நீராவியைக் கொண்டிருக்கிற மேகங்களின்மேல் குளிர்ந்த காற்றுப்பட்டால், அந்த ஆவி சலமாய் குறுகி, பூமியில் மழையாகப் பெய்யும். மழையினால் அதிக பிரயோசனம் உண்டு. மழை இல்லாவிட்டால், ஒரு வகைப் புல்லும் முளையாது. "விசும்பிற்றுளி வீழினல்லான் மற்றாங்கே பசும்புற்றலைகாண்பரிது."

## பனி.

பகல்நேரத்தில் சூரியனுடைய உஷ்ணத்தினாலே பூமியில் இருக்கிற ஈரமுள்ள ஆவிகளும், புகைகளும் ஆகாயத்தில் ஏறுகின்றன. அஸ்தமனமானபின்பு குளிர் உண்டாய், அவைகளில் கனமுள்ள அணுக்கள் அதிகமாய் ஏறுகிறதற்குப் பலமில்லாததினாலே, இயல்பாகப் பூமியின்மேல் விழும், அது முன்பனியென்று சொல்லப்படும்; இரவில் பூமிமுதலான இடங்களினின்று உண

டாகும் நீராவியும், புகைகளும் ஆகாயத்தில் ஏறி அதிக உயர மாய்ப் போகிறதற்கு அவகாசம் இல்லாததினாலே அதிகாலமே பூமியின்மேல் விழும்; இது பின்பனியென்று சொல்லப்படும். குளிர்காலங்களிலும், குளிர்ந்த தேசங்களிலும், நதிகளுக்கும், குளங்களுக்கும் சமீபமாயிருக்கிற ஈரமுள்ள ஸ்தலங்களிலுமி ருந்து முக்கியமாய் உண்டாகிறது மூடுபனியாம்.

## மின்னல்.

மின்னலானது மேகங்களிலிருந்து தோன்றும் ஒளி. "மின் னுக்கெல்லாம் பின்னுக்குமழை." மின்னலானது அதிக வேக மாகப் பாயும். பாயும்பொழுது ஆகாயம் கிழிந்து அலை அலை யாய் அசையும். அந்த அலைகள் நம்முடைய காதுகளில் மோத, உடனே ஒரு சத்தம் கேட்கிறது. அதுதான் மேககர்ச்சனை. தொனியைப்பார்க்கிலும் ஒளி அதிக வேகமுள்ளதாகையால், மின்னல் கண்ணுக்குத் தோன்றின பிறகுதான் இடியின் சத் தம் கேட்கும். அது ஒரு நிமிஷத்தில் ஏறக்குறைய -ககசஉ- அடித்தூரம் ஓடும். அப்படியே மின்னல் கண்டபின் குமுறுகிற மேகத்தின் தொனியும், பீரங்கிவெளிச்சம் கண்டபின் உண்டா கும் சத்தமும் எத்தனை நிமிஷத்திற்குமேல் கேட்குமென்று கண்டு அக்கணக்கின்படி அந்தப் பொருள்கள் இருக்கும் தூர த்தையும் அறியலாம். திருஷ்டாந்தம் —ஆகாயத்தில் மின்னல் கண்டபின் மேகம் குமுறுகிற தொனி நாலு நிமிஷத்தில் கே ட்டால், அப்படி மின்னி முழங்கியமேகம் - சுருசுஅ-அடித்தூர த்தில் இருக்கிறதென்று அறியலாம், ஆகாயத்தில் நெருப்புப் பிடிக்கத்தக்க வஸ்துகள் ஒன்றாய்க் கூடும்பொழுது, அவைகள் மின்சாரத்தினால் அல்லது வேறுவிதங்களினால் பற்றியெரியும். அவைகளே கொள்ளிவாய்ப் பிசாசு, விண்வீழுங்கொள்ளி, எரிநட்சத்திரம் என்று வழக்கமாய்ச் சொல்லப்படுகிறவைக ளாம்.

## திக்குகள்.

கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என்னும் இந்நான்குதிசைகளும் பிரதான திக்குகள். காலையில் சூரியன் உதிக்கிறதிசைக்கு நேர்முகமாய் நாம் நின்று பார்த்தால், நம்முடைய முகம் கிழக்குத் திக்கை நோக்கியிருக்கும்; முதுகு மேற்கே இருக்கும்; வலதுகை தெற்கும், இடதுகை வடக்குமாயிருக்கும். கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடகிழக்கு, வடமேற்கு ஆகிய இந்த எட்டுத் திசைகளுக்கு எண்டிசையென்றும் அஷ்டதிக்கென்றும் பெயர்.

---

# ரு - வது. சமுத்திரம்.

---

பூமி கடலால் சூழப்பட்டிருக்கிறபடியால், திருவள்ளுவர் அதை, "விரிநீர் வியனுலகு" என்று பாடினார். பூமியின் மூன்றில் இரண்டு பங்கைச் சமுத்திரம் மூடியிருக்கிறது. அதின் வழியாய் அனேகம் ஆயிரம் கப்பல்கள் சரக்கு ஏற்றி எந்தத் தேசங்களுக்கும் போக்குவரவு செய்கின்றன. சமுத்திர சலத்தில் உப்பு இருப்பதனால், அதுகெட்டு நாறுகிறதில்லை. அதிக குளிர்ச்சியினால் கெட்டியாய் உறைந்த சலம் கண்ணாடியைப் போல் விளங்கும். உப்புச் சலம் சுத்த சலத்தைப்போல் அத்தனை எளிதாக உறைந்து போகிறதில்லை. கடலின் ஆழம் எங்கும் ஒரே அளவல்ல, அங்கங்கே வேறுபட்டிருக்கின்றது. உலர்ந்த தரையைப்போலக் கடலின் அடித்தரையும் அங்கங்கே மேடும் பள்ளமுமா யிருக்கின்றது. இந்த மேடுகள் சில இடங்களில் தண்ணீருக்கு மேலாகத் தெரிவதும் உண்டு, அவைகள் தீவுகள் எனப்படும். சமுத்திரத்தில் நெடுந்தூரம் சென்று அதன் ஆழத்தைக் கயிற்றால் அளந்தவர்கள் அது, 6260-பாகமென்று கண்டார்கள். (அதாவது 7-மயில்) பூமியைச்சூழும்

விரிநீர் ஐந்து பங்காக வகுக்கப்பட்டிருக்கிறது; அவ்வைந்தும் ஐந்து சமுத்திரம் என்னப்படும். அவை பசிப்பிக்கு சமுத்திரம், அத்லாந்திக்கு சமுத்திரம், இந்திய சமுத்திரம், வடசமுத்திரம், தென்சமுத்திரம் என்பவைகளாம்.

அவற்றுள் பசிப்பிக்கு சமுத்திரம் ஆசியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே இருக்கின்றது. அது பன்னீராயிரம் நாழிகை வழித்தூர விசாலமுள்ளது.

அத்லாந்திக்கு சமுத்திரத்தின் அக்கரையில் அமெரிக்காவும், இக்கரையில் ஐரோப்பாவும், ஆப்பிரிக்காவும் இருக்கின்றன. அந்தச் சமுத்திரம் நெடுகியும், அகலத்தில் குறுகியுமிருக்கும். அளவில் அது பசிப்பிக்கு சமுத்திரத்துக்குப் பாதி.

இந்திய சமுத்திரமானது ஆசியாவுக்குத் தென்புறத்தில் இருக்கிறது. இந்தியதேசத்தை அடுத்திருக்கும் கடல்கள் இந்தியசமுத்திரத்தின் பிரிவுகளேயாம்.

வடசமுத்திரம் பூமியின் வடமுனையைச்சுற்றியும், தென்சமுத்திரம் தென்முனையைச் சுற்றியும் இருக்கின்றன. அவற்றின் அதிகபாகத்தில்உள்ள நீர் உறைந்திருக்கும்.

---

## ௬ - வது பூமியின் பிரிவுகள்.

பூமியில் உள்ள பற்பல கண்டங்களையும், தேசங்களையும், பட்டணங்களையும், மலைகளையும், நதிகளையும், சனங்களையும், அவரவர்குணாகுணங்களையும், தேசாசார மதாசாரங்களையும், பாஷைகளையும், தனாத்தனங்களையுங்குறித்துச் சொல்லும் நூல் பூகோளசாஸ்திரம் என்னப்படும்.

பூமியானது ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா என நான்கு பிரதான கண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நான்கு கண்டங்களுக்குள் ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா என்னும் மூன்றும் ஒன்றோடொன்று சேர்ந்திருக்கிறபடியால், ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குக் கரைவழியாகப் போகலாம். இவைகளுக்கும் அமெரிக்காவுக்கும் மத்தியில் சமுத்திரம் இருக்கிறது; அதனால் இவற்றிலிருந்து அமெரிக்காவுக்குப் போகிறவர்கள் கப்பல் ஏறிப் போகவேண்டும். நாலு கண்டங்களுக்குள் நாம் இருக்கும் ஆசியாகண்டம் அதிக விசாலமானதும், சனம் பெருத்ததுமா யிருக்கிறது. ஐரோப்பாவானது மற்றவைகளைப் பார்க்கிலும் சிறிதாயினும், குடிகளின் தொகையில் அது ஆசியாவுக்கு இரண்டாவதென்று சொல்லலாம். அமெரிக்காகண்டம் கொஞ்சம் குறைய ஆசியாவின் அளவு விசாலமுள்ளதாயிருந்தும், அதன் சனத்தொகை குறைந்திருக்கின்றது.

அமெரிக்காகண்டம் உண்டென்று மற்றை மூன்று கண்டத்தாரும் முந்நூற்று அறுபது வருஷத்திற்குமுன் அறியவில்லை. அதற்குப் பின்புதான் அது அவர்களால் கண்டறியப்பட்டது.

சலம் சூழ்ந்த நிலத்திற்குத் தீவு என்று பெயர். உலகத்தில் உள்ள தீவுகள் எல்லாவற்றிலும் ஔஸ்திராலியா பெரிது; இங்கிலாந்து சிறந்தது; இலங்கை நம்முடைய தேசத்தைச் சேர்ந்தது.

இந்துதேசம் ஆசியாவில் இருக்கிறது. இங்கிலாந்து ஐரோப்பாவைச்சேர்ந்தது. ஐரோப்பா, ஆப்பிரிக்கா கண்டங்கள் ஆசியாவுக்கு மேற்றிசையில் உள்ளவைகள். ஐரோப்பாதேசம் ஆப்பிரிக்காவுக்கு வடக்கு. இந்துதேசத்துக்கு எதிரே பூகோளத்தின்மேற்புறத்தின் பாதியில் இருக்கிறது அமெரிக்காகண்டம்.

நிரக்ஷரேகைக்குச் சமீபத்தில் இருக்கும் தேசங்களில் சூரிய கிரணம் நேராக விழும். அதனால் அத்தேசங்கள் இந்துதேசத்தைப்போல் உஷ்ணமாயிருக்கும். துருவத்துக்குச் சமீபமான தேசங்களில் சூரியகிரணம் சாய்வாக விழுகின்றது. அதனால் உஷ்ணம் குறைந்து, அத்தேசங்கள் இங்கிலாந்தைப்போல் சீதமாயிருக்கும்.

மலைகளினின்று நதிகள் உற்பத்தியாகின்றன. இமாலய மலையில் கங்கை உண்டாகிறது. இமாலயம் என்பது பனிவீடு என்று அருத்தங்கொள்ளும். இமாலயத்தைப் பனிக்கட்டிகள் மூடிக்கொள்ளுதலால், அது வெண்மையாய்த் தோன்றும். சூரிய உஷ்ணத்தால் பனி தண்ணீராய்க் கரைந்தோடி ஆறாயப் பெருகுகிறது. எகிப்துதேசத்தில் இருக்கிற நீல்நதியும் கங்கைநதி போலவே உண்டாகிறது. ஆப்பிரிக்கா கண்டத்தில் சில நதிகள் இருந்தும், மற்றக் கண்டங்களில் உள்ளவைகளைப்போலப் பெரும்பாலும் அவைகள் அத்தனை வளமானவைகளல்ல. அங்கே பயிர் பூண்டுகள் இல்லாத பாலைவனங்கள் அனேகம் உண்டு.

---

## ௭-வது. ஆசியா கண்டம்.

---

ஆசியா சனம் பெருத்த விசாலமானதேசம். சிபேரியா என்னும் அதன் வடபாகம் விஸ்தீரணமான சமபூமியுள்ளது; அது வருஷந்தோறும் சிலமாசவரையில் உறைந்த பனியால் மூடப்பட்டிருக்கும். ஆசியாவின் மத்தியபாகமாகிய தார்த்தாரியில மேட்டுப்பாங்கான வெளி நிலங்கள் அனேகம் உண்டு. அவ்விடங்களில் காட்டுச்செடி முதலியவைகளன்றி, உபயோகமான பயிர் பச்சை ஒன்றும் இல்லை. அங்கே பல தொடர்

மலைகள் உண்டு. அவற்றுள் தென்னண்டையில் இருக்கும் இமயமலையானது இவ்வுலகத்தில் உள்ள எல்லாமலைகளிலும் உயர்ந்தது. அதன் சிகரங்களில் சில ஐந்துநாழிகைவழி உயரமாய் இருக்கும். முற்கூறிய தார்த்தாரி தேசத்துக் குடிகள் ஒரு இடத்தில் வீடுகட்டி வசிக்காமல், நிலையற்றுத்திரிந்து அங்கங்கே கூடாரங்களில் வசிக்கிறார்கள்.

ஆசியாவின் தட்சிணபாகம் உஷ்ணபூமி. அதற்குத் தென்கிழக்கே சீனதேசம் இருக்கிறது. அது மற்றெல்லாத்தேசங்களைப்பார்க்கிலும் குடிவளமுள்ளது. அதில் சில விசாலமான நதிகள் உண்டு. சீனதேசம் தேயிலை, பட்டு, சிறந்த மட்பாத்திரவகை முதலியவற்றால் பேர்போனது. அதற்கு மேற்கே சீயதேசமும், பிரமதேசமும் இருக்கின்றன. அவற்றில் விருட்சங்கள் அடர்ந்த காடுகள் விஸ்தாரம் உண்டு. நாம் வாசஞ்செய்யும் இந்துதேசமானது பிரமதேசத்திற்கு மேற்கே இருக்கிறது. கொஞ்சம் குறைய இந்துதேச முழுமையும் அங்கிலேயர் ஆண்டுவருகிறார்கள். அங்கிலோஇந்தியா என்னும் இந்துதேசம் வங்காளம், ஆகிரா, சென்னபட்டணம், பம்பாய் என்னும் நான்கு பாகங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றது. ஆசியாவின் தென்மேற்கில் ஆப்கான், அரபி என்னும் தேசங்கள் இருக்கின்றன. அவைகளில் பாலைவனங்கள் அதிகம். அத்தேசத்துக்குடிகள் துஷ்டர், யுத்தப்பிரியர், கொள்ளைக்காரர். ஆசியாவின் கீழ்ப்புறத்தில் பாரசீகதேசமும், துருக்கியதேசமும் இருக்கின்றன. ஆதிகாலத்தில் ஆசியாகண்டத்திலேதான் கடவுள் மனிதரைச் சிருஷ்டித்தார். அவர்கள் பல்கிப்பெருக, அவர்கள் வம்சத்தார் பிற்காலத்தில் பற்பல இடங்களில்போய்க் குடியேறினார்கள். ஆசியாவின் கிழக்கில் புத்த சமயமும் இந்து மதமும், மேற்கில் மகம்மது மார்க்கமும் பிரபலமாய் இருக்கின்றன.

# ௮ - வது, இந்தியா.

---

## முதல் பிரிவு.

நாம வாசமாயிருக்கிற இந்தத் தேசத்திற்கு இந்தியாஎன்று பெயர். இது ஆசியாகண்டத்தின் தென்புறம். இந்தியாதேசம் நாலு பிரதான பாகங்களாக வகுக்கப்பட்டிருக்கிறது; இந்தியாவின் வடக்கெல்லை முழுவதிலும் அநேக உயர்ந்த பருவதங்கள் உண்டு; இந்த மலையடிவாரங்களில் இருக்கிறதேசத்திற்கு வட இந்துஸ்தான் என்றுபெயர். மேற்குறித்த பாகங்கள் நான்கினுள் இதுதான் முதற்பாகம். இரண்டாவது பாகத்திற்கு இந்துஸ்தான் என்றுபெயர்; இந்தப் பாகத்தின் கிழக்குப்புறந்தான் வங்காளம்; வங்காளத்தில் பிரதான நகரம் கல்கத்தா; அது இந்தியா முழுவதுக்கும் ராஜதானி. இந்தியாவின் மூன்றாவதுபாகம் தக்ஷிணம்; தக்ஷிணத்தின் மேற்கெல்லையில் இருக்கும் நகரம் பம்பாய். நாலாவது பாகத்திற்குத் தென் இந்தியாவென்று பெயர்; அதில் பிரதானநகரம் சென்னபட்டணம்.

இந்தியாதேசம் முழுமையும் அங்கிலேய துரைத்தனத்திற்கு அதீனம். மாட்சிமைதங்கிய கவர்னர் ஜெனறல்என்னும் தேசாதிபதியும், மற்றும் பிரதான துரைத்தன உத்தியோகஸ்தர்களும், அங்கிலேய மகாராஜாத்தியவர்களிடத்தில் அதிகாரம்பெற்று, இத்தேசத்திற்குவந்து, உத்தியோகம் செய்கிறார்கள்.

இந்தியாவின் வடக்கெல்லையில் இருக்கும் இமயமலைத்தொடர்ச்சிகரங்களில் உள்ள மிகுந்த குளிர்ச்சியினாலே அங்கே சலம் எப்பொழுதும் உறைந்திருக்கும். சூரியகிரணம் அதில் விழுவதினால் அது உருக, சிலஆறுகள் உற்பத்தியாகின்றன; அவற்றுள் விசேஷம் கங்காநதி, இந்துநதி, யமுனாநதி, பிரமபுத்ரநதி. இவைகளன்றி, தக்ஷணத்தில் உள்ள மலைகளில் மகா

நதி, கோதாவிரி, கிருஷ்ணை, காவேரி, தபதி, நருமதைமுதலிய ஆறுகளும் உண்டு. கல்கத்தா, உச்சினி, அயோத்தியா, காசி, தில்லி, கூர்ஜ்ஜாம், நாகப்பூர், ஐதிராபாத்து, பம்பாய், சீரங்க பட்டணம், சென்னபட்டணம், பங்களூர், திரிசிராப்பள்ளி, மதுரை, தஞ்சாவூர் முதலானவை பிரதான பட்டணங்களாம்.

இந்துதேசத்தின் நீளம் தெற்கு வடக்கு ஆயிரத்துத் தொளாயிரம் மயில்; அது கால் நடைக்கு நாலுமாதப் பிரயாணதூரமுள்ளது. அகலம் அதிக விஸ்தாரமான இடத்திலே கிழக்கு மேற்கு ஏறக்குறைய ஆயிரத்து ஐந்நூறுமயில்; அது மூன்று மாதப் பிரயாணதூரமுள்ளது.

சென்னபட்டணத்திற்குத் தெற்கே கன்னியாகுமரிவரைக்கும் இருக்கிற நாடுகள் தமிழ்நாடு என்னப்படும். அதில் சேர சோழ பாண்டிய நாடுகள் உண்டு.

சென்னப்பட்டணத்திற்கு வடக்கே தெலுங்குதேசம்; மேற்கே கன்னடதேசம்.

சென்னைப்பிரதேசத்தில் வசிக்கும் ஜனம் கொஞ்சம் குறைய இருபத்து மூன்றுகோடி.

புராணங்களில் எழுதியிருக்கிறபடி, சுமார் நாலாயிரம் வருஷங்களுக்குமுன் பரதகண்டம் என்னப்பட்ட இந்துதேசம் நான்கு இராச்சியங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவைகளில் முதலாவது இராச்சியம் வங்காளம், அயோத்தியா என்ற தேசங்களுள்ளது. இந்த இராச்சியத்துக்குப் பிரதானமான பட்டணம் பாடலிபுரம். இரண்டாவது இராச்சியம் விஜயநகரம் என்பது. அது கிர்ஷ்ணாநதிமுதல் கன்னியாகுமரிவரையும் உள்ளது. மூன்றுவது கூர்ஜ்ஜாம்முதல் கங்காநதியின் சங்கமம்வரையும் உள்ளது. நான்காவது தில்லி, லாகோர், மூலஸ்தானம், காஸ்மீரம் என்கிற தேசங்களுள்ளது. இந்த நான்கு இராச்சியங்களில் உள்ள நாடுகளைப் பற்பல ராஜாக்கள் ஆ

ளுகைசெய்தார்கள். அந்தப் பூர்வகாலத்து ராஜாக்களுடைய செய்கைகளைக் குறித்த சரித்திரங்களுடன் கட்டுக்கதைகள் கலந்திருப்பதினால், அக்காலத்தில் நடந்த சங்கதிகளைத் திட்டமாய் நிச்சயிப்பது அரிது.

கிருஷ்ணன் என்பவன் ஒரு அரசாட்சியை ஏற்படுத்தி, அவனும் அவன் சந்ததியாரும் நானூறு வருஷகாலமாகத் துவாரகாபுரியிலிருந்து ஆண்டுவந்தார்களென்றும், மதுராபட்டணத்து ராஜாவாகிய கஞ்சன் சராசந்தனுடைய மகளை விவாகம் பண்ணினானென்றும், அந்தப் பெண்ணை முன்பு கிருஷ்ணனுக்கு வாக்குக் கொடுத்திருந்தபடியால், அவன் கஞ்சனைக் கொலைசெய்தானென்றும், அதினால் சராசந்தன் கிருஷ்ணன்மேல் படையெடுத்து, மூன்றுவருஷகாலம் போர்செய்து, அவன் ராணுவத்தை முறிய அடித்து, செயம்பெற்றானென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. அவ்விடத்திலே கிருஷ்ணன் துவாரகா கோட்டையைக் கட்டினான். சிலகாலத்துக்குப் பிற்பாடு தருமன்முதலான பாண்டவரை நட்புச்செய்து, தன் சகோதரன் பலராமனையும், வீமனையும், அருச்சுனனையும் கூட்டிக்கொண்டு, சராசந்தன்மேல் படையெடுத்துப்போய், சிலநாள் போர்செய்கையில், சராசந்தன் அபசெயப்பட்டு அவர்கள் கையில் விழ, கிருஷ்ணனும் அவன் சகோதரனும் மிகக் கொடுமையாய் அவனைக் கொலைசெய்தார்கள். இவையெல்லாம் நடந்து ஏறக்குறைய மூவாயிரம் வருஷமிருக்கும். இந்தச் சங்கதிகளை விவரணமாய் அறிவது அரிது.

---

## ௯-வது. இந்தியா.

---

### இரண்டாம்பிரிவு.

இதற்கு அனேக வருஷங்களுக்குப்பின்பு மகததேசத்து ரா

ஜாவாகிய மகாநந்தன் மூற்காலத்தில் பலராமன் பலாத்கார
மாய்ப் பிடித்திருந்த தேசங்களைக் கட்டிக்கொண்டு, பாடலிபுர
த்தை ராஜதானியாக ஏற்படுத்தி ஆளுகைசெய்தான். அவன்
காலத்தில், கிறிஸ்தவதாரத்திற்குமுன் 325-ம் வருஷத்தில்
கிரேக்கதேசத்து இராசாவாகிய சிக்கந்தரென்றுபெயர் வழ
ங்கிய மகா அலேக்குசந்தர் இந்துதேசத்தின்மேல் படையெடு
த்துவந்து, விதஸ்தமென்னும் நதியின் கிழ்க்கரையில் பாளயம்
இறங்கியிருக்கையில், இந்துதேச இராசனாகிய பார்த்திபன்
4,000-துரகங்களும், 300-இரதங்களும், 200-யானைகளும்,
30,000-ரசபுத்திர காலாட்களுமான வலியசேனைகளையும் சேர்
த்துக்கொண்டு, ஆற்றண்டையிலே அலேச்குசந்தரை எதிர்த்
துப் போர்செய்து செயங்கொள்ளவில்லை. பின்பு அலேக்கு
சந்தர் செயங்கொண்டு பார்த்திபனைப் பிடித்தார். மகா அலே
க்குசந்தர் அவனை நோக்கி, "நான் தங்களுக்குச் செய்யவேண்
டுவதென்ன ! சொல்லுங்கள்" என்றுகேட்க, பார்த்திபன்
தாம் "என்னை ஒரு அரசனைப்போல நடத்தவேண்டும்" என்
றான். அதைக்கேட்டு, மகா அலேக்குசந்தர் அவன் வீரதீரமுள்
ளவனென்று நிச்சயித்து, அவனுக்கு அனேகநன்கொடை கொ
டுத்து, முன்போல அரசாளவைத்தான். இவ்வாறு சிந்துநதி
யை அடுத்த அனேக இராச்சியங்களை அலேக்குசந்தர் செயித்
துப்போகையில், பார்த்திபனுக்குக் கீழ்ப்பட்டிருந்த தக்கண
த்தி இராசாக்கள் அவருடைய பராக்கிரமத்தையும் வெற்றிக
ளையும் அறிந்து, திகிலடைந்து, அவருக்கு அபயமிட்டு, காணிக்
கை கொடுத்து அனுப்பினார்கள். பிற்பாடு மகா அலேக்குசந்தர்
தன் ராணுவங்களுக்குள் கலகமுண்டானதால், இந்துதேசத்
தை விட்டுப் பாரசீகதேசமார்க்கமாய்ப் பாபிலோன் நகரிக்கு
ப்போய், அவ்விடத்தில் முப்பத்திரண்டு வயதில் மரணமடைந்
தான். பின்பு அவன் சேனாதிபதிகளில் ஒருவனாகிய ஸிலுக்
கஸ் என்பவன் இந்துதேசத்தின்மேல் படையெடுத்து, அனேக
பிரதேசங்களைக் கட்டி ஆண்டுவந்தான். வடமேற்கு இந்தியா

வைச்சேர்ந்த பிரதேசங்களில் கிரேக்கர் பல வருஷகாலமட்டும் ஆளுகைசெய்தும், அவர்கள் சரித்திரம் திட்டமாய் எழுதப்படவில்லை.

கிறிஸ்து பிறந்த பத்தாம் நூற்றுண்டுமுதல், இந்து நதிக்கு மேற்கே உள்ள குச்சினிபட்டணத்துச் சுலுத்தான் மகம்மது என்பவன், இந்துதேசத்தின்மேல் பத்துமுறை படையெடுத்து அனேக பிரதேசங்களைக் கொள்ளையடித்து, கோவில்களையும் அழித்து, எண்ணிறந்த பொன், வெள்ளி, இரத்தினங்களை அபகரித்து, மிகக்கொடுமையாய் அரசாண்டுவந்தான். 1390 - ம் வருஷத்தில் திமிரபேக்கு என்னும் துலுக்கன் தில்லி நகரமட்டும் சென்று, அதற்கு அடுத்த ஊர்களைப் பாழாக்கி, அனேகம் பேரை வெட்டிக் கொலைசெய்தான். 1525 - ம் வருஷத்தில் சுலுத்தான் பேபரென்பவன் மொகல் அரசாட்சியை ஸ்தாபித்து, தில்லி நகரியில் வாசம்பண்ணி ஆண்டுவந்தான். பிற்பாடு 1738 - ம் வருஷத்தில் பாரசீகத்து இராசாவாகிய நாதர்ஷா இந்துதேசத்தின்மேல் படையெடுத்து, மிகுதியான பங்கைத் தன் வசப்படுத்தி ஆளுகைசெய்தான். அக்காலத்தில் கருநாடகத்தில் துலுக்கருக்கும்மகாராஷ்டிரருக்குப் போர் நடந்தது. மகாராஷ்டிரர் வசமாக்கிகொண்ட ஆறுகாடு, திருசிராப்பள்ளி என்னும் பட்டணங்களைத் துலுக்கர் பிடித்து, முன்னிருந்த நபாபுகளையே ஆளும்படி வைத்தார்கள்.

17-ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் கம்பெனி என்று சொல்லப்படும் அங்கிலேய வர்த்தக சங்கத்தார் சூரத்து, பம்பாய், தலைச்சேரி, சென்னபட்டண முதலான இடங்களுக்கு வந்து, வர்த்தகஞ்செய்தார்கள். அப்புறம் இப்போது கல்கத்தா நகரம் இருக்கிற இடத்தில் பண்டகசாலையைக் கட்டிக்கொண்டு, சுதேச அரசருடைய அனுமதிப்படிக்கு வியாபாரஞ் செய்தார்கள். காலக்கிரமத்தில் சுதேசஅரசர் ஒருவருக்கொருவர் விரோதமாய் எழுந்து யுத்தஞ்செய்ய, அங்கிலேய வர்த்தகர் அவர்க

ளில் சிலருக்கு உதவிசெய்து, அதற்கீடாக அப்போதப்போது சில பிரதேசங்களைப் பெற்றுக்கொண்டார்கள். 1767-ம் வருஷம் ஐதர் ஆலி என்பவன் அங்கிலேயரை எதிர்க்கும்படி எத்தனித்தான். முன்பு இவனொரு சிபாய்; வரவர இவன் தன்பராக்கிரமத்தினுலே படைத்தலைவனுகி, கடைசியாக மைசூர் இராச்சியத்தைத் தன் வசப்படுத்திக்கொண்டு, சிரங்கபட்டணத்தை ராஜதானிஆக்கி அதிலிருந்து அரசாண்டுவந்தான். இவன் அங்கிலேயர்மேல்பகைகொண்டு, பலமுறையும் அவர்களோடே யுத்தம்பண்ணி, தனக்குண்டாயிருந்த திரளானசேனைகளாலே அவர்களுடைய ராணுவத்தார்களில் சிலரைச்செயித்துச் சிறைப்படுத்தினுன். ஐந்து முறை அவன்சேனை முறியடிக்கப்பட்டு, இரண்டு வருஷத்திற்குள்ளாக அவன் இறந்துபோக, அவன் மகன் திப்பு சுலுத்தான் சிங்காதனம் ஏறினுன். திப்புசுலுத்தான் யுத்தத்துக்காக வெகு பிரயத்தனங்களைச் செய்துவருங்காலத்தில், அங்கிலேயர் அவன்மேற்படையெடுத்துச் சிரங்கபட்டணத்தை முற்றுகைசெய்தார்கள். காவேரிநதிசூழும் அந்தப்பட்டணத்தை ஐம்பதினுயிரம் இராணுவவீரர் காவல்செய்தார்கள். ஆற்றங்கரையில், அங்கிலேயசேனைகள்போயிறங்கி, இராத்திரியில் மூன்றுவகுப்புகளாய்ப் பிரிந்து ஆற்றைக்கடந்து, கோட்டை தவிர, மற்ற இடங்கள் யாவற்றையும் பிடித்துக்கொண்டன. அப்போது கோட்டையையும் பிடித்துக்கொள்வார்களென்று பயந்து, திப்புசுலுத்தான் அங்கிலேயருடன் சமாதான உறவுசெய்து, தன் குமாரர்களில் இரண்டுபேரைப் பிணையாகக் கொடுத்தான். அதுமுதல் ஆறுவருஷமாய்த் திப்பு சுலுத்தான் யுத்தத்துக்கு எத்தனம்பண்ணி, மகாராஷ்டிரரும் தனக்குத் துணை நிற்கும்படி அவர்களை உடன்படுத்தினபொழுது, அங்கிலேயர் சிரங்கபட்டணத்தின்மேல் படையெடுத்து அதை முற்றுகைசெய்து பிடித்துக்கொண்டார்கள். கோட்டையைப் பிடித்தபொழுது வாசலில் தன் இராணுவங்களுக்குத் திடன்சொல்லிக்கொண்டுநின்ற திப்புசுலுத்தானும் அவர்களுடன் மடிந்தான்.

மேற்சொல்லிய விதங்களாக அங்கிலேயர் இந்தியாவில் வர வர அதிகாரம்பெற்று, கல்கத்தா, சென்னபட்டணம், பம்பாய் ஆகிய இம்மூன்றுராஜதானிகளில் அரசிறை நியாயவிசாரணை முதலிய துரைத்தன விஷயங்களை விசாரித்து நடத்தும்படி தேசாதிபதிமுதலிய வெவ்வேறு உத்தியோகஸ்தரை ஏற்படுத்திவந்தார்கள். தேசசமாதானத்தைக் காக்கும்படி ஐரோப்பிய சுதேச போர்ச்சேவகர்களை நியமித்தார்கள். கடைசியில் அங்கிலேய வர்த்தகசங்கத்தார் வர்த்தகத்தொழிலைக் கைவிட்டுத்துரைத்தனவிஷயத்தை மாத்திரம் அதிகமுயற்சியாய் நடத்திவர, சாதாரண வர்த்தகர் அங்கங்கே வியாபாரஞ்செய்து வர்த்தகவிஷயத்தைமனோற்சாகமாய்அபிவிர்த்திபண்ணினார்கள்.

இருநூற்றறுபது வருஷமட்டும் இந்தியாவில் வர்த்தகத்திலும் துரைத்தனத்திலும் தலைப்பட்ட அங்கிலேய வர்த்தகசங்கத்தாருடைய அதிகாரம் 1859-ம் வருஷம் மஹாராஜாத்தியவர்கள் வசம் ஒப்பிக்கப்பட்டது. அந்த வருஷம் நொவெம்பர் முதல்தேதி அந்தப்பெருமாட்டியவர்கள் இந்தியாவில் எங்கும் ராஜவிளம்பரம் ஒன்றைப் பிரசித்தஞ்செய்து, பெரியோர் சிறியோர் யாவருக்கும் மங்கலவாக்குச்சொல்லி, அதுமுதல் இந்தியாவை ஆளுகைசெய்யும்படி தாம் கொண்டகொள்கைகள் இன்னவையென்று வெளியிட்டார்கள்.

---

## ௩-வது ஐரோப்பாகண்டம்.

---

ஐரோப்பாகண்டமானது பிரமாணத்தில் மற்றக் கண்டங்களைப் பார்க்கிலும் சிறிதாயிருந்தும், சனத்தொகையில் அது ஆசியாவுக்கு இரண்டாவதாகச் சொல்லலாம்.

ஐரோப்பாவின் தட்சிணபாகம் இந்தியாவைப்போல் அதிக் உஷ்ணபூமியல்ல; ஆயினும் அவ்விடங்களில் நெற்பயிர், திராட்சக்கொடி, அத்தி, கிச்சிலிமுதலியவைகள் நன்றுய்ச்செழிக்கின்றன. துருக்கி, கிரேக்கை, இத்தாலியா, ஸ்பானியா, பொர்த்துகல் என்னும் தேசங்களில்தான் அவைகள் விசேஷமாய்ப் பயிராகின்றன. அவ்விடங்களில் உஷ்ணம் அதிகமானதால், அங்குள்ள சனங்கள் அங்கிலேயரைப்போல அதிக வெள்ளையாய் இருக்கிறதில்லை.

ஐரோப்பாகண்டத்தின் மத்தியில் பல மலைத்தொடர் உண்டு. அவைகள் எல்லாவற்றிலும் உயர்ந்தது ஆல்ப்ஸ்தொடர். அதன் சிகரங்களில் ஒன்று பதினையாயிரத்தறுநூறடிவரையில் உயர்ந்திருக்கின்றது. அந்தத் தொடரைச்சேர்ந்த பிரதேசங்களில் உருளைக்கிழங்கும், கோதுமைமுதலிய தானியவகைகளும் பயிராகும். நெற்பயிர் சுத்தமாய்விளையாது. அவ்விடத்துச் சனங்கள் சாதாரணமாய் அழகுள்ளவர்கள். அவர்கள் தலைமயிர் குறுகியும், கண் சிறுகியுமிருக்கும். அங்குள்ள பிரதான தேசங்கள் புருஷியா, ஔஸ்திரியா, ஜர்மனி, உலாந்து, பெல்ஜியம், பிரான்சு முதலியவைகளாம். இங்கிலாந்து, அயர்லாந்து என்ற இரண்டும் தீவுகள்.

ஐரோப்பாவின் வடக்கிலுள்ள உருஷாவில் விஸ்தாரமான அனேக சமநிலங்கள் உண்டு. அங்கே இரண்டு மூன்றுதொடர் மலைகள் இருக்கின்றன. அதன் தட்சிணபாகங்கள் கோடைகாலத்தில் உஷ்ணமும், மாரிகாலத்தில் அதிக குளிர்ச்சியுமாயிருக்கும். வருஷந்தோறும் சில மாசம்வரையில் அதன் வடபாகத்தில் உள்ள நீரெல்லாம் உறைந்து பளிங்குபோல் கட்டியாகும். மழையும் உறைந்துவிழும். தெற்கில் கோதுமை மிகுதியாக விளையும்.

உருஷாவுக்கு வடமேற்கே நோர்வை, சுவேதென் என்னும் இரண்டு தேசங்கள் உண்டு. அவைகள் கொஞ்சங்கு

றையக் கடலால் சூழப்பட்டிருக்கின்றன. அங்கே தொடர்மலை ஒன்றுண்டு. அவ்விடங்களில் இரும்பும் செம்பும் அதிகமாய் விளையும். அத்தேசங்களில் மரம் அடர்ந்த காடுகள் அனேகம். தக்ஷிணபாகங்களில் வாற்கோதுமை முதலிய தானியங்கள் பயிராகின்றன. வடபுறமே மணற்பாங்குள்ளது.

லாப்பிலாந்துதேசம் ஐரோப்பாகண்டத்தில் இருக்கும் எல்லாத்தேசங்களுக்கும்வடக்கே உள்ளது. அங்கே சீதளகாலத்தில் இரண்டுமாதவரையில் சூரியன் காணப்படுகிறதில்லை; வேனிற்காலத்திலெ இரண்டுமாதவரையில் அஸ்தமிக்கிறதும் இல்லை.

மகம்மது மார்க்கத்தாராகிய துருக்கர் தவிர, ஐரோப்பாகண்டத்திலுள்ள சனங்கள் யாவரும் கிறிஸ்து மார்க்கத்தார். அவர்கள் தேவகிருபையினாலே மறுதேசத்தார்களைப் பார்க்கிலும், கல்வியிலும், செல்வத்திலும் மேன்மை யுள்ளவர்களாய் இருக்கிறார்கள்.

---

## ௰௧ - வது· எங்கிலாந்து·

---

எங்கிலாந்து என்பது ஐரோப்பாகண்டத்தில் உள்ளதேசங்களில் ஒன்று. இவ்விடத்திலிருந்து கப்பல் ஏறிப்போனால், ஆறு மாதத்திற்குள் அங்கேபோய்ச் சேரலாம். செங்கடல், மத்தியதரைக்கடல்வழியாய்ப் போனால், ஒருமாதம் மாத்திரம் செல்லும். இந்தியாவைப்போல் எங்கிலாந்து உஷ்ணமான தேசமல்ல, அங்கே நெல் விளையாது. தென்னமரங்களாவது வாழைமரங்களாவது, மாமரங்களாவது அவ்விடத்தில் இல்லை: ஆயினும் பல்விதமான கனிவர்க்கங்களும், கோதுமை முதலிய பயிர் வகைகளும் அங்கே உண்டு. அங்குள்ள உலோகக்கனிகளில் வெவ்வேறு உலோகங்கள் விஸ்தாரமாய் வெட்டியெடு

க்கப்படும். எங்கிலாந்தில் புலி, கரடி, யானை முதலாகிய து ஷ்ட மிருகங்களும், தேள், விஷமுள்ள பாம்பு முதலியவைக ளும் இல்லை. மகாபுஷ்டியான ஆடுமாடுகளும், குதிரைகளும் விஸ்தாரமாயிருக்கும்.

அங்கிலேய தேசத்திற்கெல்லாம் லந்தன் என்னும் நகரமே ராஜதானி. உலகத்தில் உள்ள நகரங்கள் எல்லாவற்றிலும் அதுபெரிது. மாட்சிமைதங்கிய விக்தோரியா என்னும் மகாரா ஜாத்தியவர்கள் இப்பொழுது அத்தேசத்தை ஆளுகிறார்கள். சு மார் இரண்டாயிரம் வருஷத்திற்குமுன் இருந்த அங்கிலேய தேசத்துச் சனங்கள் சீர்த்திருத்தமும், கைத்தொழிற் பயிற்சி யும் இல்லாதவர்கள். அப்பொழுது அவர்கள் மிருகத்தோலக ளை ஆடையாகத்தரிப்பது வழக்கம். அவர்கள் மரக்கிளைக ளால் பின்னித் தோலுறையிட்ட படவுகளில் ஏறி ஆற்றினவ ழியாய்ப் போக்கு வரவு செய்வார்கள். அவர்களுடைய முற காலத்து நிலைமைக்கும், தற்காலத்து நிலைமைக்கும் எவ்வளவு பேதம். இப்பொழுது அவர்கள் நாகரீகமும், கல்வியும், செ ல்வமுமுடையவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் இப்படிச் சீர் திருந்தி, கல்வியிலும் செல்வத்திலும் விர்த்தி யடைகிறதற்கு முதற்காரணம் அவர்களுக்குள் நிலைபெற்றிருக்கும் கிறிஸ்துமா ர்க்கமே. ஆதியில் கிறிஸ்துமார்க்க குருக்கள்மார அத்தேசத்தி ற்குப்போய், மெய்த்தேவன் அருளிய வேதத்தைப் போதிக்க, அங்குள்ள சனங்கள் தாங்கள்வணங்கின பொய்த்தேவர்களை மறந்து, துராசாரங்களை விட்டு நீங்கி, நல்வழிப் பட்டார்கள்.

அவர்கள் விர்த்திக்கு இரண்டாவது காரணம் மாறுதல் இன் றித் தேறுதல் இல்லையென்று உணர்ந்து, முன்னோர்கொள்கை களை ஆராய்ந்து, தக்கவைகளைக் கைவிடாமல் பிடித்ததுமல்லா மல், அபிவிர்த்தியாவதற்கு உதவும் புதிய கோட்பாடுகளைக்க ண்டு அனுசரித்துக் கொண்டதுமே.

ஆங்கிலேயருடைய விர்த்திக்கு பின்னும் ஒரு காரணம் உண்டு. அது நேர்மை, விவேகம், முயற்சி இவைகளை உடையவர்கள் அனுகூலப்படுவார்களென்றும், கள்ளம், அவிவேகம், சோம்பு இவைகளையுடையவர்கள் பிரதிகூலமடைவார்களென்றும் அனுபவத்தால் அறிந்து நிச்சயித்திருப்பதே. சிலவருஷங்களுக்குமுன் இறந்துபோன ரோபர்த்து பீல் என்னும் ஒருகனவான் பருத்திநூற் புடவைநெய்த ஒரு குடும்பத்திற்பிறந்தும், சமது கல்வித்திறத்தால் அரசர்களுக்கெல்லாம் சிநேகிதராகி, சகல மேன்மையையும் அடைந்து, நமது காருணியராஜாத்தியவர்களுக்கு முதல் மந்திரியாகவும் இருந்தனர். இடையுருது முயற்சிசெய்யும் சக்தி எவர்களும் பிரமிக்கத்தகும் அளவாக அவரிடத்தில் விளங்கியது. அவர்முயற்சிசெய்வதில் சிறிதும் இளைக்கவில்லை. அவருடைய சரித்திரத்தைப் பார்க்குமிடத்தில், மிதமான விவேகிகளாயினும் சோர்வற்ற ஊக்கமும் முயற்சியும் கைவிடாதிருப்பவர்கள் மிகுந்த அனுகூலம் பெறுவார்களென்பது பிரத்தியக்ஷமாய் விளங்குகின்றது. இந்த நிபுணர் பார்லிமெந்துசபையில் ஒருவராக உத்தியோகஞ்செய்த காலம் நாற்பது வருஷம்: அக்கால வறுதிவரையில் அவர் நிறைவேற்றிய கருமங்கள் இவ்வளவென்றில்லை. அவர் தமது மனச்சாக்ஷிக்கு விரோதமாக ஒருபொழுதும் நடந்தவரல்லர்; தாம் கைக்கொண்ட காரியங்களனைத்தையும் செவ்வையாகச் செய்துமுடித்தனர். மேற்படி பீல்துரை பிரசங்கித்த விஷயங்கள், பிரபந்தம் எழுதின விஷயங்கள் யாவையும் திட்பநுட்பமாய் ஆராய்ந்து அறிந்திருந்தார். அவர்செய்த பிரசங்கங்களே இதற்குத் திர்ஷ்டாந்தமாம். அவர் மிகுந்த சொல்வளமுடையவர்; சபையில் இருக்கும் அந்தந்த மனுஷருடைய விவேகசக்தியின் அளவை அறிந்து, அவரவர்க்கு ஏற்கும் வண்ணம் எந்த விஷயத்தையும் விவரணமாகத் தெரியக் காட்டும்

திறமுடையவர். அனுபவத்திற்கு வரும் விஷயங்களில் அவர் அதிசூக்ஷி; கொண்டகொள்கையைக் கைவிடாதனுசரிக்கும் மனோபலமுடையவர்; கருதிய எந்தப் பொருளையும் உறுதியாய்க்கண்டு கிரகித்து நிறைவேற்றும் திராணியுடையவர். அவருக்குப் பருவம் ஏற ஏற அவர்கொண்ட கொள்கைகள் அகன்று ஸ்திரப்பட்டன. அவரிடத்தில் சிறந்து தோன்றிய அதிசயமாகிய இந்தத்திறமை வயோதிக காலத்தில் எள்ளளவும் குன்றாமல் முதிர்ந்து பக்குவமாயிற்று இவ்விஷயத்தில் அவருக்கு நிகர் சொல்வது அரிது.

---

## ௰௨-வது ஆப்பிரிக்காகண்டம்.

---

ஆப்பிரிக்கா கண்டமானது, ஆசியா கண்டத்தோடு சேர்ந்திருக்கின்றது. அது பெரும்பாலும் அதிக உஷ்ணமுள்ளது. மற்றக் கண்டங்களைப்போல் அதைச்சார்ந்த பிரதேசங்கள் [illegible]த்தையும் ஐரோப்பியர் இன்னும் போய்ப் பார்க்கவில்லை.

ஆப்பிரிக்கா கண்டத்தில் விஸ்தாரமான பாலைவனங்கள் உண்டு. மணற்பாங்கான அவ்விடங்களில் புல் பூண்டு முதலிய பயிர்பச்சைகள் இல்லை. அங்கே அப்போதப்போது பெருங்காற்று அடித்து மணலைவாரிப் பறக்கடிக்கும் பொழுது, அந்தப் பாலைவனங்கள் அலைகள் கொந்தளிக்கிற கடலைப்போலத் தோன்றும். அந்தவனங்களில் அங்கங்கே அருமையாயுள்ள ஊற்றுக்கண்களின் அருகே செழித்தோங்கும் பேரீச்சமரங்கள் நிற்கும் இடங்கள் நெடுந்தூரம் நடந்து வருந்தி இளைத்துவரும் வழிப்போக்கருக்குச் சமுத்திரத்தில் உள்ள தீவுகள்போலத் தோன்றும். ஆப்பிரிக்காவில் ஆறு, கடல், ஏரி அடுத்த இடங்கள் மிகவும் செழிப்பாயிருக்கும்.

ஆப்பிரிக்கா கண்டத்து வடகிழக்கிலே பூர்வ காலங்களில் அதிக கீர்த்திபெற்று விளங்கிய எகிப்து என்னும் தேசம் இருக் கிறது. நீலாறு தெற்கேயிருந்து வடக்கே அதை உருவ ஓடுகி றது. அது வருஷத்துக்கு ஒருதரம் கரை புரண்டு, இரு கரை யிலும் உள்ள நிலங்களின்மேல் பிரவாகித்து அவைகளில் செ ய்யப்படும் பயிர்வகைகளைச் செழிப்பிக்கும். எகிப்துக்குத் தெ ற்கே அபிசினியாதேசம்; அது அதிக செழிப்பான மலைப்பூமி.

ஆப்பிரிக்காவின் வடபுறத்தில் அல்ஜீயர்ஸ், மொரக்கோ எ ன்னும் தேசங்களும், மேற்புறத்தில் செனிகம்பியா, கினி என்னு ம் தேசங்களும், தென்புறத்தில் நன்னம்பிக்கை முனைநாடு, நா த்தால் முதலிய பிரதேசங்களும் இருக்கின்றன. அங்கிலேயர் அங்கேபோய்க் குடியேறி அங்குள்ள மிலேச்சரைச் சீர்திருத் திப் பட்டணங்களைக் கட்டி ஆளுகை செய்துவருகிறார்கள்.

## ௰௩-வது. அமெரிக்காகண்டம்.

அமெரிக்காகண்டம் அதிக விஸ்தாரமானது; அதை ஆசியா [illegible] பெரியதாகச் சொல்லலாம், ஆயினும் அதில் மற்றக் கண்டங்களைப் போலச் சனங்கள் அதிகமாக இல்லை. அக்கண் டம் 1492-ம் வருஷத்தில் கிறிஸ்தொவர் கொலம்பஸ் என்பவனாலே முதலில் கண்டுபிடிக்கப்பட்டு, ஐரோப்பாவிலு ள்ள ஜனங்களுக்குத் தெரியவந்தது.

அதன் வடக்குப்பாகமும் தெற்குப்பாகமும் இடையில் உள் ள [illegible]றைல் இணைக்கப்பட்டிருக்கின்றன. வடஅமெரி க்காவில் அநேக பிரதேசங்களில் விஸ்தீரணமான சமபூமிகள் உண்டு. அவைகளில் கொஞ்சம் குறைய வருஷமுழுதும் நீர் உறைந்து கட்டியாயிருக்கும், அமெரிக்காவின் பூர்வகுடிகள்

சீர்த்திருத்தம் இல்லாத மிலேச்சர். வடஅமெரிக்காவின் மத்தியபாகத்தில் அங்கிலேயருடைய சந்ததியார்கள் குடியேறிஆளுகை செய்துவருகிறார்கள். அவர்கள் கல்வி, தொழில் முதலியவைகளில் அதிகமுயற்சி யுள்ளவர்கள். அவர்களுக்குள் ராஜ வம்சமும், பட்டப்பிரபுக்களும் இல்லை. அவர்கள் காலக்கிரமப்படி தெரிந்தேற்படுத்தும் பிரதானிதான் அவர்கள் அதிபதி. அங்கே முக்கியமாகப் பயிராகின்றவைகள் சோளம், நெல், பருத்தி முதலியவைகளாம். அந்தப் பிரதேசங்களுக்குத் தெற்கே மெச்சிக்கோ, குவாத்திமால் என்னும் தேசங்கள் உண்டு. அவைகளில் விசேஷமாக ஸ்பானிய தேசஸ்தர்கள் குடி புகுந்திருக்கிறார்கள்.

தென் அமெரிக்கா பேராறுகள், தாதுவிளையும் கனிகள் முதலியவைகளால் சிறந்தது. அதின் வடபக்கத்தில் அதிக உஷ்ணமும், தென்பக்கத்தில் உஷ்ணம் சீதம் இரண்டும் மிதமாகவும் இருக்கும். அந்தப் பாகத்தைச் சேர்ந்த நிலம் கொழுமையானது. ஐரோப்பாவில் உள்ள ஸ்பானிய போர்த்துகல் தேசத்தார்கள் அங்கேபோய், அநேகநாள் மட்டும் அதை முழுமையும் கட்டித் துரைத்தனஞ்செய்தார்கள். இப்பொழுதோ, அது பல சுவாதீன நாடுகளாகப் பிரிக்கப்பட் டிருக்கின்றது. அதற்கு வடக்கில் நியுகிரனதா, ஈக்குவடோர், வேனிசுலா என்னும் இராச்சியங்களும், கிழக்கில் பிரஜீல் என்ற அகன்ற இராச்சியமும், மேற்கில் வெள்ளிக் கனியின் மிகுதியால் பெயர்பெற்ற பிரூ, சில்லி இராச்சியங்களும், தெற்கில் வெகு நெட்டையான சனங்கள் வாசஞ்செய்கிற பத்தகோனியா என்னும் தேசமும், நடுவில் பொலிவியா, லாப்லாத்தா நாடுகளும் இருக்கின்றன. ஐக்கிய நாட்டாரும் அங்கிலேயருக்குரிய இடங்களில் உள்ளவர்களும், மற்றத் தேசத்துக் குடிகளும் கிறிஸ்தவர்கள்.

## ௰சு - வது. சிருஷ்டிவர்க்கங்கள்.

---

உலகத்தில் நாம் அநேகம் பொருள்களைப் பிரதத்யட்சமாய்க் காண்கிறோம். அநேக காரியங்களைப்பற்றி மற்றவர்கள் வாக்கினாலாவது, நூலினாலாவது அறிவிக்கக் கேட்டறிகிறோம். இப்படி நாம் கண்டும் கேட்டும இருப்பவைகளைச் சிந்தித்துக் கொண்டால், தாபரசங்கமசாஸ்திரத்தின் உள்ளுறையானவைகளையும், உலக சரித்திரத்தையும் அறியலாம். இந்த அறிவைச் சாதாரணமாய் எவர்களும் எளிதில் பெறலாகும். அங்ககணிதம், பீஜகணிதம், பூகோளசாஸ்திரம், ககோளசாஸ்திரம், தத்துவநூல், ரசாயனசாஸ்திரம், திரிகோணமிதி, தர்க்கசாஸ்திரம் முதலான நூல்களையோ, திட்ப நுட்பமாய் அறிவதற்கு மிகுந்த நுணுக்கமான விவேகமும் விடாமுயற்சியும் வேண்டும். இவைகளை இவ்வாறு அறிபவர்களே வித்துவான்களெனப் பெயர்பெறுவார்கள். இப்படிப்பட்ட பண்டிதர் அனேகர் இல்லை. அதுநிற்க, இவ்விடத்தில் பிரத்தியக்ஷமாகத் தோன்றும் சடப்பொருள்களைமாத்திரம் தொகுத்துக்காட்டுவோம். உலகத்தில் உள்ள பொருள்கள் தாது, மூலம், சீவன் என்று மூன்றுவகைப்படும்.

பூதங்களின் சேர்க்கையால் ஆகிய நிலம், நீர், மண், கல் முதலானவைகளும், பொன் முதலான உலோகங்களும், வயிரமுதலிய இரத்தினங்களும் தாதுவர்க்கமென்னப்படும். தாதுப் பொருள்கள் ஒரு இடத்தினின்று மற்றொரு இடத்துக்குத் தாமாகப் பெயர்ந்துபோகும் தன்மையில்லாதவைகளாதலால், அசரமென்று சொல்லப்படும். அவைகள் உயிரில்லாத அணுக் கூட்டங்கள். தாதுசாதி சீவசாதிபோல, உணவுமுதலிய ஆகாரத்தால் வளருகிறதில்லை; அணுவணுவாய்ச்சேர்ந்து பெருகும்.

பூமியில் விளைகிற புல், பூண்டு, செடி, கொடி, மரம், கிழங்கு முதலான வஸ்துக்கள்மூலவர்க்கம் அல்லது தாவரசமென்னப் படும். இவைகளும், தாதுப்பொருள்களைப்போல, தாமாய் அசைந்து ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்செல்லும் தன்மையில்லாதவைகளே. இவைகள் வித்தினால் உண்டாகிற படியால், உத்பிஜ்ஜம் என்னப்படும். மூலவர்க்கங்களெல்லாம் வேர்த்துவாரங்களின் வழியாய்ப் பூமியிலுள்ள சலமுதலிய ஆகாரத்தை உண்டு வளர்ந்து செழிக்கும். அவை இலைகளின் வழியாய்ச் சுவாசம் விடும், மூலவர்க்கங்கள் முளைத்து, தழைத்து, பூத்து, பழுத்து, வாடி, பட்டு விகாரப்படும்.

உயிரும், உணர்வும், செயலுமுள்ளபிராணிகளெல்லாம்ஜீவ வர்க்கமென்றும், ஜீவாங்கதேகிகளென்றும் சொல்லப்படும். இவைகளில் பையிலிருந்து மனிதனைப்போலப் பிறக்கிறவைகளுக்கு ஜீவசம் என்றும், முட்டையிலிருந்து உண்டாகிறவைகளுக்கு அண்டஜம் என்றும் பெயர். இவைகள் சுவாசம்விட்டு, வேண்டிய இடத்திற்குச் சென்று, ஆகாரத்தைத் தேடித் தின்னும். இவைகளில் சில நிலத்திலும், சில நீரிலும், சில ஆகாயத்திலும் வாழும். விலங்கு,பட்சி, புழு, மச்சமுதலான பிராணிகள் அததற்கு ஏற்ற ஆகாரத்தைப் பிடித்துத் தின்னும், ஜீவன்களில் நன்மை தீமைகளைப் பகுத்தறியும் சக்தியுள்ள மனுஷன் சிறந்த சீவன்.

தாது, மூலம், சீவன் ஆகிய இம்மூன்று வர்க்கங்களும் இயற்கைப்பொருள்களாயிராமல் செயற்கைப்பொருள்களாயிருக்கின்றன. இவைகள் உண்டாக்கப்பட்ட வஸ்துக்களாகையால், சிருஷ்டியென்னப்படும். உலகத்திலுள்ளபற்பல வஸ்துக்களாகிய காரியத்தால்காரணகர்த்தாவுடைய ஞானமும், வல்லமையும், அன்பும் விளங்கும். அவருடைய கிரியைகளை ஆராய்ந்து, காணப்படுகிற பொருள்களால் காணப்படாத அவரை அறிந்துகொள்வதே மேலான அறிவு.

எவ்வுயிரையும் இரட்சிக்கும் கடவுள் ஒருவர் இருக்கிறபடியால், அவர் திருவடியைப்பற்றின உத்தமர் எவருக்கும் அவருடைய வரப்பிரசாதம் சித்திக்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

## ௰௫ - வது பொன்.

பொன்னானது உலோகங்களுக்குள் சிறந்தது. அது மலை வெடிப்புகளில் பாளம் பாளமாகவும், கல், இரும்பு, செம்பு, இவைகளுடன் கலப்பாகவும், மலையருவிபாயும் இடங்களிலும், ஆற்றுத்தரைகளிலும் மணிமணியாகவும் இருக்கும். கொஞ்சக் காலத்திற்குமுன் அமெரிக்காவின் மேற்புறத்தில் கலிபோர்னியா என்னும் பிரதேசத்திலும், ஔஸ்திராலியா தீவிலும் பொன் அதிகமாய் விளையும் இடங்களைக் கண்டுபிடித்தார்கள். பொன்னினால் நாணயம், நகை முதலானவைகள் செய்யும்படி அதைக் கழுவிச் சுத்திசெய்து, பின்பு கொஞ்சம் வெண்காரம், சேர்த்துக் குகையில்வைத்து உருக்குவார்கள்.

பொன் மிகவும் பளுவுள்ளது. அது மிகுந்த அழகும், மற்றெல்லா உலோகங்களிலும் அதிக மேம்பாடுமுள்ளவஸ்து. அதைப் புடம் போடப்போட எடைகொஞ்சம் குறையினும் மாற்று உயர்ந்துகொண்டே வரும். மற்ற உலோகங்களைப் போல் அதற்குக் களிம்பு ஏறுவதில்லை, அது வெள்ளியைப்பார்க்கிலும் பளுவுள்ளது. ஒரு குன்றிமணியத்தனை பொன்னை அடித்தடித்து அரைத்தாள் கடிதாசியின் அளவு தகடாக்கலாம். அரைத்தட்டெடைப் பொன்னை நெடுந்தூரம் நீளத்தக்க கம்பியாக இழுத்து நீட்டலாம். பொன்னானது ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம் என்று நால்வகையாக வழங்குகிறது; அன்றியும் செம்புமுதலிய உலோகத்தினாற்செ

ய்த சில வஸ்துகளுக்குப் பொன்முலாம் பூசிப் பொன் உடைமைகளைப்போலவே ஆண்டுவருகின்றார்கள்.

இயற்கையாய்ப் பொன் மெழுகுபோல் மகாமிருதுவாகவும், மேன்மையாகவும் இருப்பதினால் அது கடினமாகும் பொருட்டு, அதனோடு கொஞ்சம் செம்பாவது, வெள்ளியாவது கூட்டி உருக்கி, நாணயங்கள் ஆபரணங்கள் முதலியவற்றைச் செய்கிறார்கள். பொன் நாணயமாகிய மோரா, பூவராகன், சவரன் முதலியவற்றில் பதினொன்றில் ஒருபாகம் செம்பு சேர்ந்திருக்கும். விசேஷமாகப் பொன்னானது ஆபரணத்திற்கே உபயோகப்படுகின்றது. பொன் அரிதும் பளுவும் அழகுமுள்ளதாயிருப்பதால், அதற்கு விலை அதிகம். ஒரு பவுன் எடையுள்ள பொன் சற்றேறக்குறைய 180-ரூபாய்க்குச் சரி. எட்டுமாற்றுள்ள ஒரு வராகன் எடைப் பொன் நாலுரூபாய் பெறும்.

இந்தியாமுதலான தேசங்களின் ஸ்திரீகளில் அநேகர் கை, கால், கழுத்து, காது, நெற்றி, தலை இவைகளில் பொன் ஆபரணங்கள் அணிந்துகொள்வதற்கு மிகுந்த இஷ்டமுள்ளவர்கள். பொன்னாசை எல்லாத் தீமைகளுக்கும் மூலமாம். பெரும்பாலும், இந்த ஆசை மனுஷருக்கு இயற்கையாய் உள்ளது. பொன் என்பது இலக்ஷணையால் திரவியப்பொருள்கள் அனைத்திற்கும் பொதுப்பெயராக வழங்கும். பூலோகத்தில் கனமும் செல்வாக்கும் உண்டாவதற்குப் பொருளே முக்கியமாம். "அருளில்லார்க் கவ்வுலக மில்லைப் பொருளில்லார்க் கிவ்வுலகமில்லாதியாங்கு" இம்மைக்குரிய சிற்றின்பத்தைப் பெறுவதற்கு ஏதுவாகிய பொருளை மனுஷருள் பெரும்பான்மையோர் விரும்பித் தேடுவதுபோல, மறுமைக்குரிய பேரின்பத்திற்குக் காரணமாகிய தேவ அருளையும் நாடுவார்களானால், எத்தனை அதிக பாக்கியம் அவர்களுக்கு உண்டாகும்.

## ௯-வது வெள்ளி.

சுத்தவெள்ளியானது பெரும்பாலும் கற்களின் வெடிப்புகளில் கண்டெடுக்கப்படும். வெள்ளியெடுக்கும் கனிகள் விசேஷமாகத் தென் அமெரிக்காவில் உண்டு. எங்கிலாந்திலும் ஈயம் போடு சேர்ந்தவெள்ளி கொஞ்சம் அகப்படும். இந்த உலோகம் வெள்ளிதானதால் இதற்கு வெள்ளியென்று பெயருண்டாயிற்று. வெள்ளியை உருக்கி இலைபோல அச்சமான தகடாக அடிப்பதுமன்றி, மயிரிழைபோலக் கம்பியாகவும் அடித்து நீட்டலாம். சுத்தவெள்ளியினால் பாத்திரம், நாணயமுதலியவைகளைச் செய்யும்பொழுது, அவ்வெள்ளி அதிகம் நயப்பாயிருந்ததால், அதனோடு பன்னிரண்டுக்கு ஒரு பாகம் செம்பு கலந்து உருக்குவார்கள். ஒரு பலம் பொன்னின் கிரயத்துக்குப் பதினைந்து பலம் வெள்ளி வாங்கலாம். ஒரு ராத்தல் வெள்ளியில் முப்பத்து மூன்று ரூபா அடிக்கலாம்.

வெள்ளியினால் நாணயங்கள், விதம்விதமான தட்டு, சிறந்த கிண்ணங்கள், போஜனபாத்திரங்கள், கரண்டிகள், முள்ளுகள், அணியப்படும் பலவித ஆபரணங்கள் முதலியவற்றைச் செய்கிறார்கள். வெள்ளிக்குத் துருப்பிடியாவிடினும், நாளாவட்டத்தில் அதின் நிறம் மங்கிப்போகிறது. அதை அடிக்கடி சீமைச் சுண்ணாம்பினால் தேய்த்துத் துலக்கினால், அதிக பளபளப்பாக இருக்கும். வெள்ளியை உருக்கிப் பில்லையாக வார்த்து, பின்பு அதை அடித்து, வேண்டிய பாத்திரமுதலியவற்றைச் செய்துகொள்ளலாம். அன்றியும், அதைப் பில்லைபில்லையாக நறுக்கி, அந்தப் பில்லையை இரண்டு உருக்கு முத்திரைகளின் நடுவில்வைத்து இருத்த அம்முத்திரையில் இருக்கும் உருவமும், எழுத்தும் அப்பில்லையில் எழுத்தாகப்பதிந்துபோகும். இவ்வாறே ரூபா, அணாமுதலிய நாணயங்களைச் செய்கிறார்கள்.

கையினாலே செய்தால், நாணயங்களுக்கு முத்திரைபோடுவ தற்கு வெகுநேரம் செல்லும். யந்திரத்தினால் ஒரு நிமிஷத்தி லே அநேக நாணயங்களை அடித்துத் தீர்க்கலாம். சில பாத்திர முதலியவற்றிற்கு வெள்ளிமுலாம் பூசியிருக்கிறது; அது எள்ள ளவும் பேதமின்றி வெள்ளியைப்போலவே தோன்றும்.

---

## ௰எ - வது. ஈயமும், தகரமும்.

---

அங்கிலேய, ஜர்மானியதேசங்களிலும், அமெரிக்கா கண்டத் திலும், மற்றும் பற்பல இடங்களிலும் ஈயம் அகப்படும். இரு ம்பைப்போலவே இதுவும் விஸ்தாரமாகக் கிடைக்கும். ஈயம் அதிக மெதுவும் கனமுமுள்ளது. அது சாம்பல் நிறமானது. அது அடிக்கப் பதமாயிருப்பதுமன்றி, ஒரு நிமிஷநேரத்தில் உருகுங் குணமுள்ளது. ஈயத்தினால நீர்க்குழாய்களும், தொ ட்டிகளும, வேறு பல கருவிகளும செய்கிறார்கள். அன்றியும் ஈயத்தைப் பாஷாணம் கலந்து உருக்கி, அடியில் துவாரமுள்ள செப்புச் சட்டத்தில், தூக்கிவார்க்க அது சிறிய மழைத்துளி கள்போல விழுந்து ரவைகளாகும. ஈயக்களிம்புக்கு விஷகு ணமுண்டு.

தகரமானது மெதுவும் வெண்ணிறமுமான ஒருவகை உலோ கம. பினிக்கியர்முதலிய புறத்தேசத்து வியாபாரிகள் முதல முதல் அங்கிலேயதேசத்தை அறிந்தது அவ்விடத்தில அகப்ப டும் தகரத்தினாலேதான். உலோகவர்க்கத்தில் தகரம அதிக இலேசானது. ஒரு பானைகொண்ட பொனனெடை பத்தொ ன்பது பானைத் தண்ணீர் எடைக்குச் சரி. ஈயம் தண்ணீரை ப்பார்க்கிலும் பதினொரு பங்கும், செம்பு ஒன்பது பங்கும், இரும்பு எட்டுப்பங்கும், தகரம் ஏழு பங்கும் அதிக ஊட்ட முள்ளவைகள்.

அச்சவடிவாக அடித்திருக்கின்ற மெல்லிய இருப்புத்தகட்டை உருகியிருக்கும் தகரத்தில் தோய்க்க, தகரம் அதில் பற்றிக்கொள்ளும். தகரப்பற்று இரும்பில் துருவேறவொட்டாது. இவ்விதமாகச் செய்யப்பட்ட தகடுகளினால் பலவிதமான கிண்ணிகளும், சோடுதபலைகளும், விளக்குக் கூடுகளும், பற்பல பாத்திரங்களும் செய்யப்படும். தகரமும் ஈயமும் சேர்ந்தால் வெள்ளீடம் என்னும் உலோகமாகும். அதினால் காண்டிமுதலியவைகளைச் செய்கிறார்கள்.

---

## ௰அ-வது. இரும்பு.

---

இரும்பானது எல்லா உலோகங்களிலும் அதிக உபயோகமுள்ளது. அதைச் சிர்ஷ்டிகர்த்தா விஸ்தாரமாகக் கொடுத்திருக்கிறார். அது எல்லாத் தேசங்களிலும் அகப்படும். கனிகளில் அகப்படுகிற இரும்பு கல்லோடும் மண்ணோடும் சேர்ந்ததாயிருக்கும். அப்படிக் கலப்பாயிருக்கும்போது, அதற்கு இரும்புமணலென்றும், இரும்புக்கட்டியென்றும் பெயர். இரும்புக்கட்டியிலிருந்து சுத்த இரும்பைப் பிரித்தெடுக்கும்பொருட்டு, கட்டியைப் பொடியாக்கி, அதனோடு கொஞ்சம் சுண்ணாம்பும் கரியும் சேர்த்து, அதை உலையில்வைத்து உருக்குவார்கள். இரும்போடு கலந்திருக்கிற கல், மண் முதலியவற்றைப்பார்க்க அது பளுவானதால், ஒன்றாய் உருகினபின் அவைகள் மேலே மிதக்க, இரும்பு உலையின் அடியிலே அடையும். பின்பு உலையின் அடியில் ஒரு துவாரம் உண்டாக்கி அச்சுகளில் இரும்பை ஓடவிடுவார்கள். அது ஆற ஆறச் செட்டியாய்விடும். உருக்கிவார்த்த இருமபுக்கு வார்ப்பிரும்பென்று பெயர். இந்த இரும்பு அதிக வெட்டையாதலின் சுத்தியால் அடிக்க உதவாது. அதற்கு நயப்பு உண்டாகும்படி, மீண்டும் உருக்கி நன்றாகக் கிளறி, முற்

றிலும் ஆறிப்போகுமுன்னே அதைப்பெரியசுத்திகளால் அடிப்பார்கள். இவ்வித இரும்பினாலே தான் இருப்புப்பானை, ஆணி, பூட்டு, திறவுகோல்முதலிய பற்பல கருவிகளைச் செய்வார்கள். உறுதியில் இரும்பை ஒத்த உலோகமில்லை. இரும்பில் துரு ஏறும். அத்துருவில் தோஷமில்லை. அது உடலுக்கு வலுவைக் தரும். அயசிந்தூரமென்னும் ஒருவகை மருந்தாகிறது. "இளைத்தவன் இரும்பைத் தின்னவேண்டும்" என்னும் பழமொழியினால் அந்தமருந்தின் குணம் விளங்கும்.

இரும்பைக் காற்றுப்போகாத உலையிலிட்டு, அதினோடு கரி சேர்த்து உருக்கினால், எஃகு ஆகும். அவ்விரும்போடு அடுப்புக் கரியும் ஒரு பங்கு சேர்ந்திருப்பதால், அதன் குணம் வேறாகும். எஃகைக் காய்ச்சினால், அதைச் சுத்தியால் அடிப்பதற்கு வருந்தமிராது. கூரிய ஊசி, கத்தி முதலியவற்றை எஃகினால் செய்வார்கள்.

---

## ௰௬-வது செம்பும், பித்தளையும்.

---

செம்பு பற்பல தேசங்களில் விளைகிறது. இங்கிலாந்தில் அநேகம் செப்புக்கனிகள் இருக்கின்றன. கொஞ்சக்காலத்திற்குமுன் ஔஸ்திராலியாவிலும் செம்புள்ள இடங்களைக் கண்டுபிடித்தார்கள். இங்கிலாந்தில் வெட்டியெடுக்கும் செம்பு கெந்தகத்தோடு கலந்திருப்பதால், அதைக் காய்ச்சிச் சுத்திசெய்கிறார்கள்.

செம்பு சிவப்பு நிறமுள்ளது. அது வெள்ளியைவிட இலேசானது. அதைத் தகடாக அடிக்கலாம்; மெல்லிய கம்பியாக நீட்டலாம். செம்பு விஸ்தாரமாய் அகப்படுமாதலால், அதன் விலை மிகவும் எளிதாக இருக்கின்றது. ஒருபலம் பொன்னுக்கு ஆயிரம் பலம் செம்பு வாங்கலாம். செம்பில் இருக்கிற பச்சை

நிறமான களிப்பு நஞ்சின் குணமுள்ளது. ஆதலால் செப்புப் பாத்திரங்களுக்கு ஈயம் பூசுவது அவசியம். ஈயம் பூசாத செப்புப்பாண்டங்களில் வைத்த பதார்த்தங்களைத் தின்று இறந்தவர்கள் அநேகர். செம்பினால் அரை அணா, கால் அணா, பை என்பவைகளை அடிக்கிறார்கள். கப்பல்களைப் பூச்சிகள் அரித்துப் போடாதபடிக்கும், அவைகள் தண்ணீரில் தடையின்றி இலகுவாய்ச் செல்லும்படிக்கும் கப்பல்களின் அடியில் செப்புத்தகடுகளைத் தைப்பது வழக்கம்.

பித்தளையானது அழகும், இலேசும், பசுமை நிறமுமுள்ள ஓர் வகை உலோகம். அது செம்பும் துத்தநாகமும் கூடிய வஸ்து. பித்தளை செம்மைப்பார்க்கிலும் பலமுள்ளது. செம்மைப்போல் அதில் களிம்பேறமாட்டாது. பித்தளையினால் குத்துவிளக்கு, அண்டா, தவலை, செம்புமுதலிய பாத்திரங்களைச்செய்கிறார்கள். செம்பும் தகரமும் எடைப்படிகலந்தால் வெண்கலமாகும், வெண்கலத்தால் மணிகள், சதங்கைகள் முதலியவைகளை வார்க்கிறார்கள்.

## ௨0-வது இரத்தினங்கள்.

விலையுயர்ந்த அழகிய சில கல்லுகள் உண்டு; அவற்றிற்கு இரத்தினங்களென்று பெயர். அவற்றுள் வயிரம் அதிக உறுதியும் அருமையுமாம். மற்ற இரத்தினங்கள் எல்லாவற்றையும் வயிரத்தினால் அறுக்கலாம். வயிரத்தை ஒன்றும் அறுக்கமாட்டாது. வயிரக்கற்களை ஒன்றோடொன்று தேய்க்கத் தேய்க்க, பளபளப்பும் சீர்மையும் உண்டாகும். பெரும்பாலும் வயிரக்கல் வெண்மை. ஆயினும், சில பசுமையும், சில செம்மையும், சில நீலமும், சில கருமையுமுள்ளனவாம். வயிரம் மிகவும் பிரகாசமுள்ளதாக இருந்தும், பட்டை தீர்ந்து வெட்டப்பட்ட

கண்ணாடியைப்போல் அவ்வளவு அழகுள்ளதல்ல, அங்கிலேய மகா ராஜாதிராஜவர்களிடத்தில் இருக்கும் வயிரமானது உலகத்திலுள்ள பாரி வயிரங்களில் சிறந்தது. அதற்கு ஒளிமலையென்று அர்த்தங்கொள்ளும் கோகினூர் என்று பெயர். அது சற்றேறக்குறையக் கோழிமுட்டையில் பாதியிருக்கும். அவ்வயிரத்தை இருநூறு லட்சம் ரூபாய்க்கு மதிக்கிறார்கள். வயிரக்கல்லில் நூற்றில் தொண்ணூற்றொன்பது பாகம் அடுப்புக்கரி. ஆதலினால் அதை நெருப்பிலேபோட்டு எரித்தால், நீறாய்ப்போய் விடும். வயிரம் இந்துதேசத்திலும் இன்னும் சில இடங்களிலும் மாத்திரம் அகப்படும்.

பதுமராகம் மதிப்பில் வயிரத்திற்குச் சமானம். அதின் நிறம் செக்கச்சிவேலென்றிருக்கும். அது இலங்கைத் தீவிலும் பிரமதேசத்திலும் அகப்படும். நீல இரத்தினத்திற்கு அதின் நிறத்தினாலேயே பெயர் வந்திருக்கிறது. அது மேற்சொல்லிய இருவகை இரத்தினங்களுக்கும் குறைவுபட்டது. நீல இரத்தினம் இந்துதேசத்திலும், இலங்கைத் தீவிலும் ஆற்று மணலில் அகப்படும். பதுமராகமும், நீலமும், களிமண் தன்மையையுடைய வஸ்துவினாலே உற்பத்தியாகின்றன. மரகதமானது அழகிய பச்சை இரத்தினமாம். முதல்தரமான பச்சைகள் தென்னமெரிக்காவிலிருந்து வருகின்றன. சுகந்திக்கல் இரத்தினத்தி றமும் பதுமராகம் மஞ்சள் நிறமுமாம்

வயிரம், மாணிக்கம், மரகதம், நீலம், கோமேதகம், புஷ்பராகம், வைடூரியம், பவளம், முத்து இவை ஒன்பதையும் நவமணிகளென்பார்கள்.

## உஉ-வது தாவரங்கள்.

தாவரங்களுக்குச் சீவன் இருந்தும், அறிவு இல்லை. அவைகள் தோன்றின இடத்திலேயே நின்று வளரும்; விதையினின்று

உற்பத்தியாகும் வேர் பூமிக்குள் இறங்கும். மூலவேரிலிருந்து அநேக பக்கவேர்களும், சல்லிவேர்களும் நாலண்டையும் பரவி மரத்தை நிலைபெறச்செய்யும். வேர்களின் நுனி நூல்போல் நுணுக்கமாகவும், பஞ்சுபோல் மெதுவாகவும் இருக்கும். வார்க்கப்படும் சலமும், அதில் கலந்திருக்கும் விதவிதமான சாரங்களும் அவ்வேர்களின் வழியாய் மரத்துக்குள் எங்கும் பரவி, கிளை, இலை, பூ, காய்முதலிய யாவையும் செழிக்கப்பண்ணும். வேரற்றமரம் விளங்காது. மரத்துக்குப் போகிற எரு தண்ணீரோடே கலந்து, வேர்களின் வழியாய் மரத்திலே சென்று புஷ்டியைக் கொடுக்கும். பட்டையானது மரத்திற்குப் போர்வை பட்டைபோனால் மரம் பட்டுப்போம்.

வித்து உமிக்குள்ளாவது, ஓட்டுக்குள்ளாவது இருக்கும். புதைத்த வித்தில் முளைபெயரும்பொழுது, அதின் உமியும் ஓடும், பட்டையும் அதற்கு எருவாகும். "பண்டுமுளைப்பது அரிசியேயானாலும் விண்டுமிபோனால் விளையாதாம்."

மரங்களில் கனிவிருட்சங்கள் விசேஷித்தவைகள். மா, பலா, வாழை, கொளிஞ்சி, வாதுமை, மாதுளை, கொய்யா, விளா, முந்திரி, புளி, நெல்லி, எலுமிச்சை, தென்னை, பனை, ஈஞ்சு, கமுகுமுதலிய மரங்களின் பழங்கள் விசேஷித்தன.

தேக்கு, சவண்டலை, கருங்காலி, செம்மரம், வன்மரம், [illegible]ரசு, பூவரசு, வேம்பு, இலுப்பை, வாகை, சந்தனம், வேல், மூங்கில் முதலிய மரங்கள் பற்பலவேலைகளுக்குதவும். இவைகளால் பெட்டி, மேசை, நாற்காலி முதலியவைகளைச் செய்கிறார்கள். தேக்குமரத்திலே கப்பல் செய்வார்கள்.

சில ஆலமரங்கள் வெகுகாலமாய் நின்று, அநேகவிழுதுகளை விட்டு, ஆயிரம்பேர் தங்கும்படியான நிழலைக் கொடுக்கும்.

கத்திரி, பீர்க்கு, புடல், பூசனி, சுரை, வெண்டை, முருங்கை, அவரை, தமட்டை, பாகல், கக்கரி, வெள்ளரி, தக்காளி முதலி

ய காய்களும் ; அகத்தி, கோவிஸ்முதலிய கீரைகளும் ; வெங்காயமுதலிய காயங்களும்; வள்ளி, உருளை, முள்ளங்கிமுதலிய கிழங்குகளும் ; நெல், கம்பு, சோளம், செழ்வரகு, சாமை, தினை, வரகு, கோதுமை, எள் முதலிய தானியங்களும் ; கடலை, பட்டாணி, கொள் முதலிய பயறுகளும்; துவரை, காராமணி, மொச்சை, உளுந்து முதலிய பருப்புகளும் ; மிளகு, மிளகாய, மஞ்சள், சீரகம், கொத்துமல்லி, கடுகு, வெந்தய முதலிய மசாலைவர்க்கங்களும், கிராம்பு, இலவங்கம், சாதிக்காய், சோம்பு, ஏலரிசி முதலிய வாசனைவர்க்கங்களும், மனிதருடைய ஆகாரத்துக்கு உதவுகிற பதார்த்தங்கள்.

மல்லிகை, ரோஜா, மகிழ்முதலிய வாசனையுள்ள புஷ்பங்களும் ; தாமரை, அல்லி, சூரியகாந்திமுதலிய அழகுள்ள மலர்களும் ; சந்தனம், மருக்கொழுந்து முதலிய வாசனையுள்ள பதார்த்தங்களும் மனிதர் தரித்துக்கொள்வார்கள்.

இஞ்சி, ஓமம், வசம்பு, திப்பிலி, துளசி, தூதுளை, ஆமணக்கு முதலியவைகள் அவிழ்த மூலிகைகள்.

---

## ௨௨-வது இத்தேசத்து மரங்களில் தென்னையும், பனையும் விசேஷித்தவைகள்.

---

தென்னமட்டை நாரால் கயிறு திரிப்பார்கள். ஓலை மட்டைகள் வீடு வேயவும், வேலி அடைக்கவும், கீற்றுகளாகப் பின்னவும் உபயோகிக்கப்படும். தேங்காய் ருசியுள்ளபதார்த்தம். தேங்காய் இளைதாயிருக்கும்பொழுது, அதில் இளநீர் இருக்கும், முற்றினால் இளநீர் கட்டித் தேங்காயாகும், மனிதர் சாப்பிடுகிற பல உண்டிகளில் தேங்காய்சேரும். தேங்காயெண்ணெய் கறிக்கும், பலகாரவகைகளுக்கும், விளக்கு எரிப்ப

சுரக்கும் உதவும். உள்ளிருக்கும் நீர் காய்ந்து ஓடும் ஒட்டாமல் விடப்பட்ட தேங்காய்க்குக் கொப்பரையென்று பெயர். தென்னம்பாளையில் மதுரமான கள் இறக்குகிறார்கள். இந்தக் கள்ளினால் ஒருவித சாராயம் செய்கிறார்கள். இவ்வாறு தென்னைமரம் அடியுண்ட நீரைத் தலையாலே தரும்.

பனைமரம் மணற்பாங்கில் விருத்தியாகும். இதிலேதான் பனங்கிழங்கும், இளங்காயாகிய பனைநுங்கும், பனம்பழமும், அதின் பாளையிலிருந்து இறக்கும் மதுரமான கள்ளும் மனிதர்களுக்கு உதவுகிறதுமல்லாமல், பனைமரம் வரிச்சல் வேலைகளுக்கும் பிரயோசனப்படும். சுண்ணாம்புச் சட்டியில் இறக்குகிற கள் பதனியாகும். இதைக் காய்ச்சினால் பனைவெல்லமாகும். சானார் முதலிய அநேக சனங்கள் பனைமரத்தாலே சீவனம்பண்ணுகிறார்கள். பனையோலை வீடு வேயவும், வேலி படைக்கவும், நிலத்திற்கு எருவிடவும், விசிறி கட்டவும், ஏடு சேர்க்கவும், சீட்டு, கணக்கு முதலிய எழுதவும், பாய் முடையவும், பெட்டி இழைக்கவும் உதவும்.

மாமரமுதலிய பழ மரங்கள் அதிக மதுரமான கனிகளைக் கொடுக்கும்படி ஒரு நல்ல வகை கண்டுபிடித்திருக்கிறார்கள். அதாவது, நல்ல சாதிமரத்தின் ஒரு சிறு கிளையைத் தறித்து, அதில் விழுகிற பால் கொஞ்சம் வடியுமட்டும் வெயில் படாமல் வைத்து, அதின் ஒரு முனையைச் சீவி, எந்த மரத்தின் கிளையிலாவது அதைப் புகுத்தத்தக்க துவாரமிட்டு, இவ்விரண்டு கிளையையும் சரியாய் ஒரு உடல்போலப் பொருத்துவைப்பார்கள். ஒட்டப்பட்ட சிறு கிளையின் ஒரு பக்கத்து மேற்பட்டை அம்மரக்கிளையின் பட்டையோடு ஒன்றச்செய்து, வாழைநாரினால் இலேசாய்க் கட்டி, அதன்மேல் கொஞ்சம் களிமண், பசுவின் சாணம், வைக்கோலின் கூளம் இவற்றைப் பிசைந்து நன்றாகப் பூசுவார்கள். இதைப் பத்திரமாய்ச் செய்தால், அம்மரத்தின

கனி ஒட்டப்பட்ட சிறுகிளையின் கனிபோலவே மாறி மதுரமாயிருக்கும். இந்தப் பழத்துக்கு ஒட்டுமாங்கனி என்றுபெயர்.

---

## ௨௫-வது தானியம்.

---

பலதேசங்களிலும் பலவகைப்பட்ட தானியங்கள் விளையும் அவைகளெல்லாவற்றிற்கும் வேரும் இலையுமுண்டு. விதைகள் கொத்துக்கொத்தாக இருக்கும். இந்த தேசத்திலும், இதைப்போன்ற உஷ்ணபூமிகளிலும் விசேஷமாகி நெல், சோளம், தினை, வரகுமுதலிய தானியங்கள் விளைகின்றன. இவற்றுள் நெல்லே சனங்கள் பலருக்கும் உபயோகமானது. நெற்பயிருக்கு வெயிலும் அதிக தண்ணீரும் வேண்டும்.

ஆற்றுப்போக்கு ஏரிப்பாய்ச்சலுள்ள நன்செய் நிலங்களில் நெற்பயிர் விளையும். நிலத்தை உழுது பரம்படித்து எருப்போட்டு, மழைபெய்யும் தருணத்தில் விதைவிதைத்து, நாற்று நட்டுத் தண்ணீர்பாய்ச்சிக் களைபிடுங்கினால், பயிர் விளைந்து, கதிர் தள்ளி, பால் முற்றி, மணியாகி, பழுத்துக் குலைசாயும் அறுப்புக்குப் பக்குவமாகும் காலத்தில் பண்ணைக்காரர் அதை அறுத்து அரிக்கட்டுகளாகக்கட்டி, அவற்றைக் களத்துமேட்டில் கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள். பிறபாடு அவைகளை அடித்தாவது, மாடுகளால் மிதிப்பித்தாவது தூற்றி, வைக்கோலையும் தானியத்தையும் வேறாக்கிப் போர்போட்டு நெற்களைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்கள். தினைப்பயிர் விசேஷமாக உஷ்ணபூமியில் விளையும். சோளம் நெல்லைப்பார்க்கிலும் செழுச்சியாய் ஓங்கி வளர்ந்து அதிக பலனைக் கொடுக்கும், இதை அமெரிக்காவிலுள்ள சனங்கள் புசிக்கிறார்கள். பெரும்பாலும் சோளத்தட்டைகளை மாடுகள் வைக்கோலைப்போல தின்னும். குளிர்ச்சியுள்ள பூமியில் கோதுமை, வாற்கோதுமை

முதலியவைகள் விளையும்: இந்துதேசத்தில் வடக்கிலும், தெற்கு மலைநாடுகளிலும் அவைகளுக்கு இணங்கிய குளிர்ச்சி இருப்பதனால் அவைகளை அதிகமாய்ப் பயிரிடுகிறார்கள். கோதுமைக்கு நாட்டுச்சூரமென்றுபெயர். ஐரோப்பா, வட அமெரிக்காகண்டங்களிலும, ஆசியாகண்டத்து அராபியா, வட இந்தியா முதலான இடங்களிலும் கோதுமையினால் ரொட்டி சுட்டுத் தின்கிறாகள். வாற்கோதுமை நெல்லைப்போலிருககும். அதினாலும் ரொட்டிசுடுவார்கள. எங்கிலாந்தில் இதனால் பிரதானமாய் பீர் என்னும் ஓர் வகைச்சாராயம் இறக்குகிறார்கள். மேறகூறிய பலவகைப் பட்ட தானியங்கள நாவுக்கு உருசியானவைகளும், உணவிற்குரியவைகளுமாயிருப்பதனால், அவைகளை மனுஷருக்குக் கொடுத்து ஆகரித்துவருகிற கடவுளின இரக்கமும தயவும் இவ்வளவென்று அறியலாம்.

---


## ௨௪-வது. காப்பிக்கொட்டையும், தேயிலையும்.

---

காபபிச்செடி எட்டு அடிமுதல் பன்னிரண்டு அடி உயரம் வரையிலும வளரும், இதன மூட்டினின்றும் பல கிளைகளை கள புறபபடும். இசறத அடிமரம் தவிரக் கணுககள் கிடைக்கவே கிடையாது: இலை இரட்டை இரட்டையாக இருக்கும். அவ்விலைகள்உலர்ந்தபோதிலும பச்சைநிறமாகவேயிருக்கும். சிறிய நரம்புகளில புறப்படும் அரும்புகள மல்லிகைப் புஷ்பங்கள்போல இருககும். அதின பழத்திற்குள் முட்டைபோன்ற இரண்டு விதைகளும, அவ்விதைகளைச் சுற்றிச் சதையும் இருக்கும்; இக்கனிகள சிவந்தவுடன அறுத்துச் சேர்த்துஆலையிற் போட்டு ஆட்டி, கொட்டை வேறு, தோல் வேறாக்கி, பின்பு

அவற்றை நன்றாய்க் கழுவி உலரவைப்பார்கள். பச்சையான கொட்டைக்கு ருசியுமில்லை, மணமுமில்லை. வறுத்த நிமிஷத்தில் அக்கொட்டை கொஞ்சம் உப்பி, அதிக மணமும் ருசியுமுள்ளதாகும். வறுத்தபின்பு அதை உரலிலிட்டு இடித்தாவது யந்திரத்தில் அரைத்தாவது தூளாக்கி, அத் தூளின்மேல் வெந்நீர் வார்ப்பார்கள். தெளிந்த கஷாயத்தை இறுத்துக் குடிப்பார்கள். சிலர் அதனோடு பாலும் சருக்கரையும் சேர்த்து உண்பார்கள். காப்பிக்கொட்டை அமெரிக்கா, அரபியா முதலிய தேசங்களிலும், இலங்கை, ஜாவா முதலிய தீவுகளிலும் அதிகமாய் விளைகிறது. இந்துதேசத்தில் சோவராய்மலையிலும், வைநாட்டிலும் அது பயிராகிறது. இது 1652ம் வருஷத்தில் முதல்முதல் இங்கிலாந்துக்குக் கொண்டுபோகப்பட்டது. அத்தேசத்தார்கள் காப்பிக்கொட்டைக் கஷாயமாத்திரமல்ல, தேயிலைக் கஷாயமும் பருகுகிறார்கள். தேயிலையானது சீனா, ஜப்பான், அஸ்ஸாம் என்னும் தேசங்களிலும், இந்துதேசத்தின் வடபுறங்களிலும் விளைகிறது. இச்செடி இரண்டு முழமுதல் நாலுமுழ உயரம் வரையிலும் வளரும். இதன் புஷ்பம் காட்டுரோஜாப் பூவைப்போல் வெண்ணிறமாயிருக்கும். இலைகளை வருஷத்திற்கு மூன்றுதரம் அறுத்துச் சேர்ப்பார்கள்: இளஞ்செடிகளில் இலைகள் விசேஷமாகத் தழைத்திருக்கும். இவ்விலைகளைப் பறித்து சகாறில சற்று வதங்கப்போட்டு, பின் புகையில் காட்டி இலைகள் சுருண்டபிறகு, இருப்புச் சட்டியில் அவற்றை இளவறுப்பாக வறுத்துவைத்துக்கொள்ளுவார்கள். தேயிலை 1610-ம் வருஷத்தில் முதல் முதல் அங்கிலேயதேசத்திற்குக் கொண்டு போகப்பட்டது. இப்பொழுது பவுன் இரண்டு ரூபாய்க்கு விற்கிற தேயிலை 1669ம் வருஷத்தில் லண்டன் பட்டணத்தில் முப்பது ரூபாய்க்கு விற்றதாகச் சொல்லுகிறார்கள். ஒரு கரண்டி தேயிலையை ஒரு பாத்திரத்தில் போட்டுக் கொதிக்கிற நீரைவார்த்து, சற்றுநேரத்திற்குப் பின்பு தெளிவை இறுத்துக் கொண்டு, சருக்கரைபோட்டுப் பால்வார்த்துக் குடிக்கலாம்

சீனதேசத்தார்களும் வேறு சிலரும் சர்க்கரை பால் சேர்க்காமல் குடிப்பார்கள். காப்பியும் தேயிலையும் உடம்புக்குச் சுகதரமான பானவகைகள். அவைகள் உல்லாசத்தையும் ஊக்கத்தையும் உண்டுபண்ணி ஆயாசந்தீர்க்கும். வெறுங்காப்பிக்கஷாயம் காய்ச்சலுக்கு நல்லது. தேயிலைநீரும் சுரத்தையும் தலைநோவையும் போக்கும்.




## உ௫ - வது புகையிலையும், கமுகும்.

---

புகையிலை இந்துதேசத்தில் பல இடங்களிலும் விஸ்தாரமாக விளைகின்றது. அது நாலு ஐந்து அடி உயரமட்டும் வளரும். அதின் இலை பச்சையாக இருக்கும். அதைப் பருவகாலத்தில் காம்போடு கத்தியால் அறுத்து, இரண்டிரண்டாகக் கயிற்றில் கோர்த்துக்கட்டி, நிழலில் உலர்த்தி, பின்பு அவற்றைக் கட்டுக் கட்டுகளாகக் கட்டி, விக்கிரயஞ்செய்கிறார்கள். புகையிலையை வாங்கிச் சிலர் சுருட்டுகளாகச் சுருட்டி விற்பார்கள். சிலர் மூக்குத்தூள் செய்து விற்பார்கள். புகையிலையில் இறக்கும் தயிலம் விஷமுள்ளது.

பாக்குக்காய்க்கும் கமுகுமரமானது ஏறக்குறைய மூங்கிலின் அளவாகத் திரண்டு ஓங்கிவளரும். தென்னை, பனை இவற்றைப்போல உச்சியில்மாத்திரம் மடல்கள் இருக்கும். பாக்குகளை வருஷந்தோறும் இலங்கைத் தீவிலிருந்து இந்து தேசத்திற்கு இரண்டு லட்சம் ரூபாய்க்கு அதிகமாகக் கொட்டைப்பாக்காக அனுப்பிக்கொண்டேயிருக்கிறார்கள். கமுகு தென்னிந்தியாவிலும் சில இடங்களில் செழிக்கின்றது.

கொட்டைப்பாக்கை முழுமையாகவும், இரண்டிரண்டாக வெட்டியும், இளம்பாக்கை வேகவைத்துக் களிப்பாக்காகவும்

விற்கிறார்கள். இந்துக்கள் உபயோகத்துக்காகச் சுண்ணாம்பு தடவிய வெற்றிலையோடு கலந்து போட்டுக் கொள்ளுகிறார்கள். வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு இம்மூன்றுக்கும் தாம்பூலமென்று பெயர்.

---

## ௨௬-வது - பஞ்சு

---

பஞ்சானது மூன்றுவகைப்படும். அவற்றில் வெண்பஞ்சு, செம்பஞ்சு என்ற இருவகையும் பருத்திச்செடியில் விளையும். பருத்திக்காயின் நிறம் கறுப்பு; அக்காய்கள் விளைந்தும் பஞ்சுமாக இருக்கும். உயர்ந்த மரமாகிய இலவமரத்தினின்று உண்டாகும் பஞ்சு இலவம்பஞ்சு என்று சொல்லப்படும். இலவமரத்தில் பழமில்லை. பஞ்சு உள்ளிருக்குந் தன்காய் பழம்போலக் காணும். இதைச் சுட்டித்தான் "இலவம் பூங் காத்த கிளிபோலாயிற்று" என்னும் பழமொழி வழங்குகின்றது. இலவம் பஞ்சு மகா மிருதுவானதால், மெத்தை, தலையணைகளுக்கு விசேஷமாக உதவும். முற்கூறிய பருத்திச்செடிகள் தரையில் நட்டுப் பயிர் செய்யப்படுகின்றன. சாதாரணமான மண்வளமுள்ள பூமியாகிலும் நல்ல கறுப்பு மண்ணாகிலும் சிறு செவ்வெளியில் பருத்தி ஏராளமாகப் பயிராகின்றன. பருத்திக்குக் காட்டெருப் போடுவதும் பசுமையானதால் அதிகமாகக் காய்க்கும். இங்கிலீஷ்காரர் நம் நாட்டிலிருந்து பருத்திப் பஞ்சை வண்டிகளில் ஏற்றி ஆயிரக்கணக்கான மூட்டைகளை ஏற்றுமதி செய்து, பின்பு நல்ல புடவைகளாக நெய்து, அம்புடவைகளைப் பஞ்சாலையிலிருந்து கப்பல்களிலேற்றிக்கொண்டு அடக்கிச் சிறிதாக்கிய பின், அவற்றைக் கப்பலிலேற்றி அனேகதேசங்களுக்கு அனுப்புகிறார்கள். அமெரிக்கா தங்கள் தேசத்தில் மிகவும் சாமர்த்தியமாய்ப் பருத்திப் பயிர்செய்கிறார்கள். அதனால்

அங்கிலேயர், அமெரிக்காவின் பருத்தியைத் திருநெல்வேலிப் பருத்தியிலும் உசிதமென்று அதிக விலைகொடுத்து வாங்குகிறார்கள்.

அங்கிலேய வர்த்தகர்கள் இவ்விடத்திலிருந்து பஞ்சுகளைக் கிரயத்திற்கு வாங்கிக்கொண்டுபோய், அவற்றை மீண்டும் சுத்தப்படுத்திக் கொட்டையாகத் திரட்டி, பின்பு நூலாக நூற்றுப் பலவகைச் சீலைகளை செய்து சொற்பவிலைக்கு விற்று, அதிக இலாபம்* பெறுகிறார்கள். பட்டுமுதலிய நூலினால் செய்யப்பட்ட சீலைகளைப்பார்க்கிலும் பருத்திநூலினால் செய்த வஸ்திரங்களையே பலதேசத்தார்களும் எப்பொழுதும் அதிகமாக விற்பார்கள்.

## உஎ-வது சர்க்கரை.

சர்க்கரையானது கருப்பஞ்சாற்றினால் உண்டாகிறது. கரும்பு தழைத்து எட்டு முழ உயரம் வளருகிறது. அது இத்தேசத்துப் பயிர்தான்; ஐரோப்பாகண்டத்தில் சற்றேறக் குறைய அறு நூறு வருஷத்திற்குமுன் சர்க்கரை கிடையாது.

கரும்பு பயிரிடும் விதம்,—கரும்பு வெட்டுகையில் தழைகளோடு கூடிய கொழுந்தாடைகளை மாத்திரம் தறித்து நட்டுப்பயிராக்குகிறார்கள்: அது வளர்ந்து பன்னிரண்டு மாதத்திற்குள்ளாகமுற்றிப் பக்குவமாய்விடும். பக்குவகாலத்தில் அதைவெட்டித் தழைகளைத் தறித்துப்போட்டு, கட்டுக் கட்டுகளாகக் கட்டிக்கொண்டுபோய்க் கரும்பங்கழிகளை ஆலை வாயில் கொடுக்க, ஆலையில் இருக்கும் இரண்டு இருப்புக்குழவிகள் மேலும் கீழுமாக அக்கரும்புகளை நெருக்க, அவற்றின் சாரமெல்லாம் இறங்கி அடியில் வைத்திருக்கும் ஒரு சாடியில் விழும்; பின்பு சாற்றை ஒரு பெரிய செப்புப்பானையில் விட்டு நன்றாய்க் கொ

திக்கும்படிகாயச்சி முதிரபதம பாரதது இறககி, பெரியதவலை களில ஊற்றிவைக்க, அது ஆறிச சாககரையாகும. இவ்வாறு உணடாகும சாககரையைப பீபபாககளிலாவது, சோணிப்பைகளிலாவது அடைதது வாததகரிடததிறகு அனுபபுவாரகள.

கருப்புச சாககரையைச சுத்தி பணணினால வெளளைச சாக்கரையாகும. சுத்தபபணணும விதமவருமாறு,—சாககரையைத தணணீரில க[illegible]தச சீலையில நனறாக வடிகட்டினால, அதில கிடககினற தூசி துருமபுகளெலலாம சீலையில த[illegible]ம. பினபு சாரததைச சுட்ட எலுமபுகளாகிய கரியினால[illegible]செயதிருக கினற அடுபபில வடிகட்ட, அது மலினமினறிச் செவவாகும. பிறகு அதைச அடுபபில ஏறறிக காயச்சி அச்சுகளில வா[illegible] வைததால, ஆறிமகாசோதையான வெளளைச சா[illegible]

## உஅவது. மிருகங்கள்

[illegible]ருகஙகளில ஆககம் மீ[illegible] மூ[illegible]
மூளைாது யானை, மகா[illegible], ப[illegible] அச
அழகுளளது [illegible]ருவததுாய [illegible] கே[illegible]
போகும. ஓாய கணடதெலலாமதினனும. [illegible]
தைத ஒனறும தொடாத யானை காகாலே சனை[illegible]
துககொளளும முயல [illegible] காதது முனைனமபினையு[illegible]
கும். ஒட்டகம ஒரு நாழிகைசவழி [illegible]
ணீரை மோபபததால அறியும கழுதையின[illegible]
னால எதிததடிலவககாது. யானை [illegible]
கும். கழுதை தெளி[illegible] தணணீரை மாததிரம குடிககும
கழுதை விகாரமான மிருகமானாலும, அதன உ[illegible]மபு கெட்டியா

யிருக்கும். அதன்மேல் பூச்சிகள் இரா; அது கனைக்காமல்
படுக்காது. நாய்கள் வீட்டிற்குக் காவலாளிகள். நாய்க்குட்டி
கள் கண் திறக்கப் பத்து நாள் செல்லும். பூனை மரத்திலேறும்;
அதற்கு இருட்டிலே கண்தெரியும்; உயரத்திலிருந்து விழும்
போது, தனக்குக் காயம்படாமல் கால் கீழாக விழும்; அது
எலி பிடிக்கும்; திருடும்; பாலைப் பிரியமாய்க் குடிக்கும்;
பள்ளம் தோண்டித் தன் கஷ்டத்தை மூடும்; நாக்காலேதன்
னைச் சுத்தம் பண்ணிக்கொள்ளும்.

முதலை, நீர்நாய்முதலிய சீவன்கள் கரையிலும் சலத்திலும்
வாசம்பண்ணும். முதலை மணலில் முட்டையிடும்; அந்த முட்
டை சூரியனது வெப்பத்தால் பரிபவிக்கும். பாம்புகளும்
[illegible] முதலை முட்டைகளைத் தின்னும். முதலைக்
குஞ்சுகள் முட்டையிட்டு வெளிப்பட்டவுடனே தண்ணீருக்கு
[illegible] தெளித்துக்கொண்டு போகும். முதலை தண்ணீ
ரில் [illegible] கிடக்கும். அதின் முதுகில் துப்பாக்
[illegible] அசையாத உறுதியான செதிள்கள் உண்டு.
[illegible] மிருக[illegible] உடல், தோல்
[illegible] அசையாதபடி உறுதியா
[illegible] ஆற்றங்கரைகளில் அடிக்கடிக்[illegible]
[illegible] கழுதைப்[illegible] பன்றி, முதலை இவைகளுட
[illegible] கழுதைக்குக் கருப்பிடிபாராது. ஆடு, மாடு,
[illegible] சாதுவான சுத்த மிருகங்கள் மந்தை மந்தை
[illegible] கூடிச் சஞ்சரிப்பது வழக்கம். சிங்கம் புலி முதலிய
[illegible]மிருகங்கள் தனித்[illegible] சஞ்சரிக்கும்.

வௌவால் மிருகத்திலும் பட்சியிலும் சேராத பிராணி.
அதனை சிறகில் இறகுகளில்லாதிருந்தும் பட்சிபோலப் பறக்
கும். நாய்போல கடித்துத்தின்ன அதற்குப் பற்கள் உண்டு;
அது முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்காமல் மிருகங்கள்போல

ஈன்று பால்கொடுத்து வளர்க்கும். குரங்குகள் குட்டிகளைக் கொண்டுபோவதுபோல், வெளவால் பறக்கும்போது குஞ்சுகளைக் கொண்டுபோகும்; அது கால்விரலால் மரத்தைப்பற்றிக் கொண்டு தலைகீழாகத்தொங்கும்; நடவாது; மரத்தில ஏறும், இரவில் இரை தேடும. சிறிஞ்சிலானது புழு, பூச்சி இவைகளைத்தின்னும் ; பாழ் வீடுகளில அடையும். வெளவால பழம் தின்னும்; தோப்புகளில் இருக்கும.

---

## உகூ - வது பட்சிகள்.

---

பட்சிகள் விதம் இருநூறு. பட்சிகளின எலும்புகள மூளையிலலாமல் குழலாயிருக்கும். பட்சிகளின் எலும்புகளும, சிறகுகளும் குழலாயிருக்கிறதினால், அவைகள ஆகாயத்தில் இலகுவாய எழும்பிப் பறக்கும். பட்சிகளுக்குப பல் இல்லை. அவைகள் அலகையும் நாவையுங்கொண்டு இரையைப் பொறுக்கித்

பட்சிகளில் பெரியது தீக்குருவி: அது பார்வைக்கு ஒட்டகத்தைப்போல் இருக்கும். சிறகு இருந்தும் பறக்காது; மகா வேகமாய் ஓடும் ; அது ஏழடி உயரமாயிருக்கும; அது வாத்துத்தலையும், மனுஷர் கண்ணும், அன்னத்தின் கழுத்தும், ஒட்டகத்தின் காலுமுள்ளது. அதற்கு ஒட்டகப் பட்சியென்று பெயர் : அது பன்றியைப்போல் உறுமும்; கல், பளிங்கு, இரும்பு முதலியவற்றையும் விழுங்கும்.

பட்சிகளுக்குள் இராசபட்சி கழுகு; அது அதிக உயரமாய்ப பறக்கும் ; சூரியனைக் கண் கூசாமல் பார்க்கும் ; நூறு வருஷம் உயிரோடிருக்கும். மாமிச பட்சணி பட்சிகளுக்குக கலவீரல் இல்லை. தானியங்களைத் தின்கிற பட்சிகளுக்குமாத்திரம் சீரணசக்தியுடைய யந்திரம்போன்ற கல்லீரல் இருக்கின்றது.

பட்சிகளில் அழகுள்ளது மயில். அதன் இறகுகளில் சகல வர்ணங்களும் விளங்கும். அது தன் சிறகை விரித்து ஆடும். சலத்தில் வாசஞ்செய்யும். பட்சிகளில் அன்னம் அழகுள்ளது. குயில், வானம்பாடி, புல்புல் இவைகள் பாடுகிற பட்சிகள்.

கிளி, நாகணவாய்ப்புள் முதலிய பட்சிகள் பேசும்; பேசியும் மனுஷரைப்போல அவைகளுக்குப் பகுத்தறிவில்லை.

அன்னம் வாத்து முதலிய நீரில நீந்துகிற பட்சிகளுக்குத் தோலடிப்பாதம் உண்டு.

புறு, கோழி, ஊர்க்குருவி முதலிய சுத்தமான பட்சிகள்: புறுக்களுக்கு வயிறறில் பித்து இல்லை.

ஆந்தைக்கு இருட்டில கண் தெரியும். அது இராவிலே இரை தேடுகிறபோது கத்தும். அது வீட்டின்மேல் கத்தினால் துர்ச்சகுனமென்று சிலர் சொல்லுவார்கள்; அப்படி எண்ணலாகாது.

யுத்தப்பிரியம் தகாதென்று காட்டுவதற்குப்
பினவரும் கதை கறபிக்கபபட்ட.

மாமது என்பவர், ஒருநாள தமது முதன்மந்திரியை அழைத்துக்கொண்டு, பாழாயிருந்த பிரதேசங்களில் பிரயாணம் பண்ணி, அழிந்துபோன கோட்டைமதிலுக்கு மேலே இரண்டு ஆந்தைப் பட்சிகள் கூவிக்கொண்டிருக்கிறதைக் கண்டு, மந்திரியை நோக்கி, "நீ ஓடிப்போய் அந்த ஆந்தைகள் என்ன பேசுகிறதென்று, உற்றுக்கேட்டு வந்து எனக்குச்சொல்" எனவுரைத்தார். அப்படியே மந்திரி ஓடிப்போய் உற்றுக் கேட்டுக்கொண்டு திரும்பி வந்தபொழுது, பட்சிகள் பேசினதைச் சுலுத்தானுக்கு அறிவிக்கப் பிரியமற்றிருந்ததைக்கண்டு, சுலுத்தான் அதை அறிவிக்கவேண்டுமென்று வருந்தினபொழுது, மந்திரி, "ஐயா! அவ்வார்த்தைகளில் ஒன்றுக்கு ஒரு குமாரனும்,

மற்றதுக்கு ஒரு குமாரத்தியும் உண்டு. குமாரனைப்பெற்ற ஆந்தை குமாரத்தியைப்பெற்ற ஆந்தையை என் மகனுக்கு உன் பெண்ணைக் கொடுக்கவேண்டுமென்று கேட்க, அது என் பெண்ணுக்காக நாற்பது குட்டிச்சுவர் பரியம் கொடுப்பாயாவென்ன, மற்றது இங்கு வந்திருக்கிற மாமது மகானுபாவன் மாத்திரம் க்ஷேமமாயிருப்பானானால் நாற்பதேயல்ல, நாலாயிரம் குட்டிச்சுவராயினும் கொடுப்பது எனக்கு அருமையல்லவென்றது" என்றான். சுலுத்தான் அதைக்கேட்டு அதன்பின் ஒருக்காலும் யுத்தத்தில் பிரியமுற்றிருக்கவில்லை.

கோழி மனிதருக்கு மிகவும் பிரயோசனமான பட்சி. சேவல் காலமறிந்து கூவும். பெட்டைக்கோழி பதினேழு, பதினெட்டு முட்டையிட்டு, அடைகாத்து, பொரித்த குஞ்சுகளைக்காப்பாற்றும். மனிதர் பட்சிகளைப் பஞ்சரத்தில் வளர்ப்பார்கள்.

பட்சிகள் விநோதமாய்க் கூடுகள் கட்டும்.

மனிதர் கைவேலை, தூக்கணங்குருவிமுதலிய பட்சிகள் காலினாலும் மூக்கினாலும் செய்கிற வேலைபோலச் சிறந்ததல்ல. பெண்பட்சி அடைகாக்கும்போது, ஆண்பட்சி ஆகாரம் கொண்டுவந்து கொடுக்கும். குஞ்சுபொரித்த குஞ்சுக்குத் தாய்ப்பட்சி இரை கொண்டுவந்து கொடுக்கும். குயில் காக்கையின் கூட்டில் முட்டையிடும்: அதைக் காக்கை பொரித்து வளர்த்த பின்பு குஞ்சு தன இனத்தோடே சேர்ந்துபோம்.

ஒரு சாடியிலே இரண்டு தயிலமென்ற விடுகதையின்படி, முட்டையில் வெள்ளைக்கரு, மஞ்சட்கரு இரண்டு முண்டு. வெள்ளைக்கருவால் சிறகுகளும், மஞ்சட்கருவால் உடலுமாம்.

---

## ௩௰-வது அன்னம்.

---

அன்னப்பட்சியானது, நீர்கலந்த பாலில் நீரைப்பிரித்துப் பாலைக் குடிக்குமென்பார்கள். இது கட்டுக்கதை யல்லாத

படிக்கு உள்ளதல்ல. அன்னத்தைப் பற்றிச் சொல்லிய ஒரு கதையாவது.

ஓர் ஏரிகரையில் இருந்த ஒரு கொக்கானது, தன் சமீபத்தில் வந்த அன்னப்பட்சியைப்பார்த்து "உனக்குக் காலும், மூக்கும், கண்ணும் மிகவும் சிவந்திருக்கின்றன. நீயார், எங்கிருந்து வருகிறாய்" என்றது. அன்னம் "நான் அன்னப்பறவை. தேவலோகத்திலிருந்து வருகிறேன்" என்றது. அதற்குக் கொக்கானது, "அங்கே நீ எவ்விடத்தில் வாசம்பண்ணுகிறாய், அது எப்படிப்பட்ட இடம் சொல்" என்றது. அன்னம் நான மானசமெனனும் பெயரையுடைய பெரிய தடாகத்தில் வாசம் பண்ணுகிறேன். அதன் நீர் தெளிந்து திவ்வியமாயிருக்கின்றது. அது பொன்மயமான தாமரைப் புஷ்பங்களாலும், நவரத்தினங்கள் இழைத்து நிர்மாணிக்கப்பட்ட கரையினாலும், கற்பக விருட்சங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிற்று. கொக்கு அச்செய்தி கேட்டு, சந்தோஷமடைந்து, "நல்லது அதிலே நத்தைகளுண்டா" என்று ஆசையோடு கேட்க, அன்னம் "அதிலே நத்தை இல்லை" என்றது. கொக்கு "சீச்சீ, நத்தையில்லாதது என்ன தடாகம், போ" என்று சொல்லி, அன்னத்தைத் துரத்திவிட்டது. இவ்வண்ணம், ஈனமனிதர்களும் தங்கள் துராசைகளுக்குத் திருப்திகரமான விஷயங்கள் தீயவைகளாயிருந்தும், அவைகளை ஆவலோடு அனுபவிப்பார்கள்.

---

## ௩௧-வது. கொக்கு.

---

கொக்கு நீண்ட கழுத்துள்ளது: அதனால் மீனை எளிதாய்ப் பிடித்துத் தின்னும்; ஒற்றைக் காலால் நிற்கும்: மழைக்காலத்தில் கொக்குகள் அனேகம் வடக்கேயிருந்து தெற்கே வரும்.

"ஓடுமீனோட உறுமீன் வருமளவும்
வாடியிருக்குமாம் கொக்கு."

கொக்கைப்பற்றிச் சொல்லிய கதையாவது.

துரோகசிந்தையுள்ள ஒரு கொக்கானது ஒரு குளக் கரையில் நின்று அதில் துள்ளுகிற மீன்களைப் பார்த்து, இவைகளை எப்படியாவது மோசஞ்செய்து பிடித்து என் இருப்பிடத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பேனாகில் நெடுநாள் வரையில் ஆகாரக்குறையின்றி வாழ்ந்திருப்பேனென்று தனக்குள்ளே எண்ணங்கொண்டது. பிற்பாடு அது சமயங்கண்டு, மீன்களை நோக்கி, "ஐயோ, என் அருமையான பிராணிகளே, இன்று நீங்கள் க்ஷேமமாயிருந்து சளித்துத்துள்ளி விளையாடுகிறீர்கள், நாளை இந்நேரம் செம்படவன் வலையெறிந்து உங்களைப் பிடிக்க இருக்கிறானே, அப்பொழுது நீங்கள் எல்லாரும் ஒருமிக்க மாண்டுபோவீர்களே. ஆதலால் நீங்கள் தப்பிப்பிழைக்கும்படி அதிசீக்கிரத்தில் வேறோர் இடத்தைத் தேடிக்கொள்வது அவசியம்" என்றது. அதைக்கேட்டு, அக்குளத்து மீன்களெல்லாம் பயந்து நடுநடுங்கி, கொக்கைப்பார்த்து, ஓ "சீவகாருணியா! எங்களுக்கு நிலத்தில் நடக்கும் சக்தி இல்லையே. நீர் தயை செய்து எங்களை வேறோர் குளத்தில் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும்" என்று பிரார்த்தித்தன. அதுகேட்டுக்கொக்கானது தனக்கு ஆகாரம் வலியவருகிறதென்று தனக்குள் மகிழ்ந்து, மீன்களை நடைக்கு ஒவ்வொன்றாகத் தன் மூக்கினால் கௌவி கொண்டுபோய்த் தன் இருப்பிடத்தில் சேர்த்தது: பின்பு அது சிலவற்றைத் தின்று மற்றவற்றை உலரவைத்து, இரண்டொரு நாள் சென்றபின் வழக்கப்படி மீண்டும் அது அக்குளக்கரையில்போய் நிற்க, குளத்திலிருந்த ஒரு நண்டு கொக்கண்டை வந்து, "ஐயா, நான்மாத்திரந்தானோ பாவி? என்னையும் கொண்டுபோய் மீன்களைக் காப்பாற்றியது போலக் காப்பாற்றலாகாதா?" என்று பிரலாபித்தது. கொக்கு, தனக்குள

ஆனந்தமடைந்து நண்டைப் பார்த்து, அப்படியே ஆகட்டுமென்று அதையும் முன்போலவே கௌவிக்கொண்டு பறந்து போகையில், நண்டு வழிகளில் சிந்திக்கிடக்கும் மீன் முள்ளுகளைக் கண்டு ஐயோ, என்னையும் கொல்லவல்லவோ கொண்டு போகிறதென்று உடனே அக்கொக்கின் கழுத்தைத் தன் கொடுக்கால் இடுக்கி, இரண்டு துண்டாகக் கத்தரித்துப்போட்டு, அங்கிருந்த ஒருகுட்டையில் விழுந்து தப்பிற்று. பிறர்க்குக் கேடு நினைப்பவர் தாமே கெடுவாரென்பது நிச்சயம்.

வங்காளத்தில் ஒருவிதமான பெரிய நாரை உண்டு. அது மனிதரவ்வளவு உயரமானது. அது அசுத்தமான பதார்த்தங்களையெல்லாம் தின்று, ஊர்கள், பட்டணங்கள் முதலிய இடங்களையெல்லாம் சுத்தமாக்கும். அந்தப் பட்சியைக் கல்கத்தாவிலே ஒருவரும் கொல்லக்கூடாது.

---

## ௫௨-வது மீன்கள்.

---

ஆயிர[illegible] விதத்துக்கு மேற்பட்ட மீன்களுண்டு. மீன்களில் பெரியது திமிங்கிலம், மகா மச்சமென்பது இதுவாய் இருக்கலாம். இது நூறு அடி நீளம் இருக்கும். கப்பல்களில் போம் மனிதர் திமிங்கிலங்களைச் சமுத்திரத்தில் தேடி ஈட்டியினால் குத்தி, அவைகளின் கொழுப்பை வெட்டியெடுத்து எண்ணெய் காய்ச்சிப் பீப்பாய்களில் விட்டு அடைத்துக் கரைப்படுத்தி விற்பார்கள். திமிங்கிலநெய் விளக்கு எரிக்கவும், வர்த்தி செய்யவும், யந்திரங்களுக்குப் பூசவும் உதவும். தலையில் வாளுள்ள கொம்பன்சுறா இந்தப் பெரிய மீனுக்கு வைரி. சுறா மீன் கடற்புலியென்று சொல்லப்படும், அது பன்னிரண்டு முழ நீளமாக வளரும், கண்டதையெல்லாம் பிடித்துத் தின்

னும். அதற்கு நூற்று நாற்பத்து நாலு பற்களுண்டு. அது அதிவேகமாய்ச் சமுத்திரத்தில் நீந்தும்.

மீன் நீர்வாழுஞ்சாதியானபடியால், அதற்குச் சலசரமென்று பேர். அது சிறகினால் நீந்தும்; அடுப்புப்போன்ற வாலால் திரும்பும். அதின்மேலுள்ள செதிளில் நெய்ப்பசையிருப்பதால், சலம் ஒட்டமாட்டாது. மிருகங்கள், பட்சிகள் முதலியவைகள் ஆகாசத்தில் மூச்சுவிட்டுச் சஞ்சரிக்கிறது போல், மீன்கள், நண்டுகள் முதலானவைகள் சலத்தில் மூச்சுவிட்டுச் சஞ்சரிக்கும்.

மீன் சினையாகிய முட்டையிலிருந்து எண்ணிறந்த குஞ்சுகள் உண்டாகும். ஒரு மீன் வயிற்றில் கோடி முட்டையிருக்கும். சூரியனது வெப்பத்தினால் முட்டைகள் பொரித்தவுடனே மீன்குஞ்சுகள் நீந்தி ஆகாரந்தேடும்.

பலவித நண்டுகளும் சிப்பிகளுமுண்டு. இவைகள் மேலோட்டைக் கழிக்கும்போது, வளையில் பதுங்கியிருக்கும். சமுத்திரக்கரையோரத்தில் அகப்படுகிற சில சங்குகள் சிப்பிகள் மிகவும் அழகும் விநோதமுமாயிருக்கும். சிப்பியிலே விலையுயர்ந்த முத்து வளரும். இறால், ஆளி, மட்டி, நத்தைமுதலியவை சலசாத்துடன் சேர்ந்தவைகள்.

வஞ்சிரம், மடவை, வெளவால், கிழங்கான், சுதும்பு, வாளை, காலா, உல்லம், பாறை கடல்மீன்களில் சிறந்தவைகள். கெண்டை, வரால், கெளிறு, ஆரல், உளுவை, குறவை மலாங்கு முதலானவை ஆறுகளிலும் குளங்களிலுமுள்ள மீன்கள். மீன்களில் வெள்ளிமீன், பொன்மீன் என்ற வெகு அழகான மீன்களுமுண்டு. மீன்குத்தியென்ற ஒரு அழகான சிறுபட்சி மீனுக்குச் சத்துரு. வலைகளாலும், தூண்டில்களாலும், மீன்களைப் பிடிக்கிறார்கள். மீனாட்சியென்ற பேர் மீன்கண்ணாள் என்று அர்த்தமாகும்.

# ௫௫-வது ஊர்ந்து, நகர்ந்து, பறந்து வாழும் ஜந்துக்கள்.

---

உலகத்தில் ஊர்ந்து, நகர்ந்து, பறந்து வாழும் புழுப் பூச்சிகள் அநேக விதம். சில வெகு விநோதமாயிருக்கும். கொடிய விஷமுள்ள சர்ப்பங்களுள் கண்ணுக்கு அழகாயிருக்கும் பாம்புகளில் நாகம், சாரை, விரியன், வழலைமுதலானவை வருஷத்துக்கொருதரம் தோலுரிக்கும். சர்ப்பம் கண்மூடாமல் தூங்கும்.

> "நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையு
> மஞ்சாப் புறங்கிடக்கு நீர்ப்பாம்பு-நெஞ்சிற்
> கரவுடையார் தம்மைக் காப்பர் கரவார்
> கரவிலா நெஞ்சத் தவர்."

பல்லி, ஓணான், உடும்புமுதலியவை ஒரு சாதி. பச்சோந்தி நிறம் மாறும். வீட்டுப் பல்லிக்குக் கௌளி என்று பெயர். இது ஒலிக்கிறதைப்பற்றி ஒரு சாஸ்திரம கட்டியிருக்கிறார்கள். அதை நம்பலாகாது.

தேள்களில் செந்தேள், கருந்தேள் என்று இரண்டு விதமுண்டு. "கொட்டினால் தேள் கொட்டாதேபோனால் பிள்ளைப்பூச்சி" என்று வழக்கமாய்ச் சொல்லுவார்கள். குளவி கூடு கட்டி, அதில் புழுவைவைத்து, தன் உபதேசத்தினால் புழுவைத் தன்னிறமாக்குமென்று சொல்வதும் உண்டு. அது கற்பனை, உண்மையல்ல. அது கூடுகட்டி, அதில் முட்டையிட்டு, அதிலிருந்து பொரிக்கும் குளவிக்கு ஆகாரமாகப் புழுவை வைத்து, அதை அடைத்து, அடிக்கடி வந்து பார்த்து, பக்குவப்பட்ட சமயத்தில் கூட்டைத் திறந்துவிடும்.

சிலந்தி தன் நூலால் வலைபோல் கோட்டைகட்டி, தனக்கு ஆகாரமான பூச்சிகளைப் பிடிக்கும். ஒரு சின்ன சிலந்தி பெ

ரிய தேனைப் பிடித்துத் தின்னும். வண்டுகளுக்கு ஒலியினால் பிரமரம் என்று பேர். வண்டுகளில்மாத்திரம் இலட்சத்துக்கு மேற்பட்ட விதமுண்டு. வண்டுகளுக்கு இரண்டு கொம்புகளும், நிலையான அநேகம் கண்களுமுண்டு. சில வண்டுகள் புஷ்பங்களில இருக்கிற தேனைப்புசிக்கும். தேனைக் குடிக்கும்படி அவைகளுக்குத் தும்பிக்கையுண்டு. வண்ணாரப் பூச்சியென்பது மிகவும் அழகுள்ளது; அதின் இறகுகளைத் தொட்டால் பொடி உதிரும். பட்டுப்பூச்சிகள் நூற்கும் பட்டுச் செல்வர்களுக்கு ஆடையாகிறது.

தேனீயானது புஷ்பங்களிலுள்ள மதுவை உண்டு, அதைத் தேனாக்கும். புஷ்பங்களிலுள்ள மகரந்தத்தையும் சேர்த்துத் தேன் அடையாக்கும். மெழுகு அதின் வயிற்றினின்று உண்டாகும். ஒரு கூட்டில் முப்பதினாயிரம் ஈக்கள் இருக்கும். அவைகளில் ஒன்று இராசாத்தியாய் ஆளும். மற்றவைகள் எசமான்களும் வேலையாட்களுமாயிருக்கும். இராசாத்தியாகிய ஈமாத்திரம் முட்டையிடும். ஆண் ஈக்களுக்குக் கொடுக்குகளில்லை. "ஆயிரம் தச்சர் கூடிக் கட்டின அரங்கமணிமண்டபம் கண்ணுற்றால் அழியும் பொன்பெற்ற மண்டபம்" என்ற விடுகதை தேன் கூட்டைப் பற்றிச் சொல்லப்படும்.

ஒரு வெட்டுக்கிளியானது, மழைக்காலத்தில் குளிரினாலும் பசியினாலும் மிகவும் வருந்தி இளைப்படைந்து, ஒரு தேன் கூட்டண்டையில் போய் அதில் மொய்த்துக்கொண்டிருக்கும் ஈக்களைப் பார்த்து, "ஈக்களே! எனக்குத் தயவுசெய்து நாலைந்து துளித் தேன் கொடுங்கள்" என்று வேண்டிக்கொண்டது. அதற்கு அந்த ஈக்களில் ஒன்று அதைப் பார்த்து "நீ கோடைகாலமெல்லாம் வீணே கழித்துவிட்டு, இப்பொழுது எங்களிடத்தில்வந்து கேட்க உனக்கு வெட்கமில்லையோ, எங்களைப்போல நீயும் பிரயாசப்பட்டு, உனக்கு வேண்டிய ஆகாரங்களைச் சேர்த்து வைத்துக்கொள்ளலாகாதா" என்றது.

வெட்டுக்கிளி, "நான் அந்தக் காலத்தில் மூடத்தனமாய்ப் பின்வருவதைச் சற்றும் நினையாமல், மிகுந்த சந்தோஷத்தோடு வெறித்து, ஆடிப் பாடித் திரிந்து, என் காலத்தை விருதாவாகக் கழித்துவிட்டேன். மழைக்காலத்திற்குச் சேர்த்து வைக்கவேண்டிய ஆகாரத்தைக் குறித்து நான் கொஞ்சமாகிலும் நினைத்ததேயில்லை" என்றது. அதற்கு ஈயானது, "மழைக்காலத்தில் எங்களுக்கு உதவும்படி நாங்கள் கோடைக்காலத்திலேயே வேண்டிய உணவுகளைப் பிரயாசப்பட்டுச் சேர்த்து வைத்துக்கொள்ளுவோம்; அந்தக் காலத்தில் யாதொருவேலையும் செய்யாமல் சோம்பலாயிருப்பவர்கள் மழைக் காலத்தில் பட்டினி கிடந்து, பசியினால் வருந்துவார்கள்" என்று சொல்லி, அந்த வெட்டுக்கிளிக்கு உதவி செய்யாமல் போவென்றது. இளமைப்பருவத்தில் வருத்தப்பட்டுக் கல்விப்பொருளைச் சம்பாதிக்காமல், தங்கள் காலத்தை விளையாட்டில் போக்குகிறவர்கள், முதுமைப்பருவத்தில் தரித்திரராகி, உண்ணச் சோறும், உடுக்க வஸ்திரமும் கிடையாமல் அலைவார்கள்.

பட்டுப்பூச்சிக்கு நான்கு பதவிகள் உண்டென்று சொல்லலாம். அது முதல் முதல் முட்டையாயிருக்கும்; பின்பு புழுவாகும்; அதன் பின்பு உருவமாறும்படி கூட்டில் சேரும்; கடைசியில் அதில் நின்று பறக்கிற அழகுள்ள பூச்சியாகி ஆகாயத்தில் பறக்கும். இவ்வித மாறுதல்கள் மனித ஜாதிக்குள் உண்டென்பார் சிலர். எறும்பு, கறையான் முதலிய அற்பப் பிராணிகள் உ[illegible]க்கமான பதார்த்தங்களை விலக்குதற்கு மிகவும் பிரயோஜனமுள்ளவைகள். கறையான்புற்று மேல்மாடி போல இருக்கும். எறும்பு மழைக்காலத்துக்கு வேண்டிய ஆகாரத்தைத் தேடிவைக்கும். சோம்பேறி எறும்பினிடத்தில் ஞானத்தைக் கற்றுக்கொள்ளலாம். "எறும்பு முட்டைகொண்டு திட்டை ஏறில், மழை பெய்தது" என்பது யதார்த்தமான மொழி.

# வது. சோதிடம்.

---

வானத்தில் உள்ள நக்ஷத்திரங்கள் சூரியனைப்போல் சுயம
ய் பிரகாசிக்கின்றன. கிரகங்கள் சந்திரனைப்போல் சூரிய
னுடைய ஒளிபெற்றுப் பிரகாசிக்கின்றன. இவை சூரியனை
சுற்றி ஓடுகின்றன. இவைகளில் ஒன்றாகிய இந்தப் பூமியும்
சூரியனைச் சுற்றி ஓடுகின்றது. பூமியைச் சுற்றிச் சந்திரன் ஓடிக்
கொண்டே சூரியனுக்கும் பூமிக்கும் நடுவில் வரும்போது சூ
ரியகிரகணம் உண்டாகின்றது. சூரியனுக்கும் சந்திரனுக்கும்
நடுவே பூமி வரும்போது, சந்திர கிரகணம் உண்டாகின்றது.
வியாழத்தைச் சுற்றி நான்கு சந்திரர்களும், சனியைச் சுற்றி
ஏழு சந்திரர்களும் ஓடுகின்றன. அன்றியும் இந்தச் சனியைச்
சுற்றி ஒரு சக்கரம் இருக்கின்றது. அது தூரத்துப்பொருளைக்
காட்டும் தூரதிருஷ்டிக் கண்ணாடியின்றிக் காணப்படாது.
கண்ணினாலே காணப்படுகிற நக்ஷத்திரங்களன்றி, இன்னும் ஆயி
ரம் பதினாயிரம் நக்ஷத்திரங்கள் தூரதிருஷ்டிக் கண்ணாடியினால்
காணப்படும். வானத்தின் நடுவே கங்கைபோல் வெண்மை
யாய்க் காணப்படுகிறது நக்ஷத்திரங்கள் திரளாய்க் கூடிய
கூட்டமாம். நக்ஷத்திரங்களின் ஸ்தானங்களை அறிவதனாலும்,
கிரகங்கள் சுற்றுகிற விதத்தை அறிவதனாலும் கப்பற்காரர் பெ
ருங்கடலின் நடுவே யாத்திரைசெய்யும்பொழுது எத்திசையென்
று நிச்சயித்துக்கொண்டு, வேண்டிய இடத்துக்குப் போகிறா
ர்கள். பூமியானது தன் இருசில் சுழன்றுகொண்டே சூரியனைச்
சுற்றுகிறது. அது தன் இருசில் சுழலுகிறதினால் பகலும் இர
வும் உண்டாகின்றன. ஒருதரம் சூரியனைச் சுற்றிவருகிறதினால்
ஒரு வருஷம் உண்டாகின்றது. செவ்வாய்க்கும் வியாழத்துக்
கும் நடுவில் நான்கு அற்பக்கிரகங்கள் இருக்கின்றன. இந்நான்
கும் தவிர, பூமியைக் கூட்டிக் கிரகங்கள் எட்டு, அவைகளுள்

ஏழாவது, ஹெர்ஷெல் என்னும் பெயரையுடைய ககோளசாஸ்திரியால் முதல் அறியப்பட்டபடியால் ஹெர்ஷெல் என்னும் பெயரை உடைத்தாயிருக்கின்றது. அது கண்ணாடியின்றிக் காணப்படாது. எட்டாவது கிரகம் நெப்துன், அல்லது வருணனென்னும் பெயரையுடையது. வானசாஸ்திரத்தின் நுட்பங்களைத் திட்டமாய் உணரும்படி பீஜகணிதம், திரிகோணமிதி முதலிய சாஸ்திரங்களைக் கற்கவேண்டும். பிரத்தியக்ஷமாய் அறிந்தவைகளைமாத்திரம் இவ்விடத்தில் சொன்னோம்.

---

## ௰௯ - வது. சூரியமண்டலம்.

---

“பூமியானது நிலையாக நிற்கிறதாகவும், சந்திர, சூரியர்கள் அதைச் சுற்றிவருவனவாகவும் நமது கண்களுக்குத் தோன்றும். இது திரிபுத்தோற்றம், உள்ளதல்ல. சமுத்திரம் அலையின்றி அமர்ந்திருக்கையில், கடல் யாத்திரைக்காரருக்குத் தாம் ஏறின கப்பல் அசைவது சற்றாயினும் தெரியாது. அவர்கள் பூமியில் இருப்பதுபோலத்தான் கப்பலின்மேல் நடமாடித்திரிவார்கள். அவர்கள் கையில் இருக்கிற ஒருபண்டம் தவறிவிழுந்தால், அவர்களுடைய காலண்டையே விழும். அவர்கள் கப்பலிலிருந்து கீழே சலத்தை உற்றுப்பார்த்தால், சலமே ஓடுகின்றதுபோல் தோன்றும். நாம் வாசஞ்செய்யும் இப்பூமியும் அவ்வாறே. அது அந்தரத்தில் ஓடுகையில், அதில் இருக்கும் பொருள்கள் அனைத்தும் தளப்பமின்றி நிலைபெற்றிருப்பதனால், அது ஓடுகிறது என்பதை நாம் உணர்ந்தறியக் கூடாதிருக்கின்றது. சமுத்திரத்தில் கப்பல் ஓடுமேயன்றி, தண்ணீர் ஓடவே மாட்டாது. அதுபோலவே பூமிக்குச் சலனமேயன்றி, நட்சத்திரங்கள் முதலியவற்றிற்குச் சலனமில்லை. ஒருவன் கிறுகிலென்று சற்றுநேரம் சுற்றினால், அவன் கண்ணுக்கு வீடுக

ளும், மரங்களும், இன்னும் அவனுக்கு எதிராக இருக்கும் யாவும் சுற்றுகிறதுபோல் தோன்றும். இவ்விதமாகவே, சிறுபிள்ளைகள் விளையாடும்பொழுது, பம்பரம் சுற்றலாமென்று இரண்டு கைகளையும் வீசிக்கொண்டு சுற்ற, தங்கள் திருஷ்டிக்கு எல்லாம் சுழல்வதுபோல் தோற்றுவதை அவர்கள் நிச்சயம் என்றே நினைத்துக்கொள்வார்கள். காரியம் அப்படியல்ல. தாபரங்கள்ஒருக்காலும் சுற்றுவதில்லை; அவைகள் யாவும் அசையாப்பொருள்களென்று அறிந்து கொள்வது அருமையல்ல.

## சூரியன்.

சூரியன் மத்தியில் இருக்க, கிரகங்கள் எல்லாம் அதைச் சுற்றி ஓடி அதில் நின்றும் வெப்பத்தையும் ஒளியையும் பெறுகின்றன. அதின் சுற்றளவு 27-லட்சம் மயில் தூரம். நாம் வாசம்பண்ணும் இந்தப் பூமியைப்போல 13-லட்சம் பூமிகள் ஒன்றாகச் சேர்ந்தால், சூரியனுக்குச் சரியாகும். பூமிக்குச் சூரியன் 950-லட்சம் மயில்தூரத்தில் இருப்பதால், அது நமது கண்களுக்கு அவ்வளவு சிறிதாகத் தோற்றுகிறது. பூமியிலிருந்து சூரியமண்டலத்திற்கு ஓர்வழியும் அதிவேகமாய் இரவும் பகலும் இடைவிடாது ஓடத்தக்க ஓர் குதிரையும் இருக்குமேயானால், அங்கேபோய்ச் சேருவதற்கு 700-வருடம் செல்லும்.

சூரியனுடைய தன்மையைப் பற்றி விசேஷமாகத் தெரியாவிடினும், அதற்கு இயல்பாகவே ஒளியில்லையென்றும், அதைச் சுற்றி முழுவதும் அக்கினிமயமான மேகங்கள் சூழ்ந்திருக்கின்றனவென்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதைக் கண்டுபிடித்தவர்கள் தூரதிருஷ்டிக் கண்ணாடியில் சூரியகிரணத்தை மறைக்கும் வர்ணம்பூசிய கண்ணாடியைப் பூட்டி; இக்கருவியினால் சூரியனைச் சோதிக்கும் அளவில், அதில் சில கருமையான கறைகளைக் கண்டார்கள். அக்கரிய கறைகள், வடிவத்திலும்

அகல நீளத்திலும் அடிக்கடி மாறுபடக் கண்டதுமன்றி, அவைகள் சிலவேளை தோன்றாமலே இருந்தன ; சிலவேளை அந்தக் கறுப்புகள் அனேகமாகக் காணப்பட்டன. ஆகையால் மந்தாரகாலத்தில் மேகத்தினிடத்து அங்கும் இங்கும் ஆகாசம் நீலநிறமாக நமக்குத்தோன்றுவதுபோல், சூரியனைச் சூழ்ந்திருக்கின்ற மேகத்தில் அங்கும் இங்கும் சிறு சிறு இடைவெளிகள் உண்டாகும்பொழுது, அந்த இடைவெளிகள் வழியாகச் சூரியனிலிருந்து நமக்குத் தோற்றுகிற இடங்களே அந்தக் கறுப்புகளென்று நிச்சயித்திருக்கிறார்கள். சூரியன் தன்னைச் சுற்றி வருவதற்கு இருபத்தைந்து நாள் செல்லும். சூரியனில் தோன்றும் கறுப்புகள் ஒரிடத்தை விட்டுச் சுற்றித் திரும்பவும் அவ்விடத்தில் 25-நாட்களில் காணப்படுவதால, இது நிச்சயமென்றே விளங்குகின்றது.

---

## ௩-வது சந்திரன்

---

சந்திரனானது பூமிக்குச் சமீபத்தில் இருக்கும் ஒரு கிரகம். அதற்கும் பூமிக்கும் 2,40,000 மயில் தூரம். சந்திரமண்டலத்திற்குப்போகும் ஒரு வழியும், இரவும் பகலும் இடைவிடாது விரைவாகச் செல்லத்தக்க ஒரு குதிரையும் இருக்குமானால், அங்கே இரண்டு வருஷத்திற்குள்ளாகச் சேரலாம். சந்திரன் சூரியனைப்பார்க்கிலும் 700-லட்சம் பங்கு சிறிதாக இருப்பினும், அது பூமிக்கு மிகவும் சமீபமாய் இருப்பதால், நமது கண்களுக்குச் சூரியனுக்கும் சந்திரனுக்கும் அதிக வித்தியாசம் தோற்றுகிறதில்லை. சந்திரனுடைய மத்திய அளவு 2,160 மயில் தூரம். அதன் பருமன் பூமியின் பருமனில் நாறபத்தொருபங்கில் ஒரு பங்கு இருக்கும். அது சற்றேறக்குறைய 28 - நாட்களில் பூமியைச் சுற்றிவரும்.

சந்திரனுக்கு இயல்பாக வெளிச்சமில்லை. சூரியனிடத்திலிருந்தே அதற்கு ஒளி உண்டாகிறது. ஆகையால், அதில் சூரியனுக்கு எதிராக இருக்கும் பாகம் மாத்திரம் பிரகாசிக்கும். அது தானே தேசுமயமாயிருக்குமாயின், சூரியனைப் போல் எப்பொழுதும் வட்டமாகவே தோற்றும். இரவில் எங்கும் இருண்டிருப்பதால், அது அதிக பிரகாசமாயிருக்கிறது. பகற்காலத்தில் சந்திரனைப் பார்த்தால், அது வெண் மேகத்திற்கு ஒப்பாயிருக்கிறது. அதிக பிரகாசத்தைக் காணோம். சந்திரன் பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் இருக்கையில் அதின் இருண்ட பக்கம் நமக்கு எதிரே இருப்பதால், அது நமது கண்ணுக்குத் தோற்றாது. அதன் வெளிச்சமான பாகம் நமக்கு எதிரே திரும்புகையில், அதிக பிரகாசமாய் இருப்பதால், அதைப் பூரண சந்திரனென்று சொல்லுகிறோம். சந்திரன் வளருவதும் தேய்வதுமில்லை. எக்காலத்தும் ஒரே தன்மையாகவே இருக்கிறது.

சந்திரனை நக்ஷக்குழலாகிய கருவியால் சோதித்துப் பார்க்குமிடத்து, பூமியில் இருப்பதுபோலவே அதிலும் மலை, மேடு, பள்ள முதலானவைகள் உண்டென்று காணப்படுகிறது. அம்மலைகளுள் சிலவற்றை அவற்றின் நிழலினால் அளந்து சோதித்து, அவை சற்றேறக்குறைய இரண்டு மயில் உயர்ந்தவையென்று கணக்கிட்டிருக்கிறார்கள். அம்மலைகளினின்றும் உடைந்து விழுந்து கிடக்கின்ற பெரிய துண்டுகளையும் சந்திரனில் காணலாம். சந்திரனுள் சில இடங்களில் சூரியகிரணங்கள் அதிகமாகத் தாக்குதலால், அவ்விடங்கள் மற்றப் பாகங்களிலும் மிகுதியாகப் பிரகாசிக்கின்றன. அவ்வளவு பிரகாசமில்லாத பாகங்கள் அகண்ட வெளிகள். சந்திரனுடைய மேற்பாகம் அதிக மேடும், பள்ளமுமாக இருப்பதால், அதில் சமுத்திரமே இல்லையென்று எண்ணுகிறார்கள்.

---

# ௬௭-வது கிரகணங்கள்.

---

சில காலங்களில் சூரிய சந்திரர்கள் பிரகாசமின்றி இருண்டிருப்பதை நாம் பல தரம் கண்டிருக்கிறோம். அதற்குக் கிரகணமென்று பெயர். சந்திரன் இருண்டிருப்பதைச் சந்திர கிரகணமென்றும், சூரியன் இருண்டிருப்பதைச் சூரிய கிரகணமென்றும் சொல்வார்கள். இராகு, கேது, என்னும் இரண்டு அசுரர்கள் சூரிய சந்திரர்களை விழுங்குவதால், கிரகணம் உண்டாகிறதென்று இந்துக்களுடைய சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. அது சரியல்ல. கிரகணம் உண்டாகும் வகை இன்னதென்று இப்பொழுது காட்டுகிறோம்.

நாம் வெயிலில் நிற்கையில், நம்முடைய நிழல் பூமியில் சேருவதைக் காண்கிறோம். அவ்வாறே சூரியன் இப்பூமியின்மீது பிரகாசிக்கிறபடியால், பூமியிலிருந்து ஒரு நிழல் தோற்றவேண்டும். சந்திரன் ஏறக்குறைய 28 - நாட்களில் பூமியை ஒருதரம் சுற்றி ஓடுகின்றது. இப்படியிருக்க, அது பூமிக்குப் பின்புறத்தில் வந்து நிற்க, பூமி அதற்கும் சூரியனுக்கும் மத்தியில் இருப்பது 28 - நாட்களில் ஒரு தரம் நேரிடும். சந்திரன் இந்த நிலையில் இருக்கையில், அது பூமியின் நிழலிலே மறைந்து, சூரியகிரணங்கள் அதன்மேல் படாததினால் இருண்டிருக்கும். இப்படி இருண்டிருப்பதுதான் சந்திரகிரகணம் என்னப்படும். சந்திரன் மாதத்துக்கு ஒரு தரம் பூமிக்குப் பின்புறத்தில் செல்வதாயிருந்தும், சந்திரகிரகணம் மாதம் மாதம் உண்டாகிறதில்லை. சந்திரன் அடிக்கடி பூமியின் நிழலுக்கு மேலாகவாவது, கீழாகவாவது ஒதுங்கி ஓடும். அப்படிப்பட்ட காலங்களில் கிரகணம் உண்டாகமாட்டாது. சந்திரன் பூமி நிழலின் மத்தியில் இருக்கையில் முழுக்கிரகணம்; பூமி நிழல் சந்திரனுக்கு ஒரு பக்கத்தில் மாத்திரம்

பட்டால் அப்பொழுது ஒரு பக்கம் வெளிச்சமாகவும், மற்றப் பக்கம் இருண்டுமிருக்கும். அதற்கு அலாக்கிரகணமென்று பெயர்.

சந்திர கிரகணத்தின் கூறுபாடுகள் அனைத்தும் பின்வரும் திர்ஷ்டாந்தங்களினால் தெளிவாக அறிந்துகொள்ளலாம். ஒரு விளக்கைக்கொளுத்திவைத்து, அதைச் சூரியனாகவும், அதற்கு மூன்று அடித்தூரத்தில் ஒரு கிச்சிலிப் பழத்தைப் பிடித்து அப்பழத்தைப் பூமியாகவும், அதற்கு அரையடித் தூரத்தில் ஒரு கொட்டைப் பாக்கைப் பிடித்து அதைச் சந்திரனாகவும் பாவித்துக்கொண்டு, பாக்கைக் கிச்சிலிப்பழத்திற்குப் பின்னாகப் பிடித்தால், அக்கிச்சிலிப் பழத்தின் சாயை பாக்கின்மேல் படும். இது பூமியின் நிழல் சந்திரனிடத்தில் தாக்குவதினால் கிரகணம் உண்டாகும் வகை இன்னதென்று விளக்குகிறது. பாக்கைக் கிச்சிலிப் பழத்திற்கு மேலாயினும் கீழாயினும் பிடித்தால், அதன் நிழல் பாக்கின்மேல் படாது.

சந்திரனானது பூமிக்கும் சூரியனுக்கும் இடையே வந்து சூரியனை ஒரு பாகமாவது, முழுமையுமாவது மறைத்துக் கொள்ளும்பொழுது, சூரியகிரகணம் உண்டாகும். தூர திர்ஷ்டிக் கண்ணாடியாகிய நச்சுக்குழலினால் சந்திரன் சூரியனைக் கடந்துபோவதைப் பரிஷ்க்காரமாகக் காணலாம். சந்திரனானது சூரியனுக்கு மேலேயாகிலும் கீழேயாகிலும் இருக்கும்பொழுது, கிரகணம் உண்டாகவே மாட்டாது.

சூரியகிரகணம் அமாவாசையிலும், சந்திரகிரகணம் பௌர்ணமியிலும் உண்டாகும். சந்திரகிரகணம் உண்டாகும் நேரத்தில், சந்திரன் எந்தெந்தத்தேசத்தாருக்குத் தெரிந்திருக்கிறதோ, அவர்கள் எல்லாருக்கும் அந்தக் கிரகணமும் தோன்றும். சூரியகிரகணமோ அப்படியல்ல. அது உண்டாகும் நேரத்தில், சூரியன் பல தேசத்தாருக்குக் காணப்படுமாயி

றும், அந்தக் கிரகணம் அவர்கள் எல்லாருக்கும் தோன்றுது.
அது ஒரு தேசத்தில் தெரியாமலுமிருக்கும். அது எட்டு நிமி
ஷத்திற்கு அதிகமிராது. சந்திரகிரகணம் பல தரங்களில் இர
ண்டு மணி நேரத்திற்கு அதிக மாகவும் இருக்கும். சூரியகிரக
ணம் உண்டாகும் வகையைப் பின்வரும் திர்ஷ்டாந்தங்கள
தெளிவாகக் காட்டும். ஒரு பையனை எழுந்து நிறகச்செய்து,
அவன் தலையைச் சூரியனாகவும், மற்றொரு பையனை அவனு
க்கு எதிராக இரண்டு மூன்று முழதூரத்தில் நிறுத்தி, அவ
ன் தலையைப் பூமியாகவும், அவ்விரண்டாம் பையன் கை
யை மூடிக்கொள்ளச் செய்து, அக்கையைச் சந்திரனாகவும்
வைததுக் கொளவோம். அவ்விரண்டாம் பையன் மூடிய
தன் கையால் தலையைச் சுறறினால், அது சந்திரன பூமி
யைச் சுற்றிவரும் விதத்தைக் காட்டும். அவ்வாறு கையைச்
சுற்றுகையில், முதல் பையனுடைய தலைக்கு நேராக அந்தக்
கை வரும்பொழுது, அவன் தலையை மறைக்கும். இவ்வா
றகவே சநதிரன சூரியனை மறைக்கும்.

கிரகணங்களைப்பற்றி நாம் சொல்லியிருககும் வகை யா
வும சரியென்றும், அவைகள் இராகு, கேது முதலிய கிர
கங்களால் உணடாகுவனவல்லவென்றும் கல்விமான்களுக்
குப் பூரணமாகத் தெரியும். கிரகணங்கள் வரும் சரியா
ன காலங்களும், சநதிர சூரியர்களில் இவ்வளவு இருண்டு
போம் என்பதுமாகிய இவைகள் யாவும் தோன்றுவதறகு
வெகு காலங்களுக்கு முன்னதாகவே கணித்துச் சொலல
லாம். இவ்வாறு இருக்க, இந்து சாஸ்த்திரப்படி கிரகணங்
கள் இராகு, கேது என்னும் பாம்புகளினால் உண்டாகுவ
னவாக இருந்தால், அச்சர்ப்பங்கள் இன்னகாலத்தில் வாய்
திறக்குமென்றும், இவ்வளவு விழுங்குமென்றும் ஆரால் கண்
டுபிடிக்கக் கூடும்.

---

## ௩௮-வது, கிரகங்கள்.

கிரகங்கள் விஸ்தரித்துச் சிறந்த மண்டலங்களை உடையனவென்றும், அவற்றிற்குப் பெயர் நட்சத்திரமண்டலங்களென்றும், அவைகளில் தேவர்கள் வீற்றிருந்து உலகத்தை நடத்திக்கொண்டு வருகிறார்களென்றும் மதியீனர்கள் அநேகர் நினைக்கிறார்கள். அவற்றுள் விசேஷ கிரகங்கள் ஒன்பது என்றும் சொல்லுகிறார்கள். அவற்றிற்கு நவக்கிரகங்களென்று பெயர். அவையாவன.—சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி, சனி, இராகு, கேது என்பவைகளாம்.

ஐரோப்பாகண்டத்தில் உள்ளவர்களும் சற்றேறக்குறைய முந்நூறு வருடங்களுக்கு முன் இந்துக்களைப் போலவே சோதிட சாஸ்திரக் கொள்கைகளை அநுசரித்து, தங்களுக்கு வரப்போகின்ற பலாபலங்களையெல்லாம் முன்னதாக அறிந்துகொள்ளலாமென்று எண்ணி சோதிடர்களால் ஜாதக முதலியவைகளை எழுதிவைத்துக்கொண்டு, அவ்விஷயத்தில் அதிக நம்பிக்கையுள்ளவர்களாய் இருந்தார்கள். பின்பு கல்வி விர்த்தியால் தூரதிர்ஷ்டிக் கண்ணாடியாகிய நச்சுக்குழல் உண்டானபொழுது, அக்கருவியினால் முற்கூறிய கிரகங்களின் தன்மையையும் தொகையையும் நன்றாக அறிந்து, அதற்கு முன் தாங்கள் அவற்றைக் குறித்து எண்ணியிருந்த யாவும் அபத்தமென்று கண்டுகொண்டார்கள்.

கிரகங்கள் சூரியனைச் சுற்றி ஓடும் அகண்ட உலகங்களாம். அவைகள் பூமியின் வடிவத்திற்கு ஒப்பாயிருக்கும். அக்கிரகங்கள் இரவில் அதிக பிரகாசமானவைகளாய் இருந்தும், அந்தப் பிரகாசம் அவைகளுக்கு உரித்தானதல்ல, அவைகள் அதைச் சூரியனிடத்திலிருந்து கிரகிக்கின்றன. நட்சத்திரங்கள் இயற்கையாய்ப் பிரகாசமுள்ளவைகள், அவைகள் சூரியகாந்தியினால் நமது கண்களுக்குத்

தோற்றுகிறதில்லை; ஆயினும், தூரதிர்ஷ்டிக் கண்ணுடியி னுல் பகலிலும் தாராளமாகக் காணப்படும். ஆழ்ந்த கிணற்றில் இறங்கி நின்று பார்த்தால், அக்கருவியின்றியும் அவைகளுடைய பிரகாசத்தைக் காணலாம். முற்கூறிய கிரகங்கள் அனைத்தும் இரண்டு வகுப்புகளாக வகுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் முதல் வகுப்புக் கிரகங்கள் சூரியனைமாத்திரம் சுற்றி ஓடும். நாம் வாசஞ்செய்யும் இப்பூமியானது முதல் வகுப்புக் கிரகங்களுள் ஒன்று. இதனடியில் முதல் வகுப்பைச் சார்ந்த பிரதான கிரகங்களின் பெயரையும், அவற்றிற்கும் சூரியனுக்கும் இருக்கும் தூரக்கணக்கையும், அவற்றின வருஷ-நாட்கணக்கையும் காட்டுவோம்.

| கிரகங்கள். | சூரியனிலிருந்து இவ்வளவுதூரம். | | | சூரியனை ஒருதரம் சுற்றிவரச்செல்லும காலம். | |
|---|---|---|---|---|---|
| புதன்......... | ௩௭0 | லட்சம் | மயில். | ௮௮ | நாள். |
| வெள்ளி...... | ௬௯0 | ,, | ,, | ௨௨௫ | ,, |
| பூமி.......... | ௯௫0 | ,, | ,, | ௩௬௫ | ,, |
| செவ்வாய்... | ௧௪௪0 | ,, | ,, | ௬௮௭ | ,, |
| வியாழம்...... | ௪௯00 | ,, | ,, | ௧௨ | -வருஷம். |
| சனி........... | ௯00 | ,, | ,, | ௨௯ | ,, |
| உரோனு........ | ௧௮000 | ,, | ,, | ௮௪ | ,, |
| நெப்துன்..... | ௨௮௫00 | ,, | ,, | ௧௬௫ | ,, |

ஒருவர் ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கும்பொழுது இன்ன கிரகம இன்ன இராசியில் இருப்பதால், இன்னகாலத்தில தொடங்கினால், அது இடையூறின்றி முடியுமென்று ஆரூடங்கள் சொல்வதிலும், ஜாதகங்கணித்துப் பலாபலன்கள் எழுதுவதிலும் வல்லவாகளென்று சொல்லித் திரியும் சோதிடர்கள் இத்தேசத்தில் அநேகர் உண்டு. ஐரோப்பாகண்டத்தாரும் வெகு காலமாகச் சோதிட சாஸ்திரத்தை அநுசரித்துவந்து பின்பு தாங்கள் கல்வியில் விர்த்தியடைந்து, இச்சோதிடவிஷ

பவன் ஒரு தோப்பில் உலாவிக்கொண்டிருக்கையில், வேடிக்கைக்காக ஒரு மரத்தின் பட்டையை உரித்து, அதில் சில எழுத்துகளை வெட்டி, அதைக் கடிதாசியில் அழுத்தித் தன் பிள்ளைகளுக்குக் காண்பித்தான். பின்பு அவன் அதன்மேல் சிந்தைவைத்து, அது அபிவிர்த்தி பண்ணத்தக்கதென்று கண்டு, வழக்கமான மை கடிதாசியில ஊறிப் பரவுகிறதால், அதனுடன பிசினைச்சேர்த்து, மரத்தில் வெட்டின எழுத்துகளில் பூசி, கடிதாசியில் அழுத்தி, இப்படிச் சில தாள்களைப் பதிப்பித்தான்.

இந்தவித்தை மேற்சொல்லிய பிரகாரம் தொடங்கி, வரவரச் சகலவிதமான சூட்சமங்களைக் கொண்டு விருத்தியாயிற்று. தற்காலத்தில் நீராவியந்திரத்தைக்கொண்டு ஓர் மணிநேரத்தில் பதினாயிரம் வர்த்தமான பத்திரிகைகள் எளிதில் அச்சடிக்கப்படும்.

இந்த ஆச்சரியமான சூத்திரத்தினாலேதான உலகத்தில் நடக்கும் பற்பல சங்கதிகளும், கல்விமான்களுடைய மனதில் தோன்றும் அபிப்பிராயங்களும் எளிதில் வெளிப்படப்படும். கல்விகளெல்லாம் கையெழுத்துப் பிரதிகளில் மாத்திரமிருந்தால், அந்தக் கல்விகளை வெளிப்படுத்துகிறது அரிதாகும். தப்புகள் ஏறிச் சந்தேகத்துக்கு இடங்கொடுக்கும்: அல்லாமலும் இப்படி வெளிப்படும் கல்வி விஷயங்களும் வர்த்தமானங்களும் விலையுயர்ந்தவைகளாகையால், சிலருக்கன்றி யாவருக்கும் கிடையாது.

மிகவும் கோசரமான புத்தியுள்ள மனிதர் இடைக்கிடை தோன்றுகிற தூமகேதுகளைப்போலத் தோன்றி உலகத்தைப் பிரமிக்கச்செய்து, சீக்கிரத்தில் காணாமல் மறைந்து போகிறார்கள். ஆயினும் பதிப்பிக்கிற அச்சைக்கொண்டு நாம் அந்தப் புத்திமான்கள் வெளியிட்ட அருமையான கருத்துகளைப் பிடித்து, பிற்காலத்தில் இருப்பவர்களுக்கு விளங்கப்பண்ணலாம்.

மேலும் அழியாத ஆத்துமாவுக்கு ஏற்ற மறைபொருளை எவர்களும் அறியத்தக்கதாக, இந்த யந்திரத்தைக்கொண்டு, கடவுள் அருளிய வேதத்தை அச்சடித்து மிகவும் சொற்ப விலைக்குக் கொடுக்கலாம். இவ்வாறு மனுஷர் அறியத்தக்க இகபரவிஷயம் இரண்டையும் அவர்களுக்கு உணர்த்துவதற்கு அச்சியந்திரமே ஏற்ற கருவியாயிறது.

ஆதிகாலத்தில் வித்துவான்கள் எழுதிய நூல்கள் கையெழுத்துப் பிரதிகளாய் அந்தந்த பிரதான பட்டணங்களில் மாத்திரம் வைக்கப்பட்டிருந்ததினால், நெருப்புமுதலிய இடையூறுகளால் கெட்டுப்போவதற்கு இடம் உண்டாயிருந்தது. அப்படியே அப்போதப்போது நெருப்புப்பற்றி எரிந்த நகரங்களில் இருந்த கையெழுத்துப் பிரதிகள் அழிந்துபோயின. தற்காலத்தில் அச்சடிக்கப்படும் நூல்களின் பிரதிகள் எத்தேசத்திலும் எளிதில் அகப்படுமாதலால், எத்தனை புஸ்தகசாலைகள் அழிந்தாலும் அவைகளுக்கு அழிவில்லை.

அச்சடிக்கும் வித்தை தொடங்கினகாலத்திலே ஜெர்மானி புருஷிய பவுஸ்தென்பவன் அவ்வித்தையை இரகசியமாக் கற்றுக்கொண்டு பரிஸ் நகரத்திற்கு ஓடிப்போய், ஜெர்மானியாவில் அவ்வித்தையை உபயோகிக்க இடம்பெறாமல், அங்கே வேதபுஸ்தகத்தை அச்சிற்பதிக்கத் தொடங்கினனென்று சொல்லுவதுண்டு. அந்தப்பட்டணத்தில் அப்பொழுது இந்த வித்தை தெரியாததினாலே, பட்டணத்தார், அவன் சில பணத்துக்கு அநேகம் பிரதிகளை விற்கிறதைக் கண்டு, அதிசயப்பட்டு, அவன் பேய்வித்தைக்காரனென்று எண்ணி, அவன் வீட்டைச் சோதித்து, அங்கே அநேகம் பிரதிகளையும் சிவந்த மையையும் கண்டு, அது இவனுடைய இரத்தமென்று கருதி, அவனுடைய உயிரை வாங்கும்படி அவனைப் பிடிக்க வகைதேடினார்கள். அவனோ ஓடித் தப்பிவிட்டான்.

## ௪0-வது. பெண்களைப் படிப்பித்தலால் உண்டாகும்பயன்.

---

பெண்கள் கல்வி கற்றால் துர் நடக்கைக்குள்ளாகிப் புருஷரை அவமதிப்பார்களென்று எண்ணி, இத்தேசத்தில் அனேகர் பெண்களுக்குக் கல்வி கற்பிப்பது தகாதென்று ஆக்ஷேபிக்கிறார்கள். அவ்வாறு நினைப்பது மிகவும் அநியாயம். சிலர் ஸ்திரீ பிரஜைகளைப் படிப்பித்தால், அவர்கள் உத்தியோகஞ்செய்து, பொருள் சம்பாதிக்கப் போகிறார்களோ, அவர்களுக்குப் படிப்பிப்பது வீணதானே என்கிறார்கள். அவர்கள் இத்தேசத்தில் உத்தியோகம் செய்வதில்லையென்பது மெய்யே. ஆயினும் உத்தியோக சக்தியுண்டானால் செய்யார்களா ? ஐரோப்பாகண்டத்தைச்சேர்ந்த அநேக இடங்களில் கல்வியில் தேர்ந்த பெண்கள் மின் தபாற்சாலைகளில் தாமாக வர்த்தமானங்களைக் கம்பிவழியாய்ப் பிரயோகித்தும், பிரயோகிக்கப்பட்டவைகளைப் பெற்றும் மிகவும் திறமையாய அவ்வுத்தியோகத்தை நிறைவேற்றிச் சீவனம்பண்ணுகிறார்கள். அச்சியந்திரசாலைகளில் எழுத்துக்கோத்துப் புஸ்தகங்களைப பிரசுரஞ்செய்கிறார்கள். புஸ்தகங்களின்பொருளை விளக்கும் படங்களை மிகவும் விசித்திரமாக மரத்தில் கொத்திடுவார்கள். பாடசாலைகளில் பெண்கள் இலக்கண இலக்கியம், அங்ககணிதம், பூகோளம், கீதவாத்தியம், சித்திரமுதலியவைகளைக் கற்பிக்கிறார்கள். உயர்ந்தவகையான பீங்கான்களில உள்ள விசித்திரமான வர்ணவேலைகள் பெரும்பாலும் பெணகளால் செய்யப்படும். பெண்கள் விதம் விதமான சரிகைகள் பின்னுவார்கள், வஸ்திரம் நெய்வார்கள். அவர்கள் இன்னும் பலவிதத் தொழில்களைக் கற்றுத் தங்களை ஆதரித்துத் தங்கள் தேசஸ்தர்களை அனுகூலப்படுத்துகிறது மல்லாமல்,

[illegible]ரியும், முத்துமாலையும், மோகனமாலையும், பொற்
[illegible]ரமும், பட்டாபரணமும், பவித்திரமோதிரமும், இரா
சமுத்திரமோதிரமும், வீரகண்டாமணியும், இவை முதலான
[illegible]ஆபரணங்களும், சித்திரப்பட்டாடையும், உத்தரீ
யம், பீதாம்பரமும் [illegible], [illegible], [illegible], சந்தனம், கஸ
தூரியும், [illegible] புஷ்பமாலைகளும் அணிந்து அலங்கரி
த்துக்கொண்டு, சர்வாபரண அலங்கார அத்புத சௌந்தரிய
[illegible] ரூபமும், மகாலட்சுமியாகிய சீதாதேவி சமேத
ராய் [illegible] சிங்காசனத்தில் மேவி, வசிஷ்டர் முதலா
ன மகா இருஷிகளும், தேவேந்திரன் முதலான சகல தேவா
க்களும், வேதபிராமணர்களும், சகல வித்தைகளிலும் வல்ல
[illegible] மகா வித்வான்களும் நிறைந்திருப்பவும், அங்க,
வங்க, கலிங்க, [illegible], காஸ்மீர, மகத, [illegible], மாளவ, சா
[illegible], மச்ச, [illegible], கேகய, கோசல, கேரள, விதேக, வித
[illegible], பாண்டிய, பாஞ்சால, [illegible], [illegible], சௌராஷ்டிர,
[illegible], நேபாள, மராட, விராட, கருநாடக முதலான
தேசாதிபதிகளாகிய மகுடவர்த்தனராகிய இராசாக்களும் சூழ்ந்
[illegible]கவும், பேரிகை, சங்கு முதலான பஞ்சமகா வாத்திய வா
[illegible] முழங்கவும், [illegible] கந்தருவர் தேவகானங்
கள் பாடவும், [illegible] நாட்டியமாதர்கள் நடனங்கள்
செய்யவும், இன்னும் அநேக விநோதமான சம்பிரமத்து
டனே பட்டாபிஷேகம் செய்துகொண்டு கொலுவீற்றிருக்
கும் சமயத்தில் [illegible], அகஸ்தியர், பரத்துவாசர், கௌதமர்,
விசுவாமித்திரர் முதலான மகா முனிவர்கள் அயோத்தியா
புரத்தில் பிரவேசித்து, ஆஸ்தானமண்டபத்துக்கு முன்னுக்
[illegible] கோபுரவாயிலில் வந்து, அந்த வாயில் காத்திருக்
கும் [illegible] பார்த்து, அந்த இருஷிகளெல்லாரும்
நாங்கள் உம்முடைய பட்டாபிஷேகத் திருக்கோலங்காண

அபேட்சித்து வந்திருக்கின்றோமென்று இராமருக்கு அறிய
படுத்துவீரென்று சொல்ல, அவர்களும் அப்படியே அறியப்ப
டுத்தி, அவர் சொல்லியனுப்பிய உபசாரங்களைச் சொல்லி,
அந்த முனிவர்களை உள்ளே அழைத்துக்கொண்டு போம்பொ
ழுதில், ஆஸ்தான மண்டபத்துக்குச் சமீபமாக அடுத்த மா
த்திரத்தில், அந்த இருஷிகளைக் கண்டு, இராமர் தனுக்குற்
றுச் சிங்காதனத்தை விட்டெழுந்து, சீக்கிரமாக வந்து, அவ
ர்களுடைய பாதங்களிலே தீர்க்கதெண்டனாக நமஸ்காரம்
பண்ணி வந்தனஞ்செய்து அநேகமான உபசாரவார்த்தைகள்
சொல்லி, அவர்களை முன்னே நடத்தி, தாம் பின்னே நட
ந்து அழைத்துப்போய், அந்த ஆஸ்தான மண்டபத்தில் நிறை
ந்திருக்கும் சகல இருஷிகளும், தேவர்களும் மற்றுமுள்ள
எல்லாரும் எழுந்திருந்து வந்தனங்கள்செய்ய, அந்த இருஷி
களுக்கு ஆசனங்கள் கொடுத்துப் பூசித்து எழுந்தருளியிருக்
கச்செய்தார்.

அவர்களும் இராமருக்கு ஆசீர்வாதஞ்செய்தார்கள். அதின்
பின்பு இராமர் மகா சந்தோஷமாக எழுந்தருளியிருக்கும் சம
த்தக்கினிபகவான் முதலான மகா யோகிகளைப் பார்த்து, தே
வரீருடைய ஆச்சிரமங்களும், யாகசாலைகளும், பசுக்களும்
நன்றாயிருக்கின்றனவோவென்றும், வேதங்கள். தருமசாஸ்தி
ரமுதலிய சாஸ்திரங்கள், இதிகாசங்கள், ஆகமங்கள், புரா
ணங்கள், இவைமுதலாயுள்ள சகல வித்தைகளையும், உங்க
ளுடைய புத்திரர்களும், வித்தியார்த்திகளும் நன்றாய் ஓதி
வருகிறார்களோவென்றும், நித்திய கருமானுட்டான முதலா
ன கருமங்கள் காலநியமம் தப்பாமல் நடந்துவருகின்றன
வோவென்றும், அந்தரங்க விநய பயபத்தியுடனே மாதுரிய
வசனமாகச் க்ஷேமங்களை விசாரித்தார். அப்படி இராமர் சுக
விருத்திகளைக் கேட்க, மதுரவசனமாகிய அமிர்தபானம் பண
ணினவர்களாய் மகா சந்தோஷத்தை அடைந்து, அந்த மகா

யோகிகள் இராமனைப் பார்த்துச் சொல்லத் தொடங்கினார்
கள்,—கேட்பீர் இராகவரே, சகலலோகங்களையும் நசிக்கும்ப
டியாய் மிகவும் கொடுமையான உபத்திரவங்களைச் செய்யும்
அட்டகண்டராகிய விராதன், கபந்தன், கரன், தூஷணன்
கும்பன், நிகும்பன், அகம்பன், மகோதரன், மகாபார்சு
வன், தூம்பிராட்சன், விருபாட்சன், சோணிதாட்சன், மக
ராட்சன், அதிகாயன், பிரகஸ்தன், தேவாந்தகன், நராந்த
கன், கும்பகன்னன் முதலானவர்களும், சேனாபதிகளும் அள
வில்லாத இராட்சதச்சேனையும் மூலபலமும், தசக்கிரீவனும்,
யுத்தகளத்திலே சின்னா பின்னப்பட்டு மடிந்து பிணக்குவை
கள் பருவதங்கள்போல இராசிராசியாகக் குவியவும், தே
ர்களும், யானைகளும், குதிரைகளும், குடைகளும், கொடிக
ளும், சாமரங்களும், மயிற்பிச்சங்களும், ஆலவட்டங்களும்,
வாள்களும், வேல்களும், வில்லுகளும், பாணங்களும், தண்
டங்களும், முசலங்களும், சூலங்களும், எழுக்களும் இவை
முதலான அஸ்திரசஸ்திரங்களும் அறுபட்டு, முறிபட்டு, தெ
றிபட்டு, ஒடிபட்டு, சிதைபட்டு, வகைப்பட்டு இரத்தப் பிர
வாகத்தில் மிதந்தோடவும், நாய்களும், நரிகளும், காக்கைக
ளும், கழுகுகளும், பருந்துகளும், குடல்களை, மூளைகளை,
கொழுப்புகளை, நிணங்களை, தசைகளை, தோல்களைக் கொத்
தியும், பிடுங்கியும், தின்றும், கவ்வியும், வவ்வியும், ஒன்றோ
டொன்று கலந்து, கூட்டமிட்டு, நெருங்கி, ஊளையிட்டு, கு
ரைத்து, கத்திக்கத்தி ஆர்ப்பரிக்கவும், பூதப் பிரேத பிசாசங்
களும், ஆணும் பெண்ணும், குட்டிகளும் ஆங்காங்கே கூட்டங்
கூட்டமாகக் கூடிக்கொண்டு மண்டைகளாகிய கலங்களிலே
பருகிட்டு, தின்று, தேக்கிட்டு, கொக்கரித்து, தோள்
கொட்டி, கூத்தாடி விளையாடவும், விசயலட்சுமி சந்தோஷ
த்துடனே நடனஞ்செய்யவும் மகாவுக்கிரத்துடனே அட்ட
காசம்பண்ணி விசய கோதண்டத்தை வளைத்து நாணேற்றி

ட்டு, குணத்தொனி முழக்கி, ஜயசங்கோஷணம் சகஸ்ராகார மாலைமயடியாக [illegible], [illegible] பாணம், [illegible] குசிசாபாணம், உச்சிஷ்டபானம் முதலான [illegible] ளைப் [illegible] பாகமாக இடைவிடாது [illegible] க்ஷமாகப் பொழிந்து, [illegible] செய்து [illegible], காவலேகத்தை நியமமாக [illegible] ந்திருக்குமப்படி [illegible] வருகையில் குடி [illegible] தண்டபாணியாய் [illegible] ந்திய முனிவர்களாலும், [illegible] பக்தர்களாலும், மற்று ள்ளவர்களாலும் [illegible] ங்களிலும் [illegible] அந்த [illegible], [illegible] [illegible] முப்ப [illegible] யாக [illegible] பதியாய [illegible] [illegible], [illegible] [illegible] றி [illegible], [illegible] யாகே [illegible] தாமாகப் பிரதிவசனமின்றி [illegible].

---

## ௪௪-வது ஒரு சிங்கமும், நாயக்குட்டியும்

---

சில காலத்திற்குமுன் லண்டன் ராஜதானிக் கோட்டைக்குள் ஓரிடத்தில் ஒரு மிருகாலயம் இருந்தது, அதில் புறதேசங்களில் சஞ்சரிக்கும் வெவ்வேறு ஜாதி மிருகங்களுள் விசேஷமானவைகளை ஆங்காங்கிருந்து அழைப்பித்து வைத்து ஆகா

கப்பட்டன. அன்னண்டு ராஜன் [illegible] அவ்விடத்தி
[illegible] போய், [illegible] மிருகங்கள் [illegible] யானைகளாலுக்
கப் பண்ணப் பெற்ற [illegible] அவ்விடத்
தில் [illegible] சாஸ்திக்
கனமுள்ள இருக்கும் [illegible] உல்லாசம் [illegible]
[illegible]
[illegible] ஒரு [illegible]
[illegible] பாக
[illegible] ஒரு
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] மிருக ராஜன்
[illegible] நாயகத்
[illegible] வாலாட்டி, இங்
[illegible]
யாகவே நின்று மிகவும் ஆச்சரியப்பட்டு, மிருகஜாதிகளு
க்கெல்லாம் அச்சம் உண்டாகும்படி [illegible] மழைக்கத்திற்கு ஒப்
பாக, [illegible] சாதிக்கும் பருத்த [illegible]யும், சடை
க் கேசமும், கொழுத்த உடலும், கடுத்த முகமும் ஆண்மை
யுமுள்ள [illegible] மிருகேந்திரனைச் சண்டையிலே போலும் இச்சிறு
நாய் [illegible] விசாரணை செய்ய,
அவ்விருபு காவற்காரன் அடியிலவரும் [illegible] வாணை
மாய் எடுத்துரைப்பான்,—"இந்தச் சிங்கம் உங்களுக்குமாத்
திரமல்ல எங்களுக்கும் ஆச்சரியமானதுதான். இதைப்பார்
க்கும்படி பிரதிதினமும் அநேகமாயிரத்து எண்ணிறந்த ஜன
ங்கள் வருவதுண்டு. அவர்கள் இதைப் பார்க்கக் கொடுக்

னும் கூலி அறு நாளைக்கு. அதனால் நிர்வாகம் இல்லாதவர்கள் இதற்கு ஒரு நாயாவது, பூனையாவது கொண்டுவந்து, சிங்கத்துக்கு இரையாகப் போட்டுவிட்டுப் பார்த்துப் போவார்கள். ஒரு நாள் அக்சமயம் பார்க்கவந்த ஒருவன் அடுத்த வீதிப்புறத்தில் படுத்திருந்த இந்தச் சிறு நாய்க்குட்டியைக் கண்டு பிடித்துக்கொண்டு வந்து கூட்டுக்குள் போட்டான். அந்த க்ஷணமே ஏழைக்குட்டியானது அதிகாரமுகத்துடன் ஆக்கிரமித்து நின்ற சிங்கத்தைக்கண்டு, நடுநடுங்கி ஒடுங்கி ஒதுங்கிப் பதுங்கி விழுந்து மல்லாந்து நாக்கைநீட்டிப் பல்லிளித்து நாலுகாலையும் தூக்கிக்கொண்டு, அவ்வேளைக்குத் தன் உயிரைத் தப்புவிக்கவேண்டுமென்று சிங்கத்தைப் பிரார்த்திக்கும் பாவனையாய்க் கிடந்தது. ஜீவகாருண்ணியமும் பெருந்தகைமையுமுள்ள சிங்கமானது, நாய்க்குட்டி பட்ட பாட்டைக் கண்டு, அதைப் பக்ஷிக்க நினையாமல் பரிதபித்து, தன் காலால் மெல்லப் புரட்டிப் போந்து பார்த்து, அதைத் தன் குட்டியைப்போலச் சீராட்டிற்று.

"போட்ட இரையை எப்பொழுதும் ஆவலுடன் பட்சிக்கும் சிங்கமானது அன்றைக்கு நாய்க்குட்டியைத் தன் ஜாதிக்குச் சமானமாய்த் தயவுடன் மோந்துபார்த்துத் தடவிக்கொண்டு நின்றதால், அது தின்று பசியாறும்படி என் வீட்டில் எத்தனமாயிருந்த பகற்போஜனத்தைக் கொண்டுவந்து கூட்டுக்குள் வைத்தேன். சிங்கமோ போஜனத்தைத் திரும்பிப்பாராமல் நாய்க்குட்டிமேல் கண்ணாயிருந்தது. அந்தப் போஜனத்தைக் கண் சமிக்கையால் நாய்க்குட்டிக்குக் காட்டி அதைத் தின்னும்படி ஏவியது. வரவரப் பயம் தெளிந்ததாலும், வைத்த போஜனத்தின் மோப்பம் பிடித்ததாலும் நாய்க்குட்டி மெல்ல எழுந்து தவழ்ந்துபோய் இரண்டொருவாய் கவ்வித் தின்றது. அப்புறம் சிங்கமும் பக்கத்தில்போய் நின்று தின்று பசியாறியது. அந்நாள்முதலாக

அவைகள இரணடும அதிக நேசமாயிருநதன. சிஙகம நாயக
குடடியினிடததில மிகுநத படசமும உருககமும காடடியது.
நாயககுடடி சிஙகததுககுச சிறிதும அஞசாமல அதைத தன
உபகாரிபோல நனகுமதிதது நமபி, அதனுடன சநதோஷமா
யிருநதது. கூாமையான வககிர நகஙகள வெளியாகத தெரி
யும்படி, சிஙகம தன பயஙகரமான பெருவாயை ஏறநதிருககப
படுததுறஙகும்பொழுது, நாயககுடடியும அதன குலததில
உளள விலஙகில ஒனறுக ஆசசமெனறது அறிநதெரிச சமீ
பததில படுததிருககும. முன ஒரு தரம அருமையாக வைத
திருநத அனபாய வளாநத இநதக குடடி, ஒருநாள அவா
வீடடினினறு வெளிபபடடுக காணாமறபோயிறறு. அவா
அனறுமுதல நாலைநது தினமடடும அடுததச சுறறிடஙகளில எங
கும ஆளனுபபித தேடுவிததும நாயககுடடி அகபபடவிலலை.
அதனால அதைககணடவாகளாவது, அது இருககினற இட
முதலான விவரஙகளைத தெரிவிததால, அவாகளுககு இரு
பது ரூபாய வெகுமதி கொடுபபதாக வாததமான பததிரிகை
யொனறில பிரசுரஞசெயவிததாா. பினபு சமது நாயககுடடி
மிருகாசயததில ஒரு சிஙகததுடன பழகி உலலாசமாய இருக
கிறதாகச செயதிகேடடு, அவா இஙகேவநது காணாமறபோன
நாயககுடடியைக கணடு கமககுத தரச சொலலிககேடடாா.

"ஐயா இவவளவு நடபாய நாளகழிதது, வநதவாகளெல
லாம கணகுளிரக கணடு களிபபதறகு ஏதுவாயிருககும இநத
மிருகஙகளை ஒனறைவிடடொனறு விலககுவது துரோகமாகு
மே, உமககு நாயககுடடி வேணடுமானால இவவிரணடையும
கொணடுபோய வைததுக காபபாறறும. வரும நயநஷட
மெலலாம உமககுததானெனறேன. அதைக கேட்டுத துரைக
குக கடுஙகோபம உணடாயிறறு. அதுகணடு, உமது இஷடப
படி நாயககுட்டியைப பிடிததுககொணடு போமெனன, அவா
அநதப பிடிககபபோனால சிஙகததினால தீஙகு நேரிடுமெனறு

பயாத்தா சற்றுநேர முகத்தில் விசனக்குறி தோன்ற நின்று
பெருமூச்சுவிட்டுப் போய்விட்டார்" என்றன.

பின்பு அச்சமயம் பார்க்கப்போன ஆசையுடன் ஒவ்வொ[illegible]
முழு நாயும் எல்லாவிதமும் [illegible], சொந்த தமது [illegible]
பச்சை [illegible] என்று சொன்னதுரைத்தனர். இதைப் பிரத்
[illegible] அதுபோல் [illegible] என்று குறும்பு, சேமமாயிரும் இரு
பதார்த்தங்கள் அவற்றைப் பிரித்து [illegible] கூடிக்கொண்டு [illegible]
போட, நாய்கள் [illegible] ஆவலுடன் பாய்ந்து, மயிர்மு
றுமையும் அடைபட்டிருக்கும் [illegible] பாவனையாக [illegible]
காலையில் [illegible] முறைப்படி [illegible]; அதன்பின்
குடும்பத்தின் [illegible]
கத்தல் சத்தமாய்ப் போயிற்று. [illegible]
க்கிரம ராஜாங்கத்தை பெரியோர் [illegible]
ங்கள் செய்யும் [illegible] பொருட்படுத்த [illegible]. [illegible]
யின் அக்கார முகத்தைப் பாராமலும், [illegible]
சாமுவான கடகளைக்கு [illegible] செய்ய [illegible], விளையாடி
னறி விலாப்புடைக்க [illegible], [illegible]
ஒதுங்கிக்கிடக்க. [illegible]
ட்டத் தனதாதன்மை. [illegible] விட்டுப் [illegible]
கம் எழுந்து பரபரப்பின்றி மெல்ல நடந்து ஆசைப்பட்டித்து,
பசி ஆறி மீண்டும் தேடி [illegible] கொண்டது. அந்
தத் தருச்சுக்குள்ள அறபாரய அடங்கியிராமல் துள்ளிப்பாய்ந்து
குரைப்பதும், சிங்கத்தின் சேஷ்டையில் தன் காலால் வருடுவதும்,
அச்சன் செவியின் மயிர்க்கூச்சக் கடிக்கத் தழுச்சு அலைந்து புரியத்து
மாயிருந்தது. இச்சிறுகு எல்லாம் மகத்தான சிநேகமும் எளிய
பிராணிகளிடத்தில் கிருபையுள்ள ராஜசிங்கமானது உப
மாயினும் கோபிக்காமலும் அயர்ந்து உறங்கிவிடாமல் சேஷ
டையண்ணின் தரும்புப்போதும் நாய்க்குட்டியினிடத்தில் வை
த்த பட்சத்தை மறக்காமலும் அதன் விளையாட்டை விநோத

[illegible]நாயக்கண்டு, நகை [illegible] பாயப்பாய முகாசில கனிப்பு
[illegible]மையடி படு[illegible]து இனி இவைகளைக்குறித்துச
சொல்லிய சபகத்தின் சாணப்பம் [illegible] பாய [illegible]கிலாகத்தில
உள்ள யாவருக்கும் தெரியும் எவ்[illegible] இடனாள் [illegible]ரயில
மிருகங்களுக்குள் இதக்கு ஆச்சரியமான ஐக்கியமும் அறிவும
வெளிப்பட்டதைப் [illegible] தேவாசன பனிரண்டு
மாசம் சென்றதன்மேல், அ[illegible]டி [illegible]யாக்கண்டு
இறந்துபோக, அன்று முதல் [illegible] காயில [illegible]மான்று
[illegible]ன கண்ணமிலி பழும் [illegible] குறிதெகன
றெண்ணி, அந்த சரீரத்தை [illegible]டி [illegible]மோ [illegible]பாககும், முக
கிலே புற[illegible]ப்பாக்கும், அ[illegible]கிதிகுமபடி சாலிறலை
[illegible]சைத்து [illegible] நட்டப்பாககும, [illegible] விக்கங்களாய [illegible]
அருட்டி [illegible]முப்பயும், [illegible] சிறி[illegible] இயங்கவில்லை.
அ[illegible]சண்டு, [illegible] ரா[illegible] உண்டாயிற்று. அது
[illegible]மையை [illegible]தொகட்டு [illegible] முகக்கோடு, மயக்கம் கொ
[illegible]போக [illegible] [illegible]கைகள் [illegible] உலாவ, சற்று நேரம்
[illegible], [illegible] [illegible] உற[illegible]ப்பாக்கப் பெருமூச்செறியும
[illegible] [illegible], அ[illegible]கம்[illegible]கள் அடுத்து
[illegible]த்து [illegible] [illegible]றம்போக [illegible] [illegible]செ[illegible]பட்டத்தக்கதாக
[illegible] [illegible] நாயக [illegible] [illegible].

[illegible] நாயின் உட[illegible] [illegible]கொண்டு போகும்படி அங்
கி[illegible] பாபல [illegible] செய்யும், விசனத்தால
உ[illegible] [illegible] மான[illegible]வரையும் [illegible]க விட
வில்லை அ[illegible] [illegible]கட்டிய[illegible] [illegible] குட்டிபோலப் பாவி
த்து அ[illegible] [illegible]டிப் பிரியா[illegible]. அதற்கு இரைகொடுத்
தால், உக்கிரம் தணியுமென்று விசாரணைக்காரன் நாலு ஐந்து
நாயக்குட்டிகளைக் கூட்டுக்குள் போட, சிங்கம் அவைகளை உறு
ப்பு உறுப்பாயக் கிழித்துக் கூட்டிலெங்கும் சிதறிற்று. அவை

ப்புப் பலகையைக் கடித்துச் செதில்செதிளாய் நெரித்து முறித்தது. இருப்புச் சலாகைகளைப் பல் வலிக்கிறவரையில் கோபம் என்னும் நெருப்புப்பொறி அதன் கண்ணில் பறக்கக் கடித்து நொறுக்கப்பார்த்தது. பசியினாலும் விசனத்தினாலும் சோர்ந்து துவளத்தொடங்கியபின், அது நாய்க்குட்டியின் பக்கத்தில் படுத்து அதைத் தன்காலால் வயிற்றோடு இறுக அணைத்துப் பெருமூச்சுவிட்டு, தன் தோழனும் தனது பிராணசினேகனுமாகிய நாய்க்குட்டி இறந்த ஆற்றாத்துயரத்தால் உரத்த சத்தமாய் அழுது; ஐந்து நாள் வரையில் ஊண் உறக்கமின்றி இறந்துபோயவிட்டது. பின்பு இரண்டு உடல்களும் ஒரே குழியிலே சேமிக்கப்பட்டன.

---

## ௪௫-வது நியூவௌந்துலாந்திய நாய்.

---

இங்கிலாந்தின் தென்கிழக்கில் கெந்து என்னும் ஒரு மாகாணம் இருக்கின்றது. ஒரு முறை பெருங்காற்று அடித்தபொழுது அந்த மாகாணத்தைச் சேர்ந்த விதநகரத்தின் துறைக்குச் சமீபமாய் நின்ற ஒரு கப்பல் காற்றினால் மோதப்பட்டுத் தத்தளித்துக் கரை தட்டிற்று. அதில் இருந்த சப்பற்காரர் எட்டுப்பெயர். அவர்கள் தங்களைத் தப்புவிக்கும்படி சிறு படவு அனுப்பவேண்டுமென்று கரையில் நின்றவர்களுக்குச் சமிக்கை காட்டினார்கள். சமுத்திரத்தின் அலைகள் மோதிக்கொண்டு புரண்டு சொந்தளித்தபடியால், அவர்களிடத்துக்குப் படவு செலுத்திக்கொண்டுபோவது சங்கடமாயிருந்தது. அவர்கள் அவதிப்படுகிறதைப் பார்த்துக்கொண்டு கரையிலே நின்ற துரை ஒருவர்தாம் வளர்த்த நியூவௌந்துலாந்திய நாய்க்குக் கப்பலைக் காண்பித்து அதின் வாயில் ஒரு கோலைக்

கொடுத்தார். அந்தக் குறிப்பினால் நாய் அவருடைய கருத்தை அறிந்து கோலைக் கெளவிக்கொண்டு, மலைபோலப் புரண்டு எழுந்த அலைகளுக்குச் சிறிதும் பயப்படாமல் துரிதமாய்ப் பாய்ந்து அலைகளைத் தாண்டி, கப்பலுக்குச் சற்றுச் சமீபத்தில் சேர்ந்தது. கப்பற்காரர் அதைக் கண்டு பயம் நீங்கிச் சந்தோஷமுள்ளவர்களாய், ஒரு கோலில் கயிறு கட்டி, அதை நாயினிடத்தில் எறிந்து, கயிற்றின் மறுமுனையைத் தாங்கள் பிடித்துக்கொண்டார்கள். உடனே நாய் அவர்கள் கருத்தை அறிந்து, தன் வாயில் இருந்த கோலை வழுவவிட்டு, கயிறு கட்டின கோலை இறுகக் கெளவிக்கொண்டு, அதிக வீரமும் விரைவுமுள்ளதாய் அலைகளைத் தாண்டிக் கரைப்பட்டது. அப்பொழுது கரையில் நின்றவர்கள் கயிற்றைப் பிடித்து, அதன்வழியாய்க் கப்பற்காரர்களைக் கரையேற்றினார்கள்.

கபால லக்ஷணவித்தையில் பாண்டித்தியமுள்ளவர்கள் பருத்த மூளையுடையவர்களுக்கு விவேகம் அதிகப்பட்டிருக்குமென்று சொல்வார்கள். நாய்களின் குணங்களைக்குறித்து நன்றாய்ப் பரிசோதித்து அறிந்த ஒருவர்; அவ்வாறே பருத்த தலையுள்ள நாய்கள் பெரும்பாலும் இயற்கையறிவில் கதித்திருக்குமென்று சொன்னார். அவரிடத்தில் நியூவெளந்துலாந்திய சாதிநாய் ஒன்று இருந்தது. அதன் தலை சாதாரண நாய்களின் தலையைப்பார்க்கிலும் அதிகமாய்ப் பருத்திருந்தது. அதைப்போல் அத்தனை அறிவுள்ள நாய்களைக் காண்பது அரிது. அது வேட்டையாடுவதில் மிகுந்த சமர்த்துள்ளது; வீட்டுவேலை சிறிய பல உதவிகள் செய்தது; அதின் மூலமாய்க் கடிதப் போக்குவரவு செய்யப்பட்டது. அந்த நாயை வளர்த்த துரை தமது தோட்டத்தில் வேலைசெய்கிற கூலிக்காரர் வீட்டுக்குப் போயிருக்கும்பொழுது, அவர்களுக்கு ஏதாவது அறிவிக்கவேண்டியதிருந்தால், கடிதம் எழுதி அதின் கழுத்தில் கட்டி அனுப்புவார். அது அவர்கள் வீட்டிற்கு ஓடிப்போய்க்

கதவில் பிறாண்டிச் சத்தம் காட்ட, அவர்கள் கதவைத் திறந்து கடிதத்தை வாங்குவார்கள். சும்மா திரிகிறபொழுது அந்த நாய் அடுப்பினிடத்துக்குப்போய்க் குளிர்காய்வதும், மறைவிடங்களில் சோம்பலாய்ப் படுத்திருப்பதும் வழக்கம். வேலை செய்வதற்கு ஏவப்படும்பொழுதோ அப்படியல்ல; அது தன் வேலையை நிறைவேற்றுமட்டும் அங்கிங்குத் திரும்பிப் பார்க்கிறதில்லை; வகைமோசமாய் இழந்துபோன பொருள்களை அது தேடி எடுத்துக்கொடுப்பதுமுண்டு. பகற்போசனகாலத்தில் பெரும்பாலும் அந்த நாயை வீட்டுக்குப்புறத்தில் நிற்கவிடுவார்கள். அது தனக்கு எதிர்ப்படும் குல்லா, புஸ்தகம் முதலான பொருள்களைக் கவ்வியெடுத்துக்கொண்டு தன் எசமானிடத்தில் கொடுக்கப்போகிற பாவனையாக உட்செல்லும். குதிரைக்குக் கடிவாளம் இட்டு அதின் நுனியை அந்த நாய்க்குமுன் வைக்கும்பொழுது, நாய் அதைத் தன்வாயினால் கவ்விப் பிடித்துக் குதிரையைக் கட்டும் இடத்திற்குக் கொண்டுபோகும். இந்த வேலை செய்வது அதற்கு மிகவும் திர்ப்தியாயிருக்கிறதாகக் காணப்படும்.

வண்டிக்குள் ஒரு நாயை விட்டு அடைத்து நெடுந்தூரமட்டும் கொண்டுபோனாலும், அது தான் வந்த வழியை முன்பு அறியாதிருந்தும், சிறிதும் தப்பவிடாமல் மோப்பம் பிடித்துச் சென்று, முன்பு நின்ற இடத்தில் சேரும். நாய்களுக்குச் சாதாரணமாய் இந்த இயற்கை உணர்ச்சி அதிகரித்திருக்கும்.

ஒரு முறை நியூவௌண்துலாந்திலிருந்து ஒரு நாய் லந்தன் நகரத்திலே தெம்ஸ் ஆற்றுத் தெருவில் இருந்த அனை ஒருவருக்கு அனுப்பப்பட்டது. அவர் அந்த நாயைத் தன் இச்சையாய்த் திரியும்படி விட்டு வளர்ப்பதற்குத் தகுதியான இடம் இல்லாததினால், ஒரு சிறு படவில் ஏற்றி ஸ்கொத்திலாந்திற்கு

அனுப்பினார். அது அங்கே சேர்ந்து சிலநாள் தங்கி, பின்பு லந்தன் நகரத்திற்கு ஒளித்து ஓடிற்று. ஸ்கொத்திலாந்திலிருந்து எங்கிலாந்துக்குப் போகிற சாலையை அது முன் ஒரு பொழுதும் காணாதிருந்தும், எப்படியோ வழிபிடித்து மேற்சொல்லிய துரையுடைய வீட்டில் போய்ச்சேர்ந்தது. சேர்ந்தும், வழியில் உணவு கிடையாததினால் மிகவும் மெலிந்து இரண்டொரு தினத்திற்குள் இறந்துபோயிற்று.

சில நியூவௌண்ட்லாந்திய நாய்கள் தங்களை வளர்த்த ஆடவர்கள் வீட்டில் இல்லாதிருக்கும் பொழுது, இராக்காலங்களில் ஸ்திரீகளுடைய சயன அறையின் வாசலுக்கு முன்பு விழித்திருந்து காவல் செய்வது வழக்கமென்று கேள்வி.

கொஞ்சக் காலத்திற்குமுன் சில வேட்டை நாய்கள் எங்கிலாந்திலுள்ள லிவர்பூல துறையிலிருந்து தோணியில் ஏற்றி அயர்லாந்துக்கு அனுப்பப்பட்டன. அவைகள் அக்கரைப்பட்ட பின்பு, நடு நாட்டில் நாய் வளர்க்கப்படுகிற ஒரு வீட்டிலே கொண்டுபோய் விடப்பட்டன. அவைகளில் ஒன்று அவ்விடத்தில் நிற்க விரும்பாமல் முன் இறங்கின துறைக்கு ஓடிப்போயிற்று. துறையில் சேர்ந்தபொழுது இராணுவவீரர்கள் அங்கிருந்து லிவர்பூலுக்குப் போகும்படி கப்பல் ஏறியிருக்கக்கண்டு, தானும் அவர்களுடன் ஏறிற்று. ஜனச் சந்தடியினிமித்தம் அதை ஒருவரும் கவனிக்கவில்லை. அது கரைப்பட்டபின்பு, தன்னை வளர்த்த வேட்டைக்காரனுடைய வீட்டிற்குப் போய்ச்சேர்ந்தது. அப்பொழுது இராக்காலமானதினால் எல்லாரும் கதவை அடைத்து வீட்டிற்குள்ளே தூங்கினார்கள். நாய் வெளியில் படுத்திருந்தது. மறு நாள் அதிகாலையில் அந்த வேட்டைக்காரன் கதவு திறந்து வெளிப்பட்டவுடனே, தனது நாய் வாலாட்டித் தன்னை உபசரித்து நின்றது கண்டு சந்தோஷித்து, அது வந்த வகையைக்குறித்து ஆச்சரியப்பட்டான்.

## ௪௯-வது. அந்திரோகிலிசும் சிங்கமும்.

---

கிரேக் தேசத்தில் அந்திரோகிலிசு என்னும் ஒரு அடிமை இருந்தான். அவனுடைய எசமான் அவனை அதிக குரூரமாய் நடத்தினான். அந்த அடிமையானவன் தன் உபத்திரவங்களுக்கு நிவிர்த்தியில்லையென்று கண்டு பரிதபித்து, "ஐயோ, இந்தக் கொடிய எசமானிடத்திலிருந்து நாள்தோறும் வருத்தப்பட்டுக் கண்ணீர் விடுவதைப்பார்க்கிலும் குத்திக்கொண்டு இறந்தால் தானென்ன ; இவனை விட்டுத் தப்பியோடி ஆயுள் பரியந்தம் அகப்படாதிருக்கக் கூடுமானால் நல்லதுதான் ; திரும்பக் கண்டு பிடித்தாலோ என்னைக் குரூரமாய் வதை செய்யலாம். துஷ்டமிருகங்கள் சஞ்சரிக்கின்ற வனங்களுக்குப் போய் நாள்கழிப்பேன். அவைகள் என்னைக் கொன்றாலும் பெரிதல்ல. கொடிய மனுஷர் எனக்குச் செய்கின்ற உபத்திரவங்களைப் பார்க்கிலும் துஷ்டமிருகங்கள் அதிக உபத்திரவம் செய்யுமா ?" என்று நினைத்துச் சமயம் பார்த்துத் தன் எசமானுடைய வீட்டிலிருந்து காட்டுக்கு ஓடிப்போனான். வருத்தம் நீங்கிச் சுகம்பெறுவதற்காக வனத்திற்குப் போயும்; அங்கே வேறுவிதமான வருத்தங்கள் உண்டாயின. அவன் ஒரு பகல் முழுதும் அந்தக்காட்டில் அங்கும் இங்கும் அலைந்து திரிந்து திசைதெரியாமல் மயங்கினான். அவன் சரீரம் முள்ளுக்களால் கீறிக் கிழிக்கப்பட்டது. அவன் பசியினால் சோர்ந்து நடக்கச் சத்தியில்லாதவனாயிருக்கையில் ஒரு பெரிய குகையைக் கண்டு, அதற்குள் புகுந்து படுத்திருந்தான். படுத்திருக்கும்பொழுது, இடி முழக்கம்போலப் பயங்கரமான சத்தத்தைக் கேட்டான். கேட்டமாத்திரத்தில் அவன் திடுக்கிட்டு எழுந்து, "இதில் ஏதோ துஷ்டமிருகம் இரு

கிறது, இங்கே நின்றால் அபாயம் நேரிடும், ஓடித் தப்பி
உயிர் பிழைக்க வகை பார்க்கவேண்டும்" என்று நினைத்துக்
குகையில் நின்று வெளிப்பட்டான். அப்பொழுது ஒரு சிங்
கம் அவனுக்கு எதிர்ப்பட்டு வந்தது. அதைக் கண்டவுடனே
அவன் "இனி எனக்கு மீட்சியில்லை. சிங்கத்திற்கு இரையா
வது நிசம். ஐயோ! எதற்கா இந்த வனத்திற்கு வந்தேன்"
என்று எண்ணிக் கலங்கினான். அவன் கால்கள் நடுங்கின,
கைகள் சோர்ந்தன, மெய் வெயர்த்தது, அவன் ஒரு மரம்
போல விறைத்து நின்றான். சிங்கமோ சிறிதும் ஆக்கிரமி
யாமல் மெல்ல நடந்து அவனுக்குச் சமீபத்தில் போய், தன
க்கு உதவிசெய்யும்படி அவனை வேண்டிக்கொள்ளுகிற பாவ
னையாய் அழுதது.

இயற்கையாய் வீரமும் துணிவுமுள்ளவனாகிய அந்திரோகி
லிசு என்பவன்; சிங்கம் புலம்பினதைக் கேட்டும், அதன்
ஒரு கால் வீங்கி நொண்டியாயிருந்ததைக் கண்டும், அது ஒரு
பசுவைப்போலச் சாதுவாயிருந்ததை உணர்ந்தும், சிறிதும்
பயப்படாமல் அதற்குக் கிட்டப்போய், வீங்கியிருந்த காலைப்
பிடித்துப் பார்த்தான். காலில் ஒரு பெரிய முள்ளு ஏறியிரு
ந்தது. அதிகமாய்ச் சீக்கொண்டு தசை நைந்திருந்தது. சிங்
கம் தன் வாலை ஆட்டித் தன் உபத்திரவத்தைத் தீர்க்கும்படி
அவனை வேண்டிக்கொள்ளுகிற விதமாய் நின்றது. அவன்
அந்த முள்ளைப் பிடுங்கிச் சீயைப் பிதுக்கினான்.

அதனால் சிங்கத்தின் உபத்திரவம் லகுவாயிற்று. அது அதி
கமாய்ச் சந்தோஷித்து ஒரு பூனைக்குட்டியைப்போலப் பா
ய்ந்து துள்ளி விளையாடிற்று. தனது நீளமான வாலை ஆட்டி,
தனக்கு உபகாரம்செய்த அந்திரோகிலிசின் கைகளையும் கா
ல்களையும் நக்கிற்று. அன்றுமுதலாக அந்தச் சிங்கம் தான்
பிடித்த இரைகளைக் குகைக்குக் கொண்டுபோய், ஒரு பாக

த்தை அந்திரோகிலிசுக்குக் கொடுத்து ஒரு பாகத்தைத் தான் தின்றுவந்தது. இந்தப்படி அந்திரோகிலிசு என்பவன் சில மாதவரையில் சிங்கத்தால் ஆதரிக்கப்பட்டான். பின்பு ஒரு நாள் அவன் காட்டில் உலாவித் திரிகையில் அவனைத் தேடிப் பிடிக்கும்படி அனுப்பப்பட்ட யுத்தவீரர்கள் கண்டுபிடித்து எசமானிடத்தில் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். அடிமைகளைக் குறித்து அத்தேசத்தில் அதிக குரூரமாக ஏற்படுத்தப்பட்ட சட்டங்களின்படி அவன் விசாரணைசெய்து குற்றவாளியென்று தீர்க்கப்பட்டான். பல நாள் வரையில் இரை கொடாமல் அடைத்து வைக்கப்பட்ட சிங்கத்திற்கு இரையாகவிடும்படி அவனுக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

அந்திரோகிலிசை இவ்வாறு தண்டிக்கும்படி குறிக்கப்பட்ட தினத்தில், அவன் கொலைக்களத்திற்குக் கொண்டுபோகப் பட்டான்.* கொலைக்களம் அதிக விசாலமாயிருந்தது. அந்தப் பயங்கரமும் துக்கமுமான காட்சியைப் பார்க்கும்படி திரளான ஜனங்கள் நான்கு புறத்திலும் கூடியிருந்தார்கள். அவ்வேளையில் ஒரு சிங்கம் அறையிலிருந்து திறந்துவிடப்பட்டது. அதன் கண்கள் சுவாலிக்கும் அக்கினிபோல் எரிய, அது கர்ச்சித்து, தன் கேசத்தைச் சிலிர்த்துக்கொண்டு வெளிப்பட்டது. அதைப் பார்த்தவர்கள் எல்லாரும் அந்தக்ஷணமே நடுநடுங்கி, அந்திரோகிலிசைக்குறித்து அநுதபித்தார்கள். ஆயினும் அவர்கள் அநுதாபம் சற்றுநேரத்திற்குள் மாறி ஆச்சரியம் உண்டாயிற்று. சிங்கமானது அவனைக் கண்டவுடனே பணிந்து அவனுடைய பாதத்தண்டை விழுந்து படுத்து, நம்பிக்கையுள்ள நாய் தன்னை வளர்த்தவனிடத்தில் நேசங்காட்டுவதுபோல் நேசங்காட்டிற்று. தன் அன்பான குழந்தையை இழந்துபோன தாயானவள் அதைத் திரும்பவும் சடிதியில் கண்டால், அவளுக்கு உண்டாகும் சந்தோஷத்தைக் குறித்துச் சொல்லவேண்டுமா ; அதுபோல் அந்தச் சிங்கமும்

அந்திரோகிலிசைக் கண்டு, அதிகமாய்ச் சந்தோஷித்தது. சூழ்ந்த ஜனங்கள் எல்லாரும் இதென்ன ஆச்சரியமென்று எண்ணி, இருந்த இடத்தைவிட்டுப் பெயராமல் மரம்போல விறைத்து நின்றார்கள். பின்பு நகராதிபதி அந்திரோகிலிசைக் கூவி அழைத்து, "ஆ ஆ, இதென்ன ஆச்சரியம்! இந்தச் சிங்கத்திற்கு அற்ப மனுஷனாகிய நீ ஒரு பொருட்டா! இது உன்னைக் கண்டமாத்திரத்தில் தன் இயற்கையான மூர்க்ககுணத்தை மறந்து, சரீரத்தை ஒடுக்கி, உன்னிடத்தில் பட்சம் காண்பித்து, பசுப்போலச் சாதுவாய் நிற்கின்றதே. இதன காரணம என்ன? தெரியும்படி சொல்லு" என்று கேட்டார்.

அப்பொழுது அந்திரோகிலிசு என்பவன் தான காட்டிற்குப்போனதும், அங்கே ஒரு சிங்கத்தினால் கண்டு சில மாத வரையில் போஷிக்கப்பட்டதுமாகிய சங்கதிகளைச் சுற்றி நின்ற ஜனங்களுக்குக் கேட்கும்படி உரத்துச் சொல்லி, அந்தச் சிங்கமே இது என்று தெரிவித்தான். கேட்ட யாவரும் உக்கிரமுள்ள துஷ்டமிருகமும் சாதுவாகி, மனுஷரைப்போலச் செய்நன்றி அறிகிறதேயென்று ஆச்சரியப்பட்டுச் சந்தோஷித்தார்கள். பிறகு அவர்கள் மனுப்பண்ணிக்கொண்டபிரகாரம் நகராதிபர் அந்திரோகிலிசைத் தண்டியாமல் விடுதலையாக்கினார். இவ்வாறு இரண்டுமுறை அவன் பிராணனைக் காத்த சிங்கம் அவனுக்கே வெகுமதியாகக் கொடுக்கப்பட்டது

---

## ௬எ.-வது. உறுப்புகளெல்லாம் வயிற்றைப் பகைத்தது.

---

சரீரசம்பந்தமாகிய உறுப்புகளெல்லாம் மௌட்டியத்தால் வயிற்றைப் பகைத்து, அட இதென்ன சங்கடம்? ஊர்கூடிச்

செக்குத்தள்ளுவதுபோல நாமெல்லாம் நாள்தோறும் எச்
சும ஓடி உழன்று அக்கிராரத்து நாய்போலப் பிரதிஷ்டைக்
குப் பாடுபட. சோமபேறி வயிறுணது ஒரு வேலையும் செய்
யாது, நோவாமல துரைபோல் இருந்து நன்றாய் விலாப்பு
டைக்கத்தின்று கொழுத்துப பருத்துப் பூரித்து மதோனம
ஸ்தனாகிவிட்டது. இப்படி இதறகு நாம் உழைத்திட நமக்கு
வநத சணடிவாளமென்ன. இன்று முதல் யாதொரு முயற
சியும் செயயாதிருபபோம். அபபுறம் இது எபபடிச் சீவிக்
குமோ பார்ப்போமென்று எல்லார் ஒருமுகமாயக் கட்டுப
பாடு பண்ணிக்கொண்டமையால், அவ்வண்ணமே முதல மு
தல கால் அசையாமல சும்மா நீட்டியபடி கிடநதது. அதற
குமுனனே கை போட்ட இடததில இருநதது. பினபு மு
துது வளையாமலும், மார்பு நெளியாமலும, தலை நிமிராம
லும், கண விழியாமலும், வாய திறவாமலும், மறற உறுப
புகளும் தன் தன தொழிலைச் செயயாமலும், ஊண் உறக்க
மின்றிச சும்மா பிணம்போற கிடநதன. இவ்விதமாகப் பத
துப் பதினைநது நாளவரையில் பலலைக் கடித்துககொணடு
ஒரே வைராக்கியமாய்க கிடக்கையில், வானம் சுருங்கில்
தானம் சுருங்கும் எனறபடியே சரீரம் மெலிந்து பலவீன
ப்பட, கால கொறுக்குவலி வாங்கியது. கைசோர்ந்துபோ
யிறறு. இடுப்புத் தெறிக்கத் தலைபபட்டது. முதுகு உளைப்
பெடுததது, காது அடைப்புக் கண்டது. பல் சிலிர்சிலிரத்
தது. கண் பஞ்சடைந்தது. தலை தூக்கக்கூடாமலிருந்தது.
இவ்வாறு உடம்புபடுகிற மாறுவஸ்தையைக் கண்டு மனம
சோர்நதது. புத்தி பிரமித்தது. சித்தம் சலித்தது. அகங்கா
ரமும் அடங்கியது. காமக் குரோதாதிகளும் பறந்தோடின.
பிராணன் துடிதுடித்தது. இதை அறிவாகிய அமைச்சனால்
ஆத்மாவாகிய அரசன் அறிநது மிகவும அனுதாபபபட்டு நியா
யவிசாரணை செய்யத் தொடங்கினான்.

அக்காரணத்தில் சிரசாதி பாதபரியந்தமாகிய அவயவங்க ளெல்லாம் வயிற்றினால் தங்களுக்கு உண்டான கஷ்டநஷ்டத் தைக்குறித்து முறையிடத் தலைப்பட்டார்கள். எப்படியெ னில், பாதம்,—ஐயா தங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி நான் எங்கும் நடந்து திரிகிறேன். இடுப்பு,—நான் சரீரத்தின் மேற் பாகத்தைத் தாங்குகிறேன். முதுகு,—நான் பாரமான மூட் டைகளைச் சுமக்கிறேன். கை,—நான் கலை தொழில் முத லாகிய பலவித வேலையும் செய்கிறேன். கழுத்து,—நான் தலை யைத் தாங்குகிறேன். தலை,—நான் நல்லோர் பெரியோ ரை வணங்குகிறேன். முகம்,—நான் விசனம் சந்தோஷமுத லானவைகளைக் குறிப்பிக்கிறேன். கண்,—நான் உருவங்களைக் காணுகிறேன். இமை,—நான் தூசிவிழாமற் கண்ணைப் பாதுகா க்கிறேன். காது,—நான் ஓசையைக் கேட்கிறேன். மூக்கு,— நான் மணமறிகிறேன். வாய்,—நான் வசனிக்கிறேன். பல்,— நான் கடின பதார்த்தங்களை மென்று தருகிறேன். நாக்கு,— நான் சுவையறிந்து உதவுகிறேனென்று தனித்தனியாயும், பலவழியிலும் நாங்கள் வருத்தப்பட்டு வேலைசெய்து இந்த வேலைப்பார் பார்க்கும்படிக்குத் தொலைந்திருந்த எங்களுக்கு என்ன சலிப்பியென்றும், எங்கள் காலின்மேல் வனைடியோ டியநு என்னவென்றும் சமூகமாயும் முறையிட்டபொழுது, அவ்வரசன் பிரதிவாதியாகிய வயிற்றின்மேல் குற்றமில்லையெ ன்பது தனக்குத் தெரியுமாதலால், அதைக் குறித்து ஒரு கே ள்வியும் கேட்காமல், தலையை நோக்கி என் சாணுடம்பிற்குப் பிரதானமான சிரசே, நீ எல்லாவற்றிலும் முதன்மையாயி ருந்தும், தகாத்காரியம் ஏன் செய்தாய்? இதனால் உனக்குத் தலையெடுப்பு என்ன என்றும், கண்ணைப்பார்த்து, உனக்கு இந்தக் கண்கொழுப்பு ஆகாதென்றும், வாயை நாடி இந்த வா ய மதம் உனக்கு ஏனென்றும், பல்லைக்குறித்து உனக்கிது பற கடிப்பல்லவோ என்றும், கையை நோக்கி இது தான் கை

மோசமென்றும் வைது, பிறகு இவைகளுக்கு மேல்விசார
ணைக்காரர்களா யிருக்கின்ற அந்தக்கரணங்களில் பிரதான
மான மனதை எதிரிட்டுப் பாழ் மனமே, நீ எல்லாவற்றை
யும் நினைக்கத்தக்க சக்தியுடைத்தாயிருந்தும், இதை யோசி
யாமலிருந்தது என்ன மனமிடுக்கென்றும், புத்தியை முன்
னிட்டு அற்ப புத்தியே, உனக்கு அடுத்ததை விசாரித்தறியும்
வல்லமையிருந்தும் இதை விசாரியாமலிருந்தது என்ன விப
ரீத புத்தியென்றும், சித்தத்தைக்குறித்துச் சபல சித்தமே
உனக்கு ஆராயும் தகைமை உண்டாயிருந்தும் இதைக்குறித்
துச் சிந்தியாதது என்ன சித்தவிர்த்தியென்றும் கண்டித்து,
கலகத்துக்கு உள்ளனும் கள்ளனுமாயிருந்த அகங்காரத்தை
அதட்டி உறுக்கி, மூட அகங்காரமே, நீயல்லவோ இதற்கெ
ல்லாம் உபபலமாயிருந்தாய். உனக்கு இதென்ன துராங்கா
ரமென்று கோபித்துக்கொண்டு அதைத் தண்டித்துப் பின்
னும் உங்களால் ஆகிறது ஒன்றிருக்கிறதா? நீங்கள் கோபு
ரம் தாங்கிபோல் இருக்கிறீர்களேயல்லாமல் வேறல்ல, உங்
களுக்கும் எனக்கும் சகலத்துக்கும் காரணமாகிய பரமாத்
மாவென்னும் சக்கரவர்த்தி ஒருவர் இருக்கிறார். எல்லாரும்
அவருக்குக் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். இவ்வழக்கு அவ
ருக்குத் தெரியாததல்ல, அவர் கண்சாடையாயிருக்கிறார்.
அதை அறியாமல் நீங்கள் இப்படிச் செய்தீர்கள். இதனால்
வரும் கஷ்ட நஷ்டங்கள் உங்களுக்குமாத்திரமா, எனக்கும்
கூடச் சம்பவிக்குமல்லவோ? தான் கெட்டதுமல்லாமல் சந்
திரபுஷ்கரணியையும் கூடக் கெடுத்தானென்பதுபோல நீங்
கள் கெட்டதுமல்லாமல் என்னையும் கெடுக்க ஏற்பட்டீர்க
ளே இது தர்மமா? உலகத்தில் ஒருவன் பிரயாசைப்பட்டுத்
தேடியிட, அவனைச் சார்ந்த குடும்பத்தாரெல்லாம் ஜீவிக்க
வில்லையா, ஆலமர முதலானவைகள் கோடையின் தாபத்
தைத் தந்தலைமேல் தாங்கிக்கொண்டு தம்மிடத்தில் வந்தடை

ந்தவர்களுக்குக் குளிர்ந்த நிழலைக் கொடுத்து அவர்கள் வெ ப்பத்தை ஆற்றவில்லையா, நீங்கள் நாம் ஓடித்தேடி இவ்வ யிறறுக்கு இடுவானேன் என்று இறுமாப்புக்கொண்டு அநி யாயமாய் வயிற்றுக்குத் துரோகம் செய்தீர்கள். கடைசி யில் இந்தத் துரோகம் ஆத்ம துரோகமாய முடிந்தது. குரு த்துரோகமுதலான பல துரோகங்களும் காலாந்தரத்தில் பலி க்கும். இது உடனே பிரத்தியக்ஷத்தில் பலித்துவிட்டது. மரத்தின் வேரிலே விட்ட தண்ணீர் அங்கிருந்து ஊறி மரமு முழுவதும் பாய்ந்து பயன் படுவதுபோல, பிரதானமான வயி ற்றுக்கிட்ட ஊண் சமித்து அதன் சாரம் சரீரமுழுதும் வியா பித்துச் சத்துவத்தைக் கொடுக்கிறதென்று தெரியாதா ? இந் தச் சூட்சுமத்தை அறியாமல் மோசம் போனீர்களே. இனி நீங்கள் ஒரு போதும் இப்படிக் கலகம் செய்யவேண்டாம். எத்தால் வாழலாம் ஒத்தால வாழலாமென்பதனால் நீங்களெ ல்லாரும் ஒருமைப்பாடுடையவர்களாய் விரோதமில்லாமல் வாழக்கடவீர்களென்று ஆத்மாவாகிய அரசன் விதித்தான்.

---

## *அ-வது. சிங்கமும் சுண்டெலியும்.

---

ஒரு சுண்டெலி வனத்தில் உலாவித் திரிந்தபொழுது, மர த்து நிழலிலே படுத்துத் தூங்கின ஒரு சிங்கத்தின் காலில் தற்செயலாய் இடறி விழுந்தது. உடனே சிங்கம் விழித்து க்கொண்டு, அதிக மூர்க்கத்துடனே, "அடா, அற்பப் பய லே, நீ என்னை யாரென்று எண்ணிக்கொண்டாய்," என்பதா கச்சொல்லி, அதைத் தன காலால் நசுக்கிக் கொல்லும்படி பார்த்தது. அப்பொழுது அதற்கு அஞ்சி ஒடுங்கிக்கிடந்த அந்தத் சுண்டெலி சிங்கத்தைப்பார்த்து, "ஐயா மிருகராஜ னே, அற்பப் பிராணியாகிய என் உயிரை வாங்குவது தங்க ளுக்கு ஏற்குமா !" என்றது.

சிங்கம் சுண்டெலி பட்ட துயரத்தைக் கண்டு பரிதபித்து அதற்கு ஊறுபாடு செய்யாமல் விட்டது. அப்பொழுது அந்த நன்றியுள்ள சுண்டெலி "ஐய மிருகேந்திரா, நீர் எனக்குச் செய்த இந்தப் பெரிய நன்மை நான் ஒருபொழுதும் மறக்கத்தக்கதன்று; நான் இதற்காக உமக்குப் பதில் உபகாரம் செய்யக் காத்திருப்பேன்" என்றது.

அது கேட்டுச் சிங்கம் நகைத்து, "ஆ ஆ, இந்தச் சொற்ப பிராணி நமக்குப் பிரதியுபகாரம் செய்யப்போகிறதாம். இது நல்ல வேடிக்கையான" என்றது. பின்பு சுண்டெலி தன் வளைக்குள் போயிற்று. சில நாள் சென்றதின்மேல், அது தன் வளைக்குள் இருக்கையில், மேகத்தின் முழக்கம்போல ஏதோ ஒரு சத்தம் கேட்டு, அது என்ன சத்தமென்று அறியும்படி வெளியே வந்து பார்த்தபொழுது, தன் சீவனைக் காத்த சிங்கமானது வேடர் விரித்த வலையிற் சிக்கிக்கொண்டு அதிக அவஸ்தைப்படுகிறதைக் கண்டது, உடனே அது ஓடிப்போய் வலைக்கயிறனைத்தும் தன் பற்களால் கடித்துச் சிங்கத்தை விடுவித்தது. அப்பொழுது சிங்கம், "என் பிராணநேசனே, உன் அருமையும் பெருமையும் இன்றுதான் அறிந்துகொண்டேன். விருப்பமுண்டானால் பலட்சயமானவர்களும் பலவான்களுக்கு உதவிசெய்யலாகும்" என்றது.

## ௪௯-வது ஆட்டுக்குட்டியின் கதை.

### ௧-ம். பிரிவு.

ஒரு இடையனுக்கு அநேக ஆடுகளும் குட்டிகளும் இருந்தன. அவன் அவைகளை நல்ல புல்லுள்ள இடத்தில் மேயவிட்டுத் தண்ணீர் காட்டிப் பத்திரமாகப் பராமரித்துவந்தான். அவைகளுக்கு வியாதிவந்தால், அவைகளைத் தன் கண்ணைப்போல் அருமையாக எண்ணிக் காப்பாற்றுவான்.

ஆடுகள் மேய்ச்சலுக்காக உயர்ந்த மலையின்மேல் ஏறிப் போ
கும்பொழுது, சோர்ந்துபோகும் குட்டிகளை அந்த இடையன்
தூக்கித் தோள்மேல் சுமந்துகொண்டுபோய் விடுவான். அவை
கள் மைதானத்தில் மேய்ந்துகொண்டிருக்கும்போது, அவன்
ஒரு கவைமரத்தில் உட்கார்ந்து, புல்லாங்குழல் ஊதுவான்.
ஆடுகளும், குட்டிகளும் அதின் இனிமையான ஓசையைக்
கேட்டுச் சந்தோஷிக்கும். அவைகளுக்கு ஒரு குறையும்
இராது.

இராத்திரிகாலம் அவன் அவைகளை வயல் வெளியில் ஒரு
பட்டிக்குள் அடைப்பான். ஆட்டுப்பட்டியாவது ஒரு துண்டு
நிலத்தைச் சுற்றி நாலு பக்கத்திலும் படல்களால் அடைக்கின்ற
அடைப்பாம். கொடிகளையும், மரங்களின் சிறு கிளைகளையும்
நெருக்கமாய் வைத்து ஒன்றோடொன்று இடை வெளியில்லா
மல் பின்னப்பட்டவை படலாம். தினமும் சூரியன் அஸ்த
மித்து இருளும் பனியும் உண்டாகிறபொழுது, இடையன் பட்
டியின் வாசலில் நின்று ஆடுகளையும் குட்டிகளையும் அதற்கு
ள்ளே போகவிட்டு, பின்பு படலைக்கொண்டு அடைப்பான்.
இராத்திரி முழுவதும் அவைகள் ஒன்றோடொன்று நெருங்கிப்
படுத்துக்கொள்ளும். நாய்கள் பட்டிக்கு வெளி
யில் படுத்திருந்து, ஏதும் வருவதைக் கண்டால், எழுந்து குலைக்
கும். காலையில் இடையன் படலைத் திறந்து, ஆடுகளையும் குட்
டிகளையும் மேய்ச்சல் நிலத்துக்கு ஓட்டிக்கொண்டு போவான்.
அந்தக் குட்டிகளில் ஒன்று தவிர, மற்றெல்லாம் தங்கள் உப
காரியாகிய இடையனைச் சார்ந்து நடந்து சந்தோஷமாயிருந்
தன. ஒரு குட்டிமாத்திரம் சற்றே புத்தியீனமுள்ளதாயிருந்
தது. இராத்திரிகாலந்தோறும் பட்டிக்குள் அடைக்கப்பட்
டிருப்பது அதற்கு மிகவும் வெறுப்பாயிருந்தது.

---

# ௫0 - வது. ஆட்டுக்குட்டியின் கதை.

---

## இரண்டாம் பிரிவு.

ஒரு நாள் அந்த ஆட்டுக்குட்டி, வயசிலும் புத்தியிலும் மூதிர்ந்த தன் தாயினிடத்திற்குப் போய், "அம்மா, இந்த நாயைப் பட்டிக்கு வெளியில் உலாவித் திரியவிட்டு, நம்மை ஏன் இப்படி அடைத்து வருத்தப்படுத்துகிறார்கள்? இது எனக்குப் பெரிய சங்கடம். கூடுமானால் நான் சமயம்பார்த்து வெளியே போய்விடுவேன். அங்கங்கே இஷ்டமான இடங்களுக்குப் போய், அடுத்த காட்டிலே நிலவு வெளிச்சத்தில் உலாவித்திரிவது எத்தனை இன்பமாய் இருக்கும்" என்றது. இந்தப்படி அந்தக் குட்டிசொன்ன புத்தியற்ற பேச்சுகளைத் தாயாடு கேட்டு, விசனப்பட்டு, "பைத்தியகாரப்பிள்ளாய், இந்தக் கெடுபுத்தி உனக்குப் போதித்தவர் யார்? நமது இடையன் நமக்கு எண்ணிறந்த நன்மைகளைச் செய்திருக்கிறான்: ஆதலால், அவன் சொல்வது ஒன்றையும் தட்டாமல், அவன் சொற்படி நடப்பதே நமது கடமை. நீ உன்னிஷ்டப்பிரகாரம் உலாவித் திரிவாயானால், அபாயம் நேரிடும்" என்றது. அது கேட்டுக் குட்டியானது, "அப்படியல்ல; ஒரு பொழுதும் எனக்கு அபாயம் வராது" என்றது. அன்று சாயங்காலத்தில் இடையன் ஆடுகளை ஓட்டிவந்து பட்டிக்குள் அடைத்தான். அந்தக் குட்டியோ பட்டிக்குள் வராமல் ஒரு வேலிக்குள் ஒளித்துப் பதுங்கிக் கிடந்தது. பட்டிக்குள் போன ஆடுகளும் குட்டிகளும் இராத்திரியில் படுத்து உறங்கிக்கொண்டிருந்தபொழுது, அந்தப் புத்திகெட்ட ஆட்டுக்குட்டி ஒன்றுமாத்திரம் வெளியில் எங்கும் துள்ளிப் பாய்ந்து விளையாடி மரங்கள் அடர்ந்த வனத்தில் போயிற்று. அப்பொழுது ஒரு ஓநாய் மிகுந்த மூர்க்கத்

தாடன் ஊளையிடுகிற சத்தத்தை அந்த ஆட்டுக்குட்டி கேட்டுக் கலங்கி, "ஐயோ ! நான் பட்டிக்குள் அடைக்கப்பட்டிருப்பே னுகில், இந்த அபாயம் நேரிடாதே. ஓடிப்போகத் துணிந்தால், பட்டியோ தூரமாயிருக்கின்றது : இதற்கு என்ன உபாயம் செய்யலாம் சுவாமி" என்று ஏங்கிக்கொண் டிருக்கையில், அந்த ஓநாய் அதைக் கண்டு, அதின்மேல் பாய்ந்து அதை இழு த்துக் கொண்டுபோய்த் தன் புதரில் சேர்த்தது. அந்தப் புத ரில் தோலும் எலும்புகளும் நிறைந்திருந்தன. பின்பு ஓநாயா னது அங்கிருந்த தன் இரண்டு குட்டிகளைப்பார்த்து, "என் கண்மணிகளே, இங்கே வந்து பாருங்கள் ; எனக்கு முத்தந் தாருங்கள் ! ஒரு கொழுப்பான சிறு ஆட்டுக்குட்டியை உங்க ளுக்கு இரையாகக் கொண்டுவந்தேன், இதைத் தின்று கொ ண்டாடுங்கள் " என்றது. உடனே ஓநாயின் குட்டிகள் அந்த ஆட்டுக்குட்டியைப் பிடித்துக் கடித்துச் சின்னபின்னமாய்க் கிழித்துப் பட்சித்தன.

---

## ருக-வது. தீயோர் இயல்பு.

---

### முதல் பிரிவு.

பெருந்தீப் பற்றின புதரிலே இருந்த ஒரு பாம்பு தனக்கு மரா ணம் வருமென்று பயந்து, தப்பித்துக்கொள்ள எத்தனப்பட் டது. அந்தப் புதரைச்சூழத் தீப்பற்றியிருந்தபடியால், அது தப்புவதற்கு வழியில்லை. அத்தருணத்தில் அது வழிப்போக் கன் ஆகிய ஒரு வர்த்தகன் தனக்கு நேராக வருவதைக் கண்டு, "ஓ, சினேகா, நீ என் பிராணனைக் காப்பாற்றவேண்டும்" என்றது. அதற்கு அவன் "நீ விஷமுள்ள செந்து, உனக்கு நன்மைசெய்தால் பின்பு நீ எனக்குத் தீமைசெய்வாயென்று அஞ்சுகிறேன் " என்றான். அதற்கு அந்தப் பாம்பு, "பயப்ப டாதே, என் பிராணனைக் காப்பாற்றின் உன் பிராணனை வாங்

குவேனென்று நீ நினைக்கலாமா" என்றது. வர்த்தகன் உப
காரம்செய்வதனால் ஒருவனும் கெட்டுப்போகமாட்டான்; அவ
னைக் கடவுள் சந்தேகமில்லாமல் காப்பாற்றுவாரென்று யோ
சித்து, தன் பையின் இரு பக்கத்திலும் ஒரு கயிறு கட்டி, அதை
ஒருகோலின் நுனியிலே பூட்டி, புதருக்குள் விட்டான். பாம்பு
பைக்குள் புகுந்தது. அதை எடுத்து வெளியே விட்டான்.
கொடுமையும் தந்திரமுமுள்ள அந்தப் பாம்பு இவ்விதமாக
விடுதலையானபின்பு, சமயம் கண்டு, தன் உபகாரியாகிய அந்த
வர்த்தகனைக் கடிக்கப்போயிற்று. அதைக்குறித்து அவன் ஆச்ச
ரியப்பட்டு "நீ ஏன் இப்படி அநீதஞ்செய்யவருகிறாய்" என்
றான். பாம்பானது "நீ எனக்கு உதவிசெய்தால் என்ன?
நான் உன்னைக் கடிக்காமல் விடுகிறது நியாயமா! உபகாரி
களைக் கொல்லுதல் எங்கள் வழக்கம்; மனுஷன் எங்களுக்கும்
மற்ற எல்லா மிருகங்களுக்கும் சத்துரு; இதைக்குறித்து நீ சந்
தேகிப்பாயாகில், யாரிடத்திலாவது விசாரணைசெய்துகொ
ள்" என்றது.

அத்தருணத்தில் புலத்தில் மேய்ந்துகொண்டிருந்த ஒரு ஆட்
டைக் கண்டு, அவனும் பாம்பும் அதனிடத்திற்குப் போய், அத
னோடு இந்த வர்த்தமானங்களை அவன் சொல்லுமுன்னதாகப்
பாம்பு "இந்த மனுஷன் எனக்கு உபகாரி, இவனை நான் கொ
ல்லலாமோ, கொல்லலாகாதோ" என்று கேட்டது. ஆடா
னது "இக்கணமே கொல், மனிதருடைய நடக்கையை நான்
நன்றாய் அறிந்திருக்கிறேன். அதைக்குறித்து உனக்குக் கொஞ்
சம் சொல்லுவேன். என் மயிரினால் நெய்யப்பட்ட கம்பளத்
தைத் தரித்தும், அதின்மேல் உட்கார்ந்தும் இருப்பார்கள்.
இதை நினையாமல், அவர்கள் என் குட்டியைக் கொன்று
தின்று, என்மனதைவருத்தப்படுத்துகிறார்கள். இதினிமித்தம்
நான் மிகவும் வருந்துவதுமல்லாமல், என்னையும் ஒரு நாள்

கொல்லுவார்களென்றும் பயப்படுகிறேன்; ஆதலால், இப்படிப் பட்ட சாதியைக் கொல்வதினால் குற்றம் ஒன்றும் இல்லை" என்று உத்தரம் சொல்லிற்று.

வர்த்தகன் அது கேட்டு, "ஒருவன் சாட்சி போதாது; இரண்டு மூன்று பேர் இப்படிச் சொல்வார்களானால், நான் மரணத்துக்கு உடன்படுவேன்" என்றான்.

## ௫௨-வது தீயோர் இயல்பு

### இரண்டாம் பிரிவு.

பின்பு பாம்பும் வர்த்தகனும் ஒரு கிழப்பசுவைக் கண்டு, நடந்த சங்கதிகளை அதற்குச் சொல்ல, அந்தப் பசு "மனுஷனுடைய நடக்கை எனக்கு நன்றாகத் தெரியும். நான் சொல்லுவதைக் கேள். வருஷந்தோறும் ஒவ்வொரு கன்று ஈன்று கொடுக்கிறேன். காட்டில் முளைத்த புல்லை மேய்ந்து நாள் தோறும் பால் கொடுக்கிறேன். மனுஷன் அதைக்கொண்டு தயிர், மோர், வெண்ணெய் முதலிய பல வித உருசியான உணவைச் செய்துகொள்ளுகிறான். அவனுக்கு அநேக வருஷங்களாய் உபகாரம் செய்துகொண்டு வந்தும், இப்போது நான் கிழமானதைக் கண்டு அடிக்கிறவனுக்கு என்னை விற்றுப்போட்டான். அவன் என்னை நாளைக்குக் கொல்வான். இப்படி மனுஷன் துஷ்டனாய் இருக்கிறபடியால், இவனை இப்போதே கொல்" என்றது.

வர்த்தகன் இந்த வார்த்தைகளைக் கேட்டு, தனக்குப் பிராணச்சேதம் நேரிடுகிறதென்று கண்டு பயந்து அழுதான். அப்போது அங்கே இருந்த ஒரு நரி அவனை "ஐயா, என் விசனப்படுகிறாய்" என்று கேட்டது. வர்த்தகன் ஒன்றும் பேசவில்லை. பாம்பு நரியைப் பார்த்து "இவன் சரித்திரத்தைக்

கேள், இந்த மனுஷன் உண்மையாகவே ஒரு பெருந்தீயி
லிருந்து என்னை இரட்சித்தான், அதனால் என்ன? எங்கள்
உபகாரியைக் கெடுப்பது எங்களுக்கு வழக்கந்தானே ; இப்
போது இவனைக் கடிக்கப்போகிறேன். ஆடும், பசுவும் சொ
ல்லிய தீர்ப்பும் இதுதான்" என்றது. நரி "நான் இதற்கு
மிகவும் ஆச்சரியப்படுகிறேன். இவன் உன்னைத் தீயிலிருந்து
எப்படி இரட்சித்தான்? அதைச் சொல்லும்படியாகப் பிரா
ர்த்திக்கிறேன்" என்றது. பாம்பு, "இவன் தன் பையை
ஒரு கொம்பின் நுனியிலே இழுத்துக்கட்டிப் புதருக்குள்
விட்டான். நான் அதற்குள்ளே நுழைந்துகொண்டபின்பு,
என்னை வெளியில் எடுத்துவிட்டான். அந்தப் பை இவன்
தோளின்மேல் இருக்கின்றது, பார்" என்றது. நரியானது
"உன்னுடைய பெரிய உடல் இவ்வளவு சிறு பைக்குள்
நுழைந்திராது. அதைக் கண்ணினால் கண்டாலொழிய, நான்
நம்பமாட்டேன்" என்றது. அப்பொழுது பாம்பு வர்த்தகனை
நோக்கிப் பையை விரிக்கச்சொல்லி, மறுபடியும் அதற்குள்
ளே நுழைந்தது. நரி அந்தப் பையின் வாயை மிகவும் பத்
திரமாய் இழுத்துக் கட்டும்படி வர்த்தனுக்குக் கண்ணினால்
சமிக்கைபண்ணிற்று. அவன் அப்படிச் செய்தவுடனே, கொ
ம்பினால் அதன் தலையை நசுக்கும்படி சொல்லிற்று. வர்த்
தகன் நரிசொல்லிய உபாயத்தினாலே பாம்பைக் கொன்று
தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டான். நன்றி மறந்து,
உபகாரியைக் கெடுக்கிறவன் வாழ்வு அடையான்.

## ௫௩-வது காலம்.

---

### முதல் பிரிவு.

ஆகாயத்தில் அங்கங்கே சூரியன் நிற்கிற நிலையினால் பக
ற்காலத்தின் நாழிகை பகுத்தறியப்படும். சூரியன் உதிக்

கும் காலம் காலை என்னப்படும். அது உயர்வாய் நமது உச்சிக்கு நேரோ ஆகாயத்தின் மத்தியில் நிற்கும் காலம் உருமம், அல்லது மத்தியானமாம். அது மேற்குத்திசையில் அஸ்தமிக்கும் காலம் மாலையாம். சூரியன் அஸ்தமித்தபின் சற்று நேரமட்டும் மாலைவெளிச்சம் தோன்றும். மாலைவெளிச்சம் நீங்க, இருள் அதிகரிக்கும் காலம் இராத்திரி என்னப்படும். இராத்திரியில் நக்ஷத்திரங்கள் ஆகாயத்தில் எங்கும் தோன்றிப் பிரகாசிக்கும். பகலும் இரவும் சேர்ந்து ஒரு தினம், அல்லது நாள்.

மனுஷர் பகலும் இரவும் ஆகிய தினத்தை நொடி, நிமிஷம், நாழிகை முதலியவைகளாகப் பகுத்திருக்கிறார்கள். கண்ணிமைப்பொழுதாகிய காலநுட்பம் நொடி என்னப்படும். ௬0-நொடி ஒரு நிமிஷம்; ௨௪-நிமிஷம் ஒரு நாழிகை.; ௨௰-நாழிகை ஒரு மணி நேரம்; ௨௪-மணி நேரம் பகலும் இரவுமாகிய ஒரு நாள். பகலில் பன்னிரண்டு மணி நேரம் மத்தியானம்; இரவில பன்னிரண்டு மணி நேரம் அர்த்தராத்திரி; அல்லது நடுராத்திரி.

மனுஷர் காலத்தின் வரையறையை அறிவதற்கு யுக்தியினால் பலவித உபாயங்களைச் செய்துவருகிறார்கள்.

௧-வது. சிலர் சூரியனுக்கு நேராகத் தலைநிமிர நின்று, தங்கள் சரீரச் சாயையைக் காலின் அடிகளால் அளந்து, இத்தனை அடி இருக்கிறதனால் பகலில் இவ்வளவு நேரம் ஆயிற்றென்று தெரிந்துகொள்ளுவார்கள்.

௨-வது. சூரியன் பிரகாசிக்கும்பொழுது தங்கள் முன்கையை நிமிர்த்தி, நான்கு விரல்களைக் குறுக்காகப் படுத்த பாவனையாய் நீட்டி, பவித்திரவிரலை இரண்டாம் வரை தொடங்கி மேல்நோக்கும்படி நிறுத்தி, அவ்விரல் நிழல் பக்கவிரல் வரைகளில் எதன்மேல் பாய்கின்றதென்று கண்டு, இத்தனை நாழிகை ஆயிற்றென்று அறிந்துகொள்வதும் உண்டு.

௩-வது. பூகோள ககோளசாஸ்திர விதிப்படி சூரியகடிகாரம் உண்டாக்கி, அதை ஒரு பீடத்தில் ஏற்றுவித்து, அதன் மத்தியில் சாய்வாகப் பதிக்கப்பட்டிருக்கும் அச்சத்தகட்டின் நிழல் கம்பிப்பால் விழும் வரைகளைப் பார்த்து, இத்தனை நாழிகை ஆயிற்றென்று குறித்துக்கொள்ளும் வகை சாதாரணமாய் வழங்கிவருகின்றது.

௪-வது. மண்தோண்டியில் ஒரு சிறு துவாரம் செய்து, அதைத் தண்ணீரிலே விட்டு, அந்தத் துவாரத்தின் வழியாய்த் தண்ணீர் புகுந்து தோண்டி நிரம்பி அமிழ்ந்தினால், இத்தனை நாழிகை ஆயிற்றென்று பகல் இரவு இரண்டிலும் நிச்சயித்துக்கொள்ளலாம்.

௫-வது. உடுக்கைபோல வடிவுள்ளதும், இடையில் நுண்மணல் புகும்படியான சிறு துவாரமுள்ளதும், மேலும் கீழும் அகன்றதுமாகிய ஒரு கண்ணாடிப்பாத்திரம் மணியறி கருவியாக வழங்கிவருகின்றது. மேற்பாதியிலிருந்து கீழ்ப்பாதியில் ஒரு மணி நேரத்தில் விழத்தக்க மணலை மேற்பாதியில் போட்டுவைப்பார்கள். அது முழுமையும் விழுந்தால், ஒரு மணிநேரம், ஆயிற்றென்று அறிந்து, கீழ்ப்பாதி மேலும், மேற்பாதி கீழுமாயிருக்கும்படி திருப்பிவைப்பார்கள். இவ்வாறு மணிதோறும் பாத்திரத்தைத் திருப்பித் திருப்பிவைத்து, இத்தனை மணி நேரமென்று அறிந்துகொள்வார்கள். திருப்புவதற்குச் சற்றுவது தாமதித்தால், காலக்கணக்குப் பிசகிப்போம். இதுவும் இரவிலும் பகலிலும் உபயோகிக்கலாகும்.

---

## ௫௪-வது காலம்.

---

### இரண்டாம் பிரிவு.

மேற்சொல்லிய மணியறி கருவி உபயோகமுள்ளதாயிருக்கும், சென்றது இத்தனை மணி, செல்லுகின்றது இத்த

லை மணியென்று அதைக் கொண்டு நிச்சயிப்பதற்கு ஏது வில்லை. காலவரையறைகளை நுட்பமாய்த் தெரிவிப்பதில் கடிகாரம் அதிக உபயோகமான கருவி. அதைப் பார்த்து, எந்த நேரத்திலும் இத்தனை மணி, நாழிகை, நிமிஷம், நொடி ஆகின்றன என்பதாகத் திட்டமாய் அறியலாகும். கடிகாரத்தில் விருத்தாகாரமான ஒரு வரி இருக்கின்றது. அது பன்னிரண்டு சமபாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவைகள் முறையே ஒன்று முதல் பன்னிரண்டு வரையில் எண்ணிடப்பட்டிருக்கின்றன. அதனுடன் ஒரே மையமுள்ளதான மற்றொரு பெரு விருத்தம் அந்த எண்களின் புறத்தில் இருக்கின்றது. அது பன்னிரண்டு சமபாகங்களாகவும், ஒவ்வொருபாகம் ஐந்து சிறு பாகங்களாகவும் பிரிக்கப்படும். உள் விருத்தத்தில் குறிக்கப்பட்டிருக்கின்ற இலக்கங்கள் மணியையும், புற விருத்தத்தில் குறிக்கப்பட்டிருக்கின்ற கோடுகள் நிமிஷத்தையும் காட்டும். உள் விருத்தத்தின் இலக்கங்களைத் தொடும்படியான ஒரு குறுங்கம்பியும், புற விருத்தத்தின் கோடுகளைத் தொடும்படியான ஒரு நெடுங்கம்பியும் சுற்றிவரத்தக்கதாக மையத்தில் யந்திர சக்கரத்தோடு அமைக்கப்பட்டிருக்கின்றன. குறுங்கம்பிக்கு மணிகாட்டி யென்றும், நெடுங்கம்பிக்கு நிமிஷங்காட்டி யென்றும் பெயர். மணிகாட்டி ஒரு இலக்கத்தினின்று மறு இலக்கத்தில் போவதற்குச் செல்லுகிற நேரம் ஒரு மணிநேரம். அந்த நேரத்திற்குள்ளாக நிமிஷங்காட்டி வட்டத்தை ஒரு முறை சுற்றிவரும். நிமிஷங்காட்டி ௧௨ - என்னும் இலக்கத்திற்கு நேரே நிற்கும் பொழுது, மணிகாட்டி ௪ - என்னும் இலக்கத்தைத் தொட்டால், அப்பொழுது நாலு மணி; ௫-என்னும் இலக்கத்தைத் தொட்டால், ஐந்துமணி. மணிகாட்டி ௪-க்கும், ௫-க்கும் மத்தியிலும், நிமிஷங்காட்டி ௬-க்கு நேராகவும் இருந்தால், அப்பொழுது நாலரைமணி. இம்முறையாகவே கம்பிகள் நிற்கின்றநிலைமைக்குத் தக்கதாகக் காலம் நிதானித்தறியப்படும்.

கடிகாரம் அவரவர் செய்யும் செய்கைகளுக்கு ஏற்ற காலத்தை அறிவதற்கு உபகரணமாயிருப்பதனால், அது மனிதருக்கு மிகவும் உபயோகமான கருவிதான். அப்போதப்போது செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாமல் வீண்பொழுது போக்குகிறவர்களுக்குக் கடிகாரம் என்னத்துக்கு? ஒன்றுக்கும் உதவாது.

காலம் மிகவும் அருமையாயிருக்கிறபடியால், அதை வீணில் கழிக்கலாகாது. தருமச்செய்கைகளை விட்டு, சோம்பலாய், அல்லது அஜாக்கிரதையாயிருப்பதும், கல்விகற்கவேண்டிய வேளையில் விளையாடுவதும் நேரத்தை வீணாய்க்கழிப்பதாம்.

பிள்ளைகள் பெற்றோரிடத்திலாவது, உபாத்தியாயரிடத்திலாவது உத்தரவுபெற்று விளையாடுகிற நேரம் வீண் நேரமல்ல, பிள்ளைகள் ஒருவரோடொருவர் சச்சரவுபடாமல் ஐக்கியமாய்ச் சேர்ந்து விளையாடுவார்களானால், விளையாட்டு அவர்கள் மனதிற்குச் சந்தோஷமும், சரீர சுகத்திற்கு அநுகூலமுமாகும்.

---

## ௫௫ - வது. நீராவிக்கப்பல் அக்கினி சேதம்.

---

### முதல் பிரிவு.

௮௫௮௵ செப்டெம்பர்மீ ௨௨ ஔஸ்திரியா என்னும் பெரிய நீராவிக்கப்பல ஐரோப்பா கண்டத்தைச் சேர்ந்த தென்மார்க்கு தேசத்தில் இருக்கிற அம்பூர்க் நகரத்தை விட்டுப் புறப்பட்டு, ௩ம் நாள் அது இங்கிலாந்திலுள்ள ஸௌதம்தன் துறை முகத்தில் நங்கூரம்போட்டு, பயணக்காரரை ஏற்றிக்கொண்டு அமெரிக்க தேசத்துக்குப் போகும்படி பிரயாணப்பட்டது. ஏறக்குறைய ௯௦௦ - பெயர் அதில் இருந்தார்கள். மேற்படி துறைமுகத்தில் நங்கூரம் தூக்

இனபொழுது, ஒருவன பிராணசேதம அடைநததலலாமல, உ-பேர அதிகமாயக காயமபடடாாகள. கபபல கடலுககுப புறபபடடபினபு, சிலநாளமடடும எதாககாறறு வீசிறறு ஆயினும கபபல நனருய ஓடி, செபதெமபாமீ ௧௮௳ அமெரிககதேசததின ராஜதானிககுப போயச சேருமெனறு யாவரும எணணஙகொணடாாகள. அவாகள எணணியது ஒனறு, முடிநதது ஒனறு.

செபடெமபாமீ ௧௩௳ பினனேரம உ-மணிககு இநதச சஙகதியைத தெரிவிததவா கபபலின பினனணியததின மேலதடடில நிறகையில, புகை முனனணியததடடில உளள வாசல ஒனறிலிருநது கொணடல கொணடலாய எழுமபக கணடாா. அநத க்ஷணமே சில பெண்கள அஙகிருநது அவருககு நேரே ஓடிவநது "கபபல நெருபபுபபறறியது, எனன செயவோம" எனறு அலறினாாகள. அபபொழுது நீராவியநதிரககாரா கபபலின ஓடடததைத தணியபபணணினாாகள. உடனே அககினிஜவாலைகள அநதாசதது துவாரஙகளின வழியாயப புறபபடடு மேலோஙகி எழுநதன. கபபலின பககம காறறுககு எதிராகுமபடி மாலுமி சுககானைத திருபபினான. பயணககாரா திரள திரளாய மேலததடடில ஏறிப பினனணியததில நெருஙகி நினறாாகள; சிலா கபபலின பககததில கடடபபடடிருநத படவுகளைக கடலில இறககினாாகள ஜனஙகள மஙமயஙகி துரிதமாயப படவுகளில இறஙகி அளவுககு மிஞச அவைகளில நெருஙகினதினால, படவுகள சாயநது கவிழநதன. அதறகுள கபபலின தலை காறறுககு எதிரே திருமபியிருநததினால, அககினி சுவாலிததுப பினனணியததிலும தாவியது. அபபொழுது ஜனஙகளுககுள உணடான மனோவேதனை ஒருவரும சொலல முடியாது. புருஷா தஙகள ஸதிரீகளைத தேடினாாகள. ஸதிரீகள புருஷரைத தேடினாாகள. தாயமார் பிளளைகள சுடடெரிககபபடடனவெனறு புலமபினாாகள.

அக்கினிசுவாலைக்குத் தப்ப அனேகர் கடலில் குதித்து மூழ்கி யிறந்தார்கள். இனத்தாராயிருந்தவர்கள் ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டு கடலிற் பாய்ந்தார்கள். சகோதரிகளாகிய இரண்டு இளம்பெண்கள் ஒருத்தியை ஒருத்தி விட்டுப்பிரியோ மென்று கட்டிக்கொண்டு கடலில் விழுந்து முத்தமிட்டபடி யே மூழ்கிப் பரகதியடைந்தார்கள். அப்படியே ஒரு குருவும் அவர் மனைவியும் ஆழியில் பாய்ந்தார்கள். கப்பலின் உக்கிரா ணகாரனும் உக்கிராணகாரியும் ஒருவரோடொருவர் சம்பந்தப் பட்டு விழுந்து அமிழ்ந்துபோனார்கள். பயணக்காரருக்குள் ஹங்காரிய தேசத்தாராகிய ஒரு துரை இருந்தார். அவரு டைய மனைவியும் ஏழு பிள்ளைகளும் கூட இருந்தார்கள். அவர் அக்கினிக்குத் தப்பக்கூடாதென்று கண்டு, தமது மனைவி யைக் கடலில் முன்னே குதிக்கச்சொல்லி, பிறகு தமது குமா ரத்திகள் ௬-பெயருக்கும், குமாரர் ௨-பெயருக்கும் ஆசீர்வா தஞ்செய்து அவர்களை ஒருவர்பின் ஒருவராய்க் கடலில் விழும் படி சொல்லி, தாமும் கடைசியில் தமது குழந்தை ஒன்றை மார்போடு அணைத்துக்கொண்டு கடலிலே பாய்ந்தார்.

மேற்சொல்லிய சங்கதிகளைத் தெரிவித்த துரை கப்பலுக் குப் புறம்பாகப் படவுதாங்கி ஒன்றைப் பிடித்தார். அதிலும் நெருப்புச்சுவாலை தாவியது. ஆதலால் அவர் தப்புவதற்கு வகை உண்டோவென்று சுற்றிப்பார்த்தார். பார்த்தபொ ழுது, கயிற்றினால் கட்டப்பட்ட ஒரு படவைக் கடலில் கண் டார். அந்தக் கயிற்றின் வழியாய் நழுவிப் படவில் பாய்ந்தே றினார். அப்பொழுது படவு கப்பலின் சக்கரத்தால் அகப்பட் டுக் கவிழ்ந்து அவரை மூடிக்கொண்டது. அவர் கடலில் ஆழ்ந் தும், மேலே நீந்திவந்து கவிழ்ந்தவேறொரு படவுக்குச் சமீ பத்தில் சென்று, அதின் ஓரத்தில் ஏறி, ஒரு அலைவந்து மோ திய உதவியால் அதை நிமிர்த்தினார். அச்சமயத்தில் கப்பல் சற்றுத் தூரமாய் ஓடியிருந்தது. அந்நேரத்தில் துரைமாரும்

துரைசானிகளும் ஒவ்வொருவராகவும், இவ்விருவராகவும் கட
லில் பாயக் கண்டார். சிலர் பாயப் பயந்து பின்னிட்டார்
கள். அவர்கள் வஸ்திரங்களில் நெருப்புப் பற்ற, அவர்கள்
அக்கினிச்சுவாலையால் சூழப்பட்டதினாலே, பதைபதைத்துக்
கடலில் விழுந்தார்கள். ௨-மணி நேரத்துக்குள் எல்லாரும்
பிராண சேதப்பட்டுப் போனார்கள்.

மேற்படி துரை தாம் ஏறின படவின் பக்கத்தில் இருந்த
௨-௬-துண்டுப் பலகையினாலே கப்பலுக்குப் பிணைக்கப் பட
வை விலத்துப்போய், மீந்திருந்த ஒரு ஜர்மானியனை ஏற்றிக்
கொண்டார். அந்தக்ஷணத்தே கடலில் சில தூரத்தில் ஒரு
கப்பல் ஓடிவரக் கண்டார். அந்தக் கப்பல் ௫-மணிக்கு எரி
கிற கப்பலுக்குச் சமீபித்தது. மேற்படி துரை ௭-மணிக்
கு அந்தக் கப்பலில் ஏறினார். அது பிரான்சிய கப்பல். அத
ன் பெயர் மொரீஸ். கப்பலிலிருந்து தப்பின ௨௬-பெயர்
௮-மணிக்குப் படவில் வந்தார்கள். ௯-மணி நேரம் தெப்
பமாய் அலையிலலைமல் கடலில் நீந்தினவனை ஒருவனைக் கப்ப
லில் ஏற்றினார்கள். ௯-பெண்கள் மாத்திரம் இரட்சிக்கப்ப
ட்டார்கள். மற்றவர்கள் அநேகமாய் நெருப்பினாலே தகிக்கப்ப
ட்டார்கள். ௯௦௦-பெயர்களில் இரட்சிக்கப்பட்டவர்களின்
தொகை ௯௫.

---

## ௫௯-வது நீராவிக்கப்பல் அக்கினி சேதம்.

---

### இரண்டாம் பிரிவு.

மேற்படி கப்பல் நெருப்புப்பற்றிய விதம் என்னவெனில்,
கப்பலில் இருந்த பயணக்காரர்களுக்கு விஷக்காற்று, மோட்
டுப்பூச்சி முதலானவைகளினால் உபத்திரவம் இராதபடிக்கு,
ஒருவன் கொஞ்சம் மர எண்ணெய் எடுத்துப் புகை உண்டா
கும்படி அதிலே ஒரு சங்கிலியை இளஞ்சூடுண்டாகக் காய்

ச்சித் தோய்த்துப்போட்டான். அதினால் கப்பலில் அவ்வெ ண்ணெய் பற்றிக்கொள்ளக் கப்பல் எரிந்தது. பற்றினவுட னே மேற்சொல்லிய பிரகாரம் சுவாலை மேல் கீழ் எங்கும் தாவியது. கப்பலிலுள்ள யாவரையும் ஏற்றிக்கொண்டு போ வதற்குச் சிறு படவுகள் கப்பலின் பக்கத்தில் கட்டப்பட்டி ருந்தன. ஜனங்கள் பயத்தினால் மதிமயங்காமல் திடசித்த த்தோடே தப்புவதற்கு வகை பார்த்தார்களானால் எளிதில் பிழைக்கலாம். முதலாவது எண்ணெயினால் புகையுண்டாக்க த்துணிந்தது மிகவும் புத்தியீனம். உ-வது கப்பலின் உத்தி யோகஸ்தா ஜனங்களைச் சாந்தப்படுத்தாமலும், இருந்த சிறு படவுகளைத் திடமனதோடே சாவதானமாய்க் கடலில் விடா மலுமிருந்தது அபூர்வந்தான். காரியம் பார்க்குமிடத்தில் அந் தந்தத் தேசத்துக் கப்பற்காரர் மன உறுதியில் ஒருவர்க் கொருவர் அதிக பேதப்பட்டிருக்கிறார்கள். இதற்குத் திரு ஷ்டாந்தம்,—

ஙூ-அ-வருஷத்துக்குமுன் ஆபிரிக்கா தேசத்தைச் சேர்ந்த தென்முனை நாட்டுக்கு இராணுவசேவகரை ஏற்றிக்கொண்டு போகும்படி சீமையிலிருந்து புறப்பட்ட ஒரு நீராவிககப்பல், வழியில் கடலில் மறைந்திருந்த ஒரு கன்மலையில் தாக்கியதி னால், அதி சீக்கிரத்தில் சமுத்திரத்தில் மூழ்க ஏது உண்டா யிற்று. அந்தக் கப்பலில் எத்தனையோ அநேக நூறு பேர் இராணுவ சேவகரும், அவர்கள் மனைவிமார்களும், பிள்ளை குட்டிகளும் இருந்தார்கள். எல்லாருந்தப்பப் படவு போ தாது. ஆதலால் பெரும்பான்மையோர் நிச்சயமாய்ப் பிரா ணசேதமடைய நேர்ந்தது. அதைக் கண்டு கப்பல் தலைவ ரும், தளகர்த்தர்களும் ஆண்பிள்ளைகள் யாவரையும் கப்ப லின் மேல்தட்டில் அணிவகுத்து, சிறு படவுகளைக் கடலில் விட்டு, பெண்பிள்ளைகளைக் கிரமமாக அலைகளில் ஏற்றினார் கள். ஏற்றினவுடனே கப்பல் அதிலுள்ள ஆண்பிள்ளைகள்

யாவரோடேனும் ஆழ்ந்தது. ஆழ்ந்தபொழுது இராணுவசேவகர் அவரவரிடங்களில் அசையாமல் நின்று, படவுகளில் ஏறியிருந்தவர்களைத் தைரியப்படுத்தும்பொருட்டு, யுத்தகளத்தில் வெற்றி சிறந்தவர்களைப்போல் ஒருமித்து ஆரவாரித்துக் கடலில் மூழ்கி இறந்தார்கள். இதுவல்லவோ ஆண்மை. வேறொரு திருஷ்டாந்தம்.—

1826-ம் வருஷத்தில் இந்தியாவுக்கு வரும்படி கெந்து என்றும் ஒரு பெரிய கப்பல் சீமையிலிருந்து புறப்பட்டது. அதில் அநேகர் கப்பற்காரரும், இராணுவசேவகரும், துரைமார் துரைசானிகளும் இருந்தார்கள். புறப்பட்டு ௫-௬ நாளுக்குப் பின்பு ஏதோ ஒரு விதத்தால் கப்பலில் நெருப்புப் பற்றிற்று. பெருங்காற்று அடித்துக் கடல் கொந்தளித்ததினால், சிறு படவுகள் உதவாமற்போயின. தப்புகிறதற்குச் சில நேரம் வரைக்கும் ஒரு வகையும் தோன்றவில்லை. மேலுமேலும் பற்றிய நெருப்பு மரக்கலத்தில் சுவாலித்துத் தாவியது. மும்முரமான கடல் பயங்கரமான ஒரு கொடிய மிருகத்தைப்போல் அவதிப்பட்ட பிராணிகளை விழுங்கப் பார்த்தது. அந்தச் சமயத்தில் ஒரு சிறு கப்பல் ஏதோ ஒரு விக்கினத்தால் வழி விலகி ஓட, அதிலுள்ளவர்களுக்கு நெருப்புப்பற்றி எரிகிற கப்பல் தோன்றியது. உடனே அவர்கள் எரிகிற கப்பலுக்கு நேரே போய்ப் பேசக் கிட்டினார்கள். பெரிய கப்பல் அக்கினி சுவாலையில் மூழ்கியிருந்தபடியினாலும், கடல் ஆச்சரியமாய்க் கொந்தளித்ததினாலும், கயிற்றைக் கட்டப் பயந்தார்கள். ஆகலால் சிறு கப்பற்காரர் மகா சாமர்த்தியத்தோடே பெரிய கப்பலின் பின்னணியத்துக்குச் சமீபமாய்த் தங்கள் கப்பலை ஓட்டிச்செல்ல, எரிகிற கப்பலில் இருந்தவர்கள் சமயங்கண்டு உபாயமாகச் சிறு கப்பலில் குதித்தார்கள். இவ்விதமாக அந்தச் சிறு கப்பல் அடுத்தடுத்துச்

சுற்றிவந்து சமீபிக்க, எரிகிற கப்பலில் இருந்தவர்கள் யாவரும் உபாயமாய்க் குதித்துத் தப்பினார்கள்.

அப்பொழுது அக்கினிசேதத்தினால் அபாயம் நேரிடுவதைக் கண்டு, பெரிய கப்பலின் கப்பித்தான் முதலான உத்தியோகஸ்தரும், ராணுவசேவகர், தளகர்த்தர்களும் மதிமயக்கத்தினால் மோசம் வராதபடி, யுத்தகளத்தில் செய்வதுபோலக் கப்பலிலுள்ள யாவரையும் அணிவகுத்தார்கள். கஙகளை இரட்சிக்கும்படி சிறு கப்பலில் ஏறும் வகை என்னவென்று ஒருவன் கேட்க, ஒரு தளகர்த்தர் சிறுவர் முதலானவர்கள் வயதின் கிரமப்படி தப்பிப் போகவேண்டுமென்று விதித்தார். எல்லாரும் அந்தச் சிறு கப்பலில் ஏறித் தப்பினார்கள். அதில் அவர்கள் திரும்பிச் சீமைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். சேர்ந்தபொழுது அன்ன பதார்த்தம் அதிக குறைவாயிருந்தது. ஜலமோ நாலுபடிமாத்திரம் மீந்திருந்தது. அவர்கள் கரையேறின மறுநாட்காலமே காற்று மாறிற்று. ஆதலால் அவர்கள் பின்னும் ஒரு நாள் தாமதமாய்ச் சேராமலிருந்தார்களானால், பட்சிக்கும் அக்கினிக்குத் தப்பினவர்கள் எதிர்க் காற்றினிமித்தம் பசிதாகத்தினால் மாண்டுபோகவுங்கூடும். இப்படி இருவிதத்திலும் அவர்கள் தேவச்செயலினால் சடிதி மரணத்தறகுத் தப்பினார்கள்.

## ௫௭-வது உதாரகுணம்.

(ருஷசக்கரவர்த்தியும், பயிர்க்குடியும்)

### முதல் பிரிவு.

16-வது சதாப்தத்தின் நடுவில் ருஷதேசத்தில் அரசாண்ட இவான் என்னும் சக்கரவர்த்தியானவர் தமது ஆளுகையின் நயபயத்தைக் குறித்துப் பிரஜைகளுக்கு உள்ள அபி

பயிராயம் ஏதென்று நிச்சயிக்கக் கருதி, இடைக்கிடை யா
சகனைப்போல வேஷமாறி அங்கங்கே உலாவித் திரிவது
ண்டு. இப்படித் திரியும் நாளில் ஒருநாள் ராஜதானி (மொ
ஸ்கோ) க்குச் சமீபத்தில் இருக்கும் ஒரு கிராமத்திலசென்று,
பசிக்களையினால் மெலிந்தவர்போலப் பாவனைகாட்டி, பசி ஆறு
மபடி யாகாரமும் போஜன பதார்த்தமும் தரவேண்டுமென்று
ஒவ்வொருவராய் எதிர்ப்பட்ட பிரஜைகள் எல்லாரிடத்திலும்
கேட்டார். அவர் உடுத்தியிருந்த துணியையும், அவருடைய
அலங்கோலமான ஸ்திதியையும் கண்டு, எவர்களும் அவர்
முகத்தைப்பாராமலும், அவர்சொல்லைக் கேளாமலும், அவரை
உபேக்ஷித்தார்கள். இவ்வாறு அவர்கள் உணர்ச்சியற்ற மிரு
கங்களைப்போலத் தமது பரிதாபத்தைப் பாராமல் தம்மைப்
புறக்கணித்ததனால், அவருக்கு மிகுந்த விசனமும் வெறுப்பும்
உண்டாக, அவர் இந்தக்கிராமத்தில் ஏழைகளுக்கு உதவும்
இனியகுணமுடையவர் ஒருவரிடத்திலும் இல்லையென்று ராஜதானிக்குத்
திரும்புவதற்கு ஒன்றொரு அடியெடுத்துவைத்துப் போகை
யில், தமக்கு எதிரே ஒரு குடிசை இருக்கக் கண்டு, இங்கிருக்
கும் புண்ணியவானாவது நமது இளைப்பை ஆற்றுவனோவென்று
மட்டுக் கடந்து கிட்டப்போய், கதவைத் தட்டினார். உள்ளிரு
ந்த பயிர்க்குடியானவன் உடனே திறந்து, "என்ன வேண்டும்"
என்று கேட்டான். அதற்கு அவர் 'இரண்டு நாள் வரையில்
புசிப்பில்லாமல் பசிக்களையினால் களைக்கின்றது, தலை சுற்று
கிறக்கிறது, கால் தடுக்கின்றது இனி நடக்கச் சக்தி இல்லை.
என் பசியை ஆற்றி இளைப்பைத்தீர்த்தால் உனக்குப்புண்ணி
யம் கிடைக்கும்" என்றார் அப்பொழுது அந்தப் பயிர்க்குடி
அவருடைய பரிதாபத்தைக்கண்டு இரங்கி, "வாரும், உண்ணு
மபடி ருசிகரமான பதார்த்தம் இல்லை. சேகரிப்பதற்கு இது
சமயமல்ல. என் மனைவி அடுத்த அறைக்குள் படுத்திருந்து
பிரசவவேதனைப்படுகிருள். அவள் உபத்திரவம் சகிப்பதற்கு

ஆற்றுமல் ஓய்வற்று ஓலமிடுகிருள். பட்டினியாயிருப்பதாகத
விர, படுத்து அயர்ந்த நித்திரைசெய்து ஆறித் தேறிப்போவ
தும் அசாத்தியமாயிருக்கின்றது. எப்படியும் குளிருக்காவது
ஒதுங்கியிருக்கலாம். இந்தக் குடிசையில் இருந்து நாளகழிக்
கும் எங்களுக்குக் கிடைத்த போஜனத்தை மனப்பூர்வமாய்ப்
பகிர்ந்து கொடுக்கிறோம்," என்று அழைத்து, ஒரு சிறிய
அறைக்குள் கூட்டிக்கொண்டு போனான். அங்கே இரண்டு
பாலகர் ஒரு தொட்டிலிலும், மூன்று பருவமுள்ள ஒரு பெண்
பிள்ளை அதன் பக்கத்தில் வெறும் தரையில் விரித்த கம்பளி
யின் மீதும் படுத்து நித்திரைசெய்தார்கள். ஐந்து பருவமும்,
ஏழு பருவமும் உள்ள மற்றிரண்டு சிறுமியர்கள் முழந்தாட்
படியிட்டு, வயாவருத்தத்தால் வாய்விட்டலறும் தங்கள் அன்
பான தாய்க்குச் சகாயம் புரியும்படி தயாசமுத்திரமாகிய சர்
வேச்சுரனைநோக்கி, கண்ணீர் வெள்ளம் பெருக விம்மி அழுது
பிரார்த்தனைபண்ணினார்கள். பின்பு அந்தக் குடிசையாளியா
னவன் "இங்கே இரும், போஜனத்துக்கு ஏதாகிலும் வாங்கி
வருகிறேன்" என்று சக்கரவர்த்திக்குச் சொல்லி வெளிப்ப
ட்டு, கால் நாழிகை நேரமாகுமுன் கறுத்த ரொட்டி ஒன்றும்,
தேனும், சில சிறு முட்டைகளும் வாங்கிக்கொண்டு குடிசைக்
குள் நுழைந்து, "இதோ என் நிர்வாகசக்திக்கு ஏற்ற உணவு
சேகரித்துவந்தேன். என் பிள்ளைகளோடு புசித்து இளைப்பா
றும். மனைவிக்கு உதவிசெய்ய மற்ற அறைக்குப் போய்வருகி
றேன்" என்றான். உடனே சக்கரவர்த்தி ஆச்சரியமும் சந்து
ஷ்டியும் அடைந்தவராகி, அவனுக்கு அபிமுகமாய்த் திரும்பி
"இந்தக் குடும்பத்திற்குச் சிறந்த அணியாக விளங்கும் உனது
அதிசய உதாரகுணமானது ஒருகாலும் அவமாகாது. ஜீவ
காருண்ணியராகிய கடவுள் இந்த நற்செய்கைக்கு ஏற்ற பிரதி
யுபகாரம் அளிப்பார். நிறைசெல்வமும் நீங்காத பெரும்புக
ழும் பெற்றுச் சீமானாக வாழ்ந்திரு" என்று சொல்ல, அவன்

"இவ்வளவு தூரம் இதம் பேசுகின்ற இஷ்டரே, யாதனைப்படும் என் மனைவி இடையூறின்றிப் பிரசவித்து வருத்தம் தீரும்படி ஈச்சுரனைப் பிரார்த்தியும். அவள் இந்தக் கண்டத்திற்குத் தப்புவாளானால், எனக்கு ஒரு குறையும் இல்லை" என்றான். அதற்குச் சக்கரவர்த்தி, "இது நிவர்த்தியாகுமானால், உனக்கு க்லேசம் நீங்கி மனப்பாக்கியம் உண்டாகுமா" என்று கேட்க, அந்தக் கிருஷிகன், "மனப்பாக்கியம் உண்டாவதற்குத் தடை என்ன? நான் பெற்ற பேறு யார் பெற்றார்? யோசித்துப் பாரும். பொன்போலும் அழகான பிள்ளைகள் ஐந்து பெயர் இருக்க, கண் சண்மணிபோல என்னைக் காத்துப் பரிபாலிக்கும் பிராணநாயகி இருக்க, என்னைப் பெற்று வளர்த்து நிமிர்த்திப் பிழைக்க வழி காண்பித்த பெரியோராகிய என் தாய் தந்தையர் இன்னும் உயிரோடிருக்க, என் உழைப்பினால் உண்டாகும் ஊதியம் எங்கள் அனைவருக்கும் முட்டின்றி நாள் கழிக்கப் போந்ததாயிருக்க, இனி நான் இவ்வுலகத்தில் அபேக்ஷிக்கத் தகும் பேறு என்ன? இவைகளைத் தவிர எனக்கு மனப்பாக்கியம் தரும் ஏதுக்கள் எவை? என்றான். சக்கரவர்த்தி அதைக்கேட்டு, "சற்றுப்பொறு, உன் தாய் தந்தையர் உன்னுடன் வாசமாயிருக்கிறார்களா" என்ன, அவன் "ஆம். அடுத்த அறையில் என் மனைவியுடன் இருக்கிறார்கள்" என்று சொல்ல, அவர் "இந்தச் சிறுகுடிசையில் இத்தனை பெயர் இன்பமாய் வசித்துச் சுகிப்பதற்கு இடம் ஏது" என்று சற்றே வியப்புடன் கேட்க, பயிர்க்குடி "அடா, அப்பா, இந்த இடம் போதாதா? இன்னும் எட்டுப்பெயர் இருக்கலாமே" என்றான்.

அப்புறம் அந்த உதாரகுணசீலன் அடுத்த அறைக்குள் போனான். அடிக்குள்ளே அவன் மனைவி அபாயமின்றிப் பிரசவித்தாள். செந்தாமரைப் புஷ்பம்போலச் சிறந்த முகமும், கருநெய்தல்போலக் கறுத்த விழியும், விற்போல் வளைந்த புருவமும், குமிழமலர்போலக் கூரிய மூக்கும், பளிங்குபோலப்

பிரகாசமான கன்னமும், கமுகுபோலத் திரண்ட கழுத்தும், அச்சில் வார்த்ததுபோல அழகிய உருவமுமுள்ளதாக உற்பவித்த ஆண்குழந்தையைக் கண்டவுடன் அவளுக்கு உண்டான கவலை நீங்க, அவன் களிப்புற்றுக் குழந்தையை எடுத்து முத்தங் கொடுத்து, அரசனிடத்தில் கொண்டுபோய், "பாரும், என் மனைவி இன்றும் ஒரு புத்திரனைப் பெற்றாள். இதுவரையில் ஐந்து பிள்ளைகளையும் அணுவளவாயினும் அபாயமின்றிப் பரிபாலித்த அளவற்ற இரக்கமுள்ள கடவுள் இந்தப் பாலகனையும் நோயின்றிக் காத்தருள்வாராக" என்று ஆனந்த பரவசமுடையவனாய் உரைத்தான். குழந்தையைக் கண்டமாத்திரத்தில் சக்கரவர்த்தி களிப்புற்று, தன் கையில் வாங்கி "முகக்குறியைப் பார்க்குமிடத்தில், இவன் என் குலத்திற்குக் கீர்த்தியும் கௌரவமும் உண்டாக்குவிக்கும் சற்குணமுள்ள அற்புதக் குணச்செயங்களை அநேகத்துமுடையவனென்று தோன்றுகின்றது" என மொழிந்தார். அதுகேட்டு, தந்தை முகத்தில் புன்னகை தோன்ற, அவன் பிள்ளைகள் குழந்தைக்கு முத்தங் கொடுக்க ஆவலுடன் போக, வயதுசென்ற அவனுடைய தாய் அறைக்குள் போய், அரசனிடத்தில் அதை வாங்கிக்கொண்டு போனாள். பிள்ளைகளும் அவளைத் தொடர்ந்தார்கள். பின்பு அந்தக் குடிசைக்காரன் தரையில் வைக்கோல் பரவி, அதில் படுத்துறங்கும்படி அரசனை வரவழைத்து, தானும் படுத்து நொடிக்குள்ளே அயர்ந்து தூங்கினான். அலங்கார மண்டபத்திலே, நவரத்தினம் இழைத்த அற்புதமாய் நிர்மாணித்த கட்டிலிலே, புஷ்பத்திலும் அதிக மிருதுவான பட்டுறையிட்ட பஞ்சணை மெத்தையிலே தூங்கிச் சுகித்த சக்கரவர்த்திக்கு, பதிந்து ஒடுங்கிக் காற்று உலாவப் பலகணியின்றி இருக்கும் எளிய குடிசையிலே, முட்போலச் சரீரத்தில் குத்தி உறுத்தும் வைக்கோல் மெத்தையிலே எளிதில் தூக்கம் வருமா? அவர் உட்கார்ந்தபடி இருந்து, அந்தப்பிள்ளைகளும் தந்தையும் இலே

சமறறக தூங்குவதையும், சிறிதாயினும் சஞ்சடியின்றி மிகுந்த அமைதியுடனாயிருப்பதையும் கண்டு, "இந்த நிலைமைக்கு ஈடென்ன, இச்சிறு குடிசையில் இருப்பவர்களுக்கு ரம்மியம் வருவது அதிசயமா! இவர்களுக்கு மனக்குறை தருவதற்கு ஏதுவான திரவிய அபேட்சையாவது, அதிகாரப்பிரியமாவது, சந்தேகமாவது, பொறாமையாவது இல்லையே, ஒருவரையும் கெடுக்க நினைக்காமல், கடவுள் கொடுத்த சொற்ப சுகத்தைக் அதிகமாய் நினைத்து, சோம்பலைத் தவிர்த்து, பகல் முழுதும் வருந்தி உழைத்துப் பார்க்கும் இவர்களுக்கு வரும் நித்திரை எத்தனை இன்பம் தருவதாயிருக்கிறது," என்று தமக்குள்ளே நினைத்து, ருஷசக்ரவாத்தியானவர் இரவு முழுதும் உறக்கமின்றி, இத்தன்மையான விஷயங்களைச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

---

## ௫-அ-வது உதாரகுணம்.

(ருஷ சக்கரவாத்தியும் பயிர்க்குடியும்.)

---

### இரண்டாம் பிரிவு.

அந்தக் காலையில் குடிசைக்காரன் எழுந்தபின்பு, சக்கரவாத்தி அவனைப் பார்த்து "நான் மொஸ்கௌ நகரத்துக்குப் போய் வருகிறேன். அங்கே எனக்கு இஷ்டர் ஒருவர் உண்டு. அவர் பரோபகாரமுள்ளவர், நற்குணம் நற்செய்கைகளுமுடையவர். நீ எனக்குச் செய்த உதவி உபசாரங்களைக் குறித்து அவருக்குச் சொல்லி உன் குழந்தைக்கு ஞானத் தந்தை ஆகும்படி வருந்திக் கேட்டு, மூன்று மணி நேரம் கழியுமுன் அவரை அழைத்து வருவேன். நாங்கள் வருமுன் குழந்தைக்கு ஞானஸ்நானம் செய்விக்க வேண்டாம். இதற்கு என்ன உத்தரம் சொல்லுகிறாய்" என்று வினவ, அவன் 'அநியாசகைக மனப்பூர்வ

மாய ரூபமாயிருந்தும், தாக்ஷிணியமுள்ளவனாகையால் "ஆகட்டும், போய்வாரும்" என்று சொல்ல, சக்கரவர்த்தி உடனே செல்வுபெற்றுக் குடிசையை விட்டு நீங்கி ராஜதானிக்குச் சென்றார். மூன்று மணி நேரம் ஆகிறவரையில் அந்தக் குடியானவன் அவரை வழிபார்த்துக்கொண்டிருந்து வராததனால், தன் குடும்பத்தாருடன் குழந்தையைக் கோவிலுக்குக் கொண்டுபோக எத்தனப்பட்டான். அவர்கள் குடிசையினின்று புறப்பட்ட சமயத்தில், குதிரைகள் பூட்டிய ரதங்கள் அநேகம் ஓடிவரும் சத்தம் கேட்டது. இதேது! அவ்வேளையில் ரதம் ஏறிச் செல்பவர்கள் ஆர் என்று ஆச்சரியத்துடன் வெளிப்பட்டு, வீதியில் மெய்க்காப்பாளர் குதிரை மேல் ஏறி முன்செல்ல, ராஜரதங்கள் தொடர்ந்து வரக்கண்டு, "இதோ ராஜபரிவாரம் வருகிறது. வெளியே வந்து வேடிக்கை பாருங்கள்" என்று குடும்பத்தாரை அழைத்தான். கொடிகளுடனே மெய்க்காவலர் - பதாதிவீரர் - உத்தியோகஸ்தர் முதலானவர்கள் குடிசையைச் சூழ, சக்கரவர்த்தி ஏறிய ரதம் குடிசைவாயிலுக்கு எதிரே வந்து நின்றது.

அதிசயம் பார்க்கும்படி அந்தக் கிராமத்தார் எல்லாரும் போய் நெருங்கியதனால், மெய்க்காவலர் அவர்களைச் சற்றப்புறம் விலக்கி நிறுத்தியபின், ரதவாயில் திறக்கப்பட, சக்கரவர்த்தி இறங்கி, குடிசைக்காரனிடத்தில் சென்று "உன் குழந்தைக்கு ஞானத்தந்தை ஆகும்படி ஒருவரை அழைத்து வருவதாகச் சொல்லிப் போனேன். என் வாக்குப் பிரகாரம் வந்திருக்கிறேன். குழந்தையைக் கையில் கொடுத்து, கோவிலுக்கு என்னுடன் வாருங்கள்" என மொழிந்தார். அரசன் உரைத்த மொழிகள் அக்குடிசைவாசியுடைய செவியில் நுழையவும், அவன் பரவசப்பட்டுப் பிரதிமைபோல அசைவற்று நின்றான். அரசன் அணிந்த அலங்காரமான வஸ்திர

பூஷ்கணுதிகளையும், தன் குடிசைக்கு எதிரே திரண்டு கூடிய பிரபுக்கள் முதலான ராஜசபையாரையும் அவன் பார்த்தவேளையில், சென்ற ராத்திரி தன் குடிசையில் தங்கின அன்னியன் அவர்களுக்குள் நின்றதாக அவனுக்குத் தோன்றவில்லை.

உள்ளத்தில் ஆச்சரியம் மேலிட்டதனால், அவன் தடுமாறுவதைச் சற்றுநேரமட்டும் சக்கரவர்த்தி பூராயமாயப் பார்த்தபின், அவனை நோக்கி, "நேற்று நீ நிறைவேற்றிய உதாரம் என்னும் சுகிர்தத்திற்கு ஈடாக அரசர் செய்யத் தகும் பிரதியுபகாரஞ்செய்யக் கருதி, இன்று உன் குடிசைக்கு வந்தோம். நீ சுதந்தரிக்கின்ற அந்தஸ்து உன்னால் மிகுந்த கௌரவம் அடைந்திருக்கின்றது. உனக்கு உண்டாயிருக்கின்ற சமாதானத்தையும், உனது நிர்த்தோஷத்தையும் இச்சிக்கிறோம்: ஆயினும், உன்னை இவ்வுயர்ந்த ஸ்திதியினின்று விலக்குவது நமது அபிப்பிராயமல்ல. உனக்குப் பிரயோஜனமாகத்தக்க செல்வப்பொருள்களைத் திரளாய்க் கொடுப்போம். நீ காப்பதற்குத் திரளான ஆடு மாடுகளும், அவைகளை மேய்ப்பதற்கு விஸ்தாரமான புல் நிலமும், அநாதர் முதலான ஏழைகளை உன் சுவேச்சைப்படி ஆதரிப்பதற்கு வசதியான வீடும் கொடுக்கிறோம். உன் பிள்ளைக்கு ஞானத்தந்தை ஆகிறோம். அவன் அதிர்ஷ்டசாலி ஆவானென்று நாம் தீர்க்க தரிசனமாய்ச்சொன்ன குறிப்பை மறந்தாயா" என்று புன்னகையோடு உரைத்தார்.

இந்த அதிசயமான ராஜா வாக்குக்குப் பிரதியுத்தரம் சொல்வதற்கு அவ்வேழைக் குடியானவனுக்கு நா எழவில்லை. அவன் குடிசைக்குள் போய், குழந்தையை எடுத்துக்கொண்டு வந்து, சக்கரவர்த்தியின் பாதந்தண்டை வைத்தான். அவர் அலர்ந்த முகமுடையவராய் அதைத் தமது கையில் எடுத்து ஏந்தினபடி கோவிலுக்குப் போய், முறைப்படி ஞானஸ்நானக் கிரியைகள் செய்வித்தபின்மேல், மீண்டும் குடிசைக்

குத் திரும்பித் தாய்வசம் ஒப்பித்து, "மூலைமறைக்கும் பருவம் ஆகும்பொழுது, இப்பாலகனை அரமனைக்கு அனுப்புங்கள்" என்று சொல்லித் தமது பரிவாரங்களுடன் ராஜதானிக்குச் சென்றார்.

சக்கிரவர்த்தி தமது வாக்கை மறக்கவில்லை. அச்சிறுவனை ய பருவகாலத்தில் அரமனைக்கு அழைப்பிக்க. அவனுக்குப் பக் குவமாய்க் கல்வி கற்பித்து. வேண்டியமட்டும் ஸொத்து கொ டுத்து, சுகித்து வாழும்படி கிருபை செய்தார். அன்றியும் அந்தக் குடும்பத்தார் ஆயுசபரியந்தம் ராஜ்யம் பெற்று, மே லும் மேலும் தழைத்து மேம்பாடுடையவர்களானார்கள்

## ௫௬-வது லௌகிகப்பொருள்களால் உண் டாகும் இன்பம் பூரண இன்பமல்ல

இம்மையில் இடம் பொருள் ஏவல் முதலியவைகளைக் கொண்டு அனுபவிக்கும் இன்பம் குறைவுள்ளதென்பதற்கு அநேக திருஷ்டாந்தங்கள் உண்டு. அவைகளை இங்கெடுத்துச் சொல்லில் பெருகும் ஆதலால் அவற்றுள் முக் கியமாகத் தோன்றும் மூன்று திருஷ்டாந்தங்களை இவ் விடத்தில் சுருக்கமாய்த் தெரிவிப்போம். பூலோகத்தில் மனுஷ ரெய்தற்கருஞ் சம்பாதிக்கும்படியும் எவ்வகைச் செல்வமும் பொருட்செல்வம், புகழ்ச்செல்வம் என இருவகைப்படும். இவ் விருவிதச் செல்வங்களுக்கும் மூன்று நிலைமைகள் உண்டு. மு தலாவது, தேடும் நிலைமை, இரண்டாவது, அனுபவிக்கும் நிலைமை; மூன்றாவது, காக்கும் நிலைமை; சிலர் தேட முய லும் செல்வத்தைத் தாம் கருதியவாறு அடையாமல் பிரதிகூ லப்படுகிறார்கள், சிலர் அடைந்தும் அதை அனுபவிக்கும்பொ

மூது, திர்ப்தியின்றி மனக்குறைப்படுகிறார்கள். சிலர் அடை
ந்து சிலகாலம் அனுபவித்தும், அதைச் சிதைவின்றிக் காக்க
லாகுமென்கிற திட நம்பிக்கையில்லாமையால் சந்தேகக் கட
லில் மூழ்கி வருந்துகிறார்கள். இவ்வாறே இம்மூன்று நிலை
மைகளிலும் துன்பம் சம்பந்தப்பட்டிருப்பதனால், லௌகிக
ப்பொருள்களால் ஆகும் இன்பம் பூரண இன்பமல்ல.

௪. தேட முயலும் செல்வத்தைக் கருதியவாறு அடையா
மல் பிரதிகூலப்படுவது,—சர்வதேசத்தார்களும் தங்கள் தங்
கள் குறைவு-நிறைவு, விருப்பு-வெறுப்புகளுக்கு ஏற்க வெ
வ்வேறு அபிப்பிராயங்களைக் கொள்வதும், அவரவர் யுக்தி
க்கு உசிதமாகத் தோன்றும் பதறாத ஊக்கம், அஞ்சாத தீ
ரம், தந்திரசாமர்த்தியமுதலிய உபாயங்களால் அந்த அபிப்
பிராயங்களை நிறைவேற்றும்படி ஓயாமல் முயற்சி செய்வ
தும் இயற்கையே ஆயினும், பிரயோசனம் என்ன? தடை
யின்றி யாவரும் சித்தி அடைகிறார்களா? ஏது, எந்த முயற்
சியிலாவது தவறாமல் அனுகூலம் பெறுவதற்கு ஏற்ற சாத
னங்களை இதுவரையில் ஊகித்தறிந்தவர் எவரும் இல்லை.
"வேகமுள்ளவர்களுக்குப் பந்தயமில்லை, பராக்கிரம சாலிக
ளுக்குச் ஜெயமில்லை, புத்திமான்களுக்குச் செல்வமில்லை;"
அவன் எந்தக் கருமத்தையாயினும் செய்யும் வகை எது
வென்று அதி சூழ்ச்சியாகத் தேர்ந்து நிச்சயித்து, சிறிதும்
இடையூறு வராதபடி காப்பதற்கு மிகுந்த ஜாக்கிரதையாயி
ருந்தாலும், அவன் புத்திக்கு எள்ளளவும் தோன்றாத விக்
கினம் எப்படியோ இடையில் சம்பவித்து, அவன் எடுத்து
த்தொடுத்த கருமத்தைச் சித்திக்காமல் தடுத்து, அவன் வரு
ந்திச்செய்த முயற்சியை முழுமையும் வியர்த்தமாக்குவது
மெய்யென்று சொல்லவேண்டியதில்லை. இது யாவருக்கும்
அனுபவசித்தமாகத் தெரியுமே.

இவ்வாறே தாம் விரும்பித்தேடும் விஷயங்களை அடையாமல் பிரதிகூலப்படுகிறவர்கள் ஆர்? அளவற்ற அதிகாரமும் செல்வாக்குமுடையவர்களாகும்படி அபேட்சிக்கும் அரசர், பிரபுக்கள்முதலான பெரியோர்மாத்திரமா? அப்படியானால், மிகவும் சிலராகிய அவர்களுக்கு உண்டாகும் பிரதிகூலம், பிரவாகம்போலத் தேசத்தில் எங்கும் பரவியிருக்கின்ற சாதாரண ஜனங்களுக்கு என்ன? தமக்குள்ள செல்வமும், செழிப்பும், அதிகாரமும் போதாதென்று சர்வதேசத்தின் செல்வப்பொருளையும் கைக்கொண்டு சர்வாதிகாரிகளாகும்படி காவித்தவர்கள் காரியசித்தி பெறாமல் தலைகீழாய் விழுந்தார்கள். அதனால் நமக்குச் சேதம் என்ன? என்று எண்ணிச் சாதாரண ஜனங்கள் விசாரமற்றிருப்பார்கள். ஆயினும் அனுபவத்தில் அப்படி அல்லவே. அரசர்-பிரஜைகள், பெரியோர் சிறியோர், கற்றோர்-மற்றோர், செல்வர்-வறியர், நல்லோர்-தீயோர்முதலிய வகுப்பு வரையின்றி, யாவருக்கும் அவரவர் செய்யும் முயற்சி பலிக்காமல் அப்போதைக்கப்போது பிரதிகூலம் நேரிடுகின்றது. இதைத் தவிர்க்கும்படியான தைரியம் ஒருவருக்கும் இல்லை. மிகுந்த விசையாய் ஓடும் வெள்ளத்திற்கு எதிர்ப்பட்ட துரும்பானது அதற்கு எதிர்முகமாய்ச் செல்லாமல் அதனால் தள்ளப்பட்டுப் போய்த் துறையில் அடைவதுபோல, மனுஷரும் உலகவாழ்வு என்னும் சமுத்திரப் பிரயாணத்தில் தாம் எடுத்த கருமத்தைக் கருதியபடி எப்பொழுதும் தவறாமல் முடிக்கத் திராணியற்றவர்களாய், காலம் இயற்கை, காரணகாரிய சம்பந்தமுதலிய தடுக்கப்படாத அலைகளின் வழிச்சென்று, யாதேனும் ஒரு துறையில் சேர்வார்கள். இந்த நிர்ப்பந்தம் எவர்களுக்கும் சாதாரணமாய் இருக்கின்றது.

உ. சிலர் தாம் தேடிய பொருளை அடைந்தும், அதை அனுபவிக்கும்பொழுது, திருப்தியின்றி மனக்குறைப்படுகிறார்கள்.

ஒருவன் இடைவிடாது முயன்று, எவ்வகையான இடையூறு கள சம்பவித்தாலும் அவைகளுக்குச் சிறிதும் அஞ்சித் தள ர்ந்து பின்னிடாமல், அந்த ஜாக்கிரதையாயிருந்து தன் முய றசியின பயனை அடைகிறுன். அடைந்தும் பிரயோசனமெ ன்ன ? அவனுக்கு ரம்மியம் உண்டாகிறதா ? அவன அபேட்சி த்தபொருள் அகப்பட்டதென்று திர்ப்தியடைநது ஆறித் தே றி, இனித தனக்கு யாதும் குறையிலலையென்று எண்ணிப் பூரண சநதோஷமுள்ளவனுயிருக்கிறுனு ! இல்லை. எந்த ஸ்தி தியில இருப்பவர்களும் தாம் தேடும் பொருள் சித்திக்குமா ஞல் தம்மைப்போலப் பாககியா இல்லையென்று நினைப்ப ரும், அது சித்திக்கும்பொழுது, தாங்கள் நினைத்த அளவு இன்பத்தை அடையாதவர்களாய் மனக்குறைகொண்டு விசா பபடுவதும் இயறகைதான். கருமம் சிததிறுலும் துக்கம், ...க்கித்தாலும் துக்கமே. கல்விப்பொருள், செல்வப்பொ ருள் இரண்டையும் கூடிபவரையில் குறைவறப் பெற்றுப் பிர தாபமுடையவர்களாயிருக்கும் பெரியோர் தமக்குப் பின்னும் பொருள் வேண்டுமென்று விரும்புவார்கள். செயலற்றுச் சோ ம்பியிருப்பவர்கள தமக்கு யாதேனும் ஒரு முயற்சி வேண்டு மென்று கருதுவார்கள். ஓயாமல் உழைக்கிறவர்கள் தாங் கௗயற்கு அரிய இளைப்புத் தமக்கு உண்டாகிறதென்று மு றையிடுவார்கள். சாதாரண ஸ்திதியில் இருப்பவர்கள் அதிக தனமும் கடமும் பெறுவதற்கு வகை தேடுவார்கள். உயர் ந்த உத்தியோகங்கள் செய்து மிகுந்த வருமானம் பெறுகிற வர்கள் ஒருவருக்குள் அடங்கியிருந்து வருந்தாமல் சுயாதி னம பெறறுச் சுகிப்பது எத்தனை பாக்கியமென்று எண்ணிப் பெருமூச்சுவிடுகிறார்கள். இப்படியே அவரவர் ஒன்றை விரு ம்பித் தேடி அடைநதபின், அதிஞல் உண்டாகும் இன்பத் தைத் துன்பமாய்க்கொண்டு, மற்றென்று பூரண இன்பம் பயக்குமென்று கருதிக் தேடுவதும், தேடியபின் இவ்வாறே

மனக்குறைப்படுவதும் வழக்கம். உள்ளத்தில் கண்ட ஒரு குறை நீங்க, மற்றொரு குறை உண்டாகின்றது. ஒரு விருப்பத்திற்கு இடங்கொடுக்க, ஒன்றன்பின் ஒன்றாய் ஒன்பது கோடி விருப்பங்கள் உற்பத்தியாகும். விரும்பியவாறு அநுபவம் உண்டாகுமென்று அபேக்ஷித்தவரொழிய, உள்ளபடி அநுபவித்துத் திருப்தியடைந்தவர் எவரும் இல்லை.

இம்மைக்குரிய விஷயங்களில் மனுஷருக்கு உண்டாகும் இன்பம் மனக்குறை தருவதற்கு இரண்டு ஏதுக்கள் உண்டு. முதலாவது, அவ்வின்பத்தின் தன்மை, இரண்டாவது அதைப் பழுதாக்குவிக்கும் சாதனங்கள், அழிவற்ற ஆத்ம சீவராகிய மனுஷரது அநுபவ சக்திக்கு ஏற்க அவர்கள் நெஞ்சில் பிறக்கும் உன்னதமாகிய ஆசைகளுக்கு, லௌகிக விஷயங்களால் வரும் இன்பம் ஈடல்ல. வர்ணம் இட்ட சித்திரப் பிரதிமை போல வசீகர சக்தியுள்ளதாகத் தூரத்தில் தோன்றும [illegible]ப் பொருள் அனுபவத்தில் வரும்பொழுது, அதன் அழகு குன்றி, விகாரமாகி வெறுப்புத் தருகின்றது. ஒரு பொருளினிடத்து மனுஷருக்கு உண்டாகும் ஆவலானது அப்பொருளை அழகுள்ளதாகத் தோற்றுவிக்கும். நிழலைப் பொருளென்றும், நீர்க்குமிழியை நிலையென்றும் கொள்பவர்போல, மனுஷர் இந்த மாயத்தோற்றத்தை உள்ளதென்று எண்ணி, தமது ஆவலின் வசத்தராகித் தம்மாலாகத்தக்க முயற்சிகளனைத்தையும் செய்து அந்தப் பொருளைத் தேடுவார்கள். அது கிட்டினவுடன், அவர்கள் ஆவலானது அந்தப் பொருளைவிட்டு, மற்றொன்றைத் தாவ, அவர்கள் தேடின பொருளை உபேக்ஷித்து, பின்னும் ஆவலின் அடியைத் தொடருவார்கள். லக்ஷப் பிரபுவிடத்தில் இருக்கின்ற திரவியமுழுதும் கிடைக்குமானால் எத்தனை பாக்கியமென்று ஆவலிக்கும் ஏழைக்கு அவன் விரும்பியவாறு திரளாகத் திரவியம் சேர்ந்த பின் சிலகாலமட்டும் அதை அனுபவிப்பான். அப்புறம் பி

னும் அதிகம் வேண்டுமென்று விரும்பி மனக்குறைப்படு
வான். லௌகிகப்பொருள் இவ்வாறே மனுஷரை வஞ்சிக்
கும் தன்மையுள்ளது. மேலும் குறைவற்ற செல்வமும் குன்
றாத வாழ்வும் உடையவர்களென்று பலரால் மெச்சப்படும்
பெரியோர்கள் தங்கள் செல்வத்தை அநுபவித்துச் சந்தோஷி
க்கிறார்களா ? அவர்களுக்கு விசாரம் இல்லையென்று ஆர்
சொல்வார்கள் ? பெரும்பாலும் சீமான்களே நிர்ப்பந்தப்படுகி
றார்கள். எதாயினும் குறை அவர்களுக்கும் உண்டு. அதனால்
அவர்களுக்குச் சஞ்சலம் தோன்றும் ; சஞ்சலமானது அவர்க
ளுடைய மனவமைதியை வாவா அரிக்கின்ற சாவாத புழுப்
போலவும், அவர்கள் ஆயுளை அன்றன்று சிதைத்துக் குறைக்
கின்ற கூரிய வாள்போலவும் இருக்கிறது. ஒருவனுக்குச் சஞ்
சலம் இல்லாதிருப்பினும் உலக இன்பம் அவன் உள்ளத்தைக்
கெடுக்கின்றது. ஆர்ச்சுணத்தை வளர்க்கின்றது.

தேடி அநுபவிக்கும் இன்பத்தைக் காத்துக்கொள்வது ஒரு
வன் எவ்வாறாவது தான் விரும்பிய பொருளைத் தேடினாலும்,
மேற்சொல்லிய கெடுதிகள் இன்றி அதை அநுபவித்தாலும்,
அதைக் காக்கும் வல்லமை அவனுக்கில்லை. உலகப்பொருள்
ஒன்றாவது நிலையுள்ளதல்ல. விஷயங்களெல்லாம் தோன்றித்
துலங்கி மங்கி மறைந்துபோகின்றன. அவைகளை ஒரு நிலைமை
யில் காத்துக்கொள்வது சுபாவத்திற்கு விரோதம். செல்வம்
வண்டியுருளைபோல மாறியும், யானையுண்ட விளங்கனிபோ
லச் சிதைந்தும், பட்சிபோலப் பறந்தும், மின்னல்போல
விரைவில் மறைந்தும், வெயில்முன் பனிப்போலக் கரந்தும்
போகின்றது. இத்தன்மையாகிய செல்வப்பொருளால் உண்
டாகும் இன்பமும் அப்பொருள்போல மாறியும்-பறந்தும்-
மறைந்தும்-கரந்தும் போவதால், அவ்வின்பத்தைக் காப்பத
ற்கு எவராலும் இசையாதே. ஒன்றைக் காக்கும் தொழில்
என்ன சொற்பமா? ஒருவன் மிகுந்த திரவியம் விரயஞ்செய்து

டுகொள்வளையில் சமைப்பித்து நிறைவேற்றும் அலங்கார மாளிகையானது, சடிதியில் வீசும் சண்டமாருதம், விழும் இடி, சத்துருக்கள் முதலிய இடையூறுகளால் நொடிக்குள்ளே இடிந்து பொடியாய்த் தரைமட்டமாவதுபோலவே, இவ்வுலகத்தில் அனுபவிக்கும் எந்த இன்பமும் எண்ணிறந்த இடையூறுகளுக்கு ஏதுவாயிருப்பதனால், அதைச் சிதைவின்றிக் காப்பது முழுமையும் அசாத்தியமாம்.

---

## ௯0-வது, கொடுத்தார்க்குக் குறை இல்லை

---

எங்கிலாந்தின் மேற்கு நாடுகளில் ஓர் இடத்தில் வாசமாயிருந்த தாம்ஸன் என்னும் சுவிசேஷபோதகர் தமது விசாரணைக்கு உட்பட்ட சபையாருக்கு வாரந்தோறும் முறைமைப்படி வேதோபதேசம் செய்தலும் தவிர, விவசாயத்தொழிலுஞ் செய்து அதன் பயனைக்கொண்டு சமுசாரபாரம் தாங்கிவந்தார். அவர் வருஷந்தோறும் கழனியில் விளையும் தானியத்தில செலவாகி மிகுந்திருப்பதைத் தமது சபையில் வறுமையால் வருந்தும் அகதிகளுக்கு விபாகித்துக் கொடுப்பது வழக்கம். இப்படி நெடுங்காலமட்டும் அந்த மஹாநுபாவருடைய தர்மம் இடையூறின்றி வழங்கிவந்தது. ஒருவருஷம் அடுத்த கிராமத்தார் தங்கள் தேவாலயம் ஆராதனைக்குக் கூடுவதற்குப் போந்த விஸ்தாரமுள்ளதல்லவென்று, அதைச் சற்றுப் பெரிதாகக் கட்டும்படி அங்கங்குள்ள பெரியோரிடத்தில் தர்ம சகாயம் கேட்க, ஷை போதகர் அவ்வருஷம் மிகுந்த தானியத்தை 300-ரூபாய்க்கு விற்று அவர்களுக்குக் கொடுக்கத் தீர்மானித்தார். அதனால் அவ்வருஷம் மாமூல்பிரகாரம் வறியோருக்குத் தானியம் கொடுப்பதற்கு இசையவில்லை. அது அவருக்கு மிகவும் விசனமாயிருந்தது. ஆயினும் இசையாத கருமத்

திற்கு என்ன செய்வதென்று தமக்குள்ளே எண்ணிய பணத்
தை ஒரு பைக்குள் வைத்து எடுத்துக்கொண்டு கேட்டவர்கள்
வசம் ஒப்பிக்கும்படி குதிரைமேல் ஏறிப்போனார். அவர்,
வழியில் குதிரை ஏறிச்சென்ற ஒரு ஸ்திரீயைக் கண்டு, அவ
ளும் அந்தக் கிராமத்துக்கே போகிறதாகத் தெரிந்ததனால்,
இருவரும் சம்பாஷித்துக்கொண்டு போனார்கள், அவள் அவரு
டைய சாக்ஷண்யத்தையும், சற்புத்தியையும், அவர் சொல்
லிய உசித வசனங்களையும் கண்டு கேட்டுவியப்புற்று, அவ
ருடைய பெயர் தொழில் முதலிய வரலாறுகளைப் பரி
யாக விசாரித்தாள். கிராமத்தில் சேர்ந்து ஒருவரை ஒருவர்
விட்டுப் பிரியும் சமயத்தில், விருத்தராகிய ஐயா போதகா
‘ நான் உன்னுடைய வீட்டில் இரண்டொரு நாள் இருப்பேன்
நீ அவகாசம் கண்டு அங்கே வரும்படி கேட்கிறேன்'' என்ன
அந்த ஸ்திரீ உடன்பட்டு, தன் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தாள்
அன்று சாயங்காலம் அவள் அயலில் உள்ள தன் சிநேகிதரிடத்
திற்குப் போய், சம்பாஷித்துக் கொண்டிருக்கையில், தான்
வழியில் தாமஸன் என்னும் சற்போதகர் ஒருவரைக் கண்ட
தும், அவர் சொல்லிய மதுர வசனங்களை இன்பமாய்க் கேட்ட
தும், அவருடைய அற்புத குணாதிசயங்களைச் சன்மானித்ததும்
ஆகிய வரலாறுகளை விவரணமாய்ச் சொன்னாள். அந்த வீட்டு
க்கு உடையவளாகிய பெருமாட்டியின் செவியில் “தாமஸன்”
என்னும் பதம் நுழைந்தவுடன் ஆச்சரியமடைந்தவள் போல்,
சடுதியில் திரும்பி, ‘‘ ஆ! என்ன சொல்லுகிறாய் ! தாமஸனா!
இந்தப் பெயருள்ள ஒருவரை இத்தனை வருஷமட்டும் தேடி
யும் இன்னும் காணாமல் என் மனம் புண்ணாகின்றது. அவர் இவ
ர்தாமோ! என் மேல் தயைகூர்ந்து தீர்க்க விசாரணைசெய்து
தெரிவிக்க உன்னை வேண்டுகிறேன். என் கணவர் இறந்த இர
ண்டொரு வருஷத்திற்குமுன் தாமஸன் என்னும் ஒருவர், ஒரு
பை பணத்தை அவர் வசம் ஒப்பித்து, தாம் கேட்கிறவரையில்

வைத்திருக்கச்சொன்னார். மரணக் கருவியின் என் சமான
இரத்த சக்தி எனக்கு ருசி சொல்லி, பணத்தைப் பையில் கட்
டிக்கொடுத்து எனக்காக வந்து நீதி செய்வித்த உடையவரிடத்
தில் ஒப்பிக்கச் சொல்லி இறந்தார். என்னவும் ஒருவரும் எத்
ப்படவில்லை. அவர் இறந்தாலும் அவர் சொத்துக்குப் பாத்தி
யஸ்தராயிருக்க இருப்பார்கள்" என்றாள். பின்பு அக்கிராமத்
தில் வந்திருந்த காமலன் போகத்தை அறிந்து போய்க் கேட்க
அவர் "நீங்கள் சொல்லும் காமலன் என்பவர் என் குரு
சக்காதரர். அவர் இறந்து பத்து வருஷமாயிற்று.
அவர் சொத்துக்குப் பாத்தியஸ்தன் நானேதான்" என்றார்.
பெருமாட்டி அவர் சொல்லை மனப்பூர்வமாய் நம்பி அவருக்
குத் தக்க உபசாரணைகளைச் செய்து, ஒப்பிவிட்ட பணத்தைக் கொ
டுத்தாள். அவர் ஆச்சரியப்பட்டு அதை வாங்கி,
என்னைப் பார்த்திருக்கும் எம்முடைய மனக்குறை தீர்ந்து. வயிறு
குளிர, வாய் கடவுளை வாழ்த்த, இந்தப் பணத்தைப் பெற்றுக்
கொண்டேன் என்று எண்ணி, தமது சிநேகிதருக்குச் செய்தி
தெரிவித்து, கடவுள் திருநாமத்தைப் புகழ்ந்தார். அவர்
விசுவாசபாத்திரமென்பதைக் காத்தில் சொல்லுங்கள். அவ
ளிடமிருந்து பிரசித்தம் பண்ணுங்கள்" என்று மகிழ்ந்து வை
த்தார்.

Friendship
BL 4

~~அபூர்வ சிநேகம்~~

(பிதியஸும் தாமனும்.)

## 3வ பழங்கதை

தியோனிஸியு என்னும் கொடுங்கோலரசன் மத்தியதரைக்கடலில் இருக்கும் ஸிஸிலித்தீவின் புராதன ராஜதானியாகிய ஸிரக்யூஸில் ஆளுகை செய்து வரும் காலத்தில், தாமன் என்னும் ஒருவன் ஏதோ பாரமான குற்றத்தினி

மித்ரம் பிராணதண்டனைத் தீர்ப்பு பெற்றான். தண்டனை செய்வதற்குக் குறித்த தவணைவரச் சில தினங்களுக்கு முன், அவன் கன்னிமித்ரம் வருந்தி விசனக் கடலில் அமிழ்ந்திருக்கும் தன் குடும்பத்தாருக்கு ஆறுதல் சொல்வதற்கும், தாறுமாறாயிருக்கும் தன் காரியங்களைச் சீர்ப்படுத்துவதற்கும் வீட்டுக்குப் போய்வரும்படி உத்தரவு கொடுக்கவேண்டுமென்று மனுப்பண்ணிக்கொண்டான். அதற்கு அரசன் நீ வருகிறவரையில் தகுதியான ஒருவனைப் பிணை எழுதுவித்துக் காவற்சாலையில் ஒப்பிப்பாயானால், தாராளமாய்ப் போய்வரலாகுமென்றும், குறித்த தவணையில் உன் சொற்படி வராமற்போவாயானால், உனக்கு வரும் தண்டனைக்கு உன் பிணையாளியே பாத்தியப்படுவானென்றும் ஒப்புக்குச் சொன்னான். பிராணதண்டனைத் தீர்ப்புப்பெற்ற ஒருவனுக்குப் பிணை எழுத உடன்படும் பேதைகள் உண்டென்று அரசன் ஒருபொழுதும் நினைக்கவில்லை. இந்தத் தாமனுக்குப் பிராணசிநேகன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் பிதியஸ். தாமன் மேற்சொல்லியபடி மனுச்செய்துகொண்டதும், அதற்கு அரசன்சொல்லிய உத்தரமும் இவனுக்கு எப்படியோ கேள்வியாயிற்று. பிணைநிற்குமபடி எழுதிக்கேட்டால் போகலாமென்று எண்ணித் தாமதிக்காமல், பிணை வேண்டுமென்ற சொல் தன் செவிப்பட்ட க்ஷணமே விரைந்தோடி நியாயஸபைக்குமுன் சேர்ந்து, என் சிநேகனுக்கு நானே பிணைகொடுக்கிறேனென்று வலியச் சொன்னான். அரசன் அவ்வாறே பிதியஸைக் காவற்சாலையில் வைப்பித்துத் தாமனை விடுவித்தான். இதைக் கண்டு, அரசனும் நியாயசபையிலுள்ள உத்தியோகஸ்தர்கள் அனைவரும் மிகவும் ஆச்சரியப்பட்டு, முடிவிலே காரியம் எப்படியாகுமென்று கண்டறியக் காத்திருந்தார்கள். குறித்த தவணை கிட்டியது. இரண்டொருதினம் இருக்கையில், அரசன் காவற்சாலைக்குப்போய், பிணையாளி

யைக் கண்டு, அவன் மனநிலையை நிதானிக்கும் பொருட்டு சிநேகத்தைக் குறித்து அவனுடன் சம்பாஷித்தார். சம்பாஷிக்கையில், "சிநேகம், பரோபகாரசிந்தை, சுதேசாபிமானம்முதலிய சுகிர்தகுணங்கள் உண்டென்று சொல்லுகிறார்களே. இது சுத்த கற்பனை; பேதைகளை வஞ்சித்துப் பயப்படுத்தும்படி விவேகிகள் யூகித்து எழுதிய நீர்மேலெழுத்து. மனுஷர் தாம் செய்யும் எந்தச் செயலையும் தமது சுயநய சுகத்தையே கருதிச் செய்வார்களே தவிர, மற்றப்படியல்ல. பிராணகண்டம் தப்பிப் பிழைக்கும் வகை அறிந்த ஒருவன் தன சொல்லைப் பொருள்செய்து அதைக் காக்கும்படி உயிரைக் கொடுப்பானா? அப்பெயர்ப்பட்ட புண்ணியபுருஷர்கள் இந்த யுகத்தில் எங்கும் இல்லை" என்று தியோனிஸிய அரசன் சொல்ல, பிணையாளியாகிய பிதியஸ் "மகத்துவமுள்ள ராஜரே, ஏழை வாக்கினின்று பிறக்கும் இரண்டொரு சொல்லுக்கு இடந்தரவேண்டுமென்று தங்கள் கனத்தைத் தாழ்ந்து பணிந்து பிரார்த்திக்கிறேன். கூடுமானால் ஆயிரம்முறை அடுத்தடுத்துப் பிராணகண்டம் நேர்ந்தாலும் அணுவளவும் அஞ்சாமல் அதற்கு மனப்பூர்வமாய் உடன்படுவேன். ஆயினும் எனது இணையற்ற தோழனாகிய தாமன் தன் சொல்லை மறந்து சத்தியந்தவறினானென்ற சத்தம் பிறக்குமானால், அதைக் கணப்பொழுதாயினும் கேட்டுச் சகிப்பதற்கு என்னால் இசையாது. இந்த அண்டம் புரண்டாலும், ஆதித்தன் இருண்டாலும், அக்கினி குளிர்ந்தாலும், பிரவாகித்து அலைபுரளும் அகண்ட சமுத்திரமானது சிறுதுளியுமின்றி வற்றிவறண்டு வெறுந்தரையாக மாறினாலும், அவனது சொல் அணுவளவாயினும் புரளாது. எப்படியும் அவன் உயிரையுஞ் சொல்லையும் ஒருங்கு காக்கும் வண்ணம் அற்புத காருணியராகிய அநாதிகடவுளை அத்தியந்த பயபக்தியாய் இரந்து வருந்திக் கேட்கிறேன். எனது தோழனுடைய பிராண நாயகிக்கும், சித்திரப் பிரதி

மைகளைப்போலச் சிறந்த குழந்தைகளுக்கும், நெருங்கிய சுற
றத்தார்களுக்கும், உரிமையுள்ள தேசத்தாருக்கும் அருமை
யானதாயிருக்கின்ற இவன் உயிரை, என்னிலும் இருபது ம
டங்கு அதிகமான லோகோபகாரமும் நல்லொழுக்கமுமுள்ள
அவனுடைய பிராணனை இரட்சிக்கும்பொருட்டு, அவனுக்குக்
குறித்த பிராணதண்டனையை நான் ஏற்றுக்கொள்வதற்காக, என்னை
ச் சற்றுமுன் அவன் இவ்விடத்தில் சேர்க்கும்படி, கருணைமயமான ஈசு
வரனே, நீ எழுந்தருளாத அவன் பிராணனை [illegible]
செய்வாயாக, என்னைக்காட்டிலும் அவன் வீணாகத் தண்டனை பெறு
வானானால், தவித்துத் தடுமாறிய புண்பட்ட நெஞ்சுடன் இரு
க்கக் கண்ணீர்விட்டு என் உயிரை மாய்த்துக்கொள்வேன் —
அப்படிவாராமல் இறைவன் அருள் புரிவாராக" என்றன. இ
ந்த அதிசய சிநேகிதன் பலதுக்கை உணர்த்திய வார்த்தைக
ளைக் கேட்டவுடன், ஜிராணிவிப ராசன் ஆச்சரியமாகக் கல
ங்கி, இந்த நிரபராதியுடைய அபூர்வ நடையையும், அபூர்வமான
சிநேகத்தையும் அறியாமல் தோஷம் சொல்லி அபசாரப்ப
ட்டேனே, இவன் என் மனதை வசீகரிக்கும்பொருட்டு மாட்டா
சாதுரிய வசனங்களை உரைக்கும் வரம்பெற்று வந்தானோ,
ஐயா! இது என்ன மாயம்!" என்று சொல்லிச் சந்தேகமும்
[illegible] யப்புடையவனாயிருக்கையில், பிராணதண்டனை செய்வ
தற்கு நியமிக்கப்பட்ட தினம் வந்தது. உறைந்த பனிபோ
ல வெண்மையான [illegible] த்துக்குக்காரர்கள் ஆறு பூண்டிமூ
[illegible] சிகாரத்தில் கிரியாதிபதியாகிய திரியோனிவிப இ
ந்த மாயம் எப்படி முடியுமென்று ஆழ்ந்த சிந்தையோடு வீற்
றிருக்க, [illegible] ஜனங்கள் நானாதிக்கிலும் கூப்பிடு தூ
ரமட்டும் [illegible] திரண்டு அடர்ந்து பந்த பந்தத்தாகத் தூக்
குமேடையைப் பார்த்தவண்ணமாய் நிற்க, உருவின கத்தி
ஓங்கிப்பிடித்த காவற்சேவகர் இருபுறமும் நெருங்கிச்செல்ல,
பிணையாளியாகிய பிதியஸ் நிர்மதியாய்ப் பதறாமல் மெல்லெ

ண நடந்து, தூக்குமேடையில் ஏறிச் சற்றுநேரம் தன் கழுத்தைத் தறிக்கும் யந்திரத்தைப் பார்த்தபின், சூழ நின்ற ஜனத்திரளைநோக்கி, "பிரியமுள்ள நண்பரே, கடவுள் என்மேல் கடாட்சித்து, என் பிரார்த்தனைக்குச் செவிகொடுத்தார். என் தோழன் தாமன் என்பவன் இன்றைத்தினம் இவ்விடத்தில் தன் வாக்குத் தவறாமல் வருவதற்கு இடையூறாக நேற்றுமுழுதும் எதிர்காற்று வீசியதறிவீர்களே; கடுமையான எதிர்காற்றை ஊடறுத்து விரைந்து செல்லும் சக்தி மரக்கலத்துக்கு உண்டா? அவன் நாளைக்காவது வந்து சேர்வான் என்பதற்குச் சந்தேகம் இல்லை. தன் உயிரைத் தப்புவிக்கக் கருதித் தாமதித்தான் என்று உத்தேசிக்கப் போகிறீர்கள். இந்தத் தகாத அபிப்பிராயத்தைத் தள்ளிவிடுங்கள். அவன் உத்தம யதார்த்தவாதி; ஒருபொழுதும் தன் சொல்லை மறந்து உயிரோடிருக்க உடன்படான். எதிர் காற்று வீசியதினிமித்தம் கட்டுவலை நொந்து இப்பொழுது, விசனத்தோடு வழியில் விரைந்து பறந்து வருகிறான். இது நிச்செய்தியென்பது இன்னும் ஒரு தினத்தில் யாவருக்கும் தெரியவரும். அவனுடைய யதார்த்தத்தை எள்ளளவும் அனுமானிக்காமல் நம்புவீர்களானால், நான் விசாரமற்று, விவாகம் பண்ணிக்கொள்ளும் ஒருவனைப் போல முகமலர்ந்து மனமகிழ்ந்து மரணமடைவேன். நல்லது, இனித் தாமதிப்பதற்கு இசையாது மரணதண்டனை செய்வதற்கு எத்தனப்பட்டு நிற்கின்ற தலையாரியே—கட்டளைப்படி உன் கடமையை நிறைவேற்று" என்றான். அந்தக்ஷணமே நெடுந்தூரமட்டும் நெருங்கிநின்ற ஜனங்களுக்குள் ஏதோ இரைச்சல் கேட்க, எல்லாரும் சடிதியில் திரும்பிச் செவி சாய்த்து, "சற்றுப் பொறு, தூக்கில் போடாதே, சற்றுப் பொறு" என்றொரு சத்தத்தைக் கேட்டு, தலையாரியின் செவிக்கு அது எட்டும்படி உரத்துக் கூவினார்கள். ஒன்றரை மயில் தூரத்துக்கு அப்புறம் குதிரைமேல் ஒருவனுடைய

தலைக் கறுப்புத் தெரிந்தது. விழித்த கண் இமைக்குமுன், வாயுவேகம், மின்வேகம், மனோவேகமும் தோற்கும்படியான அதிசய வேகத்தோடு அந்தர பவனியாகச் செல்லும் குதிரை மேல் ஏறிய தாமன், ஜனங்கள் இரு புறமும் வழிவிட்டோடுங்க், "எனது பிராண சிநேகனே, இவ்வேளையில் அநியாயமாக இறப்பதற்கு மயிரிழை தப்பினாய் என் பிரதிக்ஞைப்படி உற்ற சமயத்தில் இவ்விடம் சேர்ந்து உன்னை ரட்சிப்பதற்கு அருள் புரிந்த பகவானைத் துதிக்கிறேன்" என்று கூவிக்கொண்டு, தூக்குமேடைப் பக்கத்தில் சேர்ந்து, குதிரையை விட்டிறங்கி, படிமேல் ஏறி, பிரியனைக் கட்டித் தழுவி முத்தமிட்டு, "சிரஞ்சீவியாய் வாழ்ந்திரு" என்றான். இந்தச் சொல் பிரியன் செவியில் புண்ணில் கோல்போல நுழைந்தது. அவன் முகம் பிரேத முகம்போலச் சோர்ந்து விறைத்தது. மணி முறிந்த தலை வளைந்த நெற்கதிர்போல, அவன் தலை தாங்குதற்கரிய துக்கத்தால் வளைந்து தாமனுடைய தோளில் பொறுக்க "என்னைக் கொல்ல விரைந்து வந்தாயா? இதற்குத் தானா இத்தனை காலமட்டும் நாம் உறவாடியது. என் பிரார்த்தனைக்குக் கடவுள் இடங்கொடாதது என்னை ரட்சிக்கவா! இனி இவ்வுலகத்தில் எனக்கு விருப்பம் என்னத்துக்கு! அன்புக்கடலே! உருந்தவா! உன்னை இரட்சிக்கும்பொருட்டு நான் இறப்பது அசாத்தியமாயிருப்பினும், உனக்குப் பின் சீவனோடிருந்து தீராத கவலைக்கு ஆளாவதிலும், உன் கூடவே என் பிராணனை வதைத்துக்கொள்வேன். இதுதான் என் பிரதிக்ஞை. இதைத் தடுக்க எவர்க்கும் அதிகாரம் இல்லை" என்றான். இயொனிஸியு அரசன் தான் கண்டு கேட்டவைகள் எல்லாவற்றையும் கருத்தாகச் சிந்தித்து, மிகவும் ஆச்சரியப்பட்டு, கண்ணீர் சொரிய வாய்விட்டு அலறி, சிங்காதனத்தை விட்டு எழுந்து, தூக்குமேடைமேல் ஏறி "ஒப்பற்ற அற்புத சிநேகரே, ஒருமிக்க வாழ்ந்திருங்கள். சுகிர்தகுணம் என்பது சத்த கம்பனை

யென்று தோஷம் சொல்லி அபசாரப்பட்டோம். அதை நீங்கள் கொடுத்த சாட்சி கண்டித்தது. கடவுள் உங்களுக்கேற்ற பிரதியுபகாரம் செய்வாராக. உங்கள் ஒழுக்கத்தால் எமது மனத்தை வசியப்படுத்தினீர்கள். நாமும் உங்கள் அற்புத சிநேகத்தில் சம்பந்தப்படுவதற்கு நமக்கு நற்புத்தி சொல்லி, நம்மை உங்களில் ஒருவனாக ஏற்றுக்கொள்ளுங்கள். பொருளும் புகழும், தீர்க்காயுளும் பெற்றுக் கவலையற்று வாழ்ந்திருங்கள்” என்று சொல்லி, தண்டனைத் தீர்ப்பை விலக்கினன்.

## ௯௨-வது புதைந்த நகரம்

எரிமலை என்பது என்ன? அது சில முகடு பிளந்து அந்த முகட்டுப் பிளப்பு வழியாய்ப் புகை, சாம்பி, சாம்பல், கல், மண், கிட்டம் முதலியவற்றைக் கொட்டுகிற மலைதாம். இப்படிக்கொத்த மலைகள் இந்து தேசத்தில் இல்லை. ஆசியாவின் வேறே சில தேசங்களிலேயும் ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களிலேயும் அநேகம் உண்டு. அந்த மலைகளுக்குச் சமீபமாய் வசிப்பவர்களுக்கு அவைகளாலே அடிக்கடி மிகுந்த சேதம் நேரிடும். ஐரோப்பாவில் உள்ள இத்தாலியா என்கிற தேசத்திலே வெஸூவியஸ் என்னும் ஒரு எரிமலை இருக்கிறது. அதின் அடிவாரத்தில் ஒரு அழகிய குன்றின்மேல் முன்னொருவேளையில் பொம்பியா என்ற ஒரு பட்டணம் இருந்தது. அந்தக் குன்று எரிமலைக்கிட்டங்கள் சேர்ந்துண்டான ஒரு தனிமேடாம். சிலருடைய உத்தேசப்படி, அந்த மேடுதானும் ஒரு எரிமலைமுகடாய் இருந்திருக்கலாம்.

இந்தப் பட்டணம் கண்ணுக்கு இனிய காட்சிகள் அமைந்த ஒரு கடற்கரையோரமாய்ச் செல்வம் பொழியும் சிங்காரவனமான ஒரு சமபூமியின் முகப்பிலே தெள்ளியநீர் பாய்ந்த ஒரு

நதிக்கரையில இருந்ததினாலே, அது சத்துரு சங்காரத்துக்கு எட்டாததும, வியாபாரத்துக்கு மிகவும இணக்கம பொருந்ததமானதும தவிர, ரதநங்களை பதித்ததற்கொப்பந்தமான அம்மலையின அந்தந்த சிகரங்களில, அந்த நகரச் சீமான்கள் கட்டிய வசந்த மாளிகைகளாலும் மிகவும் சிறப்புற்றிருந்தது.

இந்த நகரத்தார இவ்வாறு சுகமாய வாழந்து வருகையில, கிறிஸ்து பிறந்து 63-மவருஷம் பெப்ருவரிமீ ஒரு நாள சடுதியில பூமி கிடுகிடென்று பயஙகரமாய அதிர, எரிமலையும தன பெருவாயைத திறந்து, கல, மண முதலிய அககினிமயமாய உருகிய கீலா அருவிய வடிகக, அவாகளுககு கேட்ட சேதபாதகம கொஞ்சமலல. பிறகும பதினாறு வருஷமாய ஊடே ஊடே பூமியதிர்ச்சிகள உண்டாகிவந்து, கடைசியாய கி. பி. 77 -வது ஆகஸ்டுமீ 23உ இரவு வெஸுவியஸ மலையின பீரங்கி பெரிடி இடிததாபபோல, படீரெனறு வெடிககவே, அனவிநதத புகையும தூசியும படலம படலமாய ஆகாயத்தில ஒங்கி எழுந்து நிமிர்ந்து, ஒரு பெரிய ஆலின கிளைகள கொம்புகள நாலாதிக்கும அடர்ந்து படரும் தனமைபோல், எத்திசையும வியாபித்து, நிமிஷத்துக்கொருவிதமாய மாறி மாறி, பிறகு சூழவிருந்த யாவும அதிர்ந்து பதிந்து நசிபத்தக்கதாக, குபீரெனறு விழுந்து ஒரே மூடாய மூடிக்கொண்டது.

அந்த இக்கட்டுவேளையில், பூமி அடுத்து அடுத்துத் திடுதிடுமென்று அதிர, ஆகாயம் சீவநாசமான நச்சுவாயுவாய்மாறிட, அங்கு வசித்த மனிதா எப்படித தபபுவாாகள்! தப்பிபிழைகக ஓட்டம எடுத்த சிலா ஆகாயம தூற்றின சாம்பலால் திக்குமுககடைதது மாணடாாகள. அக்கினிச்சுவாலை வீசி மாய்ந்தாாகள; சிலா கிடுகிடென்று அதிர்ந்து விழும் கட்டடங்களின கீழ் நசுங்கி இறந்தாாகள; அநேகா தப்பிக்கொள்ளும்படி சந்து பொந்து தேடியும அகப்படவிலலை. இதற்கு இககாலத்தில அந்நகரியில தோண்டி எடுத்த எலும்புக்கூடுகளே சாட்சி.

இங்கே எசமான் ஒருவன் கையிலே திறவுகோல்களும், காசு
பணமும், நகை நட்டுகளும் கொண்டு ஓட்டம்பிடிக்க, அவ
னைத் தொடர்ந்து ஒரு வேலைக்காரன் வெள்ளிப்பாத்திரம், வெ
ண்கலபாத்திரங்கள் சுமந்துபோகவே, இருவரும் வாசற்படி
கடக்குமுன்னே சாம்பல்மாரியடித்து மல்லாந்திருக்கிறார்கள்.
அங்கே ஒரு கூட்டம் ஸ்திரீஜனங்களின் எலும்புக்கூடுகள் கிட
க்கின்றன. ஒருத்தி பொன் ஆபரணங்கள் அணிந்திருக்கிறாள்.
சிலர் சுவரில் சாய்ந்துகொண்டு நிற்கும் வண்ணம் அவர்களு
டைய சரீரத்தின் சுவடு அதில் பட்டிருக்கின்றது. இவ்வண
ணம் காரிருள் நாலு நாள் பரியந்தம் மனிதரை வாதித்து,
கடைசியாய் நீங்கிய பின்னும், சூரிய முகம் கிரணகாலத்
தில இருப்பதுபோல் மங்கலாகவே தோன்றிற்றாம்.

பொம்பியா பட்டணத்துள் தளத்துக்குமேல் பதினெட்
டடி உயரம் புதைந்திருக்கும் சாம்பல் நொய்மையாய் இருப
பதையிட்டு, அதை லெகுவாய்த் தோண்டிப் பார்க்கலாமென்
னும், விழுந்த சாம்பல் திரட்சியானதினாலே கட்டடங்களின்
மேற்கோப்புகள் சுத்த நாசமாய் அழிந்துபோயின. திருவுளச்
செயலாய்த் தப்பிக்கொண்ட குடிகளில சிலர் திரும்பிவந்து,
கீழறை தோண்டிக் குடியிருக்கப் பார்த்தும, முடியாமல்போய
விட்டார்கள். அதுமுதல் இந்த நகரி குடியிருக்க யோக்கியம
ல்லாத மண்மேடாகவே கிடந்தது.

ஆயிரத்தைந்நூறு வருஷங்களுக்குப்பிறகு, பட்டிக்கா
ட்டான் ஒருவன் ஏதோ காரியமாய் அந்த நகரி புதைந்தி
ருக்கிற இடத்தில தரையைத் தோண்டுகையில், ஒரு வெ
ண்கலச் சிலை தென்பட்டது. அது தென்பட்ட செய்தி நா
லாவிடங்களிலும் எட்டவே, கல்விமான்கள் அதன் கார
ணகாரிய தாற்பரியங்களைக் கண்டறிய முயன்றதுமன்றி,
அங்குள்ள துரைத்தனத்தார் தாமும் அதைத் தோண்டிப் பா
ர்க்க ஏற்பட்டு, பின்னும் பல முகாந்தரங்களினால் ஓரேழு

டடு வருஷம் வரையில் அட்டிப்பட்டிருந்தும் 1848-ம் வருஷத்தில் அந்தக் காரியத்தை ஊக்கமாய்க் கையிட்டுக் கொண்டார்கள்.

இந்தப் பட்டணத்துக்கு வந்த அழிவு உலகவாழ்வு எவ்வளவு அநித்தியம் என்பதைக் காட்டுகிறது. அஸ்திபாரங்கள் உள்ளதும், உலக ரட்சகர் நமக்குச் சம்பாதித்ததுமான நிலைமையான ஒரு பட்டணம் மேலுலகத்தில் உண்டல்லவா? அது ஒன்றே அழிவும், அசுத்தமும், குன்றுதலும் இல்லாத சுதந்தரம். மெய்த்தேவனை வழிபடும் சன்மார்க்கரோ அந்தச் சுதந்தரத்தைப் பெற்று அழிவின்றி வாழ்வார்.

---

## ௬௨-வது ருஷிய சக்கரவர்த்தியாகிய பெரிய பீற்றர்.

---

இந்த மகாபுருஷர் 1672-ம் வருஷம் பிறந்து, பத்தாம் வயதில் ருஷியாவில் அரசாளத் தொடங்கினார். புருஷ பிராயமான போது, காட்டு மிருகாண்டிகளாய் இருந்த தமது பிரஜைகளை நாகரிகச் சிறப்படைவதற்காய் அவர் பண்ணின பிரயத்தனங்கள் இவ்வளவென்றில்லை.

1690-ம் ஆண்டு அவர் நாகரிகத் தொழில்களில் கைபழகும்படி, ஐரோப்பாவின் பிரதேசங்களுக்கு யாத்திரைபோனார். ஒலாந்து தேசத்தின் தலைநகரியாகிய ஆம்ஸ்ற்றர்டாமில் சென்றபோழுது, ஒருவரும் அவருக்கு ஓர் குடியானவனுக்கு மேலான மரியாதை செய்ய அவர் சம்மதிக்கவில்லை. கப்பல் செய்யும் தொழிலைக் கற்கும்பொருட்டு, அவர் ஒரு கூலிக்காரத் தச்சனைப்போலே வேஷம் மாறி வேலை செய்ததுமன்றி, அந்தத் தொழில் செய்த மற்றத் தச்சர் இடை

யிலே அவர்களைப்போலே ஓர் சிறு வீட்டில் வாசஞ்செய்து, அவர்களைப்போலே பழமட்டாய் உண்டுடுத்து, சகல விஷயங்களிலும் ஒரு கப்பற்றச்சனுக்கு ஒப்பாய் நடந்துவந்தார்.

இவ்வாறு, அவர் [illegible] பழகிவருகையில், தமது ராஜாங்கக் கடமைகளில் ஒன்றையும் மறந்து செய்யவேண்டியவைகளைச் செய்யாது விடவில்லை. பகல் வேலை தீர்ந்த பின், மாலைகளில் தமது ராசசிய காரியங்களை நடத்தி வந்த மந்திரிமாருக்குத் சாகிதங்களை எழுதியனுப்புவார். நெடுநேரமும் தம்மு ஸ்தானுபதியோடு ஆலோசித்துக்கொண்டிருப்பார்.

சிலநாள் சென்றபின்பு, அவர் இங்கிலாந்துக்குப் போய், கப்பல்செய்வேலையில் பூரணவாய்த் தேர்ந்ததுமல்லாமல், லண்டன் நகரியின் பிரதான யந்திரசாலைகள், சம்பட்டக்கூடம், ஒக்ஸ்போர்த் நகரத்தில் உள்ள வித்தியாசாலை, தாம் சென்ற இடம் எல்லாம் தமக்கு நூதனமாய்த் தோன்றிய வேறு பல விஷயங்களையும் பார்த்து வந்தார். ஓலாந்தைவிட்டு, அவர் கடிதாசி செய்யவும், கயிறு வடம் முறுக்கவும், வாள் அறுக்கவும் பயின்றார். கடிகாரவேலையைக் கருத்தாய்க் கற்றார், அவர் இங்கிலாந்தில் சேர்ந்த தொடக்கத்தில், துரைத்தனத்தார் அவர் வாசம்பண்ணுதற்காகச் சிறந்த மாளிகை ஒன்று விட்டுக் கொடுத்திருந்தார்கள். அது தாம் அவ்விடத்துக்குப் போன நோக்கத்திற்கு வசதி அல்லாததால், அதை விட்டு, கப்பல் செய்யவும், கப்பல் பழுதுபார்க்கவும் டேப்போர்ட் என்னும் ஸ்தலத்துக்குப் போனார். அங்கே அவர் கப்பல் கட்டும், தொழிலைக் கையாடினதோடு, கூட, எண்சாஸ்திரம், கப்பலோட்டும் வித்தை, சித்திர வித்தை முதலியவைகளையும் தெளிவுறக் கற்று, இங்ஙனம் ஒன்றரை வருஷகாலமாய்ப் பரதேசவாசியாய் இருந்து, கலைத்துறை கைவினைத்துறைகளில் கைகண்ட பலரையும் கூட்டிக்கொண்டு தமது ராச்சியத்திற்குத் திருமபினார்.

திருப்பினவுடன் ராஜ்யம், அரசிறை, சமயாசாரம், தே
சாசாரம், நியாயஸ்தலம் முதலிய சகலவிஷய சம்பந்தமான
ஒழுங்குகளையும் புதுப்படுத்தி, உடை, நடை முதலியவை
களைச் சீர்திருத்தி, பீற்றர்ஸ்புர்க் என்று தமது பெயரால்
நவீனமாய ஓர் ராஜதானியையும், அறிவினருக்கு உபயோகமான
பாடசாலைகளையும், சாஸ்திர அபிவிருத்திக்கு ஏற்ற வித்தியாசா
லைகளையும், நாநாதேச புஸ்தகங்கள் சேர்ந்திருக்கப் புஸ்தக
சாலைகளையும், விகடயூக வித்தியார்த்த நூதனங்களின் பரிபா
லனத்துக்கு அடுத்த நூதனசிருஷ்டியங்களையும், பண்டிதப் பயிற்சி
க்கு வேண்டிய ... சாலைகளையும், வியாதியஸ்தருக்கு உப
காரமான ஆதுரசாலைகளையும், வானசாஸ்திரப் பரீட்சைக் கணி
தத்துக்கு ஓர் வானசிகர மண்டபமும், ஓர் தாபரவருக்க
... டமும் செய்து, இவ்வாறும் இன்னும் பலவாறும் தம
து பிரஜைகள் ... அறிவு நாகரிகத் தேர்ச்சி பெ
றுவதற்கு ஏற்ற ... உபாயங்களை ஏற்படுத்தி வைத்தார்.
புஸ்தகங்களை அபிவிருத்தியாக்கும் பொருட்டு, அச்சுக்கூடங்
களை ஸ்தாபித்து, அந்நிய பாஷைகளினின்று மொழிபெயர்
க்கப்பட்ட — சில நூலாசாரங்களைப் பிரசுரஞ்செய்வித்தார்.
ருசிய நாட்டில் வீதிவழியே அவர் சவாரிபோகையில், வீதிப்பு
றத்தில் ... கிருஷிகளைச் செய்வோரைக் கண்டு, விவசாய விஷ
யங்களைப் பற்றி அவர்களோடு சம்பாஷித்ததுமன்றி, அவ
ர்களோடுகூட அவர்கள் வீடுகளுக்குச் சென்று, அவர்கள் தட்
டுமுட்டுச் சாமான்களை எல்லாம் பார்த்து, அவர்கள் உழவே
ருக்கு எல்லாம் படம் வரைந்துகொண்டு போவார்.
"காட்சிக்கெளியன் கடுஞ்சொல்லனல்லனேல்-மீக்கூறு மன்
னனிலம்" என்னும் குறளில், "அரசன் காண்கைக்கு எளிய
னும் இன்சொல்லனுமல், அவனது நிலத்தை உலகம் உயர்த்திச்
சொல்லும்" என்பது யதார்த்தமே ஆயின், உலகம் பீற்றர்ம
ன்னனை உயர்த்திச் சொல்லுதல் சொல்லவேண்டாமே. நமக்

குப் பீற்றர் ராயனின் சாமர்த்தியம் இல்லையானாலும், நமக்குச் சுற்றில் இருப்பவர்களின் நிர்வாக விர்த்திக்கென்று, நாம் பிரயாசப்படில் அதுவே நமக்கு மணமாகும்.

## சுசு-வதி [illegible]பேணும் முறை.

### முதல்பிரிவு.

க. நமது உடம்பு சிலசில இயல்பு முறைகளுக்கிசையப் படைக்கப்பட்டிருக்கிறதினாலே, சீவன் இருக்கிறவரையில் ஒவ்வொருவனும் தான் சுகசரீரியாகவும், முயற்சியுள்ளவனாகவும், தனக்கும் பிறர்க்கும் உபயோகமுள்ளவனாகவும் இருக்கும்படிக்கு, தன் நடைகளையும், செயல்களையும், கடமைகளையும் ஒழுங்குபண்ணத்தக்கதாக அவ்வியல்பு முறைகளைக் கற்றறியவேண்டும்.

உ. உடம்பு சவுக்கியமாயிருக்கும்படி, அதிலுள்ள பேசிகள் சிலவேலைகளிலும், மறுவகை அப்பியாசங்களிலும் பழகிப்பட்டிருக்கவேண்டும் என்பது அவைகளுக்குரிய பிரமாணமாம்.

ந. உயிரைத் தாங்குகிறதற்குப் போசனம் அவசியமாயிருக்கின்றது மெய்தான். ஆயினும் இணக்கமான போசனத்தை ஏற்ற அளவாக ஒழுங்காய்ப் புசிக்கவேண்டும். அல்லாதிருந்தால், சீரண உறுப்புகளின் தொழில்கள் பிசகுபட்டு அவைகளிலே வியாதியுண்டாம்.

ச. சுத்தவாயுவைச் சுவாசிப்பது பூரணசுகத்துக்கு மிகவும் அவசியம். காற்றின்றி அசோரமாயிருக்கும் ஒடுங்கிய வீடுகளிலும், சனநெருக்கத்துக்குள்ளும் இருந்து சுவாசிக்கிறதினால் வரும் நஷ்டம், தொடக்கத்திலே விளங்காதபோதிலும், சற்றே செல்லச்செல்லத் தெளிவாய்த் தோற்றும். இந்த நஷ்டம் படிப்படியாய் உண்டாவதினால், இவ்வித இடங்களில் உள்ள வாயுவைச் சுவாசிப்பது உடம்பின் சுகத்துக்குரிய முறைகளால் விலக்கப்பட்டதென்று அறியவும்.

௫. உடம்புக்கு நித்திரைவேண்டியது. நித்திரையினால் உண்டாகும் முழு நயத்தையும் அனுபவிக்கும்பொருட்டு, ஒழுங்கானவேளையிலே நித்திரைகொள்ளவேண்டும். "வெள்ளெனத் துயின்று விடியுமுன் எழும்புதல்" சுகத்தையும், அதனுடனே கூடிய நன்மைகளையும் கொடுக்குமென்பதை இளைஞர்கள் எல்லாரும் கற்றுக்கொள்ளவேண்டியது. மூளையானது ஒழுங்காக நித்திரையினால் ஆறவும், மறுபடி வேலையில் முயலவும் வேண்டும்.

௬. தோலின் பரப்பு வெகு விசாலமாயிருக்கிறதினாலும், உடம்புக்கு உதவாத பதார்த்தங்களைக் கழிக்கின்ற உறுப்புகள் இதனுடனே நெருங்கிய சம்பந்தமாயிருக்கிறதினாலும், இப்போர்வையின் தொழில்கள் சரியாய் நடந்துவருவது நமது சுகத்தைப்பேணுவதற்கு மகா அவசியம் என்று காண்கிறோம்.

௭. நாம் ஒழுங்காய் உண்பது சரீரசுகத்துக்கு எவ்வளவு அவசியமோ, அவ்வளவாய் அதிலிருந்து பிரியும் மலசலாதிகளையும் ஒழுங்காகச் சுத்திபண்ணிவிடுவதும் அவசியமாம்.

தொகுத்துரை—எவர்களும் நல்ல காற்றை ஆக்கிராணித்தல், சரீரமுயற்சி, உணவு, நித்திரை, ஸ்நானம், மலசுத்தி என்னும் இந்த ஆறு காரியங்களையும் ஒழுங்காக நடப்பித்துக் கொண்டுவருவதே சுகத்துக்கு ஏதுவாம்.

### வியாதி தீர்த்தல்.

௮. வியாதிதொடங்கி அதிகரிக்குமுன், வைத்தியனை அழைப்பதுசிதம். இப்படிக்கொத்தவேளையிலே வியாதிக்காரன், அல்லது அவனுக்கு உதவிசெய்பவன் பண்ணும் பக்குவங்கள் சரியானவைகளாயிருக்கவேண்டும். இல்லாவிட்டால், வியாதிக்காரனின் உபாதி அதிகரித்து உயிரளவிலும் மோசம் நேரிடக் கூடும். ஆகையினாலே வியாதிக்காரனுக்குச் சவுக்கியம் உண்

டாரும்பொருட்டுச செயயபபககூடுவதனனது, செயயததகாத தினனதெனனறு நாம அறிவது மிகவும பிரயோசனமாம.

௯. வியாதி அதிகமாய உணடாகும காலஙகளிலே, நோயா ளியின சரீரம, மனம இவைகள் ஆறியிருககும்பொருட்டு, அவனை எலலாவிதமான சரீரமுயறசிகளையும மனமுயறசிகளையும, விட்டுவிடவேணடும. வியாதி சொறபமாயிருககிறபோதிலும நோயாளி ஆறியிருபபது நலம.

௧௦. காறறிலே கெட்டதும இரைசசலினாலே நோயாளியின மனது குழமபி அலைநதுபோகும ஆகையினாலே நோயாளி, படுத்திருககும அறையிலே கூடுமானமட்டும அமைசசல உணடா யிருககவேணடும. அதறகுக கட்டவும மனிதர சாசசடியாவது, உரலிடிபபாவது, மாறறமெய இரைசசலாவது இலலாதபடி பாரககவேணடும. மேலும, நோயாளி இருககும அறை விசா லமானதும, காறறு நனறாய வசதியாயிருபபது, அனறி, கூடியமட்டும தடடுமுட்டுச சாமான வெறறறையாகவும இருகக கவேணடும நோயாளிககு விசாலமான அறை கொடுககக் கூடியதாயிருககு, இடுககமான ஒழுஙகறற அறையிலே அவனைக கிடககவிடுவது தகுதியலல.

௧௧. வியாதிககாரன படுத்திருககும அறையிலே இருகக வேணடிய வெளிசசத்தின முறைமையைககுறிததும எசசரிககை யாயிருககவேணடும. அதிலேஇருககும வெளிசசம மட்டா யிருபபது உசிதம. வெளிசசம அதிகரிததால, இரைசசல் காதினவழியாய நோயாளிககு வருததததைக கொடுபபதுபோல, அதிக வெளிசசமும கணணின வழியாய மூளையிலே தாககி வருததததைக கொடுககும்.

௧௨. நோயாளி சிறுபிளளையாயிருநதாலும, முதிரநதவனா யிருநதாலும வியாதிபபாககசசுருககிற உறறார சிநேகிதாகளாலே கொஞசநேரததுககாகிலும மனிதாகளின சநதடிபபடடா லு. நோயாளிககுத தனனைச சநதிகக வநதவாகளைக கணடு

பேசின சாக்கோஷம் வாங்கப் போனபின்பு சோகமாய் மா
றிப்போம். வியாபிக்கிற எவ்வளவு மோசமான நிலையிலா
யினும், மரணத்தருவாயிலாயினும் இருக்கும்போது, சாங்கி
ரமையாகப் பிரகிருதியடைக்கக்கூடாதவனாகவும் அவசியம் சொல்லி
யைச் சரிசமாதானப்படுத்துவது நீதியென்றும், எனினும்
அவன் வீட்டாரிடத்தில் விசாரிக்கவும். வந்தவன் வழியாய்ச்
சொல்லி அனுப்புவதும், அவசரமானசெய்தி பேசிக்கொள்வ
தும் அவனிடத்தில் ரகசியமாய்ப் பேசுவதும், அந்தநேரத்திலேயானி
டமிருப்பவன் வழியாய்ப் பேசிக் கொள்ளவேண்டும்.

கருடபுராணம்,—ஒரு வைத்தியன் சொல்லுகிறதாவது, சுர
மாய்க் கிடந்த ஒரு பெண்பிள்ளையைப் பார்த்து, நான் அவளுக்
கு மருந்து கொடுக்கையிலே, அவள் சவுக்கியமானதைக் கண்டு,
மருந்தையும் நிறுத்தி, பக்கமுள்ள சொற்பமான நோய்
உண்டென்று சொல்லி, மறுநாள் வந்து அவளிடத்தில் சந்
தோஷப்படாமலிருக்கப் பண்ணினேன். அந்தக் கால
த்திலே ... யோகசமயத்தில் சாவில் ... விடுவார்கள்.
நான் அங்கே போனபொழுது, அவளுக்கு ... அதிசயித்தி
ருக்கக் கண்டேன். ... கால் ... பட்டு, ... மரண ... உபாதைக்கு
முடிவு உண்டாகிறது. ஒருவருக்கு ... சந்தோஷ
மேற் இருக்கவேண்டுமென்று நான் கருதிப் போனபி
ன், ... அவள் முகமுழு
துப் பக் காண உக்கிரமாய் ... கொண்டு. ...
போய், அவர்க கண்டு பேசுவார்கள் என்று ...
அவர்கள் போய் அவருடனே சம்பாஷணைப்பண்ணின இனிமை
ததும்ப அவருக்கு அதிக தலைநோவு உண்டாயிற்று. கடைசி
யில் அவர்கள் பேச்சே அவளைக் கொன்றது.

௧௩. வியாதி தலைப்படும்பொழுதும் சௌக்கியம்பொழு
தும் தடிப்புக்கொண்ட சாப்பாடுகொடாமல், இலேசாய்ச்

ஜீரணிக்கத்தக்க கஞ்சி முதலிய உணவுகளைக் கொடுக்கவேண்டும். தாகம் உண்டாயின் தண்ணீர், கஞ்சித்தெளிவு, அல்லது காரசாரமற்ற பானங்களைக் குடிக்கலாம். வியாதியாய்க்கிடக்கும் அவனுக்கு ஆசை அதிகரிக்கத்தக்கதாய், சுவையானவைகளைக் காட்டுவது தவறு. நோயாளியினுடைய உடம்பு சீர்குலைந்திருப்பதினால், அவனுடைய இரைப்பையிலே உணவு ஜீரணப்படாது: ஆகையால் அவனுக்கு உணவிலே உண்டாகும் வெறுப்பு அவ்வேளையில் திணிக்கப்படாது என்பதற்கு இயல்பாய் உண்டாகும் எச்சரிப்பாம்.

கச. வியாதி தீர்ந்து நோயாளி குணம் அடைகிற காலங்களிலே தின்கிற சாப்பாடு கலப்பின்றி இலேசானதும், இரைப்பையிலே முட்டுண்டாகாதபடி கூடிய அளவு முறையானதுமாய் இருக்கவேண்டும். வியாதிக்காரருக்குக் குறித்த வேளைகளிலே முறையாய்ச் சாப்பாடு கொடுக்கவேண்டும். ஒழுங்கில்லாமல் கொஞ்சம் கொஞ்சமாய் அவர்களுக்கு அடிக்கடி உணவு கொடுப்பது ஆகாது.

கரு. வியாதிக்காரனுக்கு வைத்தியம் செய்துவருகிறவர் அவனுடைய வியாதி நீங்கி, மருந்து நிறுத்தியிருக்கும் நாட்களிலும், அவனுடைய சாப்பாட்டைக்குறித்து வைத்தியன் மிகவும் சாக்கிரதையாய் விசாரணை செய்துவரவேண்டும். நோயாளியின் உணவைக்குறித்து எவனும் அதற்கேற்ற புத்தி சொல்லலாமென்ற பொது எண்ணமும், சுகம் அடைந்திருப்பவனுடைய பசிதானே அதற்கு அறிகுறியாயிருக்குமென்பதும் மிகவும் தவறு.

திருஷ்டாந்தம்—ஒரு வைத்தியன் சுரமாய்க்கிடந்த ஒரு பெண்பிள்ளையைக்குறித்துச் சொல்லுகிறதாவது: நான் அவளுக்கு மருந்து கொடுத்தபின் சிலநாட்களுக்குள்ளே சுரம் மடிந்துபோய்விட்டது, அதின்பின்பு அவள் காரசா

ரமற்ற இலேசான உணவு தின்னும்படி கற்பித்து, உடனே ஒரு காரியத்தைப்பற்றி இரண்டு நாளாகச் சற்றுத் தூரம் போயிருக்கையில், தன்னளவுக்கு அதிகமான காரியங்களை நடப்பிக்கும் குணமுள்ள ஒரு அம்மை அந்தப் பெண்பிள்ளையைப் பார்க்க வந்தாள். அப்பொழுது அந்தப் பெண்பிள்ளை சுகப்பட்டுவந்தும், மிகவும் பலவீனப்பட்டிருக்கிறதை அந்த அம்மை கண்டு, இவளுக்குப் பெலன் உண்டாகத்தக்க சாப்பாடு கொடுத்தால் நயமாயிருக்கும் என்றாள். அவள் சொன்னதைக் கேட்டு உடனே, ஒரு துண்டு இறைச்சியை எடுத்துச் சமைத்துச் சொஸ்தமடைந்து வரும் அந்தப்பெண்ணுக்குக் கொடுத்தார்கள். அவளும் அதை வாங்கி ஆவலுடனே தின்றாள். அதினாலே அவளுடைய சுரம் மீண்டு, முன்னையிலும் அதிகரித்துக்கொண்டது.

---

## சுகுவது சுகம் பெறும் முறை.

### இரண்டாம் பிரிவு.

---

௪௬. வியாதியாய் இருக்கும்பொழுதும் சரீரத்தின் தோல் சுத்தமாயிருக்கவேண்டும். தோலிலுள்ள பலவிதமான நுண்ணிய கருவிகள் தங்கள் தங்கள் தொழில்களிலே பிசகாமலிருப்பது, உடம்பின் உள்ளுறுப்புகள் சுகமாயிருக்கிறதற்கும், அவ்வுறுப்புகளிலே பற்றியிருக்கும் வியாதி நீங்குகிறதற்கும் ஏதுவாயிருக்கும். ஸ்நானத்தினாலும், ஸ்நானத்தின்பின் ஈரம் உடம்பிலே சுவறாதபடிக்கு நன்றாய்க் காயத் துடைப்பதினாலும் தோலின் துவாரங்கள் வழியாய்க் [illegible]ிந்து போகவேண்டிய அழுக்கு நீங்காதிருக்குமேயானால், தோலிலுள்ள துவாரங்கள் அடைக்கப்பட்டிருக்கும். அப்படியானால் உடம்பின் உள்ளுறுப்புகளிலுள்ள வியாதி அதிகப்படும்.

திருட்டாந்தம்—ஒரு மனுஷி தன் சுவாசப்பையிலுள்ள வியாதியினாலும், இருமலினாலும் உபாதியடைந்திருந்தாள். இத்தோடே அவளுடைய தோலின் தொழில் நடவாமல் அது வறட்சிகொண்டிருந்தது. அவளுடைய வியாதிக்கு அநேக மருந்துகள் செய்தும் சகாயங்காணவில்லை. இப்படி இருக்கையில், சமீபமான ஸ்தானத்தில் வசித்த குருவானவர் அவளைப் பார்த்து, நீ நாள்தோறும் இரண்டுதரம் ஒழுங்காய்க் குளிப்பது நல்லது என்றார். இப்படியே அவள் செய்துவரும் நாளிலே தோலும் இளக்கமாகி, அதின் தொழிலும் திரும்பச் சரிப்பட்டபடியினாலே சுவாசப்பையிலுள்ள வியாதியும் நீங்க, இருமலும் இருந்த இடந்தெரியாமல் ஓடிப் பறந்து போயிற்று.

கஎ. நோயாளி இருக்கும் அறை சுத்தமாகவும், அதிலுள்ள சாமான்கள் ஒழுங்காகவும் இருக்கவேண்டும். நோயாளி தான் இருக்கும் அறை சீராகவும், அதிலுள்ளவைகள் ஒழுங்காகவும் இருப்பதைக் காணும்பொழுது, அவன் வியாதி நீங்குகிறதற்கு உதவியாய் அவனுக்குச் சற்றே மன ஆறுதல் உண்டாகும். நோயாளி படுத்திருக்கும் அறை அழுக்காயும், அங்குள்ள சாமான்கள் குழப்பமாயுமிருந்தால், அது மனதுக்குச் சஞ்சலமாக, மூளைநரம்புகள் மிகவும் தளர்ந்து அவனுக்குப் பலவீனமுண்டாகும்.

கஅ. வியாதிக்காரன் சுத்தமான காற்றையே சுவாசிக்க வேண்டும். உடம்பில் ஓடும் இரத்தம் எவ்வளவு சுத்தமோ அவ்வளவாக, உடம்பிலுள்ள வியாதியும் நீங்கத்தக்கதாயிருக்கும். வியாதிக்காரன் படுத்திருக்கும் அறையிலே அடைபட்டிருக்கும் நச்சுக்காற்றினாலே வியாதி நீடித்து, அநேக இடங்களி[illegible]திகப்படுவதுமாத்திரமல்ல, அக்காரணத்தினால் உயிரளவிலும் நட்டம் உண்டாகும்.

திருட்டாந்தம்—க-வது. ஒரு வைத்தியன் சொன்னது:

மிகவும் பலவீனப்பட்டு அலட்டு அடைந்திருந்த ஒரு வியா திக்காரனைப் பார்த்து யோசனை சொல்லும்படி நானும், பின் னும் ஒரு வைத்தியனுமாக அழைக்கப்பட்டோம். அநேக நா ளாய் அவனுக்கு நித்திரை இல்லை. அவனுக்குக் குளிர்பிடிக் கும் என்று பயந்து, அவன் படுத்திருந்த அறையின் கதவுகளை இறுக்கிச் சாத்தி அனலாக்கிவைத்திருந்தார்கள். அவனுக்குச் செய்திருந்த வைத்தியத்துக்கு விகற்பமாய் நான் செய்ததெ ன்னவெனில், அவன் படுத்திருந்த கட்டிலுக்குச் சற்றெட்டி யிருந்த கதவையும் பலகணியையும் திறந்துவிட்டதுதான். நான் அவைகளைத் திறந்துவிட்டபின், சற்றுநேரத்துக்குள்ளே அவனுடைய அலட்டு நீங்கிற்று. உடனே மிகவும் ஆரோக்கி யமாய் நித்திரைகொண்டான். அதுமுதல் அவன் அதிக சீக் கிரத்திலே சுகமடைந்தான். அவனுக்கு உண்டாயிருந்த அல ட்டு அவன் அசுத்தமான காற்றை ஆக்கிராணித்ததினாலே வந் தது என்பதற்கு எனக்கு யாதொரு சந்தேகமுமில்லை.

உ-வது. சிலகாலத்துக்கு முன்னே வசூரி வியாதிக்காரர் படுத்திருக்கும் அறையிலே காற்று உலாவினால் குளிர் உண்டா கும் என்று பயந்து, அங்கே சற்றும் காற்றுச் செல்ல இடம் வைக்காமல் அறிக்கை பண்ணிவந்தார்கள்; அக்காலத்திலே ஒரு தருணத்தில் ஒரு துரைமகளுக்கு வசூரிநோய் உண்டா யிருக்கையில், அவள் காலம் சென்றுவிட்டாள் என்று அவ ளுடைய மனிதர் எண்ணி, அவளைக் கொண்டுபோய் வீட்டு க்கு வெளியேயிருந்த ஒரு பாதலின்கீழ் கிடத்திவிட்டார்கள். அங்கே காற்று அவள்மேலே விழுந்ததினால் அவளுடைய களை நீங்கிப்பிழைத்தாள்.

கக. சுகவேளைகளில் உள்ளபடி ஊண், மலசுத்தி, நித்தி ரைமுதலியவைகள் வியாதிகண்டிருக்கும் காலத்திலும், அக் காலத்துக்கடுத்த அளவு வேண்டும்; நோயாளி சுககாலத்தில் வழக்கமாய் நித்திரைக்குப் போகும் நேரம் இன்னதென்று

அறிந்து, அந்நேரத்துக்குச் சற்றுமுந்தி அவனுடைய படுக்கையை ஆயத்தப்படுத்திவைக்கவேண்டும்.

வியாதியுள்ள காலத்திலே சுககாலத்திற்போல ஒழுங்காய் மலசலாதிக்குப் போக வராதிருந்தாலும், நோயாளி வழக்கம்போலச் சுத்திபண்ணிவரவேண்டும். இப்படிச் செய்வதினால் வியாதி மாறுவதற்கு உதவியாயிருக்கும். அன்றியும், பேதிமருந்து உட்கொள்ளவும் வெகுவாய் அவசியம் இராது. உலாவித் திரிகிறவனுக்கு ஒரு நாளுக்கு ஒரு முறை மலசுத்தியாவது வழக்கமானால், அவன் கிடையாயிருக்கும்போது இரண்டுநாளுக்கு ஒருமுறை சுத்தியாவது போதும்.

௨0. வியாதிகளை நீக்கிச் சுக கொடுக்கத்தக்க இயற்கையான சக்தி ஒன்று அவரவர் சரீரத்தில் உண்டு. அதற்குச் சுகத்துவம் என்று பெயர். வைத்தியன் கொடுக்கும் மருந்து தானாய் வியாதி முழுவதையும் நீக்காமல், சுகத்துவத்துக்குச் சார்பாய் மாத்திரம் நின்று அதற்கு உதவிசெய்கின்றது.

அசீரணப்பட்டு வியாதியுண்டாக்கக்கூடிய பதார்த்தங்களை இரைப்பையிலேயிருந்து நீக்கும்படி வாந்திசெய்ய மருந்துகொடுப்பது, அல்லது வயிற்றிலே அடையலாகி அங்கே அழற்சி கொடுக்கும் பழமலங்களைக் கழற்றும்பொருட்டுச் சில தருணங்களிலே பேதிமருந்து கொடுப்பது நல்லது. ஆனாலும் இவ்விருவிதமான மருந்தையும் ஒருவனுக்கு அடிக்கடி கொடுத்துவந்தால், வியாதி இதனாலும் உண்டாகும்.

௨க. வியாதிகளுக்கு மருந்துகொடுப்பது மிகவும் பிரயோசனமாயிருந்தும், சுரம், வயிற்றுளைவு, சலதோஷ முதலிய தாபிதநோய்கள் சுகத்தைப் பேணும் பக்குவங்களைக் கருத்தாய்க் காத்து நடந்தால், மருந்தில்லாமலும் நீங்கக்கூடும். சடிதியாய் மோசம்செய்யும் வியாதிகளுக்கேயன்றி, மற்றப்படி நன்றாய்க் கற்றுணர்ந்த சற்குணவைத்தியன் சொன்னால் ஒழிய, ஒருவரும் எந்த மருந்தையானாலும் தின்னப்படாது.

# ௯௯-வது. டால்ஹௌஸி பிரபுவின் வரலாறு.

---

அரும்புகழ் ஓங்கும் மகானுபவரான இவர் 1848-ம் ௵ ஜனுவரி ௴ முதல் 56-ம் ௵ மார்ச்சு ௴ வரையும் இந்தியாவின் கவர்னர் ஜெனராலாய இருந்தார். அப்புறம் சீமைக்குத் திரும்பி, டிசெம்பர் ௴ 19௳ ஸ்கொத்திலாந்தில் தமது மாளிகையிலே தேகவியோகமானார். இந்தியாவில் அரசியற்றினவர்களுள் இவரையொத்த அரு உத்தம மகத்துவ விசேஷம்பெற்றோர் மிகவும் சிலரே. ஆகையால் இவரை இழந்ததனால் இந்தியாவுக்கு வந்த நஷ்டம் கொஞ்சம் அல்ல. ஆளும் வல்லமையில் அவர் அகன்ற வரம் பெற்றவர். அவரோடு சகவாசம் செய்தவர்கள் அவரிடத்திலே நம்பிக்கை கொண்டு, அவரைப்போல உணர்ச்சியுள்ளவர்களாய, அவர் கொண்ட கருத்துக்கு இணங்க நடக்க வல்லவர்களானார்கள். தம் உத்தியோகக்கடமைகளை நிறைவேற்றுவதில்அவர் தாமே இடைவிடாத பிரயாசியாய் இருந்ததுமன்றி, தமது கீழுத்தியோகஸ்தரும் அப்படியே உழைத்துவரும்படி வெகு கண்டிப்பாய் இருந்தார். ஜாக்கிரதையுள்ளவர்களையும் யோக்கியர்களையும் உச்சாகப்படுத்தும்படி மேலுமேலும் மேன்மையான உத்தியோகங்களில் ஏற்றியும் வந்தார். சமுசயத்திற்கு இடமானவைகளில் அவா ஒருபொழுதும் பிரவேசித்ததில்லை. யாதொரு விஷயத்திலே மனம்செலுத்தினாலும் அதின் முடிவு இன்னதாய் இருக்கும் என்று முன்னதாய்த் தெளிந்துகொள்வார். ஒரு காரியத்தை முயன்று நடத்தினால், முடியாமல் விடார். மற்றநேக கவர்னர்களைப்போலே அவருக்குக் கீழுத்தியோகஸ்தருடைய உதவியால் காரியங்களை நடத்தவேண்டும் என்ற அவசியமில்லை. சகலரும் அவரை மிகவும் கனம்பண்ணி அவருக்குப் பயந்து நடந்தார்கள்.

அவர் காலத்தில் நான்கு பெரிய தேசங்கள் ஆங்கிலே
இந்திய துரைத்தனத்திறகுள் சேர்ந்தன. அவையாவன,—
பஞ்சாப், பைகோ, நாகப்பூர், அயோத்தி என்பவைகளே
யாம். முந்தின இரண்டும் அங்கிலேயர் சண்டையிலே செயி
த்துப் பற்றிக்கொண்டார்கள். அந்நாட்டு அதிபர்களே அந்
தச் சண்டைக்கும் காரணர், நியாயமான சுதநதரவாளி முட்
டுப்பட்டதே நாகபபூர் எடுபட்டதறகுக் காரணம். அயோ
த்தியாவின் அரசனுடைய பரிபாலன முறைக்கேட்டினாலும்,
உடன்படிக்கைக்கு இரண்டகமான நடத்தையினாலுமே அது
வும் அங்கிலேயர் கைவசம் ஆயிறறு.

இதன்றியும், தேசத்து வருமானப பெருக்கத்துக்காகவும்,
அரசியலின் சீர்த்திருத்தத்துக்காகவும் அவா அதிசமாய முய
றசி செய்தார். அவருடைய ஜாக்கிரதையும் ஆளுகையின உப
யோகமும் பற்பல விஷயங்களால் விளங்கும். அவர் வெகு
தூரத்திறகு இருப்புப்பாதை போடும் வகையை யோசிதது,
சில தூரம்வரையில் அதைத்தொடங்கியும் விட்டாா; மைல
ஒன்றுக்கு 500 ரூபாய்க்குமேல் செலவுசெய்த, 4000 மைல்
தூரத்துககு இநதியாவில் மின்தபால் வைப்பிததாா; கலை
த்தா நகரிமுதல் பஞ்சாப்பைச் சேர்ந்த பெஷாவூர் வரைக்
கும் ஆறுகளில் தகுந்த பாலங்களும் கட்டுவித்து, 2000 மை
ல் தூரத்துக்கு செவ்வையான பாதையும் செப்பனிடுவித்தார்;
கங்கை வாய்க்கால் ஒன்று வெட்டுவித்தார்; ஆறறுவாய்க்கா
ல்களில் இதைப்போலே பெரிது எங்கும் இல்லை. அவர்
னியாகுமரிமுதல் பஞ்சாப் வரையும், அல்லது கல்கத்தாமு
தல் சிநது வரையும் அரை அணாவில் காகிதம் போக்குவரவு
செய்வதற்கு உபயோகமாய் வெமான தபால்முறை பண்ணு
வித்தார்; மராமத்துவேலைகளுக்குப் புது ஒழுங்குகள் செய்
வித்தார்; வாலிபரை சிவில் எஞ்சினியர் வேலைக்குப் பழக்
கும்படி ஒரு வித்தியாசாலையும் சாஸ்திர பள்ளிக்கூடங்கள்

முதலானவைகளும் ஸ்தாபித்து, அவைகளைத் துரைத்தனத் தார் விசாரணைக்குள் ஆக்கினார்; இத்தேசத்துப் பெண்பிள் ளைகளைப் படிப்பிக்கவும் வேண்டிய பிரயத்தனங்களைச் செய் தார்; உப்பு, காப்பி, தேயிலை, சணல் முதலியவைகள் விளை விக்கவும், கிருஷிகாரியங்களைச் சிறப்பிக்கவும், காட்டுமரங் களைப் பத்திரப்படுத்தவும், தேசத்திலே இரும்பு, நிலக்கரி முதலியவைகளை அதிகம் அதிகமாய் வெட்டி எடுக்கவும் தக்க திட்டம் செய்தார்; "உடன் கட்டையேறல்" என்னும் துர் வழக்கம் சுட்டோடே நீங்கிப்போகவும், வழிப்போக்கரை மறித்துக் கொள்ளையிட்டுக் கழுத்தை நெரித்துக் கொல்லு கிற தக்கர் என்னும் கொலைக்கள்ளர் பூச்சொழிக்கவும், பெ ண் குழந்தைகளை வதைசெய்யும் படுதோஷம் ஒழியவும் ஏற் ற பிரயத்தனங்களைத் தீர்க்கமாய்ச் செய்தார்.

இயல்பாகவே அவர் நல்ல சுகதேகி அல்ல. உள்ள சுகத் தையும் அளவுக்கு அதிகமான பிரயாசம் கெடுத்துப்போட் டது. சுகம் வரும் என்று நீலகிரிக்குப் போனார், அங்கும் அது வரவில்லை. சுகவீனமாய் இருந்த தம்முடைய பத்தினி யை 1853-ல் சீமைக்கு அனுப்பினார். அந்தப் பெருமாட்டி க்கு இடைவழியிலே பிராணவியோகம் சேரிட்டது. அத னால் அவர் மிகவும் துன்பப்பட்டார். அப்படி இருக்கவே, அவரும் சீமைக்குப் போகவேண்டியதாயிற்று. அவருக்குப் பதிலாக 1856-ம் வருஷம் பெப்ருவரிமீ கனிங் பிரபு நியமிக்க ப்பட்டார். ஆகையால் மார்ச்சுமீ டால்ஹௌஸி என்னும் பிரபு கல்கத்தா நகரியை விட்டுப் புறப்பட்டார். அத்தருண த்தில் கல்கத்தா பிரஜைகள் அவருக்கு எழுதிக்கொடுத்த வந் தன பத்திரத்திற்குப் பதிலாக, அவர் எழுதினதில், "இனி மேல் நான் இன்னின்னபடி இருக்கவேண்டும் என்று நீங் கள் பரிவுகொண்டிருக்கிறது உங்கள் அன்பை விளக்குகிறது. எனக்கு வருங்காலத்தைப்பற்றி அறியவேண்டிய அவசியம்

இலலை எனகக ஒபபுவிககபபடட வேலையை முடிசசு மா ணமும காரியசி; தியும பெறவேணடும எனட்தே எனககு அபபடசையாய இருநதது. நினைதத காரியம கைககூடவும செயதது இதுவே எனககு சநதோஷம. நான துரைததன உததியோகததில பிரவேசிதது 13 வருஷம ஆகிறது மிக வும பிரயாசமான பெரிய வேலைகள எனமேல சமததபபட டிருநதன நான இவைதது அலுததுபபோனேன, இனி என கரு இளையாறுதலே வேணடும அசறகாகவே காததிருக கிறேன" எனறுா. அவா கலகததசாலை விடடுப புறபபட டுக கபபல ஏறபபோகையில, திரளான ஜனஙகள தககசா காததில அமிழநதினவாகளாய அவாபின சென்று, வெகு மனவருததததோடு வழியனுபபி பிரிநதாாகள அவா எங கிலாநதிலே போயச சோநதபொழுது, அவருககு வருஷம ஒனறுககு 50,000 ரூபாய பெனஷன சமபளம பதிநது திருமபவும உததியோகம பாாககுககொளளததககதாய நூவ ருககுச சுகம சேராமல, 45 வயசில இகலோகததைவிடடுப பிரிநதுபோனாா.

---

## ௯௭ வது அலெக்ஸாந்தர் ஸெலகர்க

---

பெருமபாலும அதிசயமான சஙகதிகளைப பூாாயமாய சரிததிரநது பொழுதுகழிபபது மனுஷா இயறகை பின வரும அபூாவ கதை வாசிபபவாகளுககு வியபபும விநோ தமுமாயிருபபதும தவிா, மிருநத அறிவை "உணாததுவதா கவும இருககுமாதலால, அதை இஙகே சுருககித தெரிவிககி றோம.

எஙகிலாநதில பிறநது, வளாநது, மரககலம ஓடடும தொ ழில பயினறு, மாலுமியுடன மாறுபடடதனால மனுஷ சஞ

சஞ்சாரமில்லாத ஒரு தீவில் இறங்கி, அங்கே காட்சி, கேள்வி, அனுபவங்களாலாயினும், கனவிலாயினும் மனுஷர் ஒருபொழுதும் அறியாத அபூர்வ விஷயங்களைக் கண்டறிந்து, நாலு வருஷமும் நாலு மாசமும் ஏகாந்தமாய் நாள் கழிந்து, மீண்டும் 1711-வருஷம் எங்கிலாந்திற்கு க்ஷேமமாய்ப் போய்ச் சேர்ந்த ராபின்ஸன் குருஸோ என மறுபெயர் வழங்கும் அலெக்ஸாந்தர் ஸெல்காங் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் அதிக கல்வி கற்காதிருந்தும், எவர்களும் வியக்கத்தக்கும் அளவான இயற்கையறிவுடையவன். அவனைக் கண்டு சம்பாஷித்தவர்கள், நிர்மானுஷியமான ஜியுஅன் பெர்நான்டெஸ் என்னும் தீவில் அவன் சஞ்சரித்தகாலத்தில் அவனுடைய உள்ளத்தில் நிகழ்ந்த பற்பல பரிவர்த்தனங்களை அவன் வாக்மூலமாய்க் கேட்டு, ஆச்சரியத்தால் பரவசப்பட்டார்கள். ஒரு பகலிலாயினும் இரவிலாயினும் நம்மில் ஒருவன் மனுஷர் முகத்தைக் காணாமலும், அவர்கள் சொல்லைக் கேளாமலும், முன் போய் வழக்கமில்லாத ஓரிடத்தில் தனித்திருக்கவும், அங்கிருக்கையில் அவன் உள்ளத்தில் உண்டாகும் ஒப்பற்ற துக்கலைச் சகிக்கவும் மாட்டுவானு-மாட்டானே. சிறுபருவமுதல் ஜனசங்கத்தில் சேர்ந்து, மரக்கலத்தில் பலருடன் கூடித் தொழில்பயின்று, உண்டு உடுத்துச் சுகித்து உல்லாசமாய் வாழ்ந்த இவன், சடிதியில் அவர்களை விட்டுப் பிரிந்து, குடியில்லாத தீவில் சேர்ந்து, க்ஷணபொழுதாயினும் சகிப்பதற்கரிய வெவ்வேறு சங்கடங்களையும் விக்கினங்களையும் நாலு வருஷமட்டும் சகித்துத் தப்பிப் பிழைத்து, திரும்பவும் தன் மனுஷர் மக்களுடன் போய்ச் சேர்ந்தது ஆச்சரியந்தானே-அவன் உத்தியோகம் செய்த கப்பலின் மாலுமிக்கும் அவனுக்கும் எளிதில் நீங்காத விரோதம் உண்டாயிற்று, அன்றியும் அக்கப்பலின் அடிப்பலகையில் துவாரம் உண்டாய் நாளுக்குநாள் அதிகரிக்க, அதற்கு அபாயம் நேர்வதாகத்

தோன்றியது. இப்படியிருந்து நிர்ப்பந்தமாய் நாள் கழித்து ஜலத்தில் மூழ்கி இறப்பதிலும், எதிர்ப்படும் கரையில் இறங்கித் தனித்தாயினும் சமாதானமாயிருப்பதே தகுதியென்று கருதிச் சமயம் பார்த்து, தன் கூட்டாளிகளை விட்டுப் பிரிந்து, மேற்சொல்லிய தீவில் இறங்கினான். இறங்கும்பொழுது, இனி நான் என் தோழர் முகத்தையாவது, வேறு மனுஷர் முகத்தையாவது கண்டு களிப்பது எக்காலமென்று எண்ணி, கண்ணீர் ஆறாகப் பெருகும்படி கரைந்தழுதான்.

அவன் தன்னுடன் கொண்டுபோன சொத்துகள் ஒரு பெட்டி, உடுக்கும் வஸ்திரம், படுக்கும் மெத்தை, துப்பாக்கி ஒன்று, வெடிமருந்து ஒரு ராத்தல், குண்டுகள், ஒரு தீத்தட்டிக் கல்லும் உருக்கும், புகையிலை நாலைந்து ராத்தல், கைக்கோடரி, கத்தி, கொப்பரை வகைக்கு ஒவ்வொன்று, கிறிஸ்து வேத புஸ்தகம் ஒன்று, தெய்வபத்தி யபிவிர்த்திக்கு உரிய புஸ்தகங்கள் சில, மாலுமிசாஸ்திர உபகரணங்கள், கணிதயந்திரங்கள் ஆகிய இவைகளே. அவனிடத்தில் இரண்டு வேளைக்கு மாத்திரம் உதவத்தக்க போஜனபதார்த்தங்கள் இருந்தன. அந்தத் தீவில் வெள்ளாடு, பூனை, எலி இவைகள் திரளாகச் சஞ்சரித்தன. போஜனத்திற்கு ஏற்ற பட்சிகளாவது, நாற்கால் மிருகங்களாவது இருக்குமானால், அவன் அவைகளை எளிதில் துப்பாக்கியால் சுட்டு விழுத்திப் புசிக்கலாகும். அவைகள் அங்கே கட்டோடே இல்லை. அதனால் அவன் சில நாள் வரையில் கடற்கரையில் அபரிமிதமாயிருந்த ஆமைகளைப் பிடித்து, அவற்றின் மாமிசத்தைப் பாகஞ்செய்து பூர்த்தியாகப் புசித்து வந்தான். ஆமையிறைச்சி அதிக ருசிகரமானது. ஆயினும் பழகப் பழகப் பாலும் புளிக்குமென்ற பாவனையாக, அம்மாமிசம் ஒன்றையே எப்பொழுதும் புசித்து வந்ததனால், நாளாவர்த்தியில் அதில் அவனுக்கு அரோசிகம் உண்டாயிற்று. எப்படியும் பட்டினியால் உயிர்

விடுவதிலும் அகப்பட்ட போஜனத்தை அனாவசியமாயினும் உட்கொண்டு பிழைப்பது அவசியமென்று எண்ணி, ஆமையி றைச்சியைக் குழம்பாகச் சமைத்துப் புளிக்கவைத்துத் தித் திப்பிட்டுப் புசித்தான். இவ்வாறு வேளைக்குவேளை உண்டா கும் பசிதாகங்களை நிவிர்த்திப்பதற்கு ஏற்ற எத்தனங்கள் செ ய்வதில் அவன் கருத்துச் சென்றது. பசி அடங்கப் புசித்து ஆறியிருக்கும்பொழுது, அகதியாகிய தனக்கு உண்டாகிய ஆ தரவற்ற ஸ்திதியை நினைத்துப் பரிதபிப்பான். ஜனசங்கத் தில் இருப்பவர்க்கு உள்ள எண்ணிறந்த சிலாக்கியபாக்கியங் களைக் கருதி ஏங்கித் திகைத்துவிழுவான. இனி மனுஷர் முக த்தைக் கண்களிக்க காண்பதும், காது குளிரக் கேட்பதும் எக்காலமென்று சிந்தித்து அழுவான். இந்தப்படி பதினெ ட்டு மாசவரையில் அவனுக்கு இடைக்கிடை எளிதில நீங் காத துக்கமும், சொல்லில் அடங்காத துன்பமும் உண்டா யிருந்தன. அப்புறம் அவன் காரியத்தைக் காலம், இடம், பொருள் முதலிய சாதனங்களுக்கு ஏற்க யோசித்து, செம்ப டவன் வலையில் அகப்பட்ட மீன் தடித்துவிழுந்தாலும் அத ற்கு மீட்சி உணடாகுமா ? கடவுள் குறித்த ஸ்திதியை வில க்க வல்லவர்கள் ஆர் ! கவலைகொள்வதனால் கடுகளவாயி னும் எனது நிர்ப்பந்தம் நீங்காது. சமஸ்த ஜனோபகாரியா கிய தயாபரர் அவரவர்க்கு இன்னின்ன நிலைமைகள் ஏற்ற நிலைமைகள் என்று கண்டு ஏற்படுத்தியிருப்பாரே — ஆதலால் இன்றுமுதல், இந்த வனமே எனக்கு இன்பமான வீடு. இங் குள்ள சொத்துகளெல்லாம் எனக்கே சுவாதீனம் என்று மன க்குறை தவிர்த்து மகிழ்ந்திருப்பேன் என்பதாகப் பிரதிக்கி னைபண்ணினான். மேலும் வேதபுஸ்தகத்தை அடிக்கடி வா சித்ததினாலும்; மாலுமிசாஸ்திர நுட்பங்களை யோசித்ததினா லும், வரவர அவன் துக்கம் நிவிர்த்தியாயிற்று. ஜனசந்தடி யின்றி எப்பொழுதும் மன அமைதியுள்ளவனாய்ச் சௌக்கி

டமான காறறு உலாவும இடததில வாசமாயிருநததனால, அவனுககுச சுகவிரததி உணடாயிறறு. கணணுககுத தோன றியதெலலாம அவனுககு இனபமாயிருநதது. அவன தஙகு வதறகுக கட்டின சிறு குடிசையைச சூழ, பககததில உள ள மரககிளைகளால வேலி போடடு, குளிரகாறறு வீசுமபடி குடிசைவாயிலுககுமுன பநதலிடடு, படா கொடிகளைவைதது வளாததது, சிஙகாரத தோபபின மததியில சிறநத மாளிகை யில வசிககும திரணட செலவமுளள சீமானைபபோல வா ழநதான

அவன திகைததுக கலஙகித துனபமுறறிருநதகாலததில, சமுததிரககரையில திமிஙகிலமபோலும பிரமாணடமான மச சஙகள, வெளிபபடடது கணடும, காது செவிடுபடுமபடி மிக வும உரததுச சததமிடடது கேடடும, அசசததினால உடமபு வெயாதது மூாசசையாயக கிடபபான. சிலவேளை மிருக பலசாலிகளையும ஒரு வீசசில இருசசு சுருடடி இழுககசீச கதாகதத தடிதது நீணடவாலும, பததுப பெயரை ஒரு சவ வில கவவி விழுஙகததககதாகப பாநதவாயுமுளள சடாசிங கஙகளைக கணடு, களைதது விழுநது மரமபோல விறைததுக கிடபபானும அவன காரியததைப புததிபூாவமாய யோசி ததுக கலககம தெளிநது எழுநதபினபு அவனுககு அதிக உறசாகமும துணிவும உணடானதால, சிறிதும பயபபடாமல, அநதமசசஙகளுக்குச சமீபிதது, அவைகள கரையில துமப ககியாயச செலவதறிகது, தனனைப படசிககவநதால ஓடித தபபிததுககொளளலாமெனறு, உபாயமாய அவைகளுடைய நடு உடலின பககததில நினறு, தன கைககோடாரியால அவை களைத தறிதது வதைததான.

அவன வாசமாயிருநத குடிசையைச சூழநது நானகு புறததிலும ஒருவித வெளளாடுகள அபரிமிதமாகச சஞசரி ததன. அவைகள அவனைக கணடால மானைபபோல அதிக

விரைவாய் ஓடிப் பறந்துவிடினும், அவன் வரவர அதிக
பலமடைந்ததனால், அவைகளைத் தொடர்ந்து ஓடி மறித்துப்
பிடித்து அடித்துப் புசிப்பான். சவுக்கியத்தாழ்வு உண்டா
கும் காலத்தில், ஓடி உலாவி வேட்டையாடுவதற்கு இசை
யாதென்று எண்ணி, எளிதில் ஆகாரம் தேடும்படி, அவன்
ஒரு உபாயம் செய்தான். வெள்ளாட்டுக் குட்டியின் மாமி
சம் வியாதிஸ்தருக்கு உத்தம உணவாகுமாதலால், அவன்
இளங்குட்டிகளைப் பிடித்து அவைகளுடைய காலை ஒடித்து
முடமாக்கிவிட்டான். அவைகளுக்கு உண்டான காயம் நா
ளடைவில் நிவர்த்தியாயும், முடமோ மாறவில்லை. அதனால்,
நினைத்தவேளையில் அடிக்குள்ளே அவன் அவைகளை அகப்ப
டுத்திக்கொள்வான். அவன் குடிசையில் ஒரு சேனை எலிகள்
இருந்து வஸ்திரங்களை வெட்டியும், அவன் தூங்கும் வேளை
யில் காலைக் கடித்தும் தொந்தரவு செய்ததனால், அவைகளைப்
பற்றறுவிக்கும்படி, பூனைக் குட்டிகளைப் பிடித்துப் பழக்கிப்
போஷித்து வளர்த்து, தன் பக்கத்தில் படுக்க வழக்கப்ப
டுத்தினான். இந்த உபாயத்தால் எலிகள் நாளாவர்த்தியில்
தொலைந்துபோயின. அவன் உடுத்த வஸ்திரங்கள் கிழிந்து
நைந்துபோனபின், அவன் ஆட்டுத்தோலால் ஆடைசெய்து
அணிந்துகொண்டு, துஷ்ட மிருகங்களுக்குச் சொற்பமும் அ
ஞ்சாமல், இஷ்டப்பிரகாரம் வனத்தில் உலாவித்திரிவான்.
அவன் ஒரு நாள் மேட்டின் உச்சியில் மேய்ந்துகொண்டு
நின்ற ஆடுகளை மிரட்ட, அவைகள் விரைவாய் ஓடிப் பதி
வில் இறங்கின; அவனும் வேகமாய்த் தொடர்ந்து கால் சறு
க்கி, ஆடு கீழும் தான் மேலுமாக முகம் குப்புற விழுந்து,
மூன்று நாள் மட்டும் மூர்ச்சையாய்க் கிடந்தான். அவன்
சந்திரனுடைய கலைவளர்ச்சியையும் தேய்வையும் கண்டு, கால
வரையறை குறித்தான். இவ்வாறு நாள்கழித்து வந்தது அவ
னுக்கு மிகுந்த இன்பமாயிருந்தது., அவன் பகற்காலத்தில்

மிதமாய் உண்டு உழைத்துச் சந்தோஷப்படுவான்; இரவில் மனக்கவலை இன்றி அயர்ந்து தூங்கிச் சுகிப்பான். பிரதிதினமும் குறித்த காலங்களில் ஏற்ற இடங்களில் பேச்சுவழக்கத்தை மறந்துவிடாதபடி, அவன் வேதபுஸ்தகத்தை உரத்த சப்தமாய் வாசித்து, தேவனை நோக்கிப் பிரார்த்தனை பண்ணுவான்.

இந்த அற்புத மனுஷன் தன் ஜன்மதேசத்துக்குத் திரும்பினபின்பு, நான் அவனை முதலில் கண்டபொழுது, அவனை ஜன சங்கத்தைவிட்டுப் பிரத்தியேகமாய்ச் சஞ்சரித்தவனென்று உதடுதேசிக்கத்தக்கதாக, அவன் கோலம் குணம் குறிகளெல்லாம் வேறுபட்டிருந்தன. அவன் எப்பொழுதும் ஆழ்ந்த சிந்தையுடையவன்போல் அடங்கியிருந்து, பக்கத்தில் நடக்கும் சங்கதிகளைக் குறித்துப் பராமுகமாய் இருப்பான். அவனை இக்கரையில் கொண்டுவந்து சேர்த்த கப்பல், மறு பயணம் போய் மீண்டும் துறையில் சேர்ந்தபொழுது, அவன் அந்தக் கப்பற்காரரைக் கண்டு சந்தோஷப்பட்டு, அவர்களைத் தன் வீட்டுக்கு வரவழைத்து, அவர்களுக்கு விருந்துசெய்து உபசரித்தான். மேலும், அவர்களுடன் திரும்பவும் தனது உல்லாசமான வாசஸ்தானத்திற்குப் போவதற்கு அவகாசம் இல்லாததைப்பற்றிச் சிறிது விசனப்பட்டான். நான் அவனைப் பல முறை கண்டு சம்பாஷித்திருக்கிறேன். சில காலம் சென்றபின் ஒரு நாள் அவன் என்னை வீதியில் கண்டு, தனக்கு அறிமுகமானவர்களுடன் பேசும் வண்ணம் பேச, அவனை இன்னானென்று எளிதில் அறியக்கூடாதபடிக்கு, அவன் சாயல், பாங்கு, பழக்கம் எல்லாம் மாறிப்போயின. ஜனசங்கத்தில் சேர்ந்து சம்பாஷித்து நாள் கழித்ததனால், ஏகாந்தமாயிருந்த காலத்தில் அவனிடத்தில் விளங்கின கோலங்குறிகள் ஒழிந்துபோயின.

மேற்சொல்லிய சரித்திரத்தைப் பார்க்குமிடத்தில், தன

க்கு இயற்கையாயுள்ள குறைகளை நிவிர்த்திப்பது போது மென்று எண்ணி இருப்பவனே பூரணசந்தோஷமுள்ளவனென்றும், அதிக பொருள் சம்பாதிக்க வேண்டுமென்று ஆவலிக்கிறவனுக்குச் சம்பாத்தியம் ஏற ஏற, மேலுமேலும் குறைவு உண்டாகுமென்றும் அறியலாம். இதற்கு மேரபடி ராபின்சன் குருசோ சொல்லிய வாக்குமூலமே சாட்சியாம். அது "எனக்கு இப்பொழுது எண்பதினாயிரம் ரூபாய் பெறுமதியான சொத்திருந்தும், ஒரு துட்டும் இல்லாத ஏகாங்கியாய் நாள் கழிந்த காலத்தில் எனக்கு உண்டாயிருந்த சந்தோஷமோ அணுவளவும் இல்லை" என்பது.

---

## ௯௮-வது புருத்தஸ் குணசாரம்.

---

ரோமராச்சியத்தில் புருத்தஸ் என்பவன் மிதமான இயற்கை விவேகியாயினும், மிகுந்த முயற்சியும், அதிக கல்வியுணர்ச்சியுமுடையவன். அவன் தண்டுகளைப் புத்திபூர்வமாய் நடத்தும் தளகர்த்தர்க்குரிய சாமர்த்திய முடையவனல்ல: ஆயினும், அதிக திடமுள்ள சாதாரண யுத்தவீரன். அவன் சற்குணனென்று பெயர்பெற்றவன்; அக்காலத்தார் அனுசரித்த அநேகம தீவினைகளை வெறுத்து விலக்கினவன்; தெளிந்த புத்தியும் அடக்கமுமுள்ளவன். அவன் அரசாட்சி விஷயத்திற்கு அனுகூலமான அகலமற கொள்கைகளை உடையவனல்ல. இதில் அவனுக்கும், அக்காலத்தில் உள்ள சாதாரணபிரஜைகளுக்கும் பேதமில்லை. ரோமபுரியில் சுதேசிகளுக்குள் யுத்தம் நடந்த காலத்தில், அவன் தன் தந்தையைக்கொன்ற பழியைச் சாதிக்க நினையாமல் பொம்பியுஸ் பட்சத்தில் சேர்ந்தான். அவனைக்குறித்துப் புளுதார்க்கு என்னும் சரித்திர நூலாசிரியர் சொல்லியது;—சமயம் வாய்த்தும் புருத்தஸ் என்பவன் தன விரோதிக்கு ஈடுசெய்ய நினையாமல்

அவனுடன் சேர்ந்துகொண்டது, தன் தேசஸ்தர்களுக்கு க்ஷே
மம் உண்டாக்கும் நோக்கத்தோடாயின், அவன் செய்கை
புகழ்ச்சிக்குரியதுதான்: அவன் நோக்கம் வேறாயிருந்தத
னால் (வேறென்றே நம்புகிறேன்,) பொம்பியுஸ் கட்சியைச்
சேர்ந்தது அவனுக்குத் தகுதியல்ல. பிறர் சொத்தை உரிமை
யின்றி அபகரிக்கும் லோகப்புரட்டனை எவ்வாறாயினும் தொ
லைப்பது அவசியமென்று எண்ணுகிறவர்கள் மாத்திரம், இந்
தப் புருத்தஸ் கைஸருக்குச் சதிநினைத்தது தகுதியென்பார்
கள்; ஆயினும், தமக்கு ஒரு முறை தீங்குசெய்த சத்துரு
பின்பு பலமுறை நன்மைசெய்யுமிடத்தில், அத்தீங்கை மறந்து
தாம் அவனுக்கு மித்திரனென்று உரிமை பாராட்டுகிறவர்கள்,
அவனுக்குப் பிறரால் பிராணாபாயம் உண்டாகும்பொழுது,
அவனை வதைக்கும்படி அவர்களுடன் சேர்ந்துகொள்வது தர்
மமா? ஒருவன் தமக்குச் செய்த பாரமான பழியை மறந்து
விடாமல், அதற்கு ஈடு செய்வதற்கு வகைதேடும் பிராண
சத்துருக்களல்லவோ அவனைக் கொல்வதற்கு உடன்படுவார்
கள். கைசருடைய ஒழுக்கம் புருத்தஸுக்குத் திருப்தியாயி
ருக்கவில்லை, இது மெய்தான்; ஆயினும் அவர் பிராணனை
வாங்கும்படி முதலில் சதியோசனை மூட்டினவன் அவனேய
ல்ல. அவன் ஒழுக்கத்தையும், கைசருக்கும் அவனுக்குமுள்ள
சம்பந்தா சம்பந்தங்களையும் கண்டறிந்த பெயர்கள் சிலர்,
இந்தக் குரூரச்செய்கைக்கு அவன் ஒருவாறு உடன்படுவா
னென்று எண்ணி, அவனை வசப்படுத்தினார்கள். இவ்வண்
ணம் அவர்கள் சொற்படி அவன் சுயாதீன அபிமானிபோ
லும், சுகிர்தத்தை அபிவிர்த்தி செய்பவன்போலும் தோன்றி,
கொலைபாதகனானான். அவனுக்குச் சுயாதீனம் தன கட்சி
யார் அடையும் ஜபமும், சுகிர்தம் சூனியமுமாம்.

புருத்தஸ் செய்தது சர்ப்பனையும் புத்தியுத்திக்கு விரோத
முமாயிருந்ததனால், தகாத செய்கையே. அவன் கட்சியார்

கொண்டிருந்த அனுகூலமாமட்டில் ஸீசர் ஒருவனை மாத்
திரமல்லை, வேறு பெயர்களையும் சங்கரிப்பது அவசியமாயி
ருந்தது அசத்ருசப் புருத்தஸ் உடன்படவில்லை ஆதலால் அவ
ன் செய்க்க அமைய முடிந்தது. அவன் கருதியான ஏற
பாடுகளின்றிச் சதியோசனை கொடுத்த பெயர்களுக்குச் சலே
ஞ்சு உடன்பட்டான் சிக்கி அட்டக் கருதி ஆசரக்கோற
சாகணங்கைக் கேட்டாமல் விட்டான் ஆக்கலக்கன இபல
யையும், மற்றவருடைய குணங்குறிகளையும் அவன் உள்ளா
படிக்கு கிக்கவில்லை சக்சனைச் சங்கரிக்க பின்பு, அவன்
ஒழுக்கத்தின் ஊக்கமும் உறுதியும் ஒழிந்துபோயின. ஸீ
சர் ஆசுரிசமையைப் பிரகாசித்ததும், புருத்தஸின் ஒழுக்கமும
சமமாகிய அக்கிரமங்களே அவன் மந்திராலோசனைச் சபை
யாருடைய அனுமதி இன்றி, அதிகாரத்துடன் ரோமைப
பட்டினம், மாரிருவனுக்குக் உரிசந மாகாணச்சைக்
கட்டி ஆளுகைசெய்து, ஸீசர் மரணமாகத் தன் அசசள
ாண ந்தை எரப ... செலாயமபாகக் குவித்தான். அவன்
... ஒன்றும் சாதுபாருடைய கிராமத்தில் புகுந்து,
... பொருளைக் கொள்ளையடித்து, தன் தண்டுகளுக்குக்
கொடுப்பான். ரோமைச் சக்கரத்திபம் இத்தாலிய தேசத்தி
ல ... அவன் கைக்கரோடும் அந்தோனியு
... தெ ... சவடையின் செலவுக்காக, ஆசியாதே
சத்து ..., ... பொருளைக் கொள்ளையடித்தான். அ
வன் ... மட்டமிதனறிய பிறபொருளை அப
கரித்தானென்பதற்கு, அவனிடத்தில் இருந்த அபரிமிதமான
திரவியமே சாட்சியாக்கமாம். ஸீசரின் காத்தனென்று பொ
ய் [illegible] சரித்திரக் கொடுங்கோல் செலுத்திய புருத்தஸின்
காலத்திலும், ரோமை அதிபதிகளுள் கடைசி அதிபதியாகிய
சஷிப் வீணக் காலத்திலும், ஆசியாவின் ஏழைக்குடிகள் பட்ட
உபத்திரவத்துக்குச் சமமான உபத்திரவத்தை, கொடுங்கோல
அரசரால் அனுபவிக்கச் சாதியாயோ வேறில்லை. புருத்தஸ் சம்

பாதித்த திரவியமுழுதும், அவன் சிறந்த தெளிவு யோசிக்காமல் தொடங்கின சிரீகடாய நடத்திய யுத்தத்தில் செலவழிந்து போயிற்று.

பிரஜைகளுக்கும் யுத்தவீரர்களுக்கும் உச்சமென்று சொல்லத்தகும் பட்சம், பூர்வாசி, சிவகாருண்ணியம் என்னும் மேன்மைக் குணங்களும் புருஷஸ்திரீ உண்டு, ஆயினும், அப்பிரமாணமற்ற திரவிய சம்பாத்தியம் அவனுக்கு என்றும் [illegible] நிந்தைசாதனமாக [illegible] செய்யக்கூடிய [illegible] பொருளை [illegible] சேர்த்து, அன்னியர் பொருளை அநியாயமாகக் கவர்ந்த அவன் பேராசையுள்ளவனென்று சொல்வது தோஷமா? அவன் அவ்வாறு [illegible] சம்பாதித்த [illegible] விரயஞ்செய்யாமல் [illegible] பதற்கு, அவன் சிநேகியாகிய [illegible] சாட்சி.

எக்காலத்திலும் [illegible] உடையவர்களாயிருந்த [illegible] எல்லாரும், அவரவருக்குத் தோன்றியபடி, [illegible] தத்துவஞானநூலை அநுசரிப்பது [illegible]. கல்வியில் [illegible] கிரேக்கருக்கும், ரோமருக்கும் அவர்கள் சமயம் [illegible] தத்துவஞான நூலாம். இப்படி அறிவுடையோராகப் [illegible] சாதாரண ஜனங்கள் அநுசரிக்கும் கொள்கை எத்தன்மைத்தாயிருப்பினும், அது காரியாகாரியங்களை யோசித்து, தாற்பரியம் அறிவதற்கு அவகாசமுள்ள சிறுபான்மையோருக்கு, உவப்புக் கொள்கை ஆகாதே. ஐசுவரியவான்களும் தரித்திரருமாகிய சாதாரண ஜனங்கள் ஐம்புலனுக்குரிய விஷயங்களை அநுபவித்துச் சிற்றின்பக்கடலில் மூழ்கியிருக்க, காரியங்களை யோசித்துச் சீர்தூக்கும் திறமுடையவர்களோ, அக்கடலினின்று நீந்திக் கரையேறுகிறார்கள். அவர்கள் கண்ணுக்குத் தோன்றும் விஷயங்களைத் தோன்றுமவைகளின் நிழல்களாகவும், பொருளின்றி வெறுமையாயிருக்கும் வடிவங்களாகவும், உண்மைப்பொருளின் [illegible]மாகவும் கொள்வார்கள்.

"கடவுளைக் குறித்த காணப்படாதவைகள் சிஷ்டிக்கப்பட்

ட வைகளிலே [illegible] தொடங்கித் தெளிவாய்க் கா

ணப்பட்டிருக்கின்றன" புருஷன் என்பவன் வாலிப பரு

வம் தொடங்கி [illegible]

ஆசமசால [illegible] ஆராய்ச்சி [illegible]

கா. அவன் [illegible] மொழியில் இலக்கண [illegible]

மும் [illegible] மறவாதிருக்கப்படி

[illegible] வரவேண்டும். [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

அவன் கல்வி தேடுகிறதில் மெய்யாயிருப்பது போதாது. அவன் சொ

ல்லாம் முன்னதாகப் பிறர் வெளியிட்டிருக்கும் பய

பயிற்சிகளே. ஒருவன் பிறர் உணர்ந்த கல்வியைப் பெ

ற்று சொல்வது போதுமா? தன் முயற்சியால் அதைத்

[illegible], அப்பியாசித்து, தன் உள்ளத்தில் பிறந்த கரு

த்துப்பால் சுவீகரித்துக் கொள்ளத்தலைப்படா சாமர்த்தியம்?

[illegible] ஞானமும் [illegible] பக்தியும் [illegible] கருத்தில்

[illegible], தமோகுணம் தன்மையுள்ள அவன் புத்தி

க்கு உட்பட்ட பிண்டம்போலத் தோன்றின. இதனால்,

அருகிலுள்ளவன் கண்ணுக்கு ஆடம்பரமெல்லாம் பேயென்ற பழ

மொழிப்படி; அவன் அப்போதைப்போது பிரமாணமான

விஷசாயப்புகலிய விகாரமான ஆகார ரூபங்களைச் சொப்

பனத்தில் கண்டதுண்டு. சகல பிராணிகளும் தங்கள் தங்

கள் செயலொழிந்து உறங்கி ஒடுங்கியிருக்கும் அமைதியான
ராத்திரியிலும், அவனுக்கோ அணுவளவும் உறக்கம்
வரவில்லை. ஒருவன் தனக்குச் சுகிர்தமென்னென்று வேறு
ரூபம் தரித்துக்கொள்வதனால் உண்டாகும் போலியின்பம்
சத்தியத்திற்கு எதிர்நிற்குமோ? கொலைபாதகனுக்கு அவன்
நெஞ்சே பிரமாணத்துருவாய் எழுந்து, இராப்பகல் எள்ள
ளவும் இளைப்பாறுவதற்கு இடங்கொடாமல் அவனை வருத்
துமல்லவா? புருஷனை யச்சனத்தில் சட்டத்திற்கு இரை
யாக்காமல் கிருபைகூர்ந்து இரக்ஷித்தும் பின்பு சமாதானம்
நீங்கப்பட்ட காலத்தில் அவன் கைட்டால் மடிந்த கயாளனே
னும் வீரசூரனுமாகிய சகலருடைய வடிவே. ஆகவே சொரூபமா
ச்ச புருஷத்துவத்தைச் சொன்னாலும் சொன்னதாம். பிரா
ணிகளை அபசரித்த பாதகனை மடிவது தோஷமென்றெ
ண்ணி, தற்கொலைபுரிந்த கேதோவின் செய்கை சரியென்று
பழித்த புருஷத்துவ சத்துருவுக்கு அஞ்சி அவன் கைக்கு வில
கும்படி தானும் அந்தச் செய்கைக்கே ஆளானான். உரோம
னொருவனை அவன் சாதியானை கைதுசெய்து கொல்விக்க
கையில், அவன் அந்த வசையை நயிசரிக்கும்படி வகைகெ
யவது பாரமான தோஷமல்ல ஆயினும், அவன் இறக்கும்
ஸ்தானம் யுத்தகளமும், அவன் இறப்பதற்கு ஏதுவாகிட கரு
வி நீதியும், யதார்த்தமும் முன்னதென்று தான் வெளியிட்ட
விஷயத்தை மறந்து தன்னுடன் யுத்தஞ்செய்யப் படை
யெடுத்துவந்த சத்துருக்கள் கைக்கொண்ட கட்கமுமாயிரு
ப்பதல்லவோ அவனுக்குப் பெருமை? கேட்டோரே மகனே,
தன் தந்தைக்கு வந்த வசைக்கு ஆளாகாமல், ப்பியப்பு நகர
த்தைக் அந்தச் சமபூமியில், யுத்தமுகத்தில் சத்துருக்களை எதி
ர்த்துச் சண்டைசெய்து கொண்டு புருஷத்துவ சான்று ஆனுசரி
த்தாகப் பட்டடி மடித்ததைக் காட்டிய சற்குணம் புரியமே
தவிர உள்ளதல்லவென்று மறுத்தவனைப்போல இறந்தான்.

அவன் தன் நீதாணப்படிக்குத் தப்பென்று கொண்ட விஷயத்தை சாதித்து அடைந்த ஜயமே, அவன் பகட்டிய சறுக்ணம் உள்ளதல்ல; பற்றுக வெறும் பெயமொன்பகறதச் சாட்பாம். ஆரம்பத்து ஆளைத்தன ஒழுக்கத் தறுக்கயில ஒழுக்கமாம்படி நடத்திவருகின்ற நீதிபராயிய கடவுள், இனிருந்து நாளைக்கு இறக்கும் ஒருவனிடத்தில் தக்ஷணமேயல்ல; எப்பொழுதாயினும் மொத்தத்தில் நீதிக்குப் பழுதுவராமல் காத்துக்கொள்வார் என்கிற கொள்கை அவன் மனதில் கங்கவில்லை. தத்துவஞானநூலின் நடப்புகளைக் கற்றுணராத வல்லவனொருவனுடன் ராஜ்ஷ சிக்ஷை இரண்டும் ஒதிதுபோமென்றும், தன் தாப்பயத்தங்களுக்கு நிவிர்த்தியில்லையென்றும் நினையான். அவன் முன்னும் பின்னும், இறந்தகால எதிர்கால சங்கதிகளை இடையின்றித் தொடர்ச்சியாயக் கண்டு, சர்வலோக வியாபாரங்களையும் ஸமஸ்த சிருஷ்டிகளையும ஏகசக்கிரமமாயக் கடவுள் அமைத்த நெடிய சங்கிலித் தொடரில்; தானும் ஒரு கண்ணிமாத்திரமே தவிர வேறல்லவென்று உணரவான். புருஷஸ் என்பவன் பெருந்துயரடைந்து, கமந்தியனாய் பொருள்செய்யாமல் கொண்டுகொள்ளைகளை யுயர் சத்தித உயிர்ப்பவர்களிடத்தில் விளங்கும் விசுவாசம், சிறுமென்றும இரண்டு லக்ஷணங்களுள் நீரமொன்று மாத்திரமுடையவனாயிருந்தான்.

கொடுங்கோலரசர் செய்யும் அக்கிரமங்களைத் தொட்டு மனக்குறை அடைந்து அவர்கள் ஆக்கினையை மீறுவதற்கு எத்தனைபட்டும் பிரஜைகள் கேட்சாயகாரியென்று பெயர் பெற்ற புருத்தஸனுடைய ஒழுக்கத்தைத் தங்களுக்குப் பிரமாணமாகப் போற்றுவதுண்டு. அவன் பெற்ற பெயர் ஆதாரமற்ற வெறும் பெயர்தான் ! இதை அவர்கள் சிந்திக்கிறதில்லை. அவன் தன் தேசத்தாரைச் சீர்ப்படுத்தி, மனுஷர் அனைவரையும் சுயாதீனராக்குவதற்கு ஏற்ற செய்கை ஒன்றுவது

செய்தானா? இதரமான உரோமராயர்போல அவனும் உரோ
மை அரசாட்சியின் மேம்பாட்டைக் காக்கக் கருதினதொழிய
விசேஷமாய் ஒன்றையும் நினைக்கவில்லையே. அவன்
கொண்ட அபிப்பிராயங்கள் அவர்கள் அபிப்பிராயங்களிலும்
அதிகமான விபரீதங்களல்ல, உரோமை அரசரால் அநே
கஞ்செய்து ஒடுக்கப்பட்ட பிரஜைகளின் அபாயஸ்திதியைக்
கண்டு அவன் பரிதபிக்கவில்லை சன (சசசன ஸ்திதிக்
காக அவன் ஒரு உபாயத்தையும் எடுத்துச்சொல்லவில்லை
அவன் சீசரைத் தப்போயிருக்க தன்னுடைய அரசாட்சிக் கிரமத்
தைத் திருத்த விரும்பாமல், அந்த சீர்கெட்ட ஸ்திதியிலே
நிலைப்படுத்தப் பார்த்தான். விரும்பினும். தருமத்தவறு அசா
த்தியட்டகான. சிக்கமுயன்றான். அ சொமித் அகாயசமும
சேசாசாரக் கிரமச்சாயலும் மேலிட, சனக்கப் பொருள்
கொடுத்தவர்கள் சவாசினாராகி, தன்னுடைய சொந்த
கலைப் பறித்துக்கொண்டு தன்னை ஆசக்திபாயத் தாசகியட்டுவா
ரென்று எண்ணி அனேகினேபோலும். கைச செடகரா
சிபாபகாரமான அரசன்மையல்ல, ஏகாதிபத்தியம். அதி
காரப் பிரியனாகிய புருத்தஸ் அகாரம் ஒழிப்ப ஸம்தனடச்
சங்கமாட்டானே. புருத்தஸ் இடத்தில் வெளிப்பட்ட அர
சாட்சிசம் சகமான அபிப்பிராயங்கள் அதன்று அரசாட்
சியின் உறுப்புகள் அனைத்தையும் தழுவாமல் ஒடுங்கியிருந்
ததென்று அவன்மேல் தோஷம் சொன்னாலும், இந்த தோ
ஷத்திற்கு அவன் மாத்திரமோ, அவன் தேசத்தாரில் பெ
ரும்பான்மையோரும் உள்ளானவர்கள்தாமே யென்று ஆட்
சேபிக்கிறவர்களை, ஒரு கேள்வி கேட்கிறோம். நீங்கள் சொ
ல்வது மெய்யென்றே ஒப்புக்கொள்கிறோம். இப்படியா
னால், புருத்தஸை அவர்களிலும் விசேஷமாய்ப் புகழ்ந்து
போற்றும் காரணமென்ன? சீசர் அவனுக்குக் கொடுத்த
உரிமை ஒன்றொழியக் குணம்பெறுவதற்கு ஏற்ற உரிமை அவ

னுக்கு வேறென்ன? அவன் பூர்வோத்தரம் தெரியாதா? ஒரு சாமானிய குடும்பத்தில் கைசர் கற்பழித்த பெண்ணொருத்தி பெற்ற மகன். அவன் தன் தாயின் சோரபுருஷனாகிய வைகசருக்குச் சத்துருவாய் எழுந்து யுத்தம் செய்ய, கைசர் அவனை ரட்சித்து, அவன்மேல் தயைகூர்ந்து, அவனுக்கு ராஜ்யத்தில் அதிகாரம் கொடுத்துச் சிநேகித்துக் கௌரவப்படுத்தினார். இது உள்ளது. பின்னை உலகத்தார் அவனை அதிகமாய்ப் புகழ்ந்து போற்றும் காரணம் கைசர் செய்த நன்றியை மறந்து, அவருடைய விவேக சாமர்த்தியங்களை அறிந்து மதிக்கத்தக்க புத்தியற்றவனாய் அவரைக் கொன்றதனாலோ? மற்றொரு விசேஷத்தையும் அவனிடத்தில் காணோம்.

அவன் தத்துவ ஞான நூலைத் தகுதியாய்க் கற்றவனாக வேஷம் தரித்தானால், தன் ஒழுக்கத்திற்கு ஏற்ற நிலைக்குத் தப்பினான்; வேஷத்தினால் பிரயோசனமென்ன? புருஷன் கொள்கையிலும் ஒழுக்கத்திலும் யோக்கியன் என்பது ஒருவாறாயினும் தோன்றவில்லை. அவன் சில காலங்களில் பிரஜைகளுக்கு தீங்கு செய்தது மெய். அவ்வாறே மற்றவர்களும் செய்யவில்லையா? தேசத்தைச் சீர்திருத்துவதற்கேற்ற நினைவு நிலைமை அவன் உள்ளத்தில் குடிகொண்டிருந்ததா? அதற்குத் திருஷ்டாந்தமென்ன? அக்காலத்தில் உள்ள உரோமரிடத்தில் இத்தனை பழுதற்ற நீதியாயம் இருக்கக் காண்பது அசாத்தியமென்பார்களானால், அவனை விசேஷமாய்ப் போற்றுவதென்ன? தன்னெஜமானரை வதைசெய்து, தான் அபாயத்தினின்று ரட்சிக்கும்படி உடன்பட்ட நகரத்தை விட்டு ஓடின தீயனை வீரனென்று வியந்து பேசுவதேன்? தனக்கு உண்டென்று வெளியிட்ட சற்குணங்களைச் சூனியமாய்க்கொண்ட அவனைச் சற்குணனென்று மெச்சுவதேன்? இதுநிற்க, அவன் அரசாளும் திறமுடையவனென்று சொல்வார் ஒருவரும் இல்லை.

முற்றிற்று.